Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவாரம்



Acc. No. 13688
Q 23

Koviloor Digital Library

Koviloor Digital Library

சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

7-ஆம் திருமுறை - தலமுறை வரிசை



வெளியிட்டோர் :

சைவ நூல் அறக்கட்டளை

32 & 55, பங்காரு நாயக்கன் தெரு, மவுண்ட்ரோடு.

சென்னை - 600 002.

Koviloor Digital Library

நூல் குறிப்பு

தலைப்பு	:	**சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்**
ஆசிரியர்	:	சுந்தரமூர்த்தி சுவாமிகள்
முதற்பதிப்பு	:	தாரண ஆண்டு கார்த்திகைத் திங்கள் டிசம்பர் 2004
மூன்றாம் பதிப்பு	:	செப்டம்பர் 2007
படிகள்	:	2000
அளவு	:	கிரவுன்1/8
தாள்	:	11.6 kg N.S. (60 gsm)
பக்கம்	:	336 (301 + 35)
சலுகை விலை	:	ரூபாய் 60 /–
அச்சிட்டோர்	:	கயிலை மயூரப்பிரியா ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ், 32, பங்காரு நாயக்கன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை – 600 002. போன் – 28611506 / 9444089506
நூல் கிடைக்குமிடம்	:	**பன்னிரு திருமுறை மன்றம்** 32, பங்காரு நாயக்கன் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை – 600 002. பன்னிரு திருமுறை மன்றம் 29 /79, ஜவஹர்லால் நேரு தெரு ஆழ்வார் திருநகர், சென்னை –87. போன் – 24860865 / 9444202055

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

சிறப்புரை

"நற்றுணையாவது நமச்சிவாயவே"

ஏழாவது தமிழ்வேதமாகத் திகழ்வது சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவராம். திருமுறைகள் (தமிழ்வேதங்கள்) யாவும் சிவபெருமானார் ஒருவரையே போற்றும் பெருமை உடையவை. பல தெய்வ வழிபாடு இவற்றில் இல்லை.

தக்க அருளாளர்கள் மூலமாக சிவபெருமானாரே அருளியவை தாம் பன்னிரு தமிழ்வேதங்கள். மந்திர ஆற்றல் உடையவை. இறந்த வரை எழுப்பும் திறம் உடையவை. மனிதர்களை மாண்புள்ளவர்களாக்கி மாதவ நிலையை அடையச் செய்பவை.

இவற்றில் ஏழாவது தமிழ் வேதத்தை வெளியிடுவது சிறப்புடையதாகும். உள்ளத்தை உருக்கும் பாடல்கள் பல இவற்றில் உண்டு.

இறைவனை நண்பராக எண்ணி (சகமார்க்கம்) வழிபட்டவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இதனைத் "தோழமை நெறி" என்பார்கள். அவர் அருளிய பாடல்கள் (மூலம்) எளிதில் படிக்கத் தக்க வகையில் வெளிவருவது மகிழ்ச்சியே ஆகும்.

"கையார் ஆடரவா கடவூர்தனுள் வீரட்டத்து எம்
ஐயா என் ஆரமுதே எனக்கார் துணை நீயலதே"

தமிழ்வேதம் 7– சுந்தரர் அருளியது

13, சந்நிதி வீதி
நல்லூர்ப்பேட்டை,
குடியேற்றம் – 632 602

அன்பன்
சிவ. ஆ. பக்தவச்சலம்
ஆசிரியர் – தமிழ்வேதம்

Koviloor Digital Library

அணிந்துரை

சித்தாந்த சரபம்

பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி

'திருநெறிய தமிழ்' எனப் பெறும் திருமுறைகள் பன்னிரண்டினுள் ஏழாவதாக நின்ற ஒரு நூறு பதிகங்களும் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் அருளப் பெற்றவை.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகங்களைத் திருக்கடைக்காப்பு என்றும் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்களைத் தேவாரம் என்றும் சுந்தரர் அருளிய பதிகங்களைத் திருப்பாட்டு என்றும் மாணிக்கவாசகர் அருளிய பதிகங்களைத் திருவாசகம் எனவும் அழைத்தல் மரபு.

திருமுறைகளின் மையக் கருத்தாகிய 'திருப்பெறுதல்' என்பதை முதன் முதல் எடுத்து நிறுத்தியவர் காரைக்காலம்மையார். அவர் "அற்புதத்திரு" என வழங்கினார். ஆளுடைய பிள்ளையார் "திருநெறிய தமிழ்" என வழங்கினார். திருநாவுக்கரசரை அறிமுகம் செய்யும் சுந்தரர்

"திருநின்ற செம்மையே செம்மையாக கொண்ட திருநாவுக்கரசர்" என அறிமுகம் செய்கிறார்.

திருமுறைகள் அனைத்தும் திருப்பாட்டுகளே ஆயினும், சுந்தரர் பாடியவை மட்டுமே "திருப்பாட்டு" என வழங்கப் பெறுவதற்கு அருளாளர்கள் கணித்த காரணம் ஏதேனும் இருந்திருக்க வேண்டும்!

பன்னிரு திருமுறைகளில் இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பெற்ற திருப் பெற்ற அருளாளர்கள் இருவரே. ஒருவர் சுந்தரர் மற்றொருவர் தெய்வச் சேக்கிழார்.

இறைவனால் இரண்டுமுறை அடியெடுத்துக் கொடுக்கப்பெற்ற திருப் பெற்ற பதிகங்கள் சுந்தரர் பதிகங்களே.

இறைவனைப் பாடுவதற்கு இயலாத யான் இறைவனை என்ன சொல்லிப் பாடுவேன் என்ற போது, இறைவன் சுந்தரர் கூறிய 'பித்தர்' என்ற சொல்லையே முதன்மையாக வைத்துப் பாடுக என்று கூறிவிட்டான். இது அடியவன் சொல்லையே தன் சொல்லாக ஏற்று,

Koviloor Digital Library
திருவமைத்து, தன் அருளாற்றலை உள்ளீடாக அமைத்து, மீளவும் சுந்தரருக்கே அமைத்துக் கொடுத்தருளிய நிலை. சுந்தரர் அருளிய அனைத்துத் திருப்பதிகங்களும் (திருத்தொண்டத் தொகை தவிர) 'பித்தா' என்ற அருளனுபவப் பெருமொழியின் மூலம் விளைந்த பெரும் பேரனுபவத் திருவருள் மெய்ம்மொழிகள்.

சுந்தரர் மீளவும் அடியவர் பெருமையைப் பாட முற்படுகிறார். முன்னமேயே பெருமானால் அருளப் பெற்ற 'பித்தர்' என்பதன் அடிப்படையிலேயே அடியவர்களைப் பாட இயலாது என்ற எண்ணம் சுந்தரர் தம் திருவுள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும்!

அதனால், மீளவும் கேட்கிறார். இப்போது இறைவனும், ஒரு சொல்லை அருளினால் போதும்! இல்லை, தானே வருகிறான். சுந்தரருடன் இணைந்து நின்று முதல்வரி முழுவதும் தானே பாடுகிறான் அதுவே.

"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என நின்ற திரு. அதனை ஒட்டியே சுந்தரரும் பாடுகின்றார்.

எனவே, இரண்டு முறை அடியெடுத்துக் கொடுக்கிறான். முன்னது அடியவன் மொழியைத் தன் மொழியாக ஏற்றுத் தொடக்கி வைத்தது.

இரண்டாவது, தானே சபைமுன் நின்று பாடிய வகையில் எடுத்துக்கூறி ஒரு தொடராக நிறுத்திய வகையில் அமைத்தருளியது.

எனவே தன் பெருமை தானறியாத் தன்மையனே என்ற வகையில் அடியவர்களால் அமைந்த அருளனுபவத்தைத் தாங்கிய திருவும் அடியவற் பெருமையைத் தாங்கிய திருவும் என இருவகைத் திருவையும் இணைத்து நின்ற பதிகங்களாதலின் சுந்தரர் அருளியவை.

திருப்பாட்டு என்ற சிறப்புத் தகுதியைப் பெறுவனவாயின.

இனி, இறைக்காட்சியை நேர் நின்று அனுபவத்தவர்களே அனைத்து அருளாளர்களும் ஒருதலத்துப் பெருமான் வேறு ஒரு தலத்துப் பெருமானுடன் தன்னை இணைந்து நிறுத்திக் காட்சி கொடுத்தருள, அத்தகைய அற்புதத் திருவைக் கண்டு பாடிய பெருமை திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் உண்டு. ஆனால் ஆடல் வல்லான் அருளிய அற்புதத் திருக்கூத்து நிகழ்ச்சியை முதலில்

Koviloor Digital Library
தில்லையிலும், பிறகு காஞ்சிவாய்ப் பேரூரிலும் தனித்தனியே கண்டு அருளனுபவம் பெற்ற சுந்தரர், பேரூர்க் கூத்தப் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே இணைத்துச் கண்ட அற்புதப் பேற்றினையும் பெற்றவர்.

................"மீகொங்கின் அணி காஞ்சிவாய்ப் பேரூரர்தம் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாமன்றே"

என்ற 922 திருப்பாட்டினைக் கண்டு தெளியலாம்.

சுந்தரர் வரலாறு சுவைமிக்க வரலாறு. அவ்வாறே அவர்தம் வரலாற்றினுள் உள்ள பல முடிச்சுகள் இன்னும் அருளாளர்களால் அவிழ்க்கப் பெறவேயில்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருப்பதிகங்களைத் தொடர்ந்து பாராயணம் செய்தால் பற்பல உண்மைகளை அருளனுபவப் பேறுகளாகப் பெற்று நிறைவு பெறலாம்.

சென்னை, பன்னிரு திருமுறை மன்றத்தார் பல்வேறு திருப்பணிகளைச் செய்து வரலாறு படைத்தவர்கள். திருவேட்டீசுரன் பேட்டைத் திருத்தலத்துத் திருக்குளத் திருப்பணி செய்து, அதனைத் திருவருள் பொலியும் திருவடைத் தீர்த்தமாக மலரச் செய்த மாபெரும் தொண்டர்க்ள.

திருக்கோயில், திருக்குளம் ஆகிய கற்கோவில் திருப்பணிகளைக் குறைவற நிகழ்த்தி வருவது போலவே இறையருட் கோயிலாகிய சொற்கோயில் திருப்பணிகளையும் செய்யும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட தொண்டர்கள். முன்னர், திருவாசகம் என்ற செஞ்சொற் கருவூலத்தை வெளியிட்டுப்பல நூறாயிரம் மக்களைத் திருவருள் நெறியில் ஈடுபடுத்திய பெருமையுடையவர்கள்.

இப்போது, சுந்தரர் தேவராத்தையும் மக்கள் மன்றத்தில் தொண்டு உள்ளத்துடன் மலர வைத்துள்ளார்க்ள. தொண்டால் துணையில்லை என்ற அப்பரடிகள் திருவார்த்தைக்கு இலக்கியமாக விளங்கும். அன்பர் சிவ. மயூரப்பிரியா அவர்கள் சுந்தரர் தேவராத்தைச் செம்மையான முறையில் அச்சிட்டு அடக்க விலையில் அன்பர்களுக்கு வழங்கியிருக்கும் தொண்டானது போற்றுதற்குரியது.

சென்னை, பன்னிரு திருமுறை மன்றத்தாரின் கற்கோயில், சொற்கோவில், தொண்டுகள் வெற்றிபெற வளரவேண்டும் என வாழ்த்தி வணங்குகிறேன்.

Koviloor Digital Library

பதிப்புரை

கடிதாய்க் கடற் காற்று வந்து ஏற்ற...

ஆரம்பப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த நாட்கள் அவை....

வாரம் தோறும் இல்லம் தேடி 'கல்கி' வரும். அப்போது(ம்) அதில் 'பொன்னியின் செல்வன்' தொடர் வெளிவந்து கொண்டிருந்தது.

சிறு வயதில் சரித்திரக் கதைகள், சேரமானை திருநீற்றொளி ஈர்ப்பது போலன்றோ ஈர்க்கும் ? ஒவ்வொரு வாரமும் மானசீகமாக சோழ மண்டலத்தில் ஊர்வலம் போவது சுகமான அனுபவமாய் இருக்கும்.

அருள்மொழிச் செல்வரின் வரலாற்றை அழகுணர்ச்சியோடு விவரித்துக் கொண்டிருந்த அந்தப் புனிதத்தின் போக்கிலேயே புழங்கிக் கொண்டிருந்த போது இடையே சிற்சில கூடுதல் சிலிர்ப்புகள் ! ஆம்..... அந்தப் படைப்பில் இடம் பெற்ற பாத்திரங்களினால் இசைக்கப்பட்ட இரண்டு தேவாரப் பாடல்கள், இயல்பாக மனத்துக்குள் நுழைந்து மயில் பீலியாய் வருடின. ஒன்று, 'பொன்னார் மேனியனே' மற்றொன்று, 'கடிதாய்க் கடற் காற்று வந்து எற்ற' தனியே இருந்த கோடிக் குழகர் பற்றியது.

இவ்விரண்டு பாடல்களும் அந்தப் பருவத்தில் நெஞ்சுக்குள் பரப்பிய இதம், இன்று வரை கலையாதிருப்பது அடியார் பெருமக்கள் அளித்த ஆசிகளால்தான்.

முன்னம் அவனுடைய தேவாரம் கேட்டோம். பின்னைதான் ஆரூரர் வரலாறு அறிந்தோம். அன்று இச்சிறியேன் நெஞ்சக் கன கல்லைக் குழைத்த இரண்டு பாடல்களுமே சுந்தரர் பாடியவை. இன்றந்த சுந்தர பிரேமிக குருபரன் அருளிச் செய்த திருமுறையின் அச்சு வடிவத்தில், இந்த எளியேனின் வார்த்தைகளும் இடம் பெறுவதை

Koviloor Digital Library
எண்ணும் போது குருவருளை எண்ணிக் கும்பிடுவதை அன்றி வேறு என்ன செய்ய வல்லேன்?

பாலனாய்க் கழிகின்ற பருவத்தில் இருப்போரையும் பரமசிவத்திடம் ஈர்க்க வல்லதாய் உள்ள தேவார மந்திரச் சொற்களின் பெருமையைப் பதிவு செய்யவே மேற்படி நிகழ்வைக் குறிப்பிட்டேனேயன்றி சுய புராணம் சொல்வதற்காக அன்று.

இன்று சமய பிரசார மேடைகளிலே, 'மனிதப் பிறவி கிடைத்தல் அரிது' என்றும், 'அதிலும் ஊனமற்று இருப்பதும், ஞானம் தேட விழைவதும் அரிதினும் அரிது' என்றும் சொல்கிறோம்! ஆயின் சொல்பவர் உட்பட எவ்வளவு பேரால் இப்பேருண்மையின் தாக்கத்தை உள்ளது உள்ளபடி உணர முடியும் ?

நேரடி ஞான போதனைகளின் நிலைமையோ இதனினும் கவலைக்கு உரியது. ஆணவம், கன்மம், மாயை என்றெல்லாம் நீட்டி முழங்கினாலும் 'கற்கும் சரக்காக' ஞானம் இல்லாததால் 'சான்றிதழ் ஞானி'களின் தாகையை அதிகரிப்பதோடு அப்பணி திருப்தி அடைய வேண்டியதுதான்.

இந்நிலையில் 'சிவ ஞானம்' பெற உண்மையிலேயே வழி என்ன? இது புதிராகவே விளங்கி, எளிதாக அமையாமல் போகுமேயெனில் பாமரர்களுக்கு எது தான் கதி? பண்டிதர்களை எடுத்துக் கொள்வோம் எனினும் சாத்திரம் பேசுவோரில் எத்தனை பேர் 'நிஜமாகவே' தேகாத்ம பாவத்தை வென்றவர்கள் ? அந்த சத்திய சோதனைக்குள் புகுவதற்கே சம்பந்தப்பட்டவர்களின் 'ஆணவ மலம்' இடம் கொடுக்காதே ?

இவ்வளவையும் தாண்டி இன்றைய நடமாடும் குருமார்கள் எத்தனை பேருக்கு நயனம் உள்ளிட்ட தீக்கைகளால் ஞானம் வழங்கிடும் நல்லாற்றல் உள்ளது ? ஆக, 'குருடும் குருடும் குழி விழுமாறே' என்ற நிலை தான் பெரும்பாலும் ! ஆயின், 'இப்படிப்பட்ட சூழ்நிலையில்

Koviloor Digital Library
என்னதான் கதி ?' என்று யாரும் ஒரு பொட்டுக் கண்ணீர்கூட சிந்த வேண்டிய அவசியம் இல்லை. 'நாமத்தோர் அன்றே நணுகுவர்தாமே' என்று அழுத்தம் திருத்தமாய் உரைத்திருக்கின்றார் ஞானியர்க்கெல்லாம் ஞானியாகிய திருமூலர்.

எல்லாத் தர்மங்களும் நிலை குலைந்துள்ள இக்கலியுகத்தில் சிவ நாமம் ஒன்று மட்டுமே ஜீவகோடிகளைக் கரையேற்ற வல்லது. இதுவொன்றே ஞானம் பெற ஒரே எளிய வழி. இதுவே திருமுறைகளின் சாரம்.

பின்னர் ஞானம் பேசுகிற நூல்கள் எதற்கெனில், ஒரு ஊருக்குச் செல்ல விழைபவன் அவ்வூர் பற்றிய அனைத்து விவரங்களையும் புத்தகத்தில் படித்து விட்டு, பின்னர் நேரே சென்று கண்டு முழு நிறைவு பெறுவதுண்டலவா ? அது போல சாத்திரங்களில் ஞானம் பற்றிய ஏட்டறிவு பெற்று, தோத்திரங்களாகிய திருமுறைகளின் மூலம் – அவை உணர்த்துகின்ற திருநாமம் ஐந்தெழுத்தின் மகிமைகளை உணர்ந்து ஓதுவதன் மூலம் – ஞானத்தை எளிதில் அடையலாம். 'நமச்சிவாயவே ஞானமும், கல்வியும்!' என்று உறுதியளித்திருப்பவர் அப்பர் பெருமானன்றோ !

இவ்வுண்மையை உணர்ந்து, வாரத்தால் நாமங்கள் பரவி சிவபெருமானை வழிபட்டு, அவன் திறமே நினைந்து உருக விழைவாரின் ஆர்வத்துக்கு உதவி புரியும் வண்ணம் சுந்தரர் தேவாரத்தை மிகக் குறைந்த விலையில் நேர்த்தியாக வெளியிட்டுள்ளார் ஸ்ரீ கைலாஷ் பிரிண்டர்ஸ் திரு. மயூர ப்பிரியா. அப்பெருமகனாருக்கு சைவ உலகம் என்றென்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. அவ்வண்ணம் பாராட்டும் பழவடியார் திருக்கூட்டத்தில் புத்தடியேனாகிய என்னையும் ஏற்றருளுமாறு பிரார்த்திக்கின்றேன்.

ஆர். சிவக்குமார்,
மவுண்ட்ரோடு, சென்னை – 2. எடிட்டர், தமிழன் எக்ஸ்பிரஸ்

Koviloor Digital Library

முன்னுரை

எழ வைக்கும் ஏழாந் திருமுறை

ஊரன், நல்லூரன் நாவலூரன் வெண்ணைய் நல்லூரன், ஆரூரன் என்ற பெயர்களால் அடையாளப்படுத்திக் கொண்டவர் திருநாவலூரில் அவதரித்த சுந்தரமூர்த்தி சுவாமிகள். சுந்தரர் என்ற பெயராலேயே திருக்கயிலையிலும் நிலவுலகிலும் அழைக்கப் பெற்ற அவருக்குப் பெற்றோரால் வைக்கப் பெற்ற பெயர் 'நம்பியாரூரர்' என்பது. 'தோழன்' என்ற பெயராலேயே அழைக்கப்பெறும் உரிமை உடையவர் சுந்தரர். இறைவன் சுந்தரரைத் தோழனாகக் கொண்ட வகையில் 'ஆரூரன் தோழர்' என்ற பெயர் சுந்தரருக்கு அமைகிறது. அது போலவே 'கழறிற்றறிவார்' எனப் பெற்ற சேரமான் பெருமாள் நாயனாருக்குத் தோழரான வகையில் 'சேரமான் தோழர்' என்ற பெயரும் அமைகிறது.

'தோழமை' என்ற உரிமைப் பண்பால் உலகுக்கு இறைவனால் அறிமுகம் செய்து வைக்கப்படுகிற சுந்தரர் 'மீளா அடிமை' என்றே தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறார். தன்னை இறைவனே தோழனாக அமைத்துக் கொண்டதால் தானும் அதற்கு ஒத்துழைத்து அதன் மூலம் உலகுக்கு இறைவனின் கொள்கை ஒன்றைக் கண்டுபிடித்துத் தருகிறார்,

"குற்றமே செய்யினும் குணம் எனக் கருதும்" இறைவனின் கொள்கையைக் கண்டுபிடித்துத் தருகிறார். அதற்காகவே இறைவன் 'குரை கழல் அடைந்தேன்' என்றும் குறிப்பிடுகின்றார். அதனை

"குற்றம் செய்தல் எனக்கியல்பே
குணமாக் கொள்ளல் உனக்கியல்பே"

என்று வள்ளலாரும் வழிமொழிந்து உள்ளார்.

Koviloor Digital Library

தோழமை கொண்டு இறைவன் துரிசுகளுக்கு உட்படுத்தும் நுட்பத்தைக் கண்டுபிடித்த சுந்தரர் துரிசுகளிலிருந்து தான் மீளுவதற்கு அடிமை நெறியைப் பின்பற்றுகிறார். இறைவன் சுந்தரருடன் (ஆன்மா ஒன்றுடன்) சமமாகப் பழகும் தோழமை நெறி வந்த பின், பெரியவர் யார் ? என்ற கேள்வி வரும் போது பதில் வராது. இறைவன் தோழனாக வந்து நம்மை நம் விருப்பத்தில் விளையாட விடுவதால் துரிசு வந்து நேருகிறது. துரிசு (குற்றம்) வராமல் பெரிய ஒன்றைச் செய்யவேண்டும். பெரியதைச் செய்பவர் ெ ரியர், அவரால் செய்யப்பட்டது செய்வதற்கு அரிய செயல் என்றார் திருவள்ளுவர்.

"பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புதன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ"

என்ற வரிகளில், புதிய அடியர்களாக வரிசைப்படும் நம்மனோர் புன்மை / சிறுமையை நீக்க வேண்டியவர்கள் இறைவனுடன் பழகிப் பழகிப் பாங்கு தெரிந்த பழைய அடியவர்களே / பெரியவர்களே என்று கூறினார் மாணிக்கவாசகர். அவர் வேண்டுகோளாக வைத்த அந்தக் கொள்கை சுந்தரர் காலத்தில் நெறியாக்கம் பெறுகிறது. அதனை நெறியாக்குவதற்கேன்றே தேர்ந்தெடுக்கப்பட்டவர் சுந்தரர்.

"மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலா திருத்தொண்டத் தொகை தரப், போதுவார்"

என்று அதைக் குறிப்பிட்டார் சேக்கிழார்

துரிசுகள் நீக்கும் அடியவர் – புனிதர் நெறியை மலர்விக்க வந்த சுந்தரர், வாழ்ந்து காட்டிய நெறி ஒன்று ; வாழ்ந்து சொல்லிய நெறி ஒன்று. அந்த வகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் ஏழாம் திருமுறை இறைவன் திட்டத்தில் இரண்டு வகைமைப்பாடுகள்.

1. இறைவன் கேட்டுப் பாடியது (தில்லைவாழ்ந்தணர்)

2. இறைவன் கேட்கப் பாடுவது (பிற பதிகங்கள்)

அடியார்களை அடையும் நெறியை இறைவனே

Koviloor Digital Library

"இவரை நீ அடைவாய்" (பெரிய புராணம்) என்று சுந்தரர் வழியாக நெறிப்படுத்துகிறான். அதற்காகத் "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று இறைவன் பாடியபின் சுந்தரர் பாடுகிறார். இங்கே வியப்புக்குரிய வகையில் நடந்தது என்னவென்றால் இறைவனையே 'அடியவர்க்கு அடியவன்' என்று சொல்ல வைத்ததுதான். அந்த வகையில் சுந்தரர் மூலமாக இறைவன் மலர்விக்க நினைத்த நெறியை இறைவன் மூலமாகவே மலர்விக்கிறார் சுந்தரர். அதற்கெல்லாம் வலிமை சேர்த்து சுந்தரர் வாழ்ந்த முறைதான். அந்த முறையைத்தான் 'திருத்தொண்டத்தொகை' தவிர்த்த அனைத்துப் பதிக வரலாறுகளும் அடையாளங் காட்டுகின்றன.

சுந்தரரே இறைவன் மூலமாக உலகுக்கு அறிவித்த நெறி உயர்ந்த நெறியாகிறது. அதன் மூலமாக இறைவனை மையமாகக் கொண்ட நெறிகளெல்லாம் பின்னடைய, மனிதத்தை மையமாகக் கொண்ட நெறி செயற்கரிய செய்யும் நெறியாக மலர்ந்தது. அதன் உண்மை உணர்ந்துதான் 'திருத்தொண்டத் தொகையை' விரித்துத் 'திருத்தொண்டர் திருவந்தாதி' செய்தார் நம்பியாண்டார் நம்பி. அதையும் ஆழங்காற் பெற அகலப்படுத்தினார் சேக்கிழார் அதுமட்டுமன்றி,

'புனிதர் பேரவை விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே'

என்று ஆணையும் வைத்தார் சேக்கிழார். எனவே விதியை வெல்லவும், வெல்லும் விதிகளை உருவாக்கவும் 'திருத்தொண்டத்தொகை' ஒன்றே சான்று ஆவது. அவ்வகையில்தான் அது "தீது இலா 'திருத்தொண்டத்தொகை' எனப் பெற்றது. இப்பதிகம் இவர்களை இப்படிப் பாடு என்று இறைவன் கேட்டுக் கொண்ட வகையில் வெளிப்பட்டது.

அடுத்து, திருக்கைலையில் திருத்தொண்டு செய்த சுந்தரரை இறைவன் உலகிற்கு அனுப்பியது நயமான பாடல்களைத் 'தான்' அனுபவிக்கவேண்டும் என்பதற்காக. அதனால்தான் எப்படியெல்லாம் இனிமையாக, கடுமையாக கொடுமையாக அனுபவந்தர முடியுமோ

Koviloor Digital Library

அப்படியெல்லாம் தோழமையுடன் துரிசுப்படுத்துகிறான். அதன் மூலமாக அடிமை மாறாது 'நயமான பாடலை' ச் சுந்தரர் பாட 'தான்' கேட்கிறான். அதற்குத்தான் சுந்தரரைத் தடுத்தாட்கொண்ட இறைவன்,

"மண்மேல் நம்மைச் சொல் தமிழ் பாடு"

என்று கேட்டுக் கொண்டான். இதன் வழி சுந்தரர் பாடிய பாடல்களாகத்தான் 'திருத்தொண்டத் தொகை' பதிகத்தைத் தவிர்த்த பிற பதிகங்கள் அனைத்தும் திகழ்கின்றன. இவை இறைவன் கேட்கப் பாடியவை.

இறைவன் கேட்டுக் கொண்டவழி இறைவனுக்காகவும் பாடி இறைவனையும் பாடவைத்தவர் சுந்தரர். அதனால்தான் 'நயத்துக்குச் சுந்தரனார்' எனப் பெற்றார். இறைவனைப் பாட வைத்த சுந்தரர் தொடங்கிய மரபில்தான் தொண்டர் வரலாறு நம்பியாண்டார் நம்பிக்குப் பொல்லாப் பிள்ளையாரால் சொல்லப்படுகிறது. பிறகு, சேக்கிழாருக்கும் இறைவன் அடியெடுத்துச் சொல்லித் தருகிறான். அப்படி வழி வழி இறைவனைச் சொல்ல வைத்த 'நம்பி' சுந்தர மூர்த்தி சுவாமிகள். அவர் அருளிய ஏழாந் திருமுறையை நம்பி இறைவன் தானே வழி மொழிந்து செயலாற்ற வேண்டிய கட்டாயம் இறைவனுக்கு உள்ளது. எந்தக் கடுமையிலும், கொடுமையிலும் நயமாக வாழ்க்கையை நகர்த்தி உயர வைக்கும். அதுமட்டுமின்றி, நீங்கள் இந்த வகையில் உயர்ந்தவர் என்றவாறு உங்களையே உலகிற்கு வழிகாட்டும் விளக்காக – ஒளிப்பொருளாக இறைவன் அடையாளங் காட்ட அனைத்து வேலைகளையும் உங்களுக்காகச் செய்வான். திருநீற்றுத் தொண்டு செய்த ஏழாம் திருமுறையாளர் ஏத்தியன கொண்டு எழுமின் !

முனைவர் சா. சரவணன்
காசி இந்துப் பல்கலைக்கழகம்,
வாரணாசி

Koviloor Digital Library

ஏற்புரை

சிவநேயச் செல்வர்களுக்கு

தான்எனை முன் படைத்தான் அது அறிந்து தன் பொன்அடிக்கே
நான் என பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வான் எனை வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊன் உயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே

அடியேன் முதன் முறையாக திருக்கயிலை செல்ல திருவருளும், குருவருளும் துணைகொண்டு கயிலைப் பயணத்தை செவ்வனே முடித்து சென்னை திரும்பியதும் திருமுறைப் பதிகங்களை முழுமையாக அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தை உணர்த்தினார்

சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மான் எனவும் செந்தமிழ் சொக்கன் எனவும் அருளாளர்களால் அறிமுகப்படுத்தப் பெற்ற பரம் பொருள் ஒன்று உண்டு. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் தங்கியிருக்கிறான் என்பது இயற்கை.

தன்னுள் தங்கியிருக்கும் இறைவனை அறிந்து துய்த்து இன்பம் பெறவேண்டும் என்பது உயிர்களின் வாழ்வியல் நெறி.

ஆன்மாக்களாகிய நாம் இறைவனை அடைந்து வாழ்ந்து சிறப்பதற்குரிய வாழ்வியல் நெறிமுறைகளை வகுத்துத் தந்தவை திருமுறைகள்.

அருளாளர்களின் அருளின்ப அனுபவ திருவாக்குகள் திருமுறைகள்
திருமுறைகள் வெற்றுத் தன்மை வாய்ந்த நாமங்கள் அல்ல;
இறைவனே நேர் நின்று கேட்டு இன்புற்ற கைச்சாத்துக்கள்

Koviloor Digital Library

இதன் முக்கிய நோக்கம் இல்லம் தோறும் திருமுறைப் பாடல்கள் தினசரி வழிபாட்டிற்கு இருக்கவேண்டும் என்று கருதி பதம் பிரித்து, எளிய நடையில், பெரிய எழுத்துக்களில் நல்ல தாளில் அச்சிட்டு அதற்கு அழகிய வண்ண அட்டையில் நேர்த்தியான புத்தகக் கட்டுமானம் செய்து மேலும் ஓர் உறை அணிவித்து அழகு செய்து அனைத்து சிவனேயச் செல்வர்கள் கைகளிலும் தவழவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு இந்நூலினை பெரும் முயற்சியில் வெளியிட முன்வந்துள்ளோம். திருமுறைகளை இல்லங்கள், திருக்கோயில்கள், வழிபாட்டு மன்றங்கள், பள்ளிகள் மற்றும் எல்லா இடங்களிலும் திருமுறை ஓதி ஒலித்திட சிவநேயச் செல்வர்கள் திருமுறை புத்தகங்களை வாங்கி அன்பர்கள், நண்பர்கள், உற்றார் உறவினர் மாணவர்களுக்கு அன்பளிப்பாக அளித்து பெரும் சிவ புண்ணியம் பெறலாம்.

101 பதிகங்கள் அடங்கிய சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம், சென்னை பன்னிரு திருமுறை மன்றத்தின் நான்காவது வெளியீடு ஆகும். பக்தர்கள் படித்துப் பயனடைய வேண்டும் என்று கருதி வெளியிடப் பெறும் இந்நூல் ஒரு சிவபுண்ணியச் செயலின் விளைவாகும். இதனை அடக்க விலைக்கே விற்பனை செய்ய முன்வந்துள்ளோம்.

இத் திருமுறைகளை "செந்தமிழ் மந்திரத்தை" நாள்தோறும் காலையும் மாலையும் பக்தியுடன் திருநீறு அணிந்து பொருள் உணர்ந்து பாராயணம் செய்து வழிபட, சிவனருள் பெற்று இவ்வுலகில் விரும்பும் பேரின்பங்களை எல்லாம் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து இறையருளில் கலப்பார்கள். எண்பது திண்ணம்.

கயிலை மயூரப்ரியா

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள் குறிப்பு

தாய்	:	இசைஞானியார்
தந்தை	:	சடையனார்
நாடு	:	திருமுனைப்பாடி நாடு
ஊர்	:	திருநாவலூர்
மரபு	:	ஆதி சைவ அந்தணர் (சிவாச்சாரியார்)
காலம்	:	கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி
வாழ்ந்த காலம்	:	18 ஆண்டுகள்
மனைவியர்	:	பரவையார், சங்கிலியார்
திருநட்சத்திரம்	:	ஆடி, சுவாதி
சம காலத்தவர்	:	திருத்தொண்டத் தொகை பாடி உள்ளதால் அப்பெருமக்களின் பின்னரும், அவர்களுள் சிலரின் சமகாலத்தவருமாவர்.
நால்வகை மார்க்கங்களில்		
சுந்தரர்	:	சகமார்க்கம்
பிறபெயர்கள்	:	நம்பியாரூரர், திருநாவலூரன், ஆரூரன் (மரபுப் பெயர்), வன்தொண்டர், தம்பிரான் தோழர்
சுந்தரர் பாடிய பாடல்கள்	:	திருப்பாட்டு 101 பதிகங்கள் – 1037 பாடல்கள்

சுந்தரர் என்ற பெயர் ஆலால சுந்தரர் என்ற பெயரின் பிற்பகுதியே

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமைத்த பண்

1.	இந்தளம்	: 12
2.	தக்கராகம்	: 4
3.	நட்டராகம்	: 14
4.	கொல்லி	: 7
5.	கொல்லி கௌவாணம்	: 9
6.	பழம்பஞ்சுரம்	: 7
7.	தச்கேசி	: 17
8.	காந்தாரம்	: 6
9.	பியந்தைக் காந்தாரம்	: 1
10.	காந்தார பஞ்சமம்	: 1
11.	நட்டபாடை	: 5
12.	புறநீர்மை	: 3
13.	சிகாமரம்	: 4
14.	குறிஞ்சி	: 4
15.	கௌசிகம்	: 1
16.	செந்துருத்தி	: 1
17.	பஞ்சமம்	: 5

மொத்தபதிகம் 101

Koviloor Digital Library

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு

திருக்கயிலையில் சிவபிரான் உமையம்மையோடு எழுந்தருளியிருந்தனர். இறைவனுக்கு ஆலாலசுந்தரர் என்ற அணுக்கத் தொண்டர் மலர்களைக் கொய்து மாலை தொடுத்தலும், திருநீற்றினை ஏந்தி வருதலுமாகிய பணியைச் செய்துவந்தார். அம்மைக்கும் அநிந்திதை, கமலினி என்ற இருசேடியர் பணியாற்றி வந்தனர்.

ஒருநாள் மலர் கொய்ய ஆலாலசுந்தரர் நந்தவனம் சென்றார். அங்கு இறைவியின் சேடியர்களான அநிந்திதை, கமலினி ஆகிய இருவரும் மலர் கொய்து கொண்டிருந்தனர். அந்நங்கையர் இருவரையும் கண்ட ஆலால – சுந்தரர் அவர்கள் மேல் விருப்பங்கொண்டார். அம்மகளிர் இருவரும் ஆலாலசுந்தரரின் பேரழகில் மயங்கி, தம்நிலை மறந்தனர். மங்கையர்பால் சென்ற தன் மனத்தை மீண்டும் தன்னிலைக்குக் கொண்டுவந்த ஆலால–சுந்தரர் தம் பணியில் ஈடுபட்டு இறைவன் முன் சென்றனர்.

அனைத்தையும் தான் இருக்கும் இடத்திலேயே அறியவல்ல இறைவனும், தம்முன் நின்ற ஆலாலசுந்தரரை நோக்கி 'நீ மாதர் பால் மனம் கொண்டு உன் நிலை மறந்தாய், எனவே நீ எண்ணியபடி தென்னாட்டில் பிறந்து அம்மங்கையர் இருவரையும் மணந்து நல்லின்பம் துய்த்தபின் இங்குவருக' எனப் பணித்தார்.

இதனைக் கேட்ட சுந்தரர் 'இறைவனே! என் பிழை பொறுக்க வேண்டும். மானிடப் பிறப்பை அடைந்து நான் மண்ணுலகில் வாழுங்கால் செய்வது இன்னது, தவிர்ப்பது இன்னது' என்று அறியாது மயங்கும் போது தேவரீர் என்னைத் தடுத்தாட் கொள்ள வேண்டும் என இரந்து வேண்ட அதற்கு இறைவனும் திருவுளம் இசைந்தார்.

Koviloor Digital Library

தென்தமிழ் நாட்டில் திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் ஆதி சைவ அந்தணர் மரபில் வந்த சடையனார்க்கும் அவர் தம் துணைவியார் இசை ஞானியாருக்கும் திருமகனாய் ஆலாலசுந்தரர் தோன்றினார். அவருக்கு நம்பியாரூரர் எனத்திருநாமம் இட்டுப், பிறந்த பிள்ளையைப் போற்றி வளர்த்து வந்தனர்.

ஒருநாள் வீதியில் ஆரூரர் விளையாடிக் கொண்டிருக்கையில் அங்கு வந்த அந்நாட்டரசனான நரசிங்கமுனையரையர் குழந்தையின் பேரெழிலையும், பொலிவினையுங்கண்டு, சடையனாரிடம் சென்று அக்குழந்தையைத் தாம் வளர்த்து வருவதாகக் கூறிப்பெற்றுச் சென்றனர். அரண்மனையில் வளர்ந்தாலும் மறையிலும், ஆகமங்களிலும் கற்றுத் தேர்ச்சிப்பெற்று விளங்கித் திருமணப் பருவத்தை எய்தினார் ஆரூரர்.

தம் மகனான ஆரூரனுக்குத் திருமணம் செய்ய விரும்பிய சடையனார் தம் ஊருக்கு அண்மையில் உள்ள புத்தூரில் வாழும் (இன்று அவ்வூர் மணம் தவிர்த்த புத்தூர் என அழைக்கப்படுகிறது) சடங்கவி சிவாச்சாரியாரின் மகளைப் பேசி, மனம் செய்தற்குரிய நிலையினைச் சான்றோரைக் கூட்டி முடிவு செய்தனர். மணநாளினைக் குறித்து அனைவர்க்கும் திருமுகம் அனுப்பி மணத்திற்குரிய பணிகளைப் பாங்குறச் செய்துவந்தனர்.

திருமணநாளும் வந்தது. அதிகாலையில் ஆரூரர் திருமஞ்சனம் ஆடி கண்டோர் மகிழும் வண்ணம் புத்தாடை புனைந்து புதிய மணமகனுக்குரிய திரு வினைப்பெற்றார் திருநீறணிந்து , உமைபங்கரின் திருவடி பணிந்து மங்கல வாத்தியங்கள் முழங்க, குதிரை மீது ஏறி, அமர்ந்து உறவினரும் நண்பரும் புடை சூழத் திருமணப்பந்தல் வந்து மணத்தவிசில் அமர்ந்தார்.

கயிலையில் ஆலாலசுந்தரருக்கு முன் வாக்களித்தபடி இறைவன் அவர் முன் மையல் கொண்ட மகளிர் இருவரில் ஒருவராய்க்கூட

Koviloor Digital Library
இம்மணப்பெண் அமையாதிருத்தலை அறிந்து, தடுத்தாட்கொள்ள வேண்டி மறை முதியோன் வேடந்தாங்கி மணப்பந்தலுக்கு வர அவையோரும் முதியவரை வரவேற்று, இருக்கை அளித்தனர். அமர்ந்த முதியவரும், அவையீர் நான் கூறுவதைக் கேளுங்கள். இம்மணக்கோலத்தில் இருக்கும் நம்பிக்கும் எனக்கும் ஒரு வழக்குண்டு. அவ்வழக்குத் தீர்ந்தபின் இவன் மணம் செய்தல் நன்று. என்றார். ஆரூரரும் முதியவரே ! உமக்கும் எமக்கும் வழக்கு இருப்பது உண்மையாயின் அதனைக் கூறுக. அவ்வழக்கினைத் தீர்க்காமல் யான் மணத்தை முடிக்கமாட்டேன் என்றார்.

'இந்நம்பியாரூரன் எனக்கு வழிவழி அடிமையானவன்' என்றார். வந்த மறைமுதியவர். அதனைக் கேட்ட அவையோர் அதிர்ச்சியுற்றனர். திடுக்கிட்டனர். சிலர் நகைப்புடன் முதியவரை நோக்கி, முதியவரும், 'இவன் பாட்டன் எனக்கு எழுதிக் கொடுத்த அடிமை ஒலை என்னிடம் உள்ளது அதனைக் கண்டபின் உண்மை தெளிக' என்றார்.

ஆரூரரும், 'அந்தணர் பிறிதொரு அந்தணருக்கு அடிமையாதல் முறையோ ! இங்ஙனம் கூறும் நீர் பித்தனே' என்றார். 'யான் பித்தனோ! பேயனோ ! என்னை நீ அறியாய், வித்தகம் பேசுவதை நிறுத்திப் பணி செய்ய முற்படு' என்றார் முதியவர்.

ஆரூரரும் சற்றுச் சினந்தவராய் 'முதியவரே அடிமை ஒலை உளதாகக் கூறினீரே அதனைக் காட்டும் என்றார். மறைமுதியோனும் உனக்கு அவ்வோலையைக் காட்டுவதைக் காட்டிலும் அவையினருக்குக் காட்டுவேன்'. எனக் கூறும்போது ஆரூரர் விரைந்தோடி அம்மறை முதியவரிடமிருந்த ஒலையைப் பற்றிக் கிழித்தெறிந்தார்.

ஒலை கிழிந்ததைக் கண்ட மறைமுதியவர் ஆற்றமாட்டாது அழுது, 'இது முறையோ' என்றார். அவர் நிலையைக் கண்ட

Koviloor Digital Library
அவையினரும் அவரை நோக்கி, 'புதிய வழக்கினைக் கொண்டு வந்த நீவீர் யாவர் ? நும் இருப்பிடமும் யாது?' என்றனர்.

முதியரும் 'என் ஊர் சேய்மைத்தன்று மிக அருகிலுள்ள திருவெண்ணெய் நல்லூரே எம்மூர். இவ்வாரூரன் கிழித்த ஓலை, படி ஓலை, என்னிடம் மூல ஓலை உள்ளது. இவன் சினந்து என் ஓலையைப் பற்றிக் கிழித்து எறிந்ததிலிருந்து இவன் எனக்கு அடிமை என்பதை ஏற்றுக் கொள்ளுகிறான் என்றார். இம்மொழி கேட்ட நம்பியாரூரர் இவர் வழக்காடலில் வல்லவர் போலும் என எண்ணி, பெரியீர் நும் ஊர் திருவெண்ணெய்நல்லூர் என்றால் அங்கேயே சென்று இப்பிழைப்பட்ட வழக்கினைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றார்'.

'நீ எங்கு அழைத்தாலும் உன் பாட்டன் எழுதிய ஓலையை அவையோரிடம் காட்டி உன் அடிமையை உறுதிப்படுத்துவேன்' என்றார் மறை ஓதியோர்.

திருவெண்ணெய்நல்லூர் அடைந்த அனைவரும் அவைமுன் கூட அவையோர் மறைமுதியவரை நோக்கி 'அந்தணர் மற்றொரு அந்தணருக்கு அடிமையாதல் புதுமையாக உள்ளது. வழக்கும் புதியது இதற்கு உம்மிடம், சாட்சியிருப்பின் அதன்மூலம் உறுதிப் படுத்திடவேண்டும் என்றனர்.

முதியவரும் தம்மிடமிருந்த மூல ஓலையை எடுத்து 'உங்களிடம் தருகின்றேன். முன்போல் இவன் இதனைப் பற்றிக் கிழித்தெறியாமல் பார்த்துக் கொள்ள வேண்டு' மெனக் கூறித் தந்தனர்.

அவ்வோலையில் 'திருநாவலூரில் வாழும் ஆதி சைவனாகிய ஆரூரன் என்னும் நான் திருவெண்ணெய்நல்லூரில் வாழும் இப்பித்தனுக்கு என் வழிவடி வருவோர் அடிமைத் தொண்டு செய்ததற்கு உறுதியாய் எழுதிக் கொடுத்த ஆவண ஓலை இதுவே' என்று எழுதப்பட்டு ஆரூரன் எனக்கைச் சாத்தும் இடப்பட்டிருந்தது.

Koviloor Digital Library

அவையோர் ஆரூரரை நோக்கி 'இது உம் பாட்டன் கைச்சாத்து நும் இல்லில் வேறு கைச்சாத்து ஓலைகள் இருப்பின் கொணரும், அதனுடன் இதனை ஒப்பு நோக்கி உண்மை அறிவோம்' என்றனர்.

அவையோர் மொழிந்தபடி ஒப்பு நோக்கி உண்மை அறிந்தபின் அவர்கள் ஆரூரரை நோக்கி 'இம்மறைவரிடம் நீர் தோற்றுவிட்டீர் அவருக்கு அடிமை செய்தலே நும் கடமை' என்றவர்.

நம்பியாரூரரும் உண்மை உணர்ந்தபின் மறைமுதியோரை நோக்கி 'நீவிர் திருவெண்ணெய்நல்லூர் என்றீரே !' நும் இருப்பிடத்தைக் காட்டும் வருகின்றேன். எனக்கூற, முதியவர் முன் செல்ல அனைவரும் அவரைத் தொடர்ந்தனர். மறைவர் திருவெண்ணெய்நல்லூரிலுள்ள 'அருள்துறை' என்னும் சிவாலயம் சென்று மறைந்தனர். முன் சென்ற முதியவரைக் காணாமல் பின் வந்தோர் திகைத்து நின்றனர். அவரைத் தேடிச் செல்லும் நம்பியாரூரரும் அவரைப் பன்முறை கூவி அழைத்தனர்.

இறைவன் இடப் வாகனனாய்க் காட்சி தந்து 'ஆரூரனே!' நீ எம் தொண்டன் மங்கையர் மையலில் மனம் வைத்தாய். அதனால் இங்குப் பிறந்தாய், முன் கூறியபடி உம்மைத் தடுத்தாட்கொண்டோம்' எனத் திருவாய்மலர்ந்தார்.

திருநாவலூரரும் இறைவன் திருவருளை நினைந்து நினைந்து உருகிதாய்ப் பசுவின் கனைப்பினைக் கேட்டுக் கதறும் கன்றினைப் போன்று அன்பினாற் கதறி, மெய்ம்மயிர் சிலிர்த்தும் கைகளைத் தலைமேற் குவித்து இறைஞ்சி 'எளியேனை வலிதில்' தடுத்தாட்கொள்ள வந்த பரம்பொருளே ! நும்மை எப்படிப் போற்றிப் புகழ்வேன்! ' என அரற்றினர். இறைவனும் 'எம்மை நீ பித்தா' எனப் பேசியதால் 'பித்தா' என்றே பாடுக' எனப் பணித்தார். திருநாவலூரரும் தமிழ் மறையைப் பாடத் தொடங்குகின்றார்.

Koviloor Digital Library

திருக்கயிலையில் கண்ட கமலினி திருவாரூரில் பதியிலார் குலத்தில் 'பரவையார்' என்ற பெயருடன் தோன்றிப் பேரழகுடன் வளர்ந்தார். திருவாரூர் திருக்கோயிலில் நம்பியாரூரர் வழிபட வந்த போது பரவையாரைக் கண்டார். முன்வினைப்படி ஒருவரை ஒருவர் விரும்பினர். இறைவனருளால் மணம் கொண்டனர்.

திருவாரூர் கோயில் தேவாசிரிய மண்டபத்தில் புற்றிடங்கொண்டார் அடி எடுத்துக் கொடுக்க "தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகைப் பதிகம் பாடினார். குண்டையூர் கிழார் தமக்கு அளித்த நெல் மலையைக் கோளிலிப் பெருமானை வேண்டிப் பரவையாரிடம் சேர்த்தார். புகலூர்ப் பெருமானை வணங்கி உறங்கிய போது தலைக்கு வைத்துக் கொண்ட செங்கல் செம்பொன்னாகப் பெற்றார். திருமுதுகுன்றத்தில் பெருமான் அளித்த பொன்னை மணிமுத்தாறு நதியில் இட்டுத் திருவாரூர் கமலாலயத்தில் எடுத்துப் பரவையாரிடம் சேர்ப்பித்தார். திருக்குருகாவூரில் இறைவனிடம் பொதி சோறு பெற்றார். திருக்கச்சூரில் சிவபெருமான் அந்தணராக வந்து பிச்சை ஏற்று சுந்தரருக்குக் கொடுத்துப் பசியாற்றினார்.

திருக்கயிலையில் ஆலால சுந்தரர் பால் மையல் கொண்ட அநிந்திதை, சங்கிலியார் என்ற பெயருடன் பிறந்து வளர்ந்து திருவொற்றியூரில் தங்கி படம்பக்க நாதருக்குத் தொண்டு செய்து வந்தார். சுந்தரர் ஒற்றியூர் வந்த போது சங்கிலியாரைக் கண்டார் விரும்பினார். பிரியேன் என்று உறுதி கூறி மணம் பூண்டார். உறுதியை மீறித் திருவாரூர் பெருமானைக் காணப்புறப்பட்டார். கண்பார்வையை இழந்தார். திருவெண்பாக்கம் கோயிலில் ஊன்று கோல்பெற்றார். திருவருளால் கச்சியேகம்பத்தில் இடக்கண்ணும் வலக் கண்ணைத் திருவாரூரிலும் பெற்றார்.

Koviloor Digital Library

பரவையார் ஊடலைத் தவிர்க்கத் தியாகராசரைத் தூது அனுப்பினார். ஏயர்கோன் கலிக்காமரின் சூலையைத் தீர்த்து அவருடன் நண்பரானார். சேரமான் பெருமானை நட்பாகக் கொண்டு அவருடன் மலைநாடு சென்றார். அவர் கொடுத்த நிதிக்குவைகளைத் திருமுருகன் பூண்டிக்கருகே பெருமான் வேடர்கள் மூலம் வழிப்பறி செய்ய வெகுண்டு பதிகம் பாடி இழந்த பொருட்களைத் திரும்பப் பெற்றார். புக்கொளியூர் அவிநாசியில் முதலை உண்ட பாலகனை மீட்டுக் கொடுத்தார்.

திருவஞ்சைக்களம் சென்று "வெறுத்தேன் மனைவாழ்க்கை" என்று பாடினார். சிவனருளால் வெள்ளை யானை வந்தது. சேரமான் பெருமானை எண்ணி அதன் மேல் அமர்ந்து கயிலை சென்றார். சேரமான் தன் குதிரையின் செவியில் அஞ்செழுத்து ஓதி அதன் மேல் ஏறிக்கொண்டு சுந்தரர் பெருமான் செல்லும் வெள்ளை யானையை வலம் வந்து முன்னால் கயிலை சேர்ந்தார். சுந்தரர் சிவபெருமானைத் தொழுது "தானெனைமுன் படைத்தான்" எனும் ஏழிசைத் திருப்பதிகம் பாடி அருளினார். இத்திருப்பதிகம் கயிலையினின்று ஆழி வேந்தனாம் வருண பகவான் மூலம் திருவஞ்சைக்களத்தில் சேர்ப்பிக்கப்பெற்றது.

இவருடைய காலம் 9ஆம் நூற்றாண்டு விறன்மிண்டர், மானக்கஞ்சாறர், ஏயர்கோன்கலிக்காமர், சோமாசிமாறர், கழற்சிங்கர், பெருமிழலைக் குறம்பர், கோட்புலியர் ஆகிய நாயன்மார்கள் இவர் காலத்தவர்கள் என்பர்.

சுந்தரர் பெருமான் அருளியவை முப்பத்து எண்ணாயிரம் அவற்றிக்குத் "திருப்பாட்டு" என்று பெயர். கிடைத்த பதிகங்கள் 101. பன்னிரு திருமுறையில் 7 ஆம் திருமுறையாக அமைந்துள்ளன.

Koviloor Digital Library

தல பதிகம் அட்டவணை

(அகர வரிசை)

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

தல பதிகம் அட்டவணை
(தலைமுறை வரிசை)

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

காணிக்கை

"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க"

என்று எப்போதும் வாழ்த்தி வாழும்

என் தந்தையார்

சிவ. வி.ஏ. ராஜவேலு முதலியார்

அவர்களுக்கும்

என் அன்னையார்

சிவ. வி. ராஜபூஷணம் அவர்களுக்கும்

இந்நூலை

காணிக்கையாக்குகின்றேன்

கயிலை மயூரப்ரியா

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிய

தேவாரம்

1. திருத்தில்லை

இறைவன் - மூலநாதர், கூத்தபெருமான் இறைவி - உமை அம்மை, சிவகாமசுந்தரி

பண் : குறிஞ்சி

மடித்து ஆடும் அடிமைக்கண் அன்றியே மனனே நீ
வாழு நாளும்
தடுத்துஆட்டித் தருமனார் தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
கடுத்து ஆடும் கரதலத்தில் தமருகமும் எரி அகலும்
கரிய பாம்பும்
பிடித்து ஆடிப் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 1

பேராது காமத்தில் சென்றார் போல் அன்றியே
பிரியாது உள்கிச்
சீர் ஆர்ந்த அன்பராய்ச் சென்று முன் அடி வீழும்
திருவினாரை
ஓராது தருமனார்தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 2

Koviloor Digital Library

நரியார்தம் கள்ளத்தால் பக்கான பரிசு ஒழிந்து
நாளும் உள்கித்
திரியாத அன்பராய்ச் சென்று முன் அடி வீழும்
சிந்தையாரைத்
தரியாது தருமனார்தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
பெரியோர்கள் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 3

கருமையார் தருமனார்தமர் நம்மைக் கட்டிய கட்டு
அறுப்பிப்பானை
அருமையாம் தன் உலகம் தருவானை மண்ணுலகம்
காவல் பூண்ட
உரிமையால் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை
மறுக்கம் செய்யும்
பெருமையார் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 4

கருமானின்உரி ஆடை செஞ்சடைமேல் வெண்மதியக்
கண்ணியானை
உரும் அன்ன கூற்றத்தை உருண்டு ஓட உதைத்து உகந்து
உலவா இன்பம்
தருவானைத் தருமனார்தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
பெருமானால் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 5

Koviloor Digital Library

உய்த்து ஆடித் திரியாதே உள்ளமே ஒழிகண்டாய்
ஊன்கண் ஓட்டம்
எத்தாலும் குறைவு இல்லை என்பர்காண் நெஞ்சமே
நம்மை நாளும்
பைத்து ஆடும் அரவினன் படர்சடையன் பரஞ்சோதி
பாவம் தீர்க்கும்
பித்தாடி புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 6

முட்டாத முச்சந்தி மூஆயிரவர்க்கும்
மூர்த்தி என்னப்
பட்டானைப் பத்தராய்ப் பாவிப்பார் பாவமும்
வினையும் போக
விட்டானை மலை எடுத்த இராவணனைத் தலைபத்தும்
நெரியக் காலால்
தொட்டானைப் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 7

கல் தானும் குழையுமாறு அன்றியே கருதுமா
கருத கிற்றார்க்கு
எற்றாலும் குறைவு இல்லை என்பர்காண் உள்ளமே
நம்மைநாளும்
செற்றுஆட்டித் தருமனார்தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
பெற்றேறிப் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 8

Koviloor Digital Library

நாடு உடைய நாதன்பால் நன்று என்றும் செய் மனமே
நம்மை நாளும்
தாடு உடைய தருமனார்தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
மோடு உடைய சமணர்க்கும் முடை உடைய சாக்கியர்க்கும்
மூடம் வைத்த
பீடு உடைய புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப்
பெற்றாம் அன்றே. 9

பார் ஊரும் அரவு அல்குல் உமைநங்கைஅவள் பங்கன்
பைங்கண் ஏற்றன்
ஊர்ஊரன் தருமனார்தமர் செக்கில் இடும்போது
தடுத்து ஆட்கொள்வான்
ஆரூரன்தம்பிரான் ஆரூரன் மீ கொங்கில்
அணி காஞ்சிவாய்ப்
பேரூரர் பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே
பெற்றாம் அன்றே. 10

பதிக வரலாறு : (மடித்தாடு)

திருமுதுகுன்றத்திற் பெற்ற பொற்குவையைத் திருவாரூர்க் குளத்திலெடுக்கும்படி மணிமுத்தாற்றி லிட்டு வருகின்ற வன்றொண்டப் பெருமான் வழிக்கொண்டு திருத்தில்லையையடைந்து திருவாயிலிற் சென்று திருத்தெருவிற்சார்ந்து வணங்கித் 'தூலவிலிங்கத்தைப்' பணிந்து உள்ளேபுக்குத் திருமாளிகையை வலம்வந்து, தலையிற் குவித்த கைகளை உடையராய்த் திருவணுக்கள் திருவாயிலைக் கடந்து பொன்னம்பலத்தையடைந்து ஐந்தொழில் அருட்கூத்தினைச் செய்யுந் திருவடிகளைக் கண்களில் இன்பவருவி சொரியவும் ஏத்தும்வாய் குழறு

Koviloor Digital Library

எட்டுருப்பானும் வணங்கும் வேட்கைகூர வணங்கிப்பரவி இத்திருப்பதிகத்தை எடுத்துத் திருப்பேரூரிற் தாம்கண்ட நிலையைச் சிறப்பித்துத் 'தனிக்கூத்தென்றும் நடிப்பானை நாம் மனமே பெற்றவாறு' என்று பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

2. திருக்கழிப்பாலை

இறைவன் - பால் வண்ண நாதர் இறைவி - வேதநாயகி

பண் : நட்டராகம்

செடியேன் தீவினையில் தடுமாறக் கண்டாலும்
அடியான் ஆவா எனாது ஒழிதல் தகவு ஆமே
முடிமேல் மா மதியும் அரவும் உடன்துயிலும்
வடிவே தாம் உடையார் மகிழும் கழிப்பாலை அதே. 1

எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்து என்னொடும் உடன்ஆகி நின்றுஅருளி
இங்கே என் வினையை அறுத்திட்டு எனை ஆளும்
கங்காநாயகனே கழிப்பாலை மேயானே. 2

ஒறுத்தாய் நின் அருளில் அடியேன் பிழைத்தனங்கள்
பொறுத்தாய் எத்தனையும் நாயேனைப் பொருட்படுத்துச்
செறுத்தாய் வேலைவிடம் மறியாமல் உண்டு கண்டம்
கறுத்தாய் தண்கழனிக் கழிப்பாலை மேயானே. 3

சுரும்பு ஆர் விண்ட மலர்அவை தூவி தூங்கு கண்ணீர்
அரும்பாநிற்கும் மனத்து அடியாரொடும் அன்பு செய்வன்
விரும்பேன் உன்னை அல்லால் ஒரு தெய்வம் என் மனத்தால்
கரும்பாரும் கழனிக் கழிப்பாலை மேயானே. 4

Koviloor Digital Library

ஒழிப்பாய் என் வினையை உகப்பாய் முனிந்துஅருளித்
தெழிப்பாய் மோதுவிப்பாய் விலை ஆவணம் உடையாய்
கழிப்பால் கண்டல் தங்கச் சுழி ஏந்து மா மறுகிற்
கழிப்பாலை மருவும் கனல் ஏந்து கையானே. 5

ஆர்த்தாய் ஆடுஅரவை அரை ஆர் புலி அதள்மேல்
போர்த்தாய் யானையின்தோல் உரிவை புலால் நாறக்
காத்தாய் தொண்டு செய்வார் வினைகள்அவை போக
பார்த்தாய் நுற்கிடமாம் பழி இல் கழிப்பாலைஅதே. 6

பருத் தாள் வன் பகட்டைப் படமாக முன்பற்றி அதள்
உரித்தாய் யானையின்தோல் உலகம் தொழும் உத்தமனே
எரித்தாய் முப்புரமும் இமையோர்கள் இடர் கடியும்
கருத்தா தண்கழனிக் கழிப்பாலை மேயானே. 7

படைத்தாய் ஞாலம்எலாம் படர்புன்சடை எம் பரமா
உடைத்தாய் வேள்விதனை உமையாளை ஓர்கூறு உடையாய்
அடர்த்தாய் வல்அரக்கன் தலைபத்தொடு தோள் நெரியக்
கடற்சாரும் கழனிக் கழிப்பாலை மேயானே. 8

பொய்யா நா அதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்று எரியும் விளக்கே ஒத்த தேவர்பிரான்
செய்யானும் கரிய நிறத்தானும் தெரிவு அரியான்
மையார் கண்ணியொடும் மகிழ்வான் கழிப்பாலை அதே. 9

பழி சேர் இல் புகழான் பரமன் பரமேட்டி
கழி ஆர் செல்வம் மல்குங் கழிப்பாலை மேயானைத்
தொழுவான் நாவலர்கோன் ஆரூரன் உரைத்த தமிழ்
வழுவா மாலை வல்லார் வானோர்உலகு ஆள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

3. திருவெண்காடு

இறைவன் - திருவெண்காட்டீசர், சுவேதாரண்யேசர் இறைவி - பிரமவித்யா நாயகி

பண் : இந்தளம்

படம் கொள் நாகம் சென்னி சேர்த்திப் பாய் புலித்தோல் அரையில் வீக்கி
அடங்கலார் ஊர் எரியச் சீறி அன்று மூவர்க்கு அருள்புரிந்தீர்
மடங்கலானைச் செற்று உகந்தீர் மனைகள்தோறும் தலை கை ஏந்தி
விடங்கராகித் திரிவது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 1

இழித்து உகந்தீர் முன்னை வேடம் இமையவர்க்கும் உரைகள் பேணாது
ஒழித்து உகந்தீர் நீர் முன் கொண்ட உயர்தவத்தை அமரர் வேண்ட
அழிக்க வந்த காமவேளை அவனுடைய தாதை காண
விழித்து உகந்த வெற்றி என்னே வேலை சூழ் வெண்காடனீரே 2

படைகள் ஏந்திப் பாரிடமும் பாதம் போற்ற மாதும் நீரும்
உடை ஓர் கோவணத்தர் ஆகி உண்மை சொல்லீர் உம்மை அன்றே
சடைகள் தாழக் கரணம் இட்டுத் தன்மை பேசி இல் பலிக்கு
விடைஅது ஏறித் திரிவது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 3

பண் உளீராய்ப் பாட்டும் ஆனீர் பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்
கண் உளீராய்க் கருத்தில் உம்மைக் கருதுவார்கள் காணும் வண்ணம்
மண் உளீராய் மதியம் வைத்தீர் வானநாடர் மருவி ஏத்த
விண் உளீராய் நிற்பது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 4

குடம் எடுத்து நீரும் பூவும் கொண்டு தொண்டர் ஏவல் செய்ய
நடம் எடுத்து ஒன்று ஆடிப் பாடி நல்குவீர் நீர் புல்கும் வண்ணம்
வடம் எடுத்த கொங்கை மாது ஓர்பாகமாக வார்கடல்வாய்
விடம் மிடற்றில் வைத்தது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 5

Koviloor Digital Library

மாறுபட்ட வனத்துஅகத்தின் மருவ வந்த வன் களிற்றைப்
பீறி இட்டமாகப் போர்த்தீர் பெய் பலிக்கு என்று இல்லம்தோறும்
கூறுபட்ட கொடியும் நீரும் குலாவி ஏற்றை அடர ஏறி
வேறுபட்டுத் திரிவது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 6


காதலாலே கருதுந் தொண்டர் காரணத்தர்ஆகி நின்றே
பூதம் பாடப் புரிந்து நட்டம் புவனி ஏத்த ஆட வல்லீர்
நீதிஆக ஏழில்ஓசை நித்தர் ஆகிச் சித்தர் சூழ
வேதம் ஓதித் திரிவது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 7

குரவு கொன்றை மதியம் மத்தம் கொங்கை மாதர்கங்கை நாகம்
விரவுகின்ற சடை உடையீர் விருத்தர் ஆனீர் கருத்தில் உம்மைப்
பரவும் என்மேல் பழிகள் போக்கீர் பாகமாய மங்கை அஞ்சி
வெருவ வேழம் செற்றது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 8

மாடம் காட்டும் கச்சி உள்ளீர் நிச்சயத்தால் நினைப்பு உளார்பால்
பாடும் காட்டில் ஆடல்உள்ளீர் பரவும் வண்ணம் எங்ஙனேதான்
நாடும் காட்டில் அயனும் மாலும் நணுகா வண்ணம் அனலுமாய
வேடம் காட்டித் திரிவது என்னே வேலை சூழ் வெண்காடனீரே 9

விரித்த வேதம் ஓத வல்லார் வேலை சூழ் வெண்காடு மேய
விருத்தன் ஆய வேதன்தன்னை விரி பொழில் திரு நாவலூரன்
அருத்தியால் ஆரூரன்தொண்டன் அடியன் கேட்ட மாலைபத்தும்
தெரித்த வண்ணம் மொழிய வல்லார் செம்மையாளர் வான்உளாரே 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

4. திருக்குருகாவூர்வெள்ளடை

இறைவன் - வெள்ளடை நாதர் இறைவி - காவியங்கண்ணி

பண் : நட்டராகம்

இத்தனை யாமாற்றை அறிந்திலேன் எம்பெருமான்
பித்தனே என்று உன்னைப் பேசுவார் பிறர்எல்லாம்
முத்தினை மணிதன்னை மாணிக்கம் முளைத்து எழுந்த
வித்தனே குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 1

ஆவியைப் போகாமே தவிர்த்து என்னை ஆட்கொண்டாய்
வாவியில் கயல் பாயக் குளத்துஇடை மடைதோறும்
காவியுங் குவளையுங் கமலஞ் செங்கழுநீரும்
மேவிய குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 2

பாடுவார் பசி தீர்ப்பாய் பரவுவார் பிணி களைவாய்
ஓடு நன் கலனாக உண் பலிக்கு உழல்வானே
காடு நல் இடமாகக் கடுஇருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 3

வெப்பொடு பிணிஎல்லாம் தவிர்த்து எனை ஆட்கொண்டாய்
ஒப்பு உடை ஒளி நீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை
அப்படி அழகாய அணி நடை மடஅன்னம்
மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 4

வரும் பழி வாராமே தவிர்த்து எனை ஆட்கொண்டாய்
சுரும்பு உடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண்நீற்றானே
அரும்பு உடை மலர்ப் பொய்கை அல்லியும் மல்லிகையும்
விரும்பிய குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 5

Koviloor Digital Library

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய் பழத்தினில் சுவை ஒப்பாய்
கண்ணிடை மணி ஒப்பாய் கடுஇருள் சுடர் ஒப்பாய்
மண்ணிடை அடியார்கள் மனத்து இடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 6

போந்தனை தரியாமே நமன்தமர் புகுந்து என்னை
நோந்தனை செய்தாலும் நுன்அலது அறியேன் நான்
சாந்தனை வருமேலும் தவிர்த்து எனை ஆட்கொண்ட
வேந்தனே குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 7

மலக்கு இல் நின் அடியார்கள் மனத்துஇடை மால் தீர்ப்பாய்
சலச்சலம் மிடுக்கு உடைய தருமனார்தமர் என்னைக்
கலக்குவான் வந்தாலும் கடுந் துயர் வாராமே
விலக்குவாய் குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 8

படுவிப்பாய் உனக்கே ஆள் பலரையும் பணியாமே
தொடுவிப்பாய் துகிலொடு பொன் தோல் உடுத்து உழல்வானே
கெடுவிப்பாய் அல்லாதார்க் கேடு இலாப் பொன்அடிக்கே
விடுவிப்பாய் குருகாவூர் வெள்ளடை நீ அன்றே. 9

வளம் கனி பொழில் மல்கு வயல் அணிந்து அழகாய
விளங்கு ஒளி குருகாவூர் வெள்ளடை உறைவானை
இளங் கிளை ஆரூரன் வனப்பகை அவள்அப்பன்
உளம் குளிர் தமிழ்மாலை பத்தர்கட்கு உரையாமே. 10

பதிக வரலாறு : (இத்தனையா)

நம்பியாரூரர் திருக்குருகாவூருக்கு அருகாக வெயில் நேரத்திற் போகும் போது அவர் பசியுந் தாகமுங் கொண்டிருந்தமையால்,

Koviloor Digital Library

அஃதறிந்து இறைவன் வழியில் தண்ணீர்ப் பந்தரமைத்துக் கொண்டு, அந்தணர் வடிவினராய்ச் சுந்தரர் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர். சுந்தரரும் அங்கு வந்து அப்பந்தரின் கீழ் அமர்ந்து ஐந்தெழுத்து தோதிக் கொண்டிருந்தார். அந்தணர் அவரை நோக்கி, 'நீர் மிகப் பசித்திருத்தலால் இப்போதே சோற்றையுண்டு தண்ணீரையும் பருக' எனத் தாம் வைத்திருந்தவற்றைக் கொடுக்க, நம்பிகளும் அவற்றை உண்டுங் குடித்தும் இளைப்பினாற் சிறிது உறங்கினார். அந்நேரத்தில் இறைவன் பந்தருடன் மறைய, விழித்தெழுந்த நம்பியாரூரர் இறைவன் திருவிளையாடலை உணர்ந்து நெஞ்சுருகி 'இத்தனையா மாற்றை அறிந்திலேன்' என்னுமித்திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

5. திருக்கழுமலம்

இறைவன் - பிரமபுரீசுவரர் இறைவி - திருநிலைநாயகி

பண் : தக்கேசி

சாதலும் பிறத்தலும் தவிர்த்து எனை வகுத்துத்
தன் அருள் தந்த எம் தலைவனை மலையின்
மாதினை மதித்து அங்கு ஓர்பால் கொண்ட மணியை
வருபுனல் சடைஇடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கு ஓர் இரும்பு உண்ட நீரை
எண்வகைஒருவனை எங்கள் பிரானைக்
காதில் வெண்குழையனைக் கடல் கொள மிதந்த
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 1

Koviloor Digital Library

மற்று ஒரு துணை இனி மறுமைக்கும் காணேன்
 வருந்தல்உற்றேன் மறவா வரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமும் துணை என்று கருதேன்
 துணை என்று நான் தொழப்பட்ட ஒண்சுடரை
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
 முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை அடியேன்
 கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 2

திருத் தினைநகர் உறை சேந்தன் அப்பன் என்
 செய்வினை அறுத்திடும் செம்பொனை அம் பொன்
ஒருத்தனை அல்லது இங்கு ஆரையும் உணரேன்
 உணர்வு பெற்றேன் உய்யும் காரணம் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவுஇடை விரவி
 விழித்து எங்கும் காணமாட்டாது விட்டு இருந்தேன்
கருத்தனை நிருத்தம் செய் காலனை வேலைக்
 கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே 3

மழைக்கு அரும்பும் மலர்க் கொன்றையினானை
 வளைக்கல்உற்றேன் மறவா மனம் பெற்றேன்
பிழைத்து ஒரு கால் இனிப் போய்ப் பிறவாமைப்
 பெருமை பெற்றேன் பெற்றதார் பெறுகிற்பார்
குழைக் கருங்கண்டனைக் கண்டுகொள்வானே
 பாடுகின்றேன் சென்று கூடவும் வல்லேன்
கழைக்கரும்பும் கதலிப் பலசோலைக்
 கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 4

Koviloor Digital Library

குண்டலம் குழை திகழ் காதனே என்றும்
கொடுமழுவாள்படைக் குழகனே என்றும்
வண்டு அலம்பும் மலர்க்கொன்றையன் என்றும்
வாய் வெருவித் தொழுதேன் விதியாலே
பண்டை நம் பலமனமும் களைந்து ஒன்றாய்ப்
பசுபதி பதிவினவிப் பலநாளும்
கண்டல் அம் கழிக் கரை ஓதம் வந்து உலவும்
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 5

வரும் பெரும் வல்வினை என்று இருந்து எண்ணி
வருந்தல்உற்றேன் மறவா மனம் பெற்றேன்
விரும்பி என் மனத்துஇடை மெய் குளிர்ப்பு எய்தி
வேண்டி நின்றே தொழுதேன் விதியாலே
அரும்பினை அலரினை அமுதினைத் தேனை
ஐயனை அறவன் என் பிறவிவேர் அறுக்கும்
கரும்பினைப் பெருஞ் செந்நெல் நெருங்கிய கழனிக்
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 6

அயலவர் பரவவும் அடியவர் தொழவும்
அன்பர்கள் சாயலுள் அடையல்உற்று இருந்தேன்
முயல்பவர் பின் சென்று முயல் வலை யானை
படும் என மொழிந்தவர் வழி முழுது எண்ணிப்
புயலினைத் திருவினைப் பொன்னினது ஒளியை
மின்னினது உருவினை என்இடைப் பொருளைக்
கயல்இனம் சேலொடு வயல் விளையாடும்
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 7

Koviloor Digital Library

நினை தரு பாவங்கள் நாசங்கள் ஆக
நினைந்து முன் தொழுது எழப்பட்ட ஒண்சுடரை
மனை தரு மலைமகள் கணவனை வானோர்
மாமணிமாணிக்கத்தையும் மறைப்பொருளைப்
புனைதரு புகழினை எங்களது ஒளியை
இருவரும் ஒருவன் என்று உணர்வு அரியவனைக்
கனைதரு கருங்கடல் ஓதம் வந்து உலவும்
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 8

மறைஇடைத் துணிந்தவர் மனைஇடை இருப்ப
வஞ்சனை செய்தவர் பொய்கையுள் மாயத்
துறை உறக் குளித்து உளதாக வைத்து உய்த்த
துன்மை எனும் தகவின்மையை ஓரேன்
பிறை உடைச் சடையனை எங்கள் பிரானைப்
பேர்அருளாளனைக் கார் இருள் போன்ற
கறை அணி மிடறு உடை அடிகளை அடியேன்
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 9

செழு மலர்க்கொன்றையும் கூவிளமலரும்
விரவிய சடைமுடி அடிகளை நினைந்திட்டு
அழு மலர்க்கண்இணை அடியவர்க்கு அல்லால்
அறிவு அரிது அவன் திருவடியிணை இரண்டும்
கழுமல வள நகர்க் கண்டுகொண்டு ஊரன்
சடையன்தன் காதலன் பாடிய பத்தும்
தொழு மலர் எடுத்த கை அடியவர்தம்மைத்
துன்பமும் இடும்பையும் சூழகிலாவே. 10

Koviloor Digital Library

பதிக வரலாறு : (சாதலும்)

தில்லைச் சிற்றம்பலத்தை வணங்கிப் புறந்தருவார் போற்றிசைப்பக் கொள்ளிடத் திருநதியைக் கடந்து செல்கின்றவராய் அறம்பயந்தாள் திருமுலைப்பால் அமுதுண்டு வளர்ந்த ஆளுடைய பிள்ளையார் திருவவதாரஞ் செய்த பெரும்புகழ் வாய்ந்த திருக்கழுமலத்தை அடைந்து வண்றொண்டப் பெருமான் 'பிள்ளையார் பிறந்தருளிய பெரும்புகலி உள்ளும் நான் மிதியேன்' என்று ஊரெல்லைப்புறம் வணங்கி வலமாக வரும் பொழுது மங்கையிடங் கொண்டபிரான் எதிர்காட்சி கொடுத்தருள நிறைந்த பேரன்பினாற் 'கண்டுகொண்டேன் கயிலையினில் வீற்றிருந்த படி' என்று இத்திருப்பதிகம் பாடி வணங்கி வழிபட்டார்.

திருச்சிற்றம்பலம்

6. திருக்கோலக்கா

பண் : தக்கேசி

புற்றில் வாள்அரவு ஆர்த்த பிரானைப்
பூதநாதனைப் பாதமே தொழுவார்
பற்று வான்துணை எனக்கு எளிவந்த
பாவநாசனை மேவரியானை
முற்றலார் திரி புரம்ஒரு மூன்றும்
பொன்ற வென்றி மால்வரை அரி அம்பாக்
கொற்ற வில் அங்கை ஏந்திய கோனைக்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 1

அங்கம்ஆறும் மாமறை ஒருநான்கும்
ஆய நம்பனை வேய் புரை தோளி
தங்கு மா திருஉரு உடையானைத்
தழல்மதி சடைமேல் புனைந்தானை

Koviloor Digital Library

வெங் கண் ஆனையின் ஈர்உரியானை
விண்ணுளாரொடு மண்ணுளார் பரசுங்
கொங்கு உலாம் பொழில் குர வெறி கமழும்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 2

பாட்டுஅகத்து இசையாகி நின்றானைப்
பத்தர் சித்தம் பரிவு இனியானை
நாட்டுஅகத்தேவர் செய்கை உளானை
நட்டம்ஆடியை நம்பெருமானைக்
காட்டுஅகத்து உறு புலி உரியானைக்
கண் ஓர்மூன்று உடை அண்ணலை அடியேன்
கோட்டகப் புனலார் செழுங் கழனிக்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 3

ஆத்தம் என்று என ஆள்உகந்தானை
அமரர்நாதனைக் குமரனைப் பயந்த
வார்த் தயங்கிய முலை மடமானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்தனைச் சிவனைச் செழுந்தேனைத்
தில்லை அம்பலத்துள் நிறைந்து ஆடும்
கூத்தனைக் குருமாமணிதன்னைக்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 4

அன்று வந்து எனை அகலிடத்தவர்முன்
ஆள்அதாக என்று ஆவணம் காட்டி
நின்று வெண்ணெய்நல்லூர்மிசை ஒளித்த
நித்திலத்திரள் தொத்தினை முத்திக்கு

Koviloor Digital Library

ஒன்றினான்தனை உம்பர்பிரானை
உயரும் வல் அரணம் கெடச் சீறும்
குன்றவில்லியை மெல்லியல் உடனே
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 5

காற்றுத் தீப் புனல்ஆகி நின்றானைக்
கடவுளைக் கொடு மால்விடையானை
நீற்றுத் தீஉருவாய் நிமிர்ந்தானை
நிரம்பு பல்கலையின் பொருளாலே
போற்றித் தன் கழல் தொழுமவன் உயிரைப்
போக்குவான் உயிர் நீக்கிடத் தாளாற்
கூற்றைத் தீங்கு செய் குரைகழலானைக்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 6

அன்று அயன்சிரம் அரிந்து அதில் பலி கொண்டு
அமரருக்கு அருள் வெளிப்படுத்தானைத்
துன்று பைங்கழலில் சிலம்பு ஆர்த்த
சோதியைச் சுடர் போல் ஒளியானை
மின்தயங்கிய இடை மடமங்கை
மேவும் ஈசனை வாசம் மா முடிமேல்
கொன்றை அம் சடைக் குழகனை அழகார்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 7

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தானம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளனை என் மனக் கருத்தை

Koviloor Digital Library

ஆளும் பூதங்கள் பாட நின்று ஆடும்
அங்கணன்தனை எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயில் உள்ளானைக்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 8

அரக்கன் ஆற்றலை அழித்து அவன் பாட்டுக்கு
அன்று இரங்கிய வென்றியினானைப்
பரக்கும் பார் அளித்து உண்டு உகந்தவர்கள்
பரவியும் பணிதற்கு அரியானைச்
சிரக் கண் வாய் செவி மூக்கு உயர் காயம்
ஆகித் தீவினை தீர்த்த எம்மானைக்
குரக்குஇனம் குதிகொண்டு உகள் வயல் சூழ்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 9

கோடரம் பயில் சடை உடைக் கரும்பைக்
கோலக்காவுள் எம்மானை மெய்ம் மானப்
பாடர் அங் குடி அடியவர் விரும்பப்
பயிலும் நாவல் ஆரூரன் வன்தொண்டன்
நாடு இரங்கி முன் அறியும் அந் நெறியால்
நவின்ற பத்துஇவை விளம்பிய மாந்தர்
காடு அரங்கு என நடம் நவின்றான்பால்
கதியும் எய்துவர் பதி அவர்க்கு அதுவே. 10

பதிக வரலாறு : (புற்றில்)

திருப்புன்கூரை அணைந்திறைஞ்சி மணம் விரிந்த மலர்ச்சோலை சூழ்ந்த திருக்கோலக்கா அடையக் கங்கை சடைக்கரந்தவர் எதிர்கட்சி கொடுத்தருளக் கண்ட வன்றொண்டர் பெருவிருப்பாற் தொழுது

Koviloor Digital Library

திருப்பதிகம் பாடுகின்றவர், திருக்கைகளால் ஒத்திப் பாடிய திருஞான சம்பந்தருக்குப் பிஞ்ஞகர் அருளினாற் திருத்தாளம் அளித்தபடியைச் சிறப்பித்துப் போற்றிசைத்தார்.

திருச்சிற்றம்பலம்

7. திருநின்றியூர்

இறைவன் - மாகாலட்சுமி நாதர் இறைவி - உலகநாயகி

பண் : நட்டராகம்

அற்றவனார் அடியார்தமக்கு ஆயிழை பங்கினராம்
பற்றவனார் எம் பராபரர் என்று பலர் விரும்பும்
கொற்றவனார் குறுகாதவர் ஊர் நெடு வெஞ்சரத்தால்
செற்றவனார்க்கு இடம்ஆவது நம் திரு நின்றியூரே 1

வாசத்தினார் மலர்க்கொன்றை உள்ளார் வடிவு ஆர்ந்த நீறு
பூசத்தினார் புகலிந் நகர் போற்றும் எம் புண்ணியத்தார்
நேசத்தினால் என்னை ஆளும்கொண்டார் நெடுமாகடல் சூழ்
தேசத்தினார்க்கு இடம்ஆவது நம் திரு நின்றியூரே 2

அங் கையில் மூஇலைவேலர் அமரர் அடி பரவச்
சங்கையை நீங்க அருளித் தடங்கடல்நஞ்சம் உண்டார்
மங்கை ஓர்பாகர் மகிழ்ந்த இடம் வளம் மல்கு புனல்
செங்கயல் பாயும் வயல் பொலியும் திரு நின்றியூரே 3

ஆறு உகந்தார் அங்கம் நால்மறையார் எங்கும் ஆகி அடல்
ஏறு உகந்தார் இசைஏழ் உகந்தார் முடிக் கங்கைதன்னை
வேறு உகந்தார் விரிநூல் உகந்தார் பரி சாந்தம்அதா
நீறு உகந்தார் உறையும் இடமாம் திரு நின்றியூரே 4

Koviloor Digital Library

வஞ்சம்கொண்டார் மனம் சேரகில்லார் நறுநெய் தயிர் பால்
அஞ்சும் கொண்டு ஆடிய வேட்கையினார் அதிகைப்பதியே
தஞ்சம் கொண்டார் தமக்கு என்றும் இருக்கை சரண் அடைந்தார்
நெஞ்சம் கொண்டார்க்கு இடம்ஆவது நம் திரு நின்றியூரே 5

ஆர்த்தவர் ஆடுஅரவம் அரைமேல் புலிஈர்உரிவை
போர்த்தவர் ஆனையின்தோல் உடல் வெம்பு லால் கை அகலப்
பார்த்தவர் இன்உயிர் பார் படைத்தான் சிரம் அஞ்சில் ஒன்றைச்
சேர்த்தவருக்கு உறையும் இடமாம் திரு நின்றியூரே 6

தலைஇடையார் பலி சென்று அகம்தோறும் திரிந்த செல்வர்
மலை உடையாள் ஒரு பாகம் வைத்தார் கல் துதைந்த நன்நீர்
அலை உடையார் சடைஎட்டும் சுழல அருநடம்செய்
நிலை உடையார் உறையும் இடமாம் திரு நின்றியூரே 7

எட்டு உகந்தார் திசை ஏழ் உகந்தார் எழுத்து ஆறும் அன்பர்
இட்டு உகந்தார் மலர்ப் பூசை இச்சிக்கும் இறைவர் முன்நாள்
பட்டு உகும் பார்இடைக்காலனைக் காய்ந்து பலி இரந்து ஊண்
சிட்டு உகந்தார்க்கு இடம் ஆவது நம் திரு நின்றியூரே 8

காலமும் ஞாயிறும் ஆகி நின்றார் கழல் பேண வல்லார்
சீலமும் செய்கையும் கண்டு உகப்பார் அடி போற்றுஇசைப்ப
மாலொடு நான்முகன் இந்திரன் மந்திரத்தால் வணங்க
நீலநஞ்சு உண்டவருக்கு இடமாம் திரு நின்றியூரே 9

வாயார் மனத்தால் நினைக்குமவருக்கு அருந்தவத்தில்
தூயார் சுடுபொடிஆடிய மேனியர் வானில் என்றும்
மேயார் விடை உகந்து ஏறிய வித்தகர் பேர்ந்தவர்க்குச்
சேயார் அடியார்க்கு அணியவர் ஊர் திரு நின்றியூரே 10

Koviloor Digital Library

சேரும் புகழ்த் தொண்டர் செய்கை அறாத் திரு நின்றியூரில்
சீரும் சிவகதியாய் இருந்தானைத் திரு நாவல் ஆ
ரூரன் உரைத்த உறுதமிழ் பத்தும் வல்லார் வினை போய்ப்
பாரும் விசும்பும் தொழப் பரமன் அடி கூடுவரே 11

திருச்சிற்றம்பலம்

8. திருநின்றியூர்

பண் : தக்கேசி

திருவும் வண்மையும் திண் திறல் அரசும்
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு
மருவு கோச்செங்கணான்தனக்கு அளித்த
வார்த்தை கேட்டு நுன் மலர்அடி அடைந்தேன்
பெருகு பொன்னி வந்து உந்து பல்மணியைப்
பிள்ளைப்பல்கணம் பண்ணையுள் நண்ணித்
தெருவும் தெற்றியும் முற்றமும் பற்றித்
திரட்டும் தென்திருநின்றியூரானே. 1

அணிகொள் ஆடை அம் பூண் அணிமாலை
அமுதுசெய்து அமுதம் பெறு சண்டி
இணை கொள் ஏழ் எழுநூறு இரும் பனுவல்
ஈன்றவன் திருநாவினுக்கு அரையன்
கணை கொள் கண்ணப்பன் என்று இவர் பெற்ற
காதல் இன்அருள் ஆதரித்து அடைந்தேன்
திணை கொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திருநின்றியூரானே. 2

Koviloor Digital Library

மொய்த்த சீர் முந்நூற்றுஅறுபதுவேலி
மூன்று நூறு வேதியரொடு நுனக்கு
ஒத்த பொன்மணிக்கலசங்கள் ஏந்தி
ஓங்கும் நின்றியூர் என்று உனக்கு அளிப்பக்
பக்தி செய்த அப் பரசுராமற்குப்
பாதம் காட்டிய நீதி கண்டு அடைந்தேன்
சித்தர் வானவர் தானவர் வணங்கும்
செல்வத் தென்திருநின்றியூரானே. 3

இரவி நீள் சுடர் எழுவதன் முன்னம்
எழுந்து தன் முலைக்கலகங்கள் ஏந்திச்
சுரபி பால் சொரிந்து ஆட்டி நின் பாதம்
தொடர்ந்த வார்த்தை திடம்படக்கேட்டுப்
பரவி உள்கி வன் பாசத்தை அறுத்துப்
பரம வந்து நுன் பாதத்தை அடைந்தேன்
நிரவி நித்திலம் அத் தகு செம்பொன்
அளிக்கும் தென்திருநின்றியூரானே. 4

வந்து ஓர் இந்திரன் வழிபட மகிழ்ந்து
வானநாடு நீ ஆள்க என அருளிச்
சந்திமூன்றிலும் தாபரம் நிறுத்திச்
சகளி செய்து இறைஞ்சு அகத்தியர்தனக்குச்
சிந்து மா மணி அணி திருப் பொதியில்
சேர்வு நல்கிய செல்வம் கண்டு அடைந்தேன்
செந் தண் மா மலர்த் திருமகள் மருவும்
செல்வத் தென்திருநின்றியூரானே 5

Koviloor Digital Library

காது பொத்தர் ஐக் கின்னரர் உழுவை
கடிக்கும் பன்னகம் பிடிப்பரும் சீயம்
கோது இல் மா தவர்குழுஉடன் கேட்பக்
கோல ஆல்நிழல்கீம் அறம் பகர
வேதம் செய்தவர் எய்திய இன்பம்
யானும் கேட்டு நின் இணை அடி அடைந்தேன்
நீதி வேதியர் நிறை புகழ் உலகில்
நிலவு தென்திருநின்றியூரானே. 6

கோடு நான்கு உடைக் குஞ்சரம் குலுங்க
நலம் கொள் பாதம் நின்று ஏத்தியபொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற
பெற்றி கேட்டு நின் பொற்கழல் அடைந்தேன்
பேடை மஞ்ஞையும் பிணைகளின் கன்றும்
பிள்ளைக் கிள்ளையும் எனப் பிறைநுதலார்
நீடுமாடங்கள் மாளிகைதோறு
நிலவு தென்திருநின்றியூரானே 7

.... 8,9,10

பதிக வரலாறு : (திருவும்)

திருநனிபள்ளி, திருசெம்பொன்பள்ளி முதலிய பதிகளைப் உணிந்து சென்று திருநின்றியூரை அடைந்த திருவாரூரர். அன்பினால் உள்ளுருகிப் பாடுவாராய், உடையஅரசாய திருநாவுக்கரசு நாயனார் உலகம் இடர் நீங்கிஉய்யமாறு ஏழெழுநூறு திருப்பதிகம் பாடிய செய்தியைச் சிறப்பித்துப் பாடினார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

9. திருப்புன்கூர்

இறைவன் - சிவலோக நாதர் இறைவி - சொக்கநாயகி

பண் : தக்கேசி

அந்தணாளன் உன் அடைக்கலம் புகுந்த
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்கு உன்தன் வன்மை கண்டு அடியேன்
எந்தை நீ எனை நமன்தமர் நலியில்
இவன் மற்று என் அடியான் என விலக்கும்
சிந்தையால் வந்து உன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 1

வையக முற்று மா மழை மறந்து
வயலில் நீர் இலை மா நிலந் தருகோம்
உய்யக் கொள்க மற்று எங்களை என்ன
ஒலி கொள்வெண்முகிலாய்ப் பரந்து எங்கும்
பெய்யும் மா மழைப் பெரு வெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டு அருளும்
செய்கை கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 2

ஏதம் நன்நிலம் ஈரறுவேலி
ஏயர்கோன் உற்ற இரும் பிணி தவிர்த்துக்
கோதனங்களின் பால் கறந்து ஆட்டக்
கோல வெண்மணற் சிவன்தன்மேல் சென்ற

Koviloor Digital Library

தாதை தாள் அற எறிந்த சண்டிக்கு உன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு
பூதஆளி நின் பொன்அடி அடைந்தேன்
பூம்பொழில் திருப் புன்கூர் உளானே 3

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக்கு அரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்லன் என்று இவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணம் எனக் கருதும்
கொள்கை கண்டு நின் குரைகழல் அடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ் திருப் புன்கூர்உளானே 4

கோலம் மால்வரை மத்து என நாட்டிக்
கோள் அரவு சுற்றிக் கடைந்து எழுந்த
ஆலநஞ்சு கண்டு அவர் மிக இரிய
அமரர்கட்கு அருள்புரிவது கருதி
நீலமார் கடல்விடந்தனை உண்டு
கண்டத்தே வைத்த பித்த நீ செய்த
சீலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 5

இயக்கர் கின்னரர் ஞமனொடு வருணன்
இயங்கு தீ வளி ஞாயிறு திங்கள்
மயக்கம் இல் புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்

Koviloor Digital Library

அயர்ப்பு ஒன்று இன்றி நின் திருவடிஅதனை
அர்ச்சித்தார் பெறும் ஆரருள் கண்டு
திகைப்பு ஒன்று இன்றி நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 6

போர்த்த நீள் செவியாளர் அந்தணர்க்கு
பொழில் கொள் ஆல்நிழற்கீழ் அறம் புரிந்து
பார்த்தனுக்கு அன்று பாசுபதங் கொடுத்து
அருளினாய் பண்டு பகீரதன் வேண்ட
ஆர்த்து வந்து இழியும் புனற்கங்கை
நங்கையாளை நின் சடைமிசைக் கரந்த
தீர்த்தனே நின்தன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 7

மூஎயில் செற்றஞான்று உய்ந்த மூவரில்
இருவர் நின் திருக் கோயிலின் வாய்தல்
காவலாளர் என்று ஏவிய பின்னை
ஒருவன் நீ கரிகாடு அரங்காக
மானைநோக்கிஓர் மாநடம் மகிழ
மணி முழா முழக்க அருள்செய்த
தேவதேவ நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 8

அறிவினால் மிக்க அறுவகைச் சமயத்து
அவ்அவர்க்கு அங்கே ஆரருள் புரிந்து
எறியு மா கடல் இலங்கையர்கோனைத்
துலங்க மால்வரைக்கீழ் அடர்த்திட்டுக்

Koviloor Digital Library

குறி கொள் பாடலின் இன்இசைகேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானே 9

கம்பம் மால்களிற்றின் உரியானைக்
காமற் காய்ந்தது ஓர் கண் உடையானைச்
செம்பொனை ஒக்குந் திருஉருவானைச்
செழும் பொழில் திருப் புன்கூர் உளானை
உம்பர்ஆளியை உமையவள்கோனை
ஊரன் வன்தொண்டன் உள்ளத்தால் உகந்து
அன்பினால் சொன்ன அருந்தமிழ் ஐந்தோடு
ஐந்தும் வல்லவர் அருவினை இலரே 10

பதிக வரலாறு : (அந்தணாளனுள்)

திருப்பெருமங்கலத்து எழுந்தருளியிருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் திருநாவலூரர் இறைவனைப் பரவை நாய்ச்சியாரிடத்துத் தூதனுப்பிய செய்தியைக் கேட்டு வெம்பி வியந்து வெருவி நாயகனை அடியான் ஏவுங் காரியம் நன்று, பொருந்துமென்று இதனைச் செய்தவன் வன்றொண்டானாம், இஃதென்ன தீவினை, இதனைச் செவியிற் கேட்கலாயிற்று, கேட்டும் உயிர் நீங்காது வைத்திருக்கின்றேன். இறைவன் ஒருமுறைக்கு இருமுறை திருவடித்தாமரைகள் நோவத் தெருவில் உழல்வராம், அடிமையுரிமையால், இறைவன் செல்வதாயினும் இசைந்து அவரையேவ உள்ளம் கனியாதவனை நான் காணும் நாள் எந்நாளென்றும், காணில் என்னாவதென்றும் கூறும் சினம் பற்றிய நெஞ்சுடையவராயிருநதார். இதனையறிந்த நம்பியாரூரர் ஏயர்கோன் கலிக்காமரது பேற்றினை வியந்து தமது பிழையையும் நினைத்து அதற்கொரு தீர்வு விரும்புபவர் இறைவனிடத்து விண்ணப்பித்து நாள் தோறும் பணிந்து போற்றி வந்தார். இது நிற்க, இறைவரும் இருவரையும் ஒற்றுமையுற்றுப் பொருந்தும் நிலைமையை உன்னிக் கலிக்காமருக்குச்

Koviloor Digital Library

சூலைநோயையருளித் தம்மை நினைந்து வருந்துமவருக்கு இது வன்றொண்டன் றீர்க்கிலன்றித் தீராது என்றும் அருளிச்செய்து, நம்பியாரூரருக்கு இதனைத் தெரிவித்தருளினார். இதனைத் தெரிந்த நம்பியாரூரரும் விரைந்து சென்று தமது வருகையை முன்னே தெரிவித்தார். கலிக்காமர் அவ்வுரை கேட்ட அளவிலேயே அவன் வந்து தீர்ப்பதினும் உயிர் நீப்பதே நன்றென்று உடைவாளாற் குத்திக்கொண்டுயிர் துறந்தாராக, அவர் மனைவியாரும் உடனிறக்கத் துணிபவர் நாயனாரது வருகையைக் கேட்டுக் கணவர் செய்கையை மறைத்து ஒருவரையும் அழாதிருக்கச் செய்து உரிமையுடைய சிலரை நகரை அழகு செய்து நாயனாரை எதிர்கொள்ளும்படி ஏவினார். எதிர்கொண்டழைக்கப்பட்டு மனையிற் புகுந்து அணையிலிருந்து எல்லா வரவேற்புத் தொண்டுகளையுங் கொண்ட பின்னர், நம்பியாரூரர் ஏயர்கோனாரது சூலையை நீக்கி அவரோடு உடனிருப்பதற் கென்னுள்ளம் விரும்புகின்றது என்றபோது கலிக்காமரது மாந்தர் அவர் உள்ளே பள்ளிகொள்கின்றார். அவர்க்கொன்று மில்லையென்று சொல்லியும் மேலும் வருந்தியபடியால் அவரைக் காட்டக்கண்டு வருந்தி நிகழ்ச்சி அறிந்து கொண்டு நானும் இவர்முன் செல்வேனேன்று உடைவாளைக் கையிலே பற்ற, இறைவரருளினால் ஏயர்கோன் கலிக்காமர் பிழைத்தெழுந்து நட்புடையராகக் 'கெட்டேன்' என்று விரைந்து வாளைப் பிடிக்க, வன்றொண்டர் வீழ்ந்து வணங்கத் தாமும் வாளினை வீசி அவரது திருவடியில் வீழ்ந்து வணங்கினார். பின்பு இருவரும் அளவளாவிக் கலந்த நட்பினராய்த் திருப்புன்கூரையடைந்து இறைவனைப் பணிந்து போற்றினார்கள். நம்பியாரூரர் இறைவரது செயலை வியந்து 'அந்தணர்' என்னுமித் திருப்பதிகம் பாடியருளினார். அதில் கலிக்காமரின் தொண்டுகளைச் சிறப்பித்துப் பாடியதும் விளங்குவதெனினும் பன்னிருவேலி கொண்டு மழை பெய்வித்ததும், மற்றொரு பன்னிரு வேலி கொண்டு பெருவெள்ளமாய்ப் பெய்யுமதனைத் தவிர்த்தருளியதும் கலிக்காமரின் பொருட்டென்பது துணியக் கூடவில்லை.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

10. திருநீடூர்

இறைவன் - அருட்சோம நாதர், கான நிர்த்த சங்கரர்
இறைவி - வேயுறு தோளியம்மை அதிகாந்தியம்மை

பண் : தக்கேசி

ஊர்வது ஓர் விடைஒன்று உடையானை
ஒண் நுதல் தனிக் கண்நுதலானைக்
கார் அதார் கறைமாமிடற்றானைக்
கருதலார் புரம்மூன்று எரித்தானை
நீரில் வாளை வரால் குதிகொள்ளும்
நிறை புனல் கழனிச் செல்வம் நீடூர்ப்
பார்உளார் பரவித் தொழ நின்ற
பரமனைப் பணியா விடலாமே. 1

துன்னு வார்சடைத் தூ மதியானைத்
துயக்கு உறா வகை தோன்றுவிப்பானைப்
பன்னு நால்மறை பாட வல்லானைப்
பார்த்தனுக்கு அருள் செய்த பிரானை
என்னை இன்அருள் எய்துவிப்பானை
ஏதிலார்தமக்கு ஏதிலார்தன்னைப்
புன்னை மாதவி போதலர் நீடூர்ப்
புனிதனைப் பணியா விடலாமே. 2

கொல்லும் மூவிலைவேல் உடையானைக்
கொடிய காலனையும் குமைத்தானை
நல்லவா நெறி காட்டுவிப்பானை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை

Koviloor Digital Library

அல்லல் இல் அருளே புரிவானை
ஆடு நீர் வயல் சூழ் புனல் நீடூர்க்
கொல்லை வெள்ளருது ஏற வல்லானைக்
கூறி நாம் பணியா விடலாமே. 3

தோடு காது இடு தூநெறியானைத்
தோற்றமும் துறப்புஆயவன்தன்னைப்
பாடு மாமறை பாட வல்லானைப்
பைம்பொழில் குயில் கூவிட மாடே
ஆடு மா மயில் அன்னமொடு ஆட
அலை புனல் கழனித் திரு நீடூர்
வேடனாய பிரான்அவன்தன்னை
விரும்பி நாம் பணியா விடலாமே. 4

குற்றம் ஒன்று அடியார் இலர்ஆனால்
கூடுமாறு தனைக் கொடுப்பானைக்
கற்ற கல்வியிலும் இனியானைக்
காணப் பேணுமவர்க்கு எளியானை
முற்ற அஞ்சும் துறந்திருப்பானை
மூவரின் முதல்ஆயவன்தன்னைச்
சுற்றும் நீள் வயல் சூழ் திரு நீடூர்த்
தோன்றலைப் பணியா விடலாமே. 5

காடில் ஆடிய கண்நுதலானைக்
காலனைக் கடிந்திட்டபிரானைப்
பாடி ஆடும் பரிசே புரிந்தானைப்
பற்றினோடு சுற்றம் ஒழிப்பானைத்

Koviloor Digital Library

தேடி மால் அயன் காண்பு அரியானைச்
சித்தமும் தெளிவார்க்கு எளியானைக்
கோடிதேவர்கள் கும்பிடும் நீடூர்க்
கூத்தனைப் பணியா விடலாமே. 6

விட்டு இலங்கு எரியார் கையினானை
வீடு இலாத வியன்புகழானைக்
கட்டுவாங்கந் தரித்த பிரானைக்
காதிலார் கனகக்குழையானை
விட்டுஇலங்கு புரிநூல் உடையானை
வீந்தவர் தலைஓடு கையானைக்
கட்டியின் கரும்பு ஓங்கிய நீடூர்க்
கண்டு நாம் பணியா விடலாமே. 7

மாயமாய மனம் கெடுப்பானை
மனத்துளே மதியாய் இருப்பானைக்
காய மாயமும் ஆக்குவிப்பானைக்
காற்றுமாய்க் கனலாய்க் கழிப்பானை
ஓயுமாறு உறு நோய் புணர்ப்பானை
ஒல்லை வல்வினைகள் கெடுப்பானை
வேய்கொள்தோள்உமை பாகனை நீடூர்
வேந்தனைப் பணியா விடலாமே. 8

கண்டமும் கறுத்திட்ட பிரானைக்
காணப் பேணுமவர்க்கு எளியானைத்
தொண்டரைப் பெரிதும் உகப்பானைத்
துன்பமும் துறந்து இன்பு இனியானைப்

Koviloor Digital Library

பண்டைவல்வினைகள் இன்பு கெடுப்பானைப்
பாகம்மாமதி ஆனவன்தன்னைக்
கெண்டை வாளை கிளர் புனல் நீடூர்க்
கேண்மையால் பணியா விடலாமே. 9

அல்லல்உள்ளன தீர்த்திடுவான்
அடைந்தவர்க்கு அமுது ஆயிடுவானைக்
கொல்லை வல் அரவம் அசைத்தானைக்
கோலமார் கரியின் உரியானை
நல்லவர்க்கு அணியானவன்தன்னை
நானும் காதல்செய்கின்ற பிரானை
எல்லி மல்லிகையே கமழ் நீடூர்
ஏத்தி நாம் பணியா விடலாமே. 10

பேர்ஓர் ஆயிரமும் உடையானைப்
பேசினால் பெரிதும் இனியானை
நீரூர் வார்சடை நின்மலன்தன்னை
நீடூர் நின்று உகந்திட்ட பிரானை
ஆரூரன் அடி காண்பதற்கு அன்பாய்
ஆதரித்து அழைத்திட்ட இம் மாலை
பார் ஊரும் பரவித் தொழ வல்லார்
பத்தராய் முத்தி தாம் பெறுவாரே. 11

பதிக வரலாறு : (ஊர்வ தோர்விடை)

திருநின்றியூரை வழிபட்டு மேலே செல்கின்ற நம்பியாரூரர் பெரிய புகழை யுடைய திருநீடூரைப் பணியாது போகும் பொழுது ஒப்பரிய தன் உணர்வினால் நினைந்து 'நீடூர்ப் பாருளார் பரவித்தொழ நின்ற

Koviloor Digital Library

பரமனைப் பணியா விடலாமே' என்று வைத்து 'ஊர்வதோர் விடை' என்று தொடங்கி இப்பதிகத்தைப் பாடிப் போந்து திருநீடூரை வழிபட்டுச் சிலநாள் தங்கினார்.

திருச்சிற்றம்பலம்

11. திருத் துருத்தியும் திரு வேள்விக்குடியும்

இறைவன் - சொன்னவாறு அறிவார் இறைவி - அரும்பன்ன வனமுலையம்மை

பண் : காந்தாரம்

மின்னு மா மேகங்கள் பொழிந்து இழிந்தருவி
வெடிபடக் கரையொடுந் திரைகொணர்ந்து எற்றும்
அன்னமாங் காவிரி அகன் கரை உறைவார்
அடிஇணை தொழுது எழும் அன்பராம் அடியார்
சொன்னவாறு அறிவார் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
என்னை நான் மறக்குமாறு எம்பெருமானை
என் உடம்பு அடும் பிணிஇடர் கெடுத்தானை. 1

கூடும் ஆறுஉள்ளன கூடியும் கோத்தும்
கொய் புன ஏனலோடு ஐவனஞ் சிதறி
மாடு மா கோங்கமே மருதமே பொருது
மலை எனக் குலைகளை மறிக்குமாறு உந்தி
ஓடு மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமாறு அறிகிலேன் எம்பெருமானைப்
பழவினை உள்ளன பற்றுஅறுத்தானை. 2

Koviloor Digital Library

கொல்லு மால்யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங் கனிச் செழும் பயன் கொண்டு கூட்டு எய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ் செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
சொல்லுமாறு அறிகிலேன் எம்பெருமானைத்
தொடர்ந்து அடும் கடும் பிணித்தொடர்வு அறுத்தானை. 3

பொறியும் மா சந்தனத்துண்டமோடு அகிலும்
பொழிந்து இழிந்து அருவிகள் புன்புலம் கவரக்
கறியும் மா மிளகொடு கதலியும் உந்திக்
கடல் உற விளைப்பதே கருதித் தன் கை போய்
எறியும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
அறியுமாறு அறிகிலேன் எம்பெருமானை
அருவினைஉள்ளன ஆசு அறுத்தானை. 4

பொழிந்து இழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன் மலர் உந்தி
இழிந்துஇழிந்து அருவிகள் கடும் புனல் ஈண்டி
எண்திசையோர்களும் ஆட வந்து இங்கே
சுழிந்து இழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமாறு எம்பெருமானை
உற்ற நோய் இற்றையே உற ஒழித்தானை. 5

Koviloor Digital Library

புகழும் மா சந்தனத்துண்டமோடு அகிலும்
பொன்மணி வரன்றியும் நன் மலர் உந்தி
அகழும் மா அருங் கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந் தீர்த்து அஞ்சனம் அலம்பித்
திகழும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
இகழுமாறு அறிகிலேன் எம்பெருமானை
இழித்த நோய் இம்மையே ஒழிக்க வல்லானை. 6

வரையின் மாங்கனியொடு வாழையின்கனியும்
வருடியும் வணக்கியும் மராமரம் பொருதும்
கரையும் மா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
காம் பீலி சுமந்து ஒளிர்நித்திலங் கை போய்
விரையும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
உரையுமாறு அறிகிலேன் எம்பெருமானை
உலகு அறி பழவினை அற ஒழித்தானை. 7

ஊரும் மா தேசமே மனம் உகந்து உள்ளிப்
புள்இனம்பல படிந்து ஒண் கரை உகளக்
காரும் மா கருங்கடல் காண்பதே கருத்தாய்க்
கவரிமாமயிர் சுமந்து ஒண் பளிங்கு இடறித்
தேரும் மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செடியனேன்நாயேன்
ஆரும்ஆறு அறிகிலேன் எம்பெருமானை
அம்மைநோய் இம்மையே ஆசு அறுத்தானை. 8

Koviloor Digital Library

புலங்களை வளம்படப் போக்கு அறப் பெருகிப்
பொன்களே சுமந்து எங்கும் பூசல் செய்து ஆர்ப்ப
இலங்குமார் முத்தினோடு இனமணி இடறி
இருகரைப் பெரு மரம் பீழந்து கொண்டு எற்றிக்
கலங்கு மா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் செயனேன்நாயேன்
விலங்குமாறு அறிகிலேன் எம்பெருமானை
மேலைநோய் இம்மையே வீடுவித்தானை. 9

மங்கை ஓர்கூறு உகந்து ஏறு உகந்து ஏறி
மாறலார் திரிபுரம் நீறு எழச் செற்ற
அங்கையான் கழல்அடி அன்றி மற்று அறியான்
அடியவர்க்கு அடியவன் தொழுவன் ஆரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடிஉளார் அடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுது தம் நாவின்மேல் கொள்வார்
தவநெறி சென்று அமருலகம் ஆள்பவரே. 10

பதிக வரலாறு : (மின்னுமா)

திருவாவடுதுறையில் வணங்கிய திருநாவலூரர் திருத்துருத்தியையடைந்து இறைவரை விருப்பினுடன் சென்றிறைஞ்சி அடியேன் மேலுற்ற பிணிவருத்தம் ஒழித்தருள வேண்டுமென வணங்க, இறைவர், ‘வாமலர் வண்டறை தீர்த்த வடகுளத்துக் குளி’ யென்று கட்டளையிட்டருளினார். நம்பியாரூரரும் அவ்வாறே அதனையடைந்து மறைவடிவாயிருந்த துருத்திப் பெருமானைத் தொழுது மூழ்கிய அளவில் புதியதாகிய பிணியொழிந்து மணியொளிசேர் திருமேனியராய்க் கண்டவர்கள் வியப்பக் கரையேறி உடைபுனைந்து பேரன்போடு கோயிலையடைந்து தொண்டர்களெதிரே இப்பதிகத்தை எண்டிசையும் அறிந்துய்ய ஏழிசையால் எடுத்திசைத்தார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

12. திருவேள்விக்குடியும் திருத் துருத்தியும்

இறைவன் - கல்யாண சுந்தரேசுவரர் இறைவி - பரிமள சுகந்த நாயகி
பண் : நட்டராகம்

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பது இல்லை
சேர்ப்பது காட்டுஅகத்து ஊரினுமாகச் சிந்திக்கின் அல்லால்
காப்பது வேள்விக்குடி தண் துருத்தி எம் கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 1

கட்டக் காட்டின் நடம் ஆடுவர் யாவர்க்கும் காட்சி ஒண்ணார்
சுட்டவெண்நீறு அணிந்து ஆடுவர் பாடுவர் தூய நெய்யால்
வட்டக்குண்டத்தில் எரி வளர்த்து ஓம்பி மறை பயில்வார்
அட்டக் கொண்டு உண்பது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 2

பேரும் ஓர் ஆயிரம்பேர் உடையார் பெண்ணோடு ஆணும் அல்லர்
ஊரும் அது ஒற்றியூர் மற்றை ஊர் பெற்றவா நாம் அறியோம்
காரும் கருங்கடல்நஞ்சு அமுதுஉண்டு கண்டம் கறுத்தார்க்கு
ஆரம் பாம்புஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே.3

ஏனக்கொம்பும் இள ஆமையும் பூண்டு அங்கு ஓர் ஏறும் ஏறிக்
கானக் காட்டில் தொண்டர் கண்டன சொல்லியும் காமுறவே
மானைத்தோல் ஒன்று உடுத்துப் புலித்தோல் பியற்கும் இட்டி
யானைத்தோல் போர்ப்பது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 4

ஊட்டிக்கொண்டு உண்பது ஓர் ஊண் இலர் ஊர் இடு பிச்சை அல்லால்
பூட்டிக்கொண்டு ஏற்றினை ஏறுவர் ஏறி ஓர் பூதம் தம்பால்
பாட்டிக்கொண்டு உண்பவர் பாழிதொறும் பலபாம்பு பற்றி
ஆட்டிக்கொண்டு உண்பது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 5

Koviloor Digital Library

குறவனார்தம்மகள் தம் மகனார் மணவாட்டி கொல்லை
மறவனாராய் அங்கு ஓர் பன்றிப் பின் போவது மாயம்கண்டீர்
இறைவனார் ஆதியார் சோதியராய் அங்கு ஓர் சோர்வு படா
அறவனார்ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 6

பித்தரை ஒத்து ஒரு பெற்றியர் நற்றவை என்னைப் பெற்ற
முற்றவை தம் அனை தந்தைக்கும் தவ்வைக்கும் தம்பிரானார்
செத்தவர்தம் தலையில் பலி கொள்வதே செல்வம் ஆகி
அத் தவம்ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 7

உம்பரான் ஊழியான் ஆழியான் ஓங்கி மலர் உறைவான்
தம் பரம் அல்லவர் சிந்திப்பவர் தடுமாற்று அறுப்பார்
எம் பரம் அல்லவர் என் நெஞ்சத்துள்ளும் இருப்பது ஆகி
அம்பரம் ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 8

இந்திரனுக்கும் இராவணனுக்கும் அருள்புரிந்தார்
மந்திரம் ஓதுவர் மாமறை பாடுவர் மான்மறியர்
சிந்துரக்கண்ணனும் நான்முகனும் உடனாய்த் தனியே
அந்தரம் செல்வது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே. 9

கூடலர்மன்னன் குல நாவலூர்க்கோன் நலத் தமிழைப்
பாட வல்ல பரமன் அடியார்க்கு அடிமை வழுவா
நாட வல்ல தொண்டன் ஆரூரன் ஆட்படுமாறு சொல்லிப்
பாட வல்லார் பரலோகத்து இருப்பது பண்டம் அன்றே. 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

13. திரு எதிர்கொள்பாடி

இறைவன் - ஐராவதேசுவரர் இறைவி - மலர்குழல் நாயகி

பண் : இந்தளம்

மத்தயானை ஏறி மன்னர் சூழ வருவீர்காள்
செத்தபோதில் ஆரும் இல்லை சிந்தையுள் வைம்மின்கள்
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா வம்மின் மனத்தீரே
அத்தர் கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே 1

தோற்றம் உண்டேல் மரணம் உண்டு துயர மனைவாழ்க்கை
மாற்றம் உண்டேல் வஞ்சம் உண்டு நெஞ்ச மனத்தீரே
நீற்றர் ஏற்றர் நீலகண்டர் நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 2

செடி கொள் ஆக்கை சென்றுசென்று தேய்ந்து ஒல்லை வீழாமுன்
வடி கொள் கண்ணார் வஞ்சனையுள் பட்டு மயங்காதே
கொடி கொள் ஏற்றர் வெள்ளைநீற்றர் கோவண ஆடை உடை
அடிகள் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 3

வாழ்வர்கண்டீர் நம்முள் ஐவர் வஞ்ச மனத்தீரே
யாவராலும் இகழப்பட்டு இங்கு அல்லலில் வீழாதே
மூவராயும் இருவராயும் முதல்வன் அவனேயாம்
தேவர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 4

அரித்து நம்மேல் ஐவர் வந்து இங்கு ஆறுஅலைப்பான் பொருட்டால்
சிரித்த பல்வாய்வெண்தலை போய் ஊர்ப்புறம் சேராமுன்
வரிக் கொள் துத்தி வாள் அரக்கர் வஞ்ச மதில்மூன்றும்
எரித்த வில்லி எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 5

Koviloor Digital Library

பொய்யர்கண்டீர் வாழ்க்கையாளர் பொத்து அடைப்பான்பொருட்டால்
மையல் கொண்டீர் எம்மொடு ஆடி நீரும் மனத்தீரே
நைய வேண்டா இம்மை ஏத்த அம்மை நமக்கு அருளும்
ஐயர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 6

கூச நீக்கிக் குற்றம் நீக்கிச் செற்ற மனம் நீக்கி
வாச மல்கு குழலினார்கள் வஞ்ச மனைவாழ்க்கை
ஆசை நீக்கி அன்பு சேர்த்தி என்பு அணிந்து ஏறு ஏறும்
ஈசர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 7

இன்பம் உண்டேல் துன்பம் உண்டு ஏழை மனைவாழ்க்கை
முன்பு சொன்னால் மோழைமையாம் முட்டைமனத்தீரே
அன்பர் அல்லால் அணி கொள் கொன்றைஅடிகள் அடி சேரார்
என்பர் கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 8

தந்தையாரும் தவ்வையாரும் எள் தனைச் சார்வு ஆகார்
வந்து நம்மோடு உள் அளாவி வானநெறி காட்டும்
சிந்தையீரே நெஞ்சினீரே திகழ் மதியம் சூடும்
எந்தை கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 9

குருதி சோர ஆனையின்தோல் கொண்ட குழல்சடையன்
மருது கீறி ஊடு போன மால் அயனும் அறியாச்
சுருதியார்க்கும் சொல்ல ஒண்ணாச் சோதி எம் ஆதியான்
கருது கோயில் எதிர்கொள்பாடி என்பது அடைவோமே 10

முத்து நீற்றுப் பவளமேனிச் செஞ்சடையான் உறையும்
பத்தர் பந்தந்து எதிர்கொள்பாடிப் பரமனையே பணியச்
சித்தம் வைத்த தொண்டர்தொண்டன் சடையன் அவன்சிறுவன்
பத்தன் ஊரன் பாடல் வல்லார் பாதம் பணிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

14. திருக்கருப்பறியலூர்

இறைவன் - குற்றம் பொறுத்த நாதர் இறைவி - கோள்வளைநாயகி

பண் : நட்டராகம்

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்து உகந்து
திறம்பா வண்ணம்
கைம்மாவின்உரிவை போர்த்து உமை வெருவக் கண்டானைக்
கருப்பறியலூர்க்
கொய்ம் மாவின் மலர்ச்சோலைக் குயில் பாட மயில் ஆடும்
கொகுடிக்கோயில்
எம்மானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 1

நீற்றாரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே
நிறைந்து தோன்றும்
காற்றானைத் தீயானைக் கதிரானை மதியானைக்
கருப்பறியலூர்க்
கூற்றானை கூற்று உதைத்துக் கோல்வளையாள் அவளோடும்
கொகுடிக்கோயில்
ஏற்றானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 2

முட்டாமே நாள்தோறும் நீர் மூழ்கிப் பூப் பறித்து
மூன்றுபோதும்
கட்டு ஆர்ந்த இண்டை கொண்டு அடிச்சேர்த்தும் அந்தணர்தங்
கருப்பறியலூர்க்

Koviloor Digital Library

கொட்டு ஆட்டுப் பாட்டுஆகி நின்றானைக் குழகனைக்
கொகுடிக்கோயில்
எட்டுஆன மூர்த்தியை நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 3

விருந்தாய சொல்மாலைகொண்டு ஏத்தி வினை போக
வேலிதோறும்
கருந் தாள வாழைமேல் செங்கனிகள் தேன் சொரியும்
கருப்பறியலூர்க்
குருந்தாய முள்எயிற்றுக் கோல்வளையாள் அவளோடும்
கொகுடிக்கோயில்
இருந்தானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 4

பொடி ஏறு திருமேனிப் பெருமானைப் பொங்கு அரவக்
கச்சையானைக்
கடி நாறும் பூம் பொய்கைக் கயல் வாளை குதிகொள்ளும்
கருப்பறியலூர்க்
கொடி ஏறி வண்டுஇனமும் தண் தேனும் பண்செய்யும்
கொகுடிக்கோயில்
அடி ஏறு கழலானை நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே 5

பொய்யாத வாய்மையால் பொடி பூசிப் போற்றி இசைத்துப்
பூசை செய்து
கையினால் எரி ஓம்பி மறை வளர்க்கும் அந்தணர்தங்
கருப்பறியலூர்க்

Koviloor Digital Library

கொய் உலா மலர்ச்சோலைக் குயில் கூவ மயில் ஆலும்
கொகுடிக்கோயில்
ஐயனை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே 6

செடி கொள் நோய் உள்ளளவும் தீவினையும் தீர்ந்துஒழியச்
சிந்தைசெய்ம்மின்
கடி கொள் பூந் தடம் மண்டிக் கருமேதி கண்படுக்கும்
கருப்பறியலூர்க்
கொடி கொள் பூ நுண்இடையாள்கோல்வளையாள்அவளோடும்
கொகுடிக்கோயில்
அடிகளை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே 7

பறையாத வல்வினைகள் பறைந்தொழிய பன்னாளும்
பாடி ஆடிக்
கறை ஆர்ந்த கண்டத்தன் எண்தோளன் முக்கண்ணன்
கருப்பறியலூர்க்
குறையாத மறை நாவர் குற்றேவல் ஒழியாத
கொகுடிக்கோயில்
உறைவானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 8

சங்கு ஏந்து கையானும் தாமரையின்மேலானும்
தன்மை காணாக்
கங்கு ஆர்ந்த வார் சடைகள் உடையானை விடையானைக்
கருப்பறியலூர்க்


Koviloor Digital Library

கொங்கு ஆர்ந்த பொழில் சோலை சூழ் கனிகள்பல உதிர்க்கும்
கொகுடிக்கோயில்
எம் கோனை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 9

பண் தாழின் இசை முரலப் பன்னாளும் பாவித்துப்
பாடி ஆடிக்
கண்டார்தம் கண் குளிரும் களிக் கமுகம் பூஞ்சோலைக்
கருப்பறியலூர்க்
குண்டாடும் சமணரும் சாக்கியரும் புறம்கூறும்
கொகுடிக்கோயில்
எண்தோள் எம்பெருமானை நினைந்தபோது அவர் நமக்கு
இனியவாறே. 10

கலை மலிந்த தென்புலவர் கற்றோர்தம் இடர் தீர்க்கும்
கருப்பறியலூர்க்
குலை மலிந்த கோள் தெங்கு மட்டு ஒழுகும் பூஞ்சோலைக்
கொகுடிக்கோயில்
இலை மலிந்த மழுவானை மனத்தினால் அன்பு செய்து
இன்பம் எய்தி
மலை மலிந்த தோள் ஊரன் வனப்பகைஅப்பன் உரைத்த
வண்தமிழ்களே 11

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

15. திரு வாழ்கொளிபுத்தூர்

இறைவன் - மாணிக்கவண்ணர் இறைவி - வண்டமர் பூங்குழலி

பண் : தக்கேசி

தலைக்கலன் தலைமேல் தரித்தானைத்
தன்னை என்னை நினைக்கத் தருவானைக்
கொலைக் கை யானை உரி போர்த்து உகந்தானைக்
கூற்று உதைத்த குரை சேர் கழலானை
அலைத்த செங்கண் விடை ஏற வல்லானை
ஆணையால் அடியேன் அடிநாயேன்
மலைத்த செந்நெல் வயல் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 1

படைக்கட் சூலம் பயில வல்லானைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானைக்
கடைக்கட் பிச்சைக்கு இச்சை காதலித்தானைக்
காமன் ஆகம்தனைக் கட்டு அழித்தானைச்
சடைக்கட் கங்கையைத் தாழ வைத்தானைத்
தண்ணீர்மண்ணிக் கரையானைத் தக்கானை
மடைக்கண் நீலம் மலர் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 2

வெந்தநீறு மெய் பூச வல்லானை
வேதமால் விடை ஏற வல்லானை
அந்தம்ஆதி அறிதற்கு அரியானை
ஆறு அலைத்த சடையானை அம்மானைச்

Koviloor Digital Library

சிந்தை என் தடுமாற்று அறுப்பானைத்
தேவதேவன் என் சொல் முனியாதே
வந்து என் உள்ளம் புகும் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 3

தடங்கையான் மலர் தூய்த் தொழவாரைத்
தன் அடிக்கே செல்லுமாறு வல்லானைப்
படங்கொள் நாகம் அரை ஆர்த்து உகந்தானைப்
பல்லின் வெள்ளைத்தலை ஊண் உடையானை
நடுங்க ஆனைஉரி போர்த்து உகந்தானை
நஞ்சம் உண்டு கண்டம் கறுத்தானை
மடந்தைபாகனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 4

வளைக்கை முன்கை மலைமங்கை மணாளன்
மாரனார் உடல் நீறு எழச் செற்றுத்
துளைத்த அங்கத்தொடு தூ மலர்க்கொன்றை
தோலும் நூலும் துதைந்த வரைமார்பன்
திளைக்கும் தெவ்வர் திரி புரம்மூன்றும்
அவுணர்பெண்டிரும் மக்களும் வேவ
வளைத்த வில்லியை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 5

திருவின்நாயகன் ஆகிய மாலுக்கு
அருள்கள்செய்திடும் தேவர்பிரானை
உருவினானை ஒன்றா அறிவு ஒண்ணா
மூர்த்தியை விசயற்கு அருள்செய்வான்

Koviloor Digital Library

செரு வில் ஏந்தி ஓர் கேழல் பின் சென்று
செங்கண் வேடனாய் என்னொடும் வந்து
மருவினான்தனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 6

எந்தையை எந்தை தந்தை பிரானை
ஏதம்ஆய இடர் தீர்க்க வல்லானை
முந்தைஆகிய மூவரின் மிக்க
மூர்த்தியை முதல் காண்பு அரியானைக்
கந்தின் மிக்க கரியின் மருப்போடு
கார்அகில் கவரி மயிர் மண்ணி
வந்துவந்து இழி வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 7

தேனை ஆடிய கொன்றையினானைத்
தேவர் கைதொழும் தேவர்பிரானை
ஊனம்ஆயின தீர்க்க வல்லானை
ஒற்றை ஏற்றனை நெற்றிக்கண்ணானைக்
கான ஆணையின் கொம்பினைப் பீழ்ந்த
கள்ளப் பிள்ளைக்கும் காண்பு அரிதாய
வானநாடனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 8

காளைஆகி வரை எடுத்தான்தன்
கைகள் இற்று அவன் மொய் தலை எல்லாம்
மூளை போத ஒருவிரல் வைத்த
மூர்த்தியை முதல் காண்பு அரியானைப்

Koviloor Digital Library

பாளை தெங்கின் பழம் விழ மண்டிச்
செங்கண் மேதிகள் சேடு எறிந்து எங்கும்
வளை பாய் வயல் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 9

திருந்த நால்மறை பாட வல்லானைத்
தேவர்க்கும் தெரிதற்கு அரியானைப்
பொருந்த மால்விடை ஏற வல்லானைப்
பூதிப்பை புலித்தோல் உடையானை
இருந்து உண் தேரரும் நின்று உணும் சமணும்
ஏச நின்றவன் ஆருயிர்க்கு எல்லாம்
மருந்து அனான்தனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 10

மெய்யனை மெய்யில் நின்று உணர்வானை
மெய் இலாதவர்தங்களுக்கு எல்லாம்
பொய்யனைப் புரம்மூன்று எரித்தானைப்
புனிதனைப் புலித்தோல் உடையானைச்
செய்யனை வெளிய திருநீற்றில்
திகழும் மேனியன் மான்மறி ஏந்தும்
மை கொள் கண்டனை வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேனே. 11

வளங் கிளர் பொழில் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேன் என்று
உளங் குளிர் தமிழ் ஊரன் வன்தொண்டன்
சடையன்காதலன் வனப்பகை அப்பன்

Koviloor Digital Library

நலங்கிளர் வயல் நாவலர்வேந்தன்
நங்கை சிங்கடி தந்தை பயந்த
பலங் கிளர் தமிழ் பாட வல்லார்மேல்
பறையுமாம் செய்த பாவங்கள்தானே. 12

பதிக வரலாறு : (தலைக்க)

திருக்கருப்பறியலூர், திருப்பழமண்ணிப்படிக்கரை என்னும் இவற்றை அடைந்து மாதொருபாகர் மலர்த்தாள் போற்றிச் செல்கின்றவராய முனைப்பாடிச் செல்வர் திருவாழ்கொளிபுத்தூர் எய்தாது போம் பொழுது 'தலைக்கலன்' என்றிப் பதிகமெடுத்து மீண்டு புகுந்து திருக்கோயில் வாயிலில் மயிர்ப்புளகத்தோடு தாழ்ந்து உள்ளணைந்து பணிந்து ஏத்தியுருகுமன்பால் பொருப்பரையன் மடப்பாவை இடப்பாலானைப் போற்றி வைத்துப் புறம்பணைந்து சிலநாள்தங்கிக் கானாட்டு முள்ளூருக்குச் சென்றருளினார்.

திருச்சிற்றம்பலம்

16. திருப்பழமண்ணிப்படிக்கரை

இறைவன் - நீலகண்டர் இறைவி - அமிர்தகரவல்லி
பண் : நட்டராகம்

முன்னவன் எங்கள் பிரான் முதல் காண்பு அரிதாய பிரான்
சென்னியில் எங்கள் பிரான் திரு நீலமிடற்று எம்பிரான்
மன்னிய எங்கள் பிரான் மறைநான்கும் கல்லால்நிழல்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான் பழமண்ணிப்படிக்கரையே. 1

Koviloor Digital Library

அண்ட கபாலம் சென்னி அடிமேல் அலர் இட்டு நல்ல
தொண்டு அங்கு அடி பரவித் தொழுது ஏத்தி நின்று ஆடும் இடம்
வெண் திங்கள் வெண்மழுவன் விரையார் கதிர் மூவிலைய
பண்டங்கள் மேய இடம் பழமண்ணிப்படிக்கரையே. 2

ஆடுமின் அன்புஉடையீர் அடிக்கு ஆட்பட்ட தூளி கொண்டு
சூடுமின் தொண்டர்உள்ளீர் உமரோடு எமர் சூழ வந்து
வாடும் இவ் வாழ்க்கைதன்னை வருந்தாமல் திருந்தச் சென்று
பாடுமின் பத்தர்உள்ளீர் பழமண்ணிப்படிக்கரையே. 3

அடுதலையே புரிந்தான் அவை அந்தர மூஎயிலும்
கெடுதலையே புரிந்தான் கிளரும் சிலை நாணியில் கோல்
நடுதலையே புரிந்தான் நரி கான்றிட்ட எச்சில் வெள்ளைப்
படுதலையே புரிந்தான் பழமண்ணிப்படிக்கரையே. 4

உங் கைகளால் கூப்பி உகந்து ஏத்தித் தொழுமின் தொண்டீர்
மங்கை ஒர்கூறு உடையான் வானோர் முதலாய பிரான்
அங் கையில் வெண்மழுவன் அலையார் கதிர் மூவிலைய
பங்கயபாதன் இடம் பழமண்ணிப்படிக்கரையே. 5

செடிபடத் தீ விளைத்தான் சிலையார் மதில் செம் புனம் சேர்
கொடிபடு மூரி வெள்ளைஎருதுஏற்றையும் ஏறக் கொண்டான்
கடியவன்காலன்தன்னைக் கறுத்தான் கழல் செம்பவளப்
படியவன் பாசுபதன் பழமண்ணிப்படிக்கரையே. 6

கடுத்தவன் தேர் கொண்டு ஓடிக் கயிலாய நல் மாமலையை
எடுத்தவன் ஈர் ஐந்துவாய் அரக்கன் முடிபத்து அலற
விடுத்து அவன் கைநரம்பால் வேதகீதங்கள் பாடல்உறப்
படுத்தவன் பால்வெண்நீற்றன் பழமண்ணிப்படிக்கரையே. 7

Koviloor Digital Library

திரிவன மும்மதிலும் எரித்தான் இமையோர்பெருமான்
அரியவன் அட்டபுட்பம் அவை கொண்டு அடி போற்றி நல்ல
கரியவன் நான்முகனும் அடியும் முடி காண்பு அரிய
பரியவன் பாசுபதன் பழமண்ணிப்படிக்கரையே. 8

வெற்று அரைக் கற்றமணும் விரையாது விண்டு ஆலம் உண்ணும்
துற்றரைத் துற்று அறுப்பான் துன்ன ஆடைத் தொழில் உடையீர்
பெற்றரைப் பித்தர் என்று கருதேன்மின் படிக்கரையுள்
பற்றரைப் பற்றி நின்று பழிபாவங்கள் தீர்மின்களே. 9

பல்உயிர் வாழும் தெண்நீர்ப் பழமண்ணிப்படிக்கரையை
அல்லிஅந்தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல் கேட்டல்வல்லார்அவர்க்கும் தமர்க்கும் கிளைக்கும்
எல்லியும் நன்பகலும் இடர் கூருதல் இல்லை அன்றே. 10

திருச்சிற்றம்பலம்

17. திருக்கானாட்டுமுள்ளூர்

இறைவன் - பதஞ்சலி நாதர் இறைவி - கானார் குழலி

பண் : கொல்லிக்கௌவாணம்

வள் வாய மதி மிளிரும் வளர்சடையினானை
மறையவனை வாய்மொழியை வானவர் தம் கோனைப்
புள் வாயைக் கீண்டு உலகம் விழுங்கி உமிழ்ந்தானைப்
பொன்நிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை
முள் வாய மடல் தழுவி முடத்தாழை ஈன்று
மொட்டு அலர்ந்து விரை நாறு முருகு விரி பொழில் சூழ்
கள் வாய கருங்குவளை கண்வளரும் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே. 1

Koviloor Digital Library

ஒரு மேக முகில்ஆகி ஒத்து உலகம்தானாய்
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளும் தானாய்ப்
பொரு மேவு கடல்ஆகிப் பூதங்கள்ஐந்தாய்ப்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையினானைத்
திரு மேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத் தக்க அந்தணர்கள் ஓதும் நகர் எங்கும்
கருமேதி செந்தாமரை மேயும் கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே. 2

இரும்பு உயர்ந்த மூஇலையசூலத்தினானை
இறையவனை மறையவனை எண்குணத்தினானைச்
சுரும்பு உயர்ந்த கொன்றையொடு தூ மதியம் சூடும்
சடையானை விடையானைச் சோதி எனும் சுடரை
அரும்பு உயர்ந்த அரவிந்தத்து அணிமலர்கள் ஏறி
அன்னங்கள் விளையாடும் அகன் துறையின் அருகே
கரும்பு உயர்ந்து பெருஞ் செந்நெல் நெருங்கி விளை கழனிக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே. 3

பூளை புனை கொன்றையொடு புரிசடையினானைப்
புனல்ஆகி அனல்ஆகிப் பூதங்கள்ஐந்தாய்
நாளை இன்று நெருநலாய் ஆகாயமாகி
ஞாயிறாய் மதியமாய் நின்ற எம்பரனைப்
பாளை படு பைங்கமுகின் சூழல் இனந் தெங்கின்
படு மதம் செய் கொழுந் தேறல் வாய் மடுத்துப் பருகிக்
காளைவண்டு பாட மயில் ஆலும் வளர் சோலைக்
கானாட்டு முள்ளூரில் கண்டு தொழுதேனே. 4

Koviloor Digital Library

செருக்கு வாய்ப் பைங்கண் வெள் அரவு அரையினானைத்
தேவர்கள் சூளாமணியைச் செங்கண் விடையானை
முருக்குவாய் மலர் ஒக்கும் திருமேனியானை
முன்னிலையாய் முழுதுஉலகமாய பெருமானை
இருக்கு வாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும்
வேள்வி இருந்து இரு நிதியம் வழங்கு நகர் எங்கும்
கருக்கு வாய்ப் பெண்ணையொடு தெங்கு மலி சோலைக்
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 5

6. டை அரவக்கொடி ஏந்தும் விண்ணவர்தம் கோனை
வெள்ளத்து மாலவனும் வேதமுதலானும்
அடிஇணையும் திருமுடியும் காண அரிதாய
சங்கரனைத் தத்துவனைத் தையல்மடவார்கள்
உடைஅவிழக் குழல் அவிழக் கோதை குடைந்து ஆடக்
குங்குமங்கள் உந்தி வரு கொள்ளிடத்தின் கரைமேல்
கடைகள் விடு வார் குவளை களைவாரும் கழனிக்
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 6

அருமணியை முத்தினை ஆன்அஞ்சும்ஆடும்
அமரர்கள்தம் பெருமானை அருமறையின் பொருளைத்
திருமணியைத் தீம்கரும்பின் ஊறல் இருந் தேனைத்
தெரிவு அரிய மாமணியைத் திகழ் தகு செம்பொன்னைக்
குரு மணிகள் கொழித்து இழிந்து சுழித்து இழியும் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்துஆடும் கொள்ளிடத்தின் கரைமேல்
கருமணிகள் போல் நீலம் மலர்கின்ற கழனிக்
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 7

Koviloor Digital Library

இழை தழுவு வெண்நூலும் மேவு திருமார்பின்
ஈசன் தன் எண்தோள்கள் வீசி எரிஆடக்
குழை தழுவு திருக்காதில் கோள் அரவம் அசைத்துக்
கோவணம் கொள் குழகனைக் குளிர்சடையினானைத்
தழை தழுவு தண் நிறத்த செந்நெல் அதன் அயலே
தடந் தரள மென் கரும்பின் தாழ் கிடங்கின் அருகே
கழை தழுவித் தேன் தொடுக்கும் கழனி சூழ் பழனக்
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 8

குனி இனிய கதிர் மதியம் சூடு சடையானைக்
குண்டலம் சேர் காதவனை வண்டு இனங்கள் பாடப்
பனி உதிரும் சடையானைப் பால்வெண்நீற்றானைப்
பலஉருவும் தன் உருவே ஆய பெருமானைத்
துனி இனிய தூய மொழித் தொண்டைவாய் நல்லார்
தூ நீலம் கண்வளரும் சூழ் கிடங்கின் அருகே
கனிவு இனிய கதலிவனம் தழுவு பொழில் சோலைக்
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 9

தேவி அம்பொன்மலைக்கோமான் தன் பாவை ஆகத்
தனது உருவம் ஒரு பாகம் சேர்த்துவித்த பெருமான்
மேவிய வெந்நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான் காட்டும் வேதமுதலானைத்
தூவிய வாய் நாரையொடு குருகு பாய்ந்து ஆர்ப்பத்
துறைக் கெண்டை மிளிர்ந்து கயல்துள்ளி விளையாடக்
காவிவாய் வண்டுபல பண் செய்யும் கழனிக்
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 10

Koviloor Digital Library

திரையினார் கடல் சூழ்ந்த தென் இலங்கைக் கோனைச்
செற்றவனைச் செஞ்சடைமேல் வெண்மதியினானைக்
கரையினார் புனல்தழுவு கொள்ளிடத்தின் கரைமேல்
கானாட்டு முள்ளூரில் கண்டு கழல் தொழுது
உரையினார் மதயானை நாவல் ஆரூரன்
உரிமையால் உரைசெய்த ஒண்தமிழ்கள் வல்லார்
வரையினார் வகை ஞாலம் ஆண்டவர்க்கும் தாம் போய்
வானவர்க்கும் தலைவராய் நிற்பர் அவர்தாமே 11

திருச்சிற்றம்பலம்

18. திருப்புறம்பயம்

இறைவன் - புறம்பயநாதர், சாட்சிநாதர் இறைவி - கரும்படு சொல்லி
பண் : கொல்லி

அங்கம் ஓதி ஓர் ஆறைமேற்றளிநின்றும் போந்து வந்து இன்னம்பர்த்
தங்கினோமையும் இன்னது என்றிலர் ஈசனார் எழு நெஞ்சமே
கங்குல் ஏமங்கள் கொண்டு தேவர்கள் ஏத்தி வானவர்தாம் தொழும்
பொங்கு மால்விடைஏறி செல்வப் புறம்பயம் தொழப் போதுமே. 1

பதியும் சுற்றமும் பெற்ற மக்களும் பண்டையார்அலர் பெண்டிரும்
நிதியில் இம் மனை வாழும் வாழ்க்கையும் நினைப்பு ஒழி மட நெஞ்சமே
மதியம் சேர் சடைக் கங்கையான் இடம் மகிழும் மல்லிகை செண்பகம்
புதிய பூ மலர்ந்து எல்லி நாறும் புறம்பயம் தொழப் போதுமே 2

புறம் திரைந்து நரம்பு எழுந்து நரைத்து நீ உரையால் தளர்ந்து
அறம் புரிந்து நினைப்பது ஆண்மை அரிதுகாண் இஃது அறிதியேல்
திறம்பியாது எழு நெஞ்சமே சிறுகாலை நாம் உறு வாணியம்
புறம் பயத்து உறை பூதநாதன் புறம்பயம் தொழப் போதுமே 3

Koviloor Digital Library

குற்று ஒருவ்வரைக் கூறை கொண்டு கொலைகள் சூழ்ந்த களவுஎலாம்
செற்று ஒருவ்வரைச் செய்த தீமைகள் இம்மையே வரும் திண்ணமே
மற்று ஒருவ்வரைப் பற்று இலேன் மறவாது எழு மட நெஞ்சமே
புற்று அரவ்வு உடைப் பெற்றம் ஏறி புறம்பயம் தொழப் போதுமே 4

கள்ளி நீ செய்த தீமைஉள்ளன பாவமும் பறையும்படி
தெள்ளிதா எழு நெஞ்சமே செங்கண் சே உடைச் சிவலோகன் ஊர்
துள்ளி வெள் இளவாளை பாய் வயல் தோன்று தாமரைப்பூக்கள்மேல்
புள்ளி நள்ளிகள் பள்ளிகொள்ளும் புறம்பயம் தொழப் போதுமே 5

படைஎலாம் பகடு ஆர ஆளிலும் பௌவம் சூழ்ந்து அரசு ஆளிலும்
கடைஎலாம் பிணைத் தேரைவால் கவலாது எழு மட நெஞ்சமே
மடைஎலாம் கழுநீர் மலர்ந்து மருங்குஎலாம் கரும்பு ஆடத் தேன்
புடைஎலாம் மணம் நாறு சோலைப் புறம்பயம் தொழப் போதுமே 6

முன்னைச் செய்வினை இம்மையில் வந்து மூடும் ஆதலின் முன்னமே
என்னை நீ தியக்காது எழும் மட நெஞ்சமே எந்தை தந்தை ஊர்
அன்னச்சேவலோடு ஊடிப் பேடைகள் கூடிச் சேரும் அணி பொழில்
புன்னைக்கன்னிகள் அக்குஅரும்பு புறம்பயம் தொழப் போதுமே 7

மலம் எலாம் அறும் இம்மையே மறுமைக்கும் வல்வினை சார்கிலா
சலம்எலாம் ஒழி நெஞ்சமே எங்கள் சங்கரன் வந்து தங்கும் ஊர்
கலம் எலாம் கடல் மண்டு காவிரிநங்கை ஆடிய கங்கைநீர்
புலம்எலாம் மண்டிப் பொன் விளைக்கும் புறம்பயம் தொழப் போதுமே 8

பண்டு அரீயன செய்த தீமையும் பாவமும் பறையும்படி
கண்டு அரீயன கேட்டியேல் கவலாது எழு மட நெஞ்சமே
தொண்டு அரீயன பாடித் துள்ளி நின்று ஆடி வானவர்தம் தொழும்
புண்டரீகம் மலரும் பொய்கைப் புறம்பயம் தொழப் போதுமே 9

Koviloor Digital Library

துஞ்சியும் பிறந்தும் சிறந்தும் துயக்கு அறாத மயக்குஇவை
அஞ்சி ஊரன் திருப் புறம்பயத்து அப்பனைத் தமிழ்ச்சீரினால்
நெஞ்சினாலே புறம்பயம் தொழுது உய்தும் என்று நினைத்தன
வஞ்சியாது உரைசெய்ய வல்லவர் வல்ல வான்உலகு ஆள்வரே 10

திருச்சிற்றம்பலம்

19. திருவையாறு

இறைவன் - பஞ்ச நதீசுவரர், ஐயாறப்பர்

இறைவி - தர்ம சம்வர்த்தினி
அறம் வளர்த்த நாயகி

பண் : காந்தாரபஞ்சமம்

பரவும் பரிசு ஒன்று அறியேன்நான்
பண்டே உம்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாலும்
எய்த நினையமாட்டேன் நான்
கரவில் அருவி கமுகு உண்ணத்
தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவம் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 1

எங்கே போவேன் ஆயிடினும்
அங்கே வந்து என் மனத்தீராய்ச்
சங்கை ஒன்றும் இன்றியே
தலைநாள் கடைநாள் ஒக்கவே
கங்கை சடைமேல் கரந்தானே
கலைமான்மறியுங் கனல்மழுவும்
தங்குந் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 2

Koviloor Digital Library

மருவிப் பிரியமாட்டேன் நான்
வழிநின்றொழிந்தேன் ஒழிகிலேன்
பருவி விச்சி மலைச்சாரல்
பட்டை கொண்டு பகடுஆடிக்
குருவி ஒப்பிக் கிளி கடிவார்
குழல்மேல் மாலை கொண்டு ஒட்டம்
தர அம் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 3

பழகாநின்று பணி செய்வார்
பெற்ற பயன் ஒன்று அறிகிலேன்
இகழாது உமக்கு ஆட்பட்டோர்க்கு
ஏகபடம் ஒன்று அரைச் சாத்திக்
குழகா வாழைக் குலை தெங்கு
கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 4

பிழைத்த பிழை ஒன்று அறியேன் நான்
பிழையைத் தீரப் பணியாயே
மழைக் கண் நல்லார் குடைந்து ஆட
மலையும் நிலனும் கொள்ளாமைக்
கழைக் கொள் பிரசம் கலந்து எங்கும்
கழனி மண்டிக் கை ஏறி
அழைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 5

Koviloor Digital Library

கார்க்கொள் கொன்றை சடைமேல் ஒன்று
உடையாய் விடையாய் கையினால்
மூர்க்கர் புரம்மூன்று எரிசெய்தாய்
முன் நீ பின் நீ முதல்வன் நீ
வார் கொள் அருவி பல வாரி
மணியும் முத்தும் பொன்னும் கொண்டு
ஆர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 6

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப்
பற்றி உலகம் பலி தேர்வாய்
சிலைக் கொள் கணையால் எயில் எய்த
செங்கண் விடையாய் தீர்த்தன் நீ
மலைக் கொள் அருவி பல வாரி
மணியும் முத்தும் பொன்னும் கொண்டு
அலைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 7

போழும் மதியும் புனக் கொன்றை
புனல்சேர் சென்னிப் புண்ணியா
சூழும் அரவச் சுடர்ச்சோதீ
உன்னைத் தொழுவார் துயர் போக
வாழும் அவர்கள் அங்கங்கே
வைத்த சிந்தை உய்த்து ஆட்டம்
ஆழும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 8

Koviloor Digital Library

கதிர்க் கொள் பசியே ஒத்தே நான்
கண்டேன் உம்மைக் காணாதேன்
எதிர்த்து நீந்தமாட்டேன் நான்
எம்மான் தம்மான் தம்மானே
விதிர்த்து மேகம் மழை பொழிய
வெள்ளம் பரந்து நுரை சிதறி
அதிர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 9

கூசி அடியார் இருந்தாலும்
குணம்ஒன்று இல்லீர் குறிப்பு இல்லீர்
தேசவேந்தன்திருமாலும்
மலர்மேல் அயனும் காண்கிலார்
தேசம் எங்கும் தெளிந்து ஆடத்
தெண்நீர் அருவி கொணர்ந்து எங்கும்
வாசந் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 10

கூடி அடியார் இருந்தாலும்
குணம் ஒன்று இல்லீர் குறிப்பு இல்லீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன்
உம்மைத் தொண்டன் ஊரனேன்
தேடி எங்கும் காண்கிலேன்
திரு ஆரூரே சிந்திப்பன்
ஆடும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகளோ ! 11

Koviloor Digital Library

பதிக வரலாறு : (பரவும்பரிசொன்)

மகோதையினின்று எழுந்தருளித் திருவாரூரையடைந்து நம்பியாரூரரை வணங்கி அளவளாவி அவரோடு உடனிருந்த சேரமான் பெருமாள் நாராயனர் அவரைப் பலகாலும் வேண்டித் தமது நாட்டுக் கெழுந்தருளும்படி இசைவு பெற்றுப் பயணத்திற்குரிய அடியார்களுக்கும் உணவிடுவித்தார். பிறகு ஒருநாள் இருநாயன்மார்களும் இறைவனை வணங்கிப் புறப்பட்டு மேல்பாற் செல்கின்றவர்கள் காவிரியின் தென்கரையில் பல திருப்பதிகளையும் வணங்கித் திருக்கண்டியூரை அணைந்து வணங்கினார்கள். வணங்கியவர்கள் வடகரையிற் திருவையாறு தோன்றக் கண்டு கைகூப்பிவணங்கிக் காவிரி கடல் பரந்ததுபோல் பெருகுவதைக் கடந்து தொழுதற்கு நினைந்து சேரர் பெருமான் நம்பியாரூரரை நோக்கித் திருவையாறிறைஞ்ச நெஞ்சம் உருகி நையா நின்றது. ஆற்றைக் கடந்து பணிவோம் என்று கூற ஆறு பெருகி வேறு நாவாயோடங்கள் மீது செல்லாவகை மிகைப்ப அன்பின் வழியே வழியாகச் செல்ல உரிய வன்றெண்டர் இறைவர் திருவடி பணிந்து ஆற்றழைத்துப் 'பரவும் பரிசொன்' றென்றெடுத்துத் திருப்பாட்டின் முடிவில் அரவர் புனைவாரை ஐயாறுடைய வடிகளோ என்று வைத்துப் பாடியருளலும் மன்றினிறைந்தாடவல்ல மாதேவன் காவரியாறானது இடையிலே விலகி வழிகாட்டத் தாம் கன்று தடையுண்டு எதிரைழைக்கக் கதறிக்கனைக்குங் கற்றாப்போல் ஒன்று முணர்ச்சியாற் சராசரங்கள் எல்லாங் கேட்க 'ஓம்' என்று ஒரு மொழியைத் திருவையாற்றினின்றும் அருளிச் செய்தார். உடனே காவிரியாறானது மேல்பால் வெள்ளம் பளிங்கு மலைபோல் தடையுண்டு நிற்கக் கீழ்பால் நீர் வடிந்து நடுவே நல்ல வழி பண்ணி மணல் பரப்பக் கண்டு தொண்டர் இருவரும் கண்களில் இன்பவருவி சொரிய மயிர்ப்புளகங் கலக்கக் கை குவித்து வணங்கி ஆறு கடந்து சென்று திருவையாற்றை அடைந்து செம்பொற் சோதி நாதரைப் பணிந்து பரவி விடைபெற்று மீண்டும் முன் வந்த வழியே காவிரியைக் கடந்து கரையேறியவுடனே ஆறானது முன்போல் பெருகத் தொடங்கியது. இச்செயலின் வியப்பை இருவருங் கண்டு திருவருளைப் போற்றிப் பிற பதிகளையும் வணங்கிக் கொங்குநாட்டை அடைந்தார்கள்

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

20. திருமழபாடி

இறைவன் - வயிரத்தூண் நாதர் இறைவி - அழகம்மை

பண் : நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கு அசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 1

கீளார் கோவணமும் திருநீறு மெய் பூசி உன்தன்
தாளே வந்து அடைந்தேன் தலைவா எனை ஏன்று கொள் நீ
வாளார் கண்ணி பங்கா மழபாடியுள் மாணிக்கமே
கேளா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 2

எம்மான் எம் அனை என்தனக்கு எள் தனைச் சார்வு ஆகார்
இம் மாயப்பிறவி பிறந்தே இறந்து எய்த்தொழிந்தேன்
மைம் மாம் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அம்மான் நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 3

பண்டே நின் அடியேன் அடியார் அடியார்கட்கு எல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன் தொடராமைத் துரிசு அறுத்தேன்
வண்டார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்டா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 4

கண்ணாய் ஏழ் உலகும் கருத்தாய அருத்தமுமாய்ப்
பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
அண்ணா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 5

Koviloor Digital Library

நாளார் வந்து அணுகி நலியாமுனம் நின்தனக்கே
ஆளா வந்து அடைந்தேன் அடியேனையும் ஏன்று கொள் நீ
மாளா நாள் அருளும் மழபாடியுள் மாணிக்கமே
ஆளா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 6

சந்து ஆரும் குழையாய் சடைமேல் பிறைதாங்கி நல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடை ஏறிய வித்தகனே
மைந்தார் சோலைகள் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
எந்தாய் நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 7

வெய்ய விரிசுடரோன் மிகு தேவர்கணங்கள் எல்லாம்
செய்யமலர்கள் இட மிகு செம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே
ஐயா நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 8

நெறியே நின்மலனே நெடுமால் அயன் போற்றி செய்யும்
குறியே நீர்மையனே கொடி ஏர் இடையாள் தலைவா
மறி சேர் அங்கையனே மழபாடியுள் மாணிக்கமே
அறிவே நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே. 9

ஏரார் முப்புரமும் எரியச் சிலை தொட்டவனை
வாரார் கொங்கை உடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்த தமிழ்
பாரோர் ஏத்த வல்லார் பரலோகத்து இருப்பாரே. 10.

திருச்சிற்றம்பலம்

பதிக வரலாறு : சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல தலங்களையும் தரிசிப்பாராகித் திருவாலம்பொழிலுக்கு வந்து தரிசித்துத் தங்கி இரவில் துயில் கொள்கையில் சிவபிரான் கனவில் எழுந்தருளி, ''மழபாடியினில் வருவதற்கு நினைக்க மறந்தாயோ'' என்று அருள எழுந்து திருமழபாடி அடைந்து தரிசித்து இப்பதிகத்தைப் பாடியருளினார்.

Koviloor Digital Library

21. திரு ஆனைக்கா

இறைவன் - நீர்த்திரள் நாதர். ஜம்புகேசுவரர் இறைவி - அகிலாண்ட நாயகி

பண் : காந்தாரம்

மறைகள் ஆயின நான்கும் மற்று உள பொருள்களும் எல்லாத்
துறையும் தோத்திரத்து இறையும் தொன்மையும் நன்மையும் ஆய
அறையும் பூம்புனல் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
இறைவன் என்று அடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே. 1

வங்கம் மேவிய வேலை நஞ்சு எழ வஞ்சர்கள் கூடித்
தங்கள்மேல் அடராமை உண் என உண்டு இருள்கண்டன்
அங்கம் ஓதிய ஆனைக்கா உடை ஆதியை நாளும்
எங்கள் ஈசன் என்பார்கள் எம்மையும் ஆளுடையாரே. 2

நீலவண்டு அறை கொன்றை நேர் இழை மங்கை ஓர் திங்கள்
சால வாள் அரவங்கள் தங்கிய செஞ்சடை எந்தை
ஆலநீழலுள் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
ஏலுமாறு வல்லார்கள் எம்மையும் ஆளுடையாரே. 3

தந்தை தாய் உலகுக்கு ஓர் தத்துவன் மெய்த்தவத் தோர்க்குப்
பந்தம் ஆயின பெருமான் பரிசு உடையவர் திரு அடிகள்
அந் தண் பூம்புனல் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
எந்தை என்று அடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே. 4

கணை செந்தீ அரவம் நாண் கல் வளையும் சிலை ஆகத்
துணை செயும் மதில் மூன்றும் சுட்டவனே உலகு உய்ய
அணையும் பூம்புனல் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே. 5

Koviloor Digital Library

விண்ணின் மா மதி சூடி விலைஇலிகலன் அணி விமலன்
பண்ணின் நேர் மொழி மங்கை பங்கினன் பசு உகந்து ஏறி
அண்ணல் ஆகிய ஆனைக்கா உடை ஆதியை நாளும்
எண்ணுமாறு வல்லார்கள் எம்மையும் ஆளுடையாரே. 6

தாரம் ஆகிய பொன்னித் தண்துறைஆடி விழுத்து
நீரில் நின்று அடி போற்றி நின்மலா கொள் என ஆங்கே
ஆரம் கொண்ட எம் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடையாரே. 7

உரவம் உள்ளது ஓர் உழையின்உரி புலிஅதள் உடையானை
விரை கொள் கொன்றையினானை விரிசடைமேல் பிறையானை
அரவம் வீக்கிய ஆனைக்கா உடை ஆதியை நாளும்
இரவும் எல்லையும் ஏத்துவார் எம்மை ஆளுடையாரே. 8

வலம்கொள்வார் அவர் தங்கள் வல்வினை தீர்க்கும் மருந்து
கலங்கக் காலனைக் காலால் காமனைக் கண் சிவப்பானை
அலங்கல் நீர் பொரும் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆளுடையாரே. 9

ஆழியாற்கு அருள் ஆனைக்கா உடை ஆதி பொன்அடியின்
நீழலே சரண் ஆக நின்று அருள் கூர நினைந்து
வாழ வல்ல வன்தொண்டன் வண்தமிழ்மாலை வல்லார் போய்
ஏழுமாபிறப்பு அற்று எம்மையும் ஆளுடையாரே. 10

பதிக வரலாறு : (மறைகளாயின)

திருமழபாடியினின்றும் காவிரியின்மேல்பாற் சென்று வழிபடும் தம்பிரான்தோழர் திருவானைக்காவினை அடைந்து, மெய்ம்முகிழ்ப்பக் கண்பொழி நீர் வெள்ளம் பரப்பி விம்முவாராய் 'மறைகளாயின நான்கும்'

Koviloor Digital Library

என்னும் பதிகம் பாடுகின்றவர், அதில் உறையூர்ச் சோழர் விலைமிக்குயர்ந்த மணிமாலையணிந்து காவிரியில் நீராடுங்கால் அது நழுவி வீழ்ந்துவிட, அவர் மிக்க துயருற்றுச் சிவபிரானை அதனைக் கொண்டருளுமாறு வேண்டியவண்ணம் இறைவன் அதனைத் திருமஞ்சனக்குடத்தில் தருவித்துத் திருமஞ்சனத்தில் அணிந்து கொண்டு அவன் துன்பம் நீக்கிய திறத்தை ஏழாந் திருப்பாட்டில் வைத்துச் சிறப்பித்தேத்தினார்.

திருச்சிற்றம்பலம்

22. திருப்பைஞ்ஞீலி

இறைவன் - நீலகண்டர் இறைவி - விசாலாட்சி, நீள்நெடுங்கண்ணி

பண் : கொல்லி

கார் உலாவிய நஞ்சை உண்டு இருள்
கண்டர் வெண்தலைஓடு கொண்டு
ஊர்எலாம் திரிந்து என் செய்வீர் பலி
ஓர் இடத்திலே கொள்ளும் நீர்
பார்எலாம் பணிந்து உம்மையே பரவிப்
பணியும் பைஞ்ஞீலியீர்
ஆரம் ஆவது நாகமோ சொலும்
ஆரணீய விடங்கரே. 1

சிலைத்து நோக்கும் வெள்ஏறு செந்தழல்
வாய பாம்புஅது மூசெனும்
பலிக்கு நீர் வரும்போது நும் கையில்
பாம்பு வேண்டா பிரானிரே

Koviloor Digital Library

மலைத்த சந்தொடு வேங்கை கோங்கமும்
மன்னு கார்அகில் சண்பகம்
அலைக்கும் பைம்புனல் சூழ் பைஞ்ஞீலியில்
ஆரணீய விடங்கரே. 2

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 13.688

தூயவர் கண்ணும் வாயும் மேனியும்
துன்னஆடை சுடலையில்
பேயொடு ஆடலைத் தவிரும் நீர் ஒரு
பித்தரோ எம்பிரானிரே
பாயும் நீர்க் கிடங்கார் கமலமும்
பைந் தண் மாதவி புன்னையும்
ஆய பைம்பொழில் சூழ் பைஞ்ஞீலியில்
ஆரணீய விடங்கரே. 3

செந்தமிழ்த் திறம் வல்லிரோ செங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்குமிது என்கொலோ பலி
மாற்றமாட்டோம் இடகிலோம்
பைந் தண் மா மலர் உந்து சோலைகள்
கந்தம் நாறும் பைஞ்ஞீலியீர்
அந்தி வானமும் மேனியோ சொலும்
ஆரணீய விடங்கரே. 4

நீறு நும் திருமேனி நித்திலம்
நீல்நெடுங்கண்ணினாளொடும்
கூறராய் வந்து நிற்றிரால் கொணர்ந்து
இடகிலோம் பலி நடமினோ

Koviloor Digital Library

பாறு வெண்தலை கையில் ஏந்திப்
பைஞ்ஞீலியேன் என்றீர் அடிகள்நீர்
ஆறு தாங்கிய சடையரோ சொலும்
ஆரணீய விடங்கரே. 5

குரவம் நாறிய குழலினார் வளை
கொள்வதே தொழிலாகி நீர்
இரவும் இம் மனை அறிதிரே இங்கே
நடந்து போகவும் வல்லிரே
பரவி நாள்தொறும் பாடுவார் வினை
பற்றுஅறுக்கும் பைஞ்ஞீலியீர்
அரவம் ஆட்டவும் வல்லிரோ சொலும்
ஆரணீய விடங்கரே. 6

ஏடு உலாம் மலர்க்கொன்றை சூடுதிர்
என்புஎலாம் அணிந்து என் செய்வீர்
காடு நும் பதி ஓடு கையது
காதல்செய்பவர் பெறுவது என்
பாடல் வண்டு இசை ஆலும் சோலைப்
பைஞ்ஞீலியேன் என்று நிற்றிரால்
ஆடல் பாடலும் வல்லிரோ சொலும்
ஆரணீய விடங்கரே. 7

மத்தமா மலர்க் கொன்றை வன்னியும்
கங்கையாளொடு திங்களும்
மொய்த்த வெண்தலை கொக்கு இறஃகொடு
வெள்எருக்கமும் சடைய தாம்

Koviloor Digital Library

பத்தர்சித்தர்கள் பாடி ஆடும்
பைஞ்ஞீலியேன் என்று நிற்றிரால்
அத்தி ஈர் உரி போர்த்திரோ சொலும்
ஆரணீய விடங்கரே. 8

தக்கை தண்ணுமை தாளம் வீணை
தகுணிச்சம் கிணை சல்லரி
கொக்கரை குடமுழவினோடு இசை
கூடிப் பாடி நின்று ஆடுவீர்
பக்கமே குயில் பாடும் சோலைப்
பைஞ்ஞீலியேன் என்று நிற்றிரால்
அக்கும் ஆமையும் பூண்டிரோ சொலும்
ஆரணீய விடங்கரே. 9

கை ஓர் பாம்பு அரை ஆர்த்த ஓர் பாம்பு
கழுத்து ஓர் பாம்பு அவை பின்பு தாழ்
மெய்எலாம் பொடிக்கொண்டு பூசுதிர்
வேதம் ஓதுதிர் கீதமும்
பையவே விடங்குஆக நின்று
பைஞ்ஞீலியேன் என்றீர் அடிகள்நீர்
ஐயம் ஏற்குமிது என்கொலோ சொலும்
ஆரணீய விடங்கரே. 10

அன்னம் சேர் வயல் சூழ் பைஞ்ஞீலியில்
ஆரணீய விடங்கரை
மின்னும் நுண்இடை மங்கை மார்பலர்
வேண்டிக் காதல் மொழிந்த சொல்

Koviloor Digital Library

மன்னு தொல்புகழ் நாவலூரன் வன்
தொண்டன் வாய்மொழி பாடல்பத்து
உன்னி இன்னிசை பாடுவார் உமை
கேள்வன் சேவடி சேர்வரே. 11

பதிக வரலாறு : திருப்பைஞ்ஞீலிக்கு வந்த நம்பியாரூரர், கோபுரத்தை இறைஞ்சித் திருக்கோயிலை வலமாகவந்த போது கங்காள மூர்த்தியைத் தரிசித்து மனம் உருகி, அப்பெருமான் பலிக்கு எழுந்தருளியபோது அவர் அழகிய வடிவைக் கண்ட மாதர்கள் மயலடைந்து வினாவிய கூற்றாக இப்பதிகத்தைப் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

23 திருப்பாச்சிலாச்சிராமம்

இறைவன் - மாற்றறிவரதர், சமீவனேசுவரர் இறைவி - பாலசௌந்தரி
பண் : தக்கராகம்

வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்
நெஞ்சமும் வஞ்சம் ஒன்று இன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை
உரைத்தக்கால் உவமனே ஒக்கம்
பைத்த பாம்பு ஆர்த்து ஓர் கோவணத்தோடு
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
பித்தரே ஒத்து ஓர் நச்சிலர் ஆகில்
இவர் அலாது இல்லையோ பிரானார். 1

Koviloor Digital Library

அன்னையே என்னேன் அத்தனே என்னேன்
அடிகளே அமையும் என்று இருந்தேன்
என்னையும் ஒருவன் உளன் என்று கருதி
இறைஇறை திருவருள் காட்டார்
அன்னமாம் பொய்கை சூழ்தரு
பாச்சிலாச்சிராமத்து உறை அடிகள்
பின்னையே அடியார்க்கு அருள்செய்வதுஆகில்
இவர் அலாது இல்லையோ பிரானார். 2

உற்ற போது அல்லால் உறுதியை உணரேன்
உள்ளமே அமையும் என்று இருந்தேன்
செற்றவர் புரம்மூன்று எரி எழச் செற்ற
செஞ்சடை நஞ்சு அடை கண்டர்
அற்றவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து
அடிகள்தாம் யாது சொன்னாலும்
பெற்றபோது உகந்து பெறாவிடில் இகழில்
இவர்அலாது இல்லையோ பிரானார். 3

நாச் சில பேசி நமர் பிறர் என்று
நன்று தீது என்கிலர் மற்று ஒர்
பூச்சு இலை நெஞ்சே பொன் விளை கழனிப்
புள்இனம் சிலம்புமாம் பொய்கைப்
பாச்சிலாச்சிராமத்து அடிகள் என்று இவர்தாம்
பலரையும் ஆட்கொள்வர் பரிந்து ஒர்
பேச்சு இலர் ஒன்றைத் தரஇலர்ஆகில்
, இவர்அலாது இல்லையோ பிரானார். 4

Koviloor Digital Library

வரிந்த வெஞ்சிலையால் அந்சுரத்து எயிலை
வாட்டிய வகையினரேனும்
புரிந்த அந் நாளே புகழ்தக்க அடிமை
போகும் நாள் வீழும் நாள் ஆகிப்
பரிந்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து
அடிகள்தாம் யாது சொன்னாலும்
பிரிந்து இறைப்போதில் பேர்வதே ஆகில்
இவர்அலாது இல்லையோ பிரானார். 5

செடித் தவம் செய்வார் சென்றுழிச் செல்லேன்
தீவினை செற்றிடும் என்று
அடித்தவம் அல்லால் ஆரையும் அறியேன்
ஆவதும் அறிவர் எம் அடிகள்
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
பிடித்த வெண்நீறே பூசுவதுஆனால்
இவர்அலாது இல்லையோ பிரானார். 6

கையது கபாலம் காடு உறை வாழ்க்கை
கட்டங்கம் ஏந்திய கையர்
மெய்யது புரிநூல் மிளிரும் புன்சடைமேல்
வெண்திங்கள் சூடிய விகிர்தர்
பைஅரவுஅல்குல் பாவையர் ஆடும்
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
மெய்யரே ஒத்து ஓர் பொய் செய்வதுஆகில்
இவர்அலாது இல்லையோ பிரானார். 7

Koviloor Digital Library

நிணம் படும் உடலை நிலைமை என்று ஓரேன்
நெஞ்சமே தஞ்சம் என்று இருந்தேன்
கணம் படிந்து ஏத்திக் கங்குலும் பகலும்
கருத்தினால் கைதொழுது எழுவேன்
பணம் படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
பிணம் படு காட்டில் ஆடுவதுஆகில்
இவர்அலாது இல்லையோ பிரானார். 8

குழைத்து வந்து ஓடிக் கூடுதி நெஞ்சே
குற்றேவல் நாள்தொறும் செய்வான்
இழைத்த நாள் கடவார் அன்பிலரேனும்
எம்பெருமான் என்று எப்போதும்
அழைத்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து
அடிகள்தாம் யாது சொன்னாலும்
பிழைத்தது பொறுத்து ஒன்று ஈகிலர்ஆகில்
இவர்அலாது இல்லையோ பிரானார். 9

துணிப்படும் உடையும் சுண்ணவெண்நீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப் படு கண்டனை வாயினால் கூறி
மனத்தினால் தொண்டனேன் நினைவேன்
பணிப் படும் அரவம் பற்றிய கையர்
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
பிணிப்பட ஆண்டு பணிப்புஇலர்ஆகில்
இவர்அலாது இல்லையோ பிரானார். 10

Koviloor Digital Library

ஒருமையே அல்லேன் எழுமையும் அடியேன்
அடியவர்க்கு அடியனும் ஆனேன்
உரிமையால் உரியேன் உள்ளமும் உருகும்
ஒண்மலர்ச்சேவடி காட்டாய்
அருமையாம் புகழார்க்கு அருள்செயும்
பாச்சிலாச்சிராமத்து எம் அடிகள்
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில்
இவர் அலாது இல்லையோ பிரானார். 11

ஏசின அல்ல இகழ்ந்தன அல்ல
எம்பெருமான் என்று எப்போதும்
பாயின புகழான் பாச்சிலாச்சிராமத்து
அடிகளை அடி தொழப் பல் நாள்
வாயினால் கூறி மனத்தினால் நினைவான்
வள வயல் நாவல் ஆரூரன்
பேசின பேச்சைப் பொறுத்திலர் ஆகில்
இவர் அலாது இல்லையோ பிரானார் 12

பதிக வரலாறு : (வைத்தனன்)

திருவாகைக் காவையும் அதனருகிலுள்ள தலங்களையும் வணங்கிய நம்பியாரூரர் திருப்பாச்சிலாச்சிராமஞ் சென்றடைந்து இறைவனை வழிபட்டுத் தமக்குப் பொன்றாத குறையால் மனப்புழுக்கமடைந்து அடியார் திருமுன்னே நின்று முறையிடுவார் போன்று என்புருகித் தமது தோழமைத் தன்மையால் ‘இவரலாதில்லையோ பிரானர்’ என்று ஈற்றடி தோறும் வைத்து ‘வைத்தனன்றனக்கே’ என்னும் இப்பதிகம் பாடியருளப் பெருமான் விழுநிதிக்குவை அளித்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

24. திருக்கற்குடி

இறைவன் - உச்சிநாதர் இறைவி - அஞ்சனாட்சி

பண் : நட்டராகம்

விடையாரும் கொடியாய் வெறியார் மலர்க்கொன்றையினாய்
படையார் வெண்மழுவா பரமாய பரம்பரனே
கடியார் பூம்பொழில் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
அடிகேள் எம்பெருமான் அடியேனையும் அஞ்சல் என்னே 1

மறையோர் வானவரும் தொழுது ஏத்தி வணங்க நின்ற
இறைவா எம்பெருமான் எனக்கு இன்அமுதாயவனே
கறையார் சோலைகள் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
அறவா அங்கணனே அடியேனையும் அஞ்சல் என்னே 2

சிலையால் முப்புரங்கள் பொடியாகச் சிதைத்தவனே
மலைமேல் மா மருந்தே மடமாது இடம் கொண்டவனே
கலை சேர் கையினனே திருக்கற்குடி மன்னி நின்ற
அலை சேர் செஞ்சடையாய் அடியேனையும் அஞ்சல் என்னே 3

செய்யார் மேனியனே திரு நீலமிடற்றினனே
மையார்கண்ணி பங்கா மதயானை உரித்தவனே
கையார் சூலத்தினாய் திருக்கற்குடி மன்னி நின்ற
ஐயா எம்பெருமான் அடியேனையும் அஞ்சல் என்னே 4

சந்தார் வெண்குழையாய் சரி கோவண ஆடையனே
பந்தாரும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே
கந்தார் சோலைகள் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
எந்தாய் எம்பெருமான் அடியேனையும் ஏன்றுகொள்ளே 5

Koviloor Digital Library

அரையார் கீளொடு கோவணமும் அரவும் அசைத்து
விரையார் கொன்றையுடன் விளங்கும்பிறை மேலுடையாய்
கரையாரும் வயல் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
அரையா எம்பெருமான் அடியேனையும் அஞ்சல் என்னே 6

பாரார் விண்ணவரும் பரவிப் பணிந்து ஏத்த நின்ற
சீரார் மேனியனே திகழ் நீலமிடற்றினனே
காரார் பூம்பொழில் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
ஆரா இன்னமுதே அடியேனையும் அஞ்சல் என்னே 7

நிலனே நீர் வளி தீ நெடுவானகம் ஆகி நின்ற
புலனே புண்டரிகத்து அயன் மாலவன் போற்றிசெய்யும்
கனலே கற்பகமே திருக்கற்குடி மன்னி நின்ற
அனல் சேர் கையினனே அடியேனையும் அஞ்சல் என்னே 8

வரும் காலன் உயிரை மடியத் திரு மெல்விரலால்
பெரும் பாலன்தனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே
கரும்பாரும் வயல் சூழ் திருக்கற்குடி மன்னி நின்ற
விரும்பா எம்பெருமான் அடியேனையும் வேண்டுதியே 9

அலையார் தண்புனல் சூழ்ந்து அழகாகி விழவு அமரும்
கலையார் மா தவர் சேர் திருக்கற்குடிக் கற்பகத்தைச்
சிலையார் வாள்நுதலாள் நல்ல சிங்கடி அப்பன் உரை
விலையார் மாலை வல்லார் வியன்மூஉலகு ஆள்பவரே 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

25. திருச்சோற்றுத்துறை

இறைவன் - தொலையாச் செல்வர் ஓதவனேசுவரர்

இறைவி - ஒப்பிலாம்பிகை, அன்னபூரணி

பண் : கௌசிகம்

அழல் நீர் ஒழுகியனைய சடையும்
உழை ஈர் உரியும் உடையான் இடமாம்
கழை நீர் முத்தும் கனகக் குவையும்
சுழல் நீர்ப் பொன்னிச் சோற்றுத்துறையே. 1

பண்டை வினைகள் பறிய நின்ற
அண்ட முதல்வன் அமலன் இடமாம்
இண்டை கொண்டு அன்பு இடைஅறாத
தொண்டர் பரவும் சோற்றுத்துறையே. 2

கோல அரவும் கொக்கின் இறகும்
மாலை மதியும் வைத்தான் இடமாம்
ஆலும் மயிலும் ஆடல் அளியும்
சோலை தரு நீர்ச் சோற்றுத்துறையே. 3

பளிக்குத்தாரை பவளவெற்பில்
குளிக்கும் போல் நூல் கோமாற்கு இடமாம்
அளிக்கும் ஆர்த்தி அல்லால் மதுவம்
துளிக்கும் சோலைச் சோற்றுத்துறையே 4

உதையும் கூற்றுக்கு ஒல்கா விதிக்கு
வதையும் செய்த மைந்தன் இடமாம்
திதையும் தாதும் தேனும் ஞிமிறும்
துதையும் பொன்னிச் சோற்றுத்துறையே. 5

Koviloor Digital Library

ஓதக்கடல் நஞ்சினை உண்டிட்ட
பேதைப் பெருமான் பேணும் பதியாம்
சீதப்புனல் உண்டு எரியைக் காலும்
சூதப்பொழில் சூழ் சோற்றுத்துறையே. 6

இறந்தார் என்பும் எருக்கும் சூடிப்
புறங்காட்டு ஆடும் புனிதன் கோயில்
சிறந்தார் சுற்றம் திரு என்று இன்ன
துறந்தார் சேரும் சோற்றுத்துறையே. 7

காமன் பொடியாக் கண் ஒன்று இமைத்த
ஓமக்கடலார் உகந்த இடமாம்
தேமென்குழலார் சேக்கை புகைத்த
தூமம் விசும்பார் சோற்றுத்துறையே. 8

இலையால் அன்பால் ஏத்துமவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடமாம்
தலையால் தாழும் தவத்தோர்க்கு என்றும்
தொலையாச் செல்வச் சோற்றுத்துறையே 9

சுற்றார் தருநீர்ச் சோற்றுத் துறையுள்
முற்றா மதிசேர் முதல்வன் பாதத்து
அற்றார் அடியார் அடிநாய் ஊரன்
சொல் தான் இவை கற்றார் துன்பு இலரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

26. திருநாகேச்சரம்

இறைவன் - சண்பக ஆரணியர் இறைவி - குன்றமுலைநாயகி

பண் : பஞ்சமம்

பிறை அணி வாள்நுதலாள் உமையாள் அவள் பேழ்கணிக்க
நிறை அணி நெஞ்சு அனுங்க நீலமால்விடம் உண்டது என்னே
குறை அணி குல்லை முல்லை அளைந்து குளிர் மாதவிமேல்
சிறை அணி வண்டுகள் சேர் திரு நாகேச்சரத்தானே. 1

அருந்தவ மா முனிவர்க்கு அருள் ஆகி ஓர் ஆல்அதன்கீழ்
இருந்து அறமே புரிதற்கு இயல்பு ஆகியது என்னைகொலாம்
குருந்து அயலே குரவம் அரவின் எயிறு ஏற்று அரும்பச்
செருந்தி செம்பொன்மலரும் திரு நாகேச்சரத்தானே. 2

பாலனது ஆருயிர்மேல் பரியாது பகைத்து எழுந்த
காலனை வீடுவித்துக் கருத்து ஆக்கியது என்னைகொலாம்
கோல மலர்க்குவளைக் கழுநீர் வயல் சூழ் கிடங்கில்
சேலொடு வாளைகள் பாய் திரு நாகேச்சரத்தானே. 3

குன்ற மலைக்குமரி கொடி ஏர் இடையாள் வெருவ
வென்றி மதகரியின் உரி போர்த்ததும் என்னைகொலாம்
முன்றில் இளங் கமுகின் முது பாளை மது அளைந்து
தென்றல் புகுந்து உலவும் திரு நாகேச்சரத்தானே. 4

அரை விரி கோவணத்தோடு அரவு ஆர்த்து ஒரு நால்மறைநூல்
உரை பெருக உரைத்து அன்று உகந்து அருள்செய்தது என்னே
வரை தரு மா மணியும் வரைச் சந்து அகிலோடும் உந்தித்
திரை பொரு தண்பழனத் திரு நாகேச்சரத்தானே. 5

Koviloor Digital Library

தங்கிய மா தவத்தின் தழல் வேள்வியின்நின்று எழுந்த
சிங்கமும் நீள் புலியும் செழு மால்கரியோடு அலறப்
பொங்கிய போர் புரிந்து பிளந்து ஈர்உரி போர்த்தது என்னே
செங்கயல் பாய் கழனி திரு நாகேச்சரத்தானே. 6

நின்ற இம் மா தவத்தை ஒழிப்பான் சென்று அணைந்து மிகப்
பொங்கிய பூங்கணை வேள் பொடி ஆக விழித்தல் என்னே
பங்கயமா மலர்மேல் மது உண்டு வண் தேன் முரலச்
செங்கயல் பாய் வயல்சூழ் திரு நாகேச்சரத்தானே. 7

வரிஅர நாண்அது ஆக மாமேரு·வில்அது ஆக
அரியன முப்புரங்கள் அவை ஆர்அழல் ஊட்டால் என்னே
விரிதரு மல்லிகையும் மலர்ச்சண்பகமும் அளைந்து
திரிதரு வண்டு பண்செய் திரு நாகேச்சரத்தானே. 8

அங்கு இயல் யோகுதனை அழிப்பான் சென்று அணைந்து மிகப்
பொங்கிய பூங்கணை வேள் பொடிஆக விழித்தல் என்னே
பங்கயமாமலர்மேல் மது உண்டு பண் வண்டு அறையச்
செங்கயல் நின்று உகளும் திரு நாகேச்சரத்தானே. 9

குண்டரைக் கூறை இன்றித் திரியும் சமண்சாக்கியப்பேய்
மிண்டரைக் கண்ட தன்மை விரவு ஆக்கியது என்னைகொலோ
தொண்டு இரைத்து வணங்கித் தொழில் பூண்டு அடியார் பரவும்
தெண்திரைத் தண்வயல் சூழ் திரு நாகேச்சரத்தானே 10

கொங்கு அணை வண்டு அரற்றக் குயிலும் மயிலும் பயிலும்
தெங்கமழ் பூம்பொழில் சூழ் திரு நாகேச்சரத்தானை
வங்கம் மலி கடல் சூழ் வயல் நாவல் ஊரன் சொன்ன
பங்கம் இல் பாடல் வல்லார் அவர்தம் வினை பற்றுஅறுமே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

27. திருவிடைமருதூர்

இறைவன் - மருதவாணர், மகாலிங்கேசுவரர் இறைவி - நன்முலைநாயகி
பண் : தக்கேசி

கழுதை குங்குமம்தான் சுமந்து எய்த்தால்
கைப்பர் பாழ் புக மற்றது போலப்
பழுது நான் உழன்று உள் தடுமாறிப்
படு சுழித்தலைப் பட்டனன் எந்தாய்
அழுது நீ இருந்து என் செய்தி மனனே
அங்கணா அரனே எனமாட்டா
இழுதையேனுக்கு ஓர் உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே. 1

நரைப்பு மூப்பொடு பிணி வரும் இன்னே
நன்றி இல் வினையே துணிந்து எய்த்தேன்
அரைத்த மஞ்சள்அது ஆவதை அறிந்தேன்
அஞ்சினேன் நமனார் அவர்தம்மை
உரைப்பன் நான் உன் சேவடி சேர
உணரும் வாழ்க்கையை ஒன்று அறியாத
இரைப்பனேனுக்கு ஓர் உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே. 2

Koviloor Digital Library

புல்நுனைப் பனி வெங்கதிர் கண்டால்
போலும் வாழ்க்கை பொருள் இலை நாளும்
என் எனக்கு இனி இற்றைக்கு நாளை
என்று இருந்து இடர் உற்றனன் எந்தாய்
முன்னமே உன சேவடி சேரா
மூர்க்கன்ஆகிக் கழிந்தன காலம்
இன்னம் என்தனக்கு உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே. 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய
மூர்க்கன்ஆகிக் கழிந்தன காலம்
சிந்தித்தே மனம் வைக்கவும் மாட்டேன்
சிறுச் சிறிதே இரப்பார்கட்கு ஒன்று ஈயேன்
அந்தி வெண்பிறை சூடும் எம்மானே
ஆரூர் மேவிய அமரர்கள்தலைவா
எந்தை நீ எனக்கு உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே. 4

அழிப்பர் ஐவர் புரவு உடையார்கள்
ஐவரும் புரவு ஆசு அற ஆண்டு
கழித்துக் கால் பெய்து போயின பின்னைக்
கடைமுறை உனக்கே பொறை ஆனேன்
விழித்துக் கண்டனன் மெய்ப்பொருள்தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கை ஈதுஆகில்
இழித்தென் என்தனக்கு உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே. 5

Koviloor Digital Library

குற்றம்தன்னொடு குணம்பல பெருக்கிக்
கோல நுண்இடையாரொடு மயங்கிக்
கற்றிலேன் கலைகள்பல ஞானம்
கடியவாயின கொடுமைகள் செய்தேன்
பற்றல்ஆவது ஓர் பற்று மற்று இல்லேன்
பாவியேன் பலபாவங்கள் செய்தேன்
எற்று உளேன் எனக்கு உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே 6

கொடுக்ககிற்றிலேன் ஒண் பொருள்தன்னைக்
குற்றம்செற்றம் இவை முதலாக
விடுக்ககிற்றிலேன் வேட்கையும் சினமும்
வேண்டில் ஐம்புலன் என் வசம் அல்ல
நடுக்கம் உற்றது ஓர் மூப்பு வந்து எய்த
நமன்தமர் நரகத்து இடல் அஞ்சி
இடுக்கண் உற்றனன் உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே 7


ஐவகையர் அரையர் அவர்ஆகி
ஆட்சிகொண்டு ஒரு கால் அவர் நீங்கார்
அவ் வகை அவர் வேண்டுவது ஆனால்
அவர்அவர்வழி ஒழுகி நான் வந்து
செய்வகை அறியேன் சிவலோகா
தீவணா சிவனே எரிஆடீ
எவ் வகை எனக்கு உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே 8

Koviloor Digital Library

ஏழை மானுட இன்பினை நோக்கி
இளையவர் வயப்பட்டு இருந்து இன்னம்
வாழைதான் பழுக்கும் நமக்கு என்று
வஞ்ச வல்வினையுள் வலைப்பட்டுக்
கூழைமாந்தர்தம் செல்கதிப் பக்கம்
போதமும் பொருள் ஒன்று அறியாத
ஏழையேனுக்கு ஓர் உய்வகை அருளாய்
இடைமருது உறை எந்தைபிரானே 9

அரைக்கும் சந்தனத்தோடு அகில் உந்தி
ஐவனம் சுமந்து ஆர்ந்து இருபாலும்
இரைக்கும் காவிரித் தென்கரைதன்மேல்
இடைமருது உறை எந்தைபிரானை
உரைக்கும் ஊரன்ஒளி திகழ் மாலை
உள்ளத்தால் உகந்து ஏத்த வல்லார்கள்
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி
நாதன்சேவடி நண்ணுவர்தாமே. 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

28. திருவாவடுதுறை

இறைவன் - மாசிலாமணி ஈசர். இறைவி - ஒப்பிலா முலையம்மை
செம்பொன் தியாகர் பண் : தக்கேசி

மறையவன் ஒருமாணி வந்து அடைய
வாரமாய் அவன் ஆருயிர் நிறுத்தக்
கறை கொள் வேல் உடைக் காலனைக் காலால்
கடந்த காரணம் கண்டுகண்டு அடியேன்
இறைவன் எம்பெருமான் என்று எப்போதும்
ஏத்திஏத்தி நின்று அஞ்சலி செய்து உன்
அறைகொள் சேவடிக்கு அன்பொடும் அடைந்தேன்
ஆவடுதுறை ஆதிஎம்மானே. 1

தெருண்ட வாய்இடை நூல் கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்றச்
சுருண்ட செஞ்சடையாய் அதுதன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சி கண்டு அடியேன்
புரண்டு வீழ்ந்து நின் பொன்மலர்ப்பாதம்
போற்றிபோற்றி என்று அன்பொடு புலம்பி
அருண்டு என் மேல்வினைக்கு அஞ்சி வந்து அடைந்தேன்
ஆவடுதுறை ஆதிஎம்மானே. 2

திகழும் மால்அவன் ஆயிரம்மலரால்
ஏத்துவான் ஒரு நீள் மலர் குறையப்
புகழினால் அவன் கண் இடந்து இடலும்
புரிந்து சக்கரம் கொடுத்தல் கண்டு அடியேன்

Koviloor Digital Library

திகழும் நின் திருப்பாதங்கள் பரவித்
தேவதேவ நின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக்கு அஞ்சி வந்து அடைந்தேன்
ஆவடுதுறை ஆதிஎம்மானே. 3

வீரத்தால் ஒரு வேடுவன் ஆகி
விசைத்து ஓர் கேழலைத் துரந்து சென்று அணைந்து
போரைத் தான் விசயன்தனக்கு அன்பாய்ப்
புரிந்து வான் படை கொடுத்தல் கண்டு அடியேன்
வாரத்தால் உன் நாமங்கள் பரவி
வழிபட்டு உன் திறமே நினைந்து உருகி
ஆர்வத்தோடும் வந்து அடிஇணை அடைந்தேன்
ஆவடுதுறை ஆதிஎம்மானே. 4

ஒக்க முப்புரம் ஓங்கு எரி தூவ
உன்னை உன்னிய மூவர் நின் சரணம்
புக்கு மற்றவர் பொன்னுலகு ஆளப்
புகழினால் அருள் ஈந்தமை அறிந்து
மிக்க நின் கழலே தொழுது அரற்றி
வேதியா ஆதிமூர்த்தி நின் அரையில்
அக்கு அணிந்த எம்மான் உனை அடைந்தேன்
ஆவடுதுறை ஆதி எம்மானே. 5

.... 6, 7, 8, 9, 10

Koviloor Digital Library

பதிக வரலாறு : (மறையவனொரு)

திருவரிசிற்கரைப் புத்தூரினின்றும் புறப்பட்டுப் பல திருப்பதிகளை வணங்கித் திருவாவடுதுறையை அடைந்த முனைப்பாடித் தலைவர் திருக்கோயிலை வலம் வந்து உருகும் அன்புடன் உள்புகுந்தேத்துவார், இப்பதிகத்தை எடுத்து அதில் வளவன் செங்கணான் குணங்கொள் பிறப்புஞ் சிறப்பித்துத் தமிழ்ச்சொன்மாலை சாத்தினார்.

திருச்சிற்றம்பலம்

29. திருவாவடுதுறை

இறைவன் - மாசிலாமணியீசுரர் இறைவி - ஒப்பிலா முலையம்மை

பண் : தக்கேசி

கங்கை வார்சடையாய் கணநாதா
காலகாலனே காமனுக்கு அனலே
பொங்கு மாகடல்விடம் மிடற்றானே
பூதநாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடையாய் தெளிதேனே
தீர்த்தனே திரு ஆவடுதுறையுள்
அங்கணா எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 1

மண்ணின் மேல் மயங்கிக் கிடப்பேனே
வலிய வந்து என்னை ஆண்டுகொண்டானே
கண் இலேன் உடம்பில் அடு நோயால்
கருத்து அழிந்து உனக்கே பொறை ஆனேன்

Koviloor Digital Library

தெண்நிலா எறிக்குஞ் சடையானே
    தேவனே திரு ஆவடுதுறையுள்
அண்ணலே எனை அஞ்சல் என்று அருளாய்
    ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 2

ஒப்பு இலாமுலையாள் ஒருபாகா
    உத்தமா மத்தம் ஆர் தரு சடையாய்
முப்புரங்களைத் தீ வளைத்து அங்கே
    மூவருக்கு அருள்செய்ய வல்லானே
செப்ப ஆல்நிழற்கீழ் இருந்து அருளுஞ்
    செல்வனே திரு ஆவடுதுறையுள்
அப்பனே எனை அஞ்சல் என்று அருளாய்
    ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 3

கொதியினால் வரு காளிதன் கோபம்
    குறைய ஆடிய கூத்து உடையானே
மதி இலேன் உடம்பில் அடு நோயான்
    மயங்கினேன் மணியே மனவாளா
விதியினால் இமையோர் தொழுது ஏத்தும்
    விகிர்தனே திரு ஆவடுதுறையுள்
அதிபனே எனை அஞ்சல் என்று அருளாய்
    ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 4

வந்த வாள் அரக்கன் வலி தொலைத்து
    வாழும் நாள் கொடுத்தாய் வழி முதலே
வெந்த வெண்பொடிப் பூச வல்லானே
    வேடனாய் விசயற்கு அருள்புரிந்த

Koviloor Digital Library

இந்து சேகரனே இமையோர் சீர்
ஈசனே திரு ஆவடுதுறையுள்
அந்தணா எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 5

குறைவு இலா நிறைவே குணக்குன்றே
கூத்தனே குழைக் காது உ்டையானே
உறவு இலேன் உனை அன்றி மற்று அடியேன்
ஒரு பிழை பொறுத்தால் இழிவு உண்டே
சிறை வண்டார் பொழில் சூழ் திரு ஆரூர்ச்
செம்பொனே திரு ஆவடுதுறையுள்
அறவனே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 6

வெய்ய மாகரிஈர் உரியானே
வேங்கை ஆடையினாய் விதிமுதலே
மெய்யனே அடல் ஆழி அன்று அரிதான்
வேண்ட நீ கொடுத்து அருள்புரி விகிர்தா
செய்ய மேனியனே திகழ் ஒளியே
செங்கணா திரு ஆவடுதுறையுள்
ஐயனே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 7

கோது இலா அமுதே அருள் பெருகு
கோலமே இமையோர் தொழு கோவே
பாதி மாது ஒரு கூறு உடையானே
பசுபதீ பரமா பரமேட்டி

Koviloor Digital Library

தீது இலா மலையே திருஅருள் சேர்
சேவகா திரு ஆவடுதுறையுள்
ஆதியே எனை அஞ்சல் என்று அருள்வாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 8

வானநாடனே வழித்துணை மருந்தே
மாசு இலா மணியே மறைப்பொருளே
ஏன மா எயிறு ஆமையும் எலும்பும்
ஈடு தாங்கிய மார்பு உடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே
தேவனே திரு ஆவடுதுறையுள்
ஆனையே எனை அஞ்சல் என்று அருளாய்
ஆர் எனக்கு உறவு அமரர்கள் ஏறே. 9

வெண்தலைப் பிறை கொன்றையும் அரவும்
வேரி மத்தமும் விரவி முன் முடித்த
இண்டைமாமலர்ச் செஞ்சடையானை
ஈசனைத் திரு ஆவடுதுறையுள்
அண்டவாணனைச் சிங்கடிஅப்பன்
அணுக்க வன்தொண்டன் ஆர்வத்தால் உரைத்த
தண்தமிழ்மலர்பத்தும் வல்லார்கள்
சாதலும் பிறப்பும் அறுப்பாரே. 10

பதிக வரலாறு : (கங்கைவார்சடை)

திருவரத்துறையைப் பணிந்து பல பதிகள் வழிபட்டுக் காவிரியின் முழுகிக் கடந்து திருவாவடுதுறையை அடைந்த திருவாரூரர், அடியவர் எதிர்கொள்ளப் புக்குத் திருக்கோயிலை வலம் வந்து உட்சென்று

Koviloor Digital Library

வணங்கிக் கண்ணிலாமைக்குக் கவல்வாராய்க் கங்கைவார்சடையாய் என்னும் இப்பதிகமெடுத்துத் திருப்பாட்டிறுதிதோறும் 'அஞ்சலென் றருளாய் ஆரெனக்குறவு அமரர்கள் ஏறே' என்று வைத்துப் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

30. திருநனிபள்ளி

இறைவன் - நற்றுணையப்பர் இறைவி - மலையான் மடந்தை

பண் : பஞ்சமம்

ஆதியன் ஆதிரையன் அயன் மால் அறிதற்கு அரிய
சோதியன் சொல்பொருளாய்ச் சுருங்கா மறைநான்கினையும்
ஓதியன் உம்பர்தங் கோன் உலகத்தினுள் எவ்உயிர்க்கும்
நாதியன் நம்பெருமான் நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே 1

உறவுஇலி ஊனம் இலி உணரார் புரம்மூன்று எரியச்
செறு விலி தன் நினைவார் வினை ஆயின தேய்ந்து அழிய
அற இலகும் அருளான் மருளார் பொழில் வண்டு அறையும்
நற விரி கொன்றையினான் நண்ணும் ஊர் நனிபள்ளி அதே 2

வான் உடையான் பெரியான மனத்தாலும் நினைப்பு அரியான்
ஆன்இடைஐந்து அமர்ந்தான் அணுஆகி ஓர் தீஉருக் கொண்டு
ஊன் உடை இவ் உடலம் ஒடுங்கிப் புகுந்தான் பரந்தான்
நான் உடை மாடு எம்பிரான் நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே 3

ஓடு உடையன் கலனா உடை கோவணவன் உமை ஓர்
பாடு உடையன் பலி தேர்ந்து உண்ணும் பண்பு உடையன் பயிலக்
காடு உடையன் இடமா மலைஏழும் கருங்கடல் சூழ்
நாடு உடை நம்பெருமான் நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே 4

Koviloor Digital Library

பண்ணற்கு அரியது ஒரு படைஆழிதனைப் படைத்துக்
கண்ணற்கு அருள்புரிந்தான் கருதாதவர் வேள்விஅவி
உண்ணற்கு இமையவரை உருண்டு ஓட உதைத்து அகந்து
நண்ணற்கு அரிய பிரான் நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே 5

மல்கிய செஞ்சடைமேல் மதியும் அரவும் உடனே
புல்கிய ஆரணன் எம் புனிதன் புரிநூல் விகிர்தன்
மெல்கிய வில் தொழிலான் விருப்பன் பெரும் பார்த்தனுக்கு
நல்கிய நம்பெருமான் நண்ணும் ஊர் நனிபள்ளி அதே 6

அங்கம் ஓர்ஆறுஅவையும் அருமாமறை வேள்விகளும்
எங்கும் இருந்து அந்தணர் எரிமூன்று அவை ஓம்பும் இடம்
பங்கயமாமுகத்தாள்உமை பங்கன் உறை கோயில்
செங்கயல் பாயும் வயல் திரு ஊர் நனிபள்ளிஅதே 7

திங்கள்குறுந்தெரியல் திகழ் கண்ணியன் நுண்ணியனாய்
நங்கட் பிணி களைவான் அரு மா மருந்து ஏழ்பிறப்பும்
மங்கத் திருவிரலால் அடர்த்தான் வல் அரக்கனையும்
நங்கட்கு அருளும் பிரான் நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே 8

ஏனமருப்பினொடும் எழில் ஆமையும் பூண்டு உகந்து
வான மதில்அரணம் மலையே சிலையா வளைத்தான்
ஊனம் இல் காழிதன்னுள் உயர் ஞானசம்பந்தர்க்கு அன்று
ஞானம் அருள்புரிந்தான் நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே 9

காலமும் நாள்கழியும் நனிபள்ளி மனத்தின் உள்கிக்
கோலம்அதுஆயவனைக் குளிர் நாவல்ஊரன் சொன்ன
மாலை மதித்து உரைப்பார் மண் மறந்து வானோர்உலகில்
சால நல் இன்பம் எய்தித் தவலோகத்து இருப்பவரே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

31. திருவலம்புரம்

இறைவன் - வலம்புரி நாதர் இறைவி - வடுவகிர்க்கண்ணியம்மை

பண் : காந்தாரம்

எனக்கு இனித் தினைத்தனைப் புகல்இடம் அறிந்தேன்
பனைக் கனிபழம் படும் பரவையின் கரைமேல்
எனக்கு இனியவன் தமர்க்கு இனியவன் எழுமையும்
மனக்கு இனியவன்தனது இடம் வலம்புரமே. 1

புரம்அவை எரிதர வளைந்த வில்லினன் அவன்
மரஉரி புலிஅதள் அரைமிசை மருவினன்
அரஉரி நிரந்தயல் இரந்து உண விரும்பி நின்று
இரவு எரிஆடிதன் இடம் வலம்புரமே. 2

நீறு அணி மேனியன் நெருப்பு உமிழ் அரவினன்
கூறு அணி கொடுமழு ஏந்தி ஓர் கையினன்
ஆறு அணி அவிர்சடை அழல் வளர் மழலை வெள்
ஏறு அணி அடிகள்தம் இடம் வரம்புரமே. 3

கொங்கு அணை சுரும்பு உண நெருங்கிய குளிர் இளந்
தெங்கொடு பனை பழம் படும் இடந் தேவர்கள்
தங்கிடும் இடம் தடங்கடல் திரை புடைதர
எங்களது அடிகள் நல் இடம் வலம்புரமே. 4

கொடுமழு விரகினன் கொலை மலி சிலையினன்
நெடுமதில் சிறுமையின் நிரவ வல்லவன் இடம்
படு மணி முத்தமும் பவளமும் மிகச் சுமந்து
இடு மணல் அடைகரை இடம் வலம்பரமே. 5

Koviloor Digital Library

கருங்கடக்களிற்று உரிக் கடவுளது இடம் கயல்
நெருங்கிய நெடும்பெணைஅடும்பொடு விரவிய
மருங்கொடு வலம்புரி சலஞ்சலம் மணம் புணர்ந்து
இருங்கடல் அடைகரை இடம் வலம்புரமே. 6

நரி புரி காடு அரங்கா நடம்ஆடுவர்
வரி புரி பாட நின்று ஆடும் எம்மான் இடம்
புரிசுரி வரிகுழல் அரிவை ஓர்பால் மகிழ்ந்து
எரி எரி ஆடி தன் இடம் வலம்புரமே. 7

பாறு அணி முடைதலை கலன் என் மருவிய
நீறு அணி நிமிர்சடைமுடியினன் நிலவிய
மாறு அணி வரு திரை வயல் அணி பொழிலது
ஏறு உடை அடிகள்தம் இடம் வலம்புரமே. 8

சடசட விடு பெணை பழம் படும் இட வகை
பட வடகத்தொடு பலி கலந்து உலவிய
கடைகடை பலி திரி கபாலிதன் இடம்அது
இடி கரை மணல் அடை இடம் வலம்புரமே. 9

குண்டிகைப் படப்பினில் விடக்கினை ஒழித்தவர்
கண்டவர் கண்டு அடி வீழ்ந்தவர் கனைகழல்
தண்டு உடைத் தண்டிதன் இனம் உடை அர உடன்
எண்திசைக்கு ஒரு சுடர் இடம் வலம்புரமே. 10

வரும் கலமும் பல பேணுதல் கருங்கடல்
இருங் குலப் பிறப்பர்தம் இடம் வலம்புரத்தினை
அருங் குலத்து அருந்தமிழ் ஊரன் வன்தொண்டன் சொல்
பெருங் குலத்தவரொடு பிதற்றுதல் பெருமையே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

32. திருக்கடவூர் வீரட்டம்

இறைவன் - அமிர்தகடேசர் இறைவி - அபிராமிஅம்மை

பண் : நட்டராகம்

பொடியார் மேனியனே புரிநூல் ஒருபால் பொருந்த
வடியார் மூஇலைவேல் வளர் அங்கையின்மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அடிகேள் என் அமுதே எனக்கார் துணை நீஅலதே. 1

பிறையாரும் சடையாய் பிரமன்தலையில் பலி கொள்
மறையார் வானவனே மறையின் பொருள்ஆனவனே
கறையாரும் மிடற்றாய் கடவூர்தனுள் வீரட்டத்து எம்
இறைவா என் அமுதே எனக்கார் துணை நீஅலதே. 2

அன்று ஆலின் நிழல்கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து
கொன்றாய் காலன் உயிர் கொடுத்தாய் மறையோனுக்கு மான்
கன்றாரும் கரவா கடவூர்த் திருவீரட்டத்துள்
என்தாதை பெருமான் எனக்கார் துணை நீஅலதே. 3

போர் ஆரும் கரியின் உரி போர்த்துப் பொன்மேனியின்மேல்
வார் ஆரும் முலையாள் ஒருபாக மகிழ்ந்தவனே
கார் ஆரும் மிடற்றாய் கடவூர்தனுள் வீரட்டானத்து
ஆரா என் அமுதே எனக்கார் துணை நீஅலதே. 4

மையார் கண்டத்தினாய் மதமாஉரி போர்த்தவனே
பொய்யாது என் உயிருள் புகுந்தாய் இன்னம் போந்துஅறியாய்
கையார் ஆடுஅரவா கடவூர்தனுள் வீரட்டத்து எம்
ஐயா என் அமுதே எனக்கார் துணை நீஅலதே. 5

Koviloor Digital Library

மண் நீர் தீ வெளி கால் வரு பூதங்கள் ஆகி மற்றும்
பெண்ணோடு ஆண் அலியாய்ப் பிறவா உரு ஆனவனே
கண் ஆர் உள் மணியே கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அண்ணா என் அமுதே எனக்கார் துணை நீ அலதே 6

எரியார் புன்சடைமேல் இள நாகம் அணிந்தவனே
நரியாரும் சுடலை நகுவெண்தலை கொண்டவனே
கரியார் ஈர்உரியாய் கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அரியாய் என் அமுதே எனக்கார் துணை நீ அலதே 7

வேறா உன் அடியேன் விளங்கும் குழைக் காது உடையாய்
தேறேன் உன்னை அல்லால் சிவனே என் செழுஞ்சுடரே
காறார் வெண்மருப்பா கடவூர்த் திரு வீரட்டத்துள்
ஆறார் செஞ்சடையாய் எனக்கார் துணை நீ அலதே 8

அயனோடு அன்று அரியும் அடியும் முடி காண்பு அரிய
பயனே எம் பரனே பரமாய பரஞ்சுடரே
கயமாரும் சடையாய் கடவூர்த் திரு வீரட்டத்துள்
அயனே என் அமுதே எனக்கார் துணை நீ அலதே 9

கார் ஆரும் பொழில் சூழ் கடவூர்த் திரு வீரட்டத்துள்
ஏர் ஆரும் இறையைத் துணையா எழில் நாவலர்கோன்
ஆரூரன் அடியான் அடித்தொண்டன் உரைத்த தமிழ்
பாரோர் ஏத்த வல்லார் பரலோகத்து இருப்பாரே 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

33. திருக்கடவூர் மயானம்

இறைவன் - பெரியபெருமான் அடிகள் இறைவி - மலர்குழல் மின்னம்மை

பண் : பழம்பஞ்சுரம்

மருவார் கொன்றை மதி சூடி மாணிக்கத்தின்மலை போல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படை சூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும் தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர்மயானத்துப் பெரியபெருமான் அடிகளே 1

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேதகீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் காலகாலர் கடவூரர்
எண்ணார் புரம்மூன்று எரிசெய்த இறைவர் உமை ஒரொரு பாகம்
பெண்ஆண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே. 2

காயும் புலியின் அதள்உடையர் கண்டர் எண்தோள் கடவூரர்
தாயும் தந்தை பல்உயிர்க்கும் தாமே ஆய தலைவனார்
பாயும் விடைஒன்றுஅது ஏறிப் பலி தேர்ந்து உண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரிய பெருமான்அடிகளே. 3

நறை சேர் மலர் ஐங்கணையானை நயனத்தீயால் பொடிசெய்த
இறையார் ஆவர் எல்லார்க்கும் இல்லை என்னாது அருள்செய்வார்
பறையார் முழவம் பாட்டோடு பயிலும் தொண்டர் பயில் கடவூர்ப்
பிறையார் சடையார் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே. 4

கொத்தார் கொன்றை மதி சூடிக் கோள் நாகங்கள் பூண்ஆக
மத்தயானை உரி போர்த்து மருப்பும் ஆமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள் பாடி ஆடப் பலி கொள்ளும்
பித்தர் கடவூர்மயானத்துப் பெரிய பெருமான்அடிகளே. 5

Koviloor Digital Library

துணி வார் கீளும் கோவணமும் துதைந்து சுடலைப் பொடி அணிந்து
பணி மேல் இட்ட பாசுபதர் பஞ்சவடி மார்பினர் கடவூர்த்
திணிவார் குழையார் புரம்மூன்றும் தீவாய்ப் படுத்த சேவகனார்
பிணி வார்சடையார் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே. 6

காரார் கடலின்நஞ்சு உண்ட கண்டர் கடவூர் உறை வாணர்
தேரார் அரக்கன் போய் வீழ்ந்து சிதைய விரலால் ஊன்றினார்
ஊர்தான் ஆவது உலகுஏழும் உடையார்க்கு ஒற்றியூர் ஆரூர்
பேர்ஆயிரவர் மயானத்துப் பெரிய பெருமான்அடிகளே. 7

வாடாமுலையாள்தன்னோடும் மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழல் பின் சென்று குறுகி விசயன் தவம் அழித்து
நாடா வண்ணம் செருச் செய்து ஆவநாழி நிலை அருள்செய்
பீடார் சடையார் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே. 8

வேழம் உரிப்பர் மழுவாளர் வேள்வி அழிப்பர் சிரம் அறுப்பர்
ஆழி அளிப்பர் அரிதனக்கு ஆன்அஞ்சு உகப்பர் அறம் உரைப்பர்
ஏழைத்தலைவர் கடவூரில் இறைவர் சிறுமான்மறிக் கையர்
பேழைச்சடையர் மயானத்துப் பெரிய பெருமான் அடிகளே. 9

மாடம் மல்கு கடவூரின் மறையோர் ஏத்தும் மயானத்துப்
பீடை தீர அடியாருக்கு அருளும் பெருமான் அடிகள் சீர்
நாடி நாவல் ஆரூரன்நம்பி சொன்ன நல் தமிழ்கள்
பாடும் அடியார் கேட்பார்மேல் பாவமான பறையுமே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

34. திருநள்ளாறு

இறைவன் - தர்ப்பாரண்யேசுவரர், நம்பெருமான் இறைவி - போகமார்த்த பூண் முலையாள்

பண் : தக்கேசி

செம்பொன்மேனி வெண்நீறு அணிவானைக்
கரிய கண்டனை மால் அயன் காணாச்
சம்புவைத் தழல் அங்கையினானைச்
சாமவேதனைத் தன் ஒப்பு இலானைக்
கும்பமாகரியின் உரியானைக்
கோவின்மேல் வரும் கோவினை எங்கள்
நம்பனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 1

விரை செய் மா மலர்க்கொன்றையினானை
வேதகீதனை மிகச் சிறந்து உருகிப்
பரசுவார் வினைப்பற்று அறுப்பானைப்
பாலொடு ஆன்அஞ்சும்ஆட வல்லானைக்
குரைகடல் வரை ஏழ் உலகு உடைய
கோனை ஞானக்கொழுந்தினைக் கொல்லை
நரைவிடை உடை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 2

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியைப்
புவியைக் காற்றினைப் புனல் அனல் வெளியைச்
சேவின்மேல் வரும் செல்வனைச் சிவனைத்
தேவதேவனைத் தித்திக்கும் தேனைக்

Koviloor Digital Library

காவியங்கண்ணி பங்கனைக் கங்கைச்
 சடையனைக் காமரத்து இசை பாட
நாவில் ஊறும் நள்ளாறனை அமுதை
 நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 3

தஞ்சம் என்று தன் தாள் அது அடைந்த
 பாலன் மேல் வந்த காலனை உருள
நெஞ்சில் ஓர் உதைகொண்ட பிரானை
 நினைப்பவர் மனம் நீங்ககில்லானை
விஞ்சை வானவர் தானவர் கூடிக்
 கடைந்த வேலையுள் மிக்கு எழுந்து எரியும்
நஞ்சம் உண்ட நள்ளாறனை அமுதை
 நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 4

மங்கை பங்கனை மாசு இலா மணியை
 வானநாடனை ஏனமோடு அன்னம்
எங்கும் நாடியும் காண்பு அரியானை
 ஏழையேற்கு எளிவந்த பிரானை
அங்கம் நான்மறையான் நிறைகின்ற
 அந்தணாளர் அடிஅது போற்றும்
நங்கள் கோனை நள்ளாறனை அமுதை
 நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 5

கற்பகத்தினைக் கனகமால்வரையைக்
 காமகோபனைக் கண்நுதலானைச்
சொற்பதப்பொருள் இருள் அறுத்து அருளும்
 தூய சோதியை வெண்ணெய்நல்லூரில்

Koviloor Digital Library

அற்புதப் பழ ஆவணம் காட்டி
அடியனா என்னை ஆள் அதுகொண்ட
நல்பதத்தை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 6

மறவனை அன்று பன்றிப் பின் சென்ற
மாயனை நால்வர்க்கு ஆலின்கீழ் உரைத்த
அறவனை அமரர்க்கு அரியானை
அமரர்சேனைக்கு நாயகன் ஆன
குறவர் மங்கைதன் கேள்வனைப் பெற்ற
கோனை நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறை விரியும் நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 7

மாதினுக்கு உடம்பு இடம் கொடுத்தானை
மணியினைப் பணிவார் வினை கெடுக்கும்
வேதனை வேதவேள்வியர் வணங்கும்
விமலனை அடியேற்கு எளிவந்த
தூதனைத் தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 8

இலங்கை வேந்தன் எழில் திகழ் கயிலை
எடுப்ப ஆங்கு இமவான்மகள் அஞ்சத்
துலங்கு நீள்முடிஒருபதும் தோற்கள்
இருபதும் நெரித்து இன்இசைகேட்டு

Koviloor Digital Library

வலங்கை வாளொடு நாமமும் கொடுத்த
வள்ளலைப் பிள்ளைமாமதி சடைமேல்
நலம் கொள் சோதி நள்ளாறனை அமுதை
நாயினேன் மறந்து என் நினைக்கேனே. 9

செறிந்த சோலைகள் சூழ்ந்த நள்ளாற்று எம்
சிவனை நாவலூர்ச் சிங்கடிதந்தை
மறந்தும் நான் மற்றும் நினைப்பது ஏது என்று
வனப்பகை அப்பன் ஊரன் வன்தொண்டன்
சிறந்த மாலைகள்அஞ்சினோடு அஞ்சும்
சிந்தை உள் உருகிச் செப்ப வல்லார்க்கு
இறந்து போக்கு இல்லை வரவு இல்லை ஆகி
இன்பவெள்ளத்துள் இருப்பர்கள் இனிதே. 10

திருச்சிற்றம்பலம்

35. திருவீழிமிழலை

இறைவன் - வீழி அழகர் இறைவி - சுந்தரகுசாம்பிகை

பண் : சீகாமரம்

நம்பினார்க்கு அருள்செய்யும் அந்தணர்
நான்மறைக்கு இடமாய வேள்வியுள்
செம்பொன் ஏர் மடவார் அணி பெற்ற திருமிழலை
உம்பரார் தொழுது ஏத்த மாமலையாளொடும்
உடனே உறைவு இடம்
அம் பொன் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 1

Koviloor Digital Library

விடம் கொள் மா மிடற்றீர் வெள்ளைச்சுருள்
ஒன்று இட்டு விட்ட காதினீர் என்று
திடம் கொள் சிந்தையினார் கலி காக்கும் திருமிழலை
மடங்கல் பூண்ட விமானம் மண்மிசை
வந்து இழிச்சிய வானநாட்டையும்
அடங்கல் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 2

ஊனை உற்று உயிர் ஆயினீர் ஒளி
மூன்றுமாய்த் தெளி நீரொடு ஆன்அஞ்சின்
தேனை ஆட்டு உகந்தீர் செழு மாடத் திருமிழலை
மானை மேவிய கையினீர் மழு
ஏந்தினீர் மங்கை பாகத்தீர் விண்ணில்
ஆன வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 3

பந்தம் வீடு இவை பண்ணினீர் படிறீர்
மதிப்பிதிர்க் கண்ணியீர் என்று
சிந்தை செய்து இருக்கும் செங்கையாளர் திருமிழலை
வந்து நாடகம் வானநாடியர்
ஆட மால் அயன் ஏத்த நாள்தொறும்
அந் தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 4

புரிசை மூன்றையும் பொன்றக் குன்றவில்
ஏந்தி வேதப்புரவித் தேர்மிசைத்
திரிசெய் நான்மறையோர் சிறந்து ஏத்தும் திருமிழலைப்
பரிசினால் அடி போற்றும் பத்தர்கள்
பாடி ஆடப் பரிந்து நல்கினீர்
அரிய வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 5

Koviloor Digital Library

எறிந்த சண்டி இடந்த கண்ணப்பன்
ஏத்து பத்தர்கட்கு ஏற்றம் நல்கினீர்
செறிந்த பூம்பொழில் தேன் துளி வீசும் திருமிழலை
நிறைந்த அந்தணர் நித்தம் நாள்தொறும்
நேசத்தால் உமைப் பூசிக்கும் இடம்
அறிந்து வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 6

பணிந்த பார்த்தன் பகீரதன் பல
பத்தர்சித்தர்க்குப் பண்டு நல்கினீர்
திணிந்த மாடம்தொறும் செல்வம் மல்கு திருமிழலைத்
தணிந்த அந்தணர் சந்தி நாள்தொறும்
அந்தி வான் இடு பூச்சிறப்பு அவை
அணிந்து வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 7

பரந்த பாரிடம் ஊர் இடைப் பலி
பற்றிப் பாத்து உணும் சுற்றம் ஆயினீர்
தெரிந்த நால்மறையோர்க்கு இடம் ஆய திருமிழலை
இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும்
இச்சையால் காசு நித்தல் நல்கினீர்
அருந் தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே 8

தூய நீர் அமுதாயவாறு அது
சொல்லுக என்று உமை கேட்கச் சொல்லினீர்
தீ அறாக் குலையார் செழு மாடத் திருமிழலை
மேய நீர் பலி ஏற்றது என் என்று
விண்ணப்பம் செய்பவர்க்கு மெய்ப்பொருள்
ஆய வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதிரே. 9

Koviloor Digital Library

வேத வேதியர் வேத நீதியது
    ஓதுவார் விரி நீர் மிழலையுள்
ஆதி வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுக என்று
நாதகீதம் வண்டு ஓதுவார் பொழில்
    நாவலூரன் வன்தொண்டன் நற்தமிழ்
பாதம் ஓத வல்லார் பரனோடு கூடுவரே 10

திருச்சிற்றம்பலம்

36. திருநறையூர்ச் சித்தீச்சரம்

இறைவன் - சித்த நாதர் இறைவி - அழகம்மை
பண் : குறிஞ்சி

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடமாம்
வாரும் அருவி மணி பொன் கொழித்துச்
சேரும் நறையூர்ச் சித்தீச்சரமே 1

அளைப் பைஅரவு ஏர் இடையாள் அஞ்சத்
துளைக்கைக்கரித் தோல் உரித்தான் இடமாம்
வளைக்கைம் மடவார் மடுவில் தடநீர்த்
திளைக்கும் நறையூர்ச் சித்தீச்சரமே 2

இகழும் தகையோர் எயில்மூன்று எரித்த
பகழியொடு வில் உடையோன் பதிதான்
முகில்மென்முலையார் முகமே கமலம்
திகழும் நறையூர்ச் சித்தீச்சரமே 3

Koviloor Digital Library

மறக் கொள் அரக்கன் வரைதோள் வரையால்
இறக் கொள் விரல் கோன் இருக்கும் இடமாம்
நறக் கொள் கமலம் நனி பள்ளி எழத்
திறக்கும் நறையூர்ச் சித்தீச்சரமே 4

முழுநீறு அணி மேனியன் மொய்குழலார்
எழு நீர்மை கொள்வான் அமரும் இடமாம்
கழுநீர்க் கமழக் கயல் சேல் உகளும்
செழுநீர் நறையூர்ச் சித்தீச்சரமே 5

ஊனார் உடைவெண்தலை உண் பலி கொண்டு
ஆனார் அடல் ஏறு அமர்வான் இடமாம்
வானார் மதியம் பதி வண்பொழில்வாய்த்
தேனார் நறையூர்ச் சித்தீச்சரமே 6

கார் ஊர் கடலில் விடம் உண்டு அருள்செய்
நீர் ஊர் சடையன் நிலவும் இடமாம்
வார் ஊர் முலையார் மருவும் மறுகில்
தேர் ஊர் நறையூர்ச் சித்தீச்சரமே 7

கரியின்உரியும் கலைமான்மறியும்
எரியும் மழுவும் உடையான் இடமாம்
புரியும் மறையோர் நிறை சொல்பொருள்கள்
தெரியும் நறையூர்ச் சித்தீச்சரமே 8

பேணா முனிவான் பெரு வேள்வி எலாம்
மாணாமை செய்தான் மருவும் இடமாம்
பாணார் குழலும் முழவும் விழவில்
சேணார் நறையூர்ச் சித்தீச்சரமே 9

Koviloor Digital Library

குறியில் வழுவாக் கொடுங்கூற்று உதைத்த
எறியும் மழுவாள் படையான் இடமாம்
நெறியில் வழுவா நியமத்தவர்கள்
செறியும் நறையூர்ச் சித்தீச்சரமே 10

போரார் புரம் எய் புனிதன் அமரும்
சீரார் நறையூர்ச் சித்தீச்சரத்தை
ஆரூரன் சொல்இவை வல்லவர்கள்
ஏரார் இமையோர் உலகு எய்துவரே 11

திருச்சிற்றம்பலம்

37. திருஅரிசிற்கரைப்புத்தூர்

இறைவன் - படிக்காசு வைத்த பரமர்
பண் : இந்தளம்

இறைவி - சிவகாம்பிகை, சௌந்திர நாயகி, அழகம்மை

மலைக்கும் மகள் அஞ்ச மதகரியை
உரித்தீர் எரித்தீர் வரு முப்புரங்கள்
சிலைக்கும் கொலைச் சே உகந்து ஏறு ஒழியீர்
சில்பலிக்கு இல்கள்தோறும் செலவு ஒழியீர்
கலைக்கொம்பும் கரிமருப்பும் இடறிக்
கலவம்மயில்பீலியும் கார்அகிலும்
அலைக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 1

Koviloor Digital Library

அருமலரோன் சிரம் ஒன்று அறுத்தீர்
செறுத்தீர் அழல்சூலத்தில் அந்தகனைத்
திருமகள்கோன் நெடுமால் பலநாள்
சிறப்பு ஆகிய பூசனை செய் பொழுதில்
ஒரு மலர் ஆயிரத்தில் குறைவா
நிறைவுஆக ஓர் கண்மலர் சூட்டலுமே
பொரு விறல் ஆழி புரிந்து அளித்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. 2

தரிக்கும் தரை நீர் தழல் காற்று அந்தரம்
சந்திரன் சவிதா இயமானன் ஆனீர்
சரிக்கும் பலிக்குத் தலை அங்கை ஏந்தித்
தையலார் பெய்யக் கொள்வது தக்கது அன்றால்
முரிக்கும் தளிர்ச் சந்தனத்தோடு வேயும்
முழங்கும் திரைக்கைகளால் வாரி மோதி
அரிக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 3

கொடி உடை மும்மதில் வெந்து அழியக்
குன்றம் வில்லா நாணியிற் கோல் ஒன்றினால்
இடிபட எய்து எரித்தீர் இமைக்கும்
அளவில் உமக்கு ஆர் எதிர் எம்பெருமான்
கடி படு பூங்கணையான் கருப்புச்
சிலைக் காமனை வேவக் கடைக்கண்ணினால்
பொடிபட நோக்கியது என்னைகொல்லோ
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. 4

Koviloor Digital Library

வணங்கித் தொழுவார் அவர் மால் பிரமன்
மற்றும் வானவர் தானவர் மா முனிவர்
உணங்கல் தலையில் பலி கொண்டல் என்னே
உலகங்கள் எல்லாம் உடையீர் உரையீர்
இணங்கிக் கயல் சேல் இளவாளை பாய
இனக்கெண்டை துள்ள கண்டிருந்த அன்னம்
அணங்கிக் குணம் கொள் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 5

அகத்து அடிமை செயும் அந்தணன்தான்
அரிசில்புனல் கொண்டுவந்து ஆட்டுகின்றான்
மிகத் தளர்வு எய்திக் குடத்தையும் நும்
முடி மேல் விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்து அவனுக்கு நித்தல் படியும்
வரும் என்று ஒரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப் புகச்செய்து உகந்தீர்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதனீரே. 6

பழிக்கும் பெருந் தக்கன் எச்சம் அழியப்
பகலோன் முதலாப் பலதேவரையும்
தெழித்திட்டு அவர் அங்கம் சிதைத்தருளும்
செய்கை என்னைகொலோ மை கொள் செம் மிடற்றீர்
விழிக்கும் தழைப்பீலியொடு ஏலம் உந்தி
விளங்கும் மணிமுத்தொடு பொன் வரன்றி
அழிக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 7

Koviloor Digital Library

பறைக்கண் நெடும் பேய்க்கணம் பாடல்செய்யக்
குறள்பாரிடங்கள் பறைதாம் முழக்கப்
பிறைக்கொள் சடை தாழப் பெயர்ந்து நட்டம்
பெருங்காடு அரங்காக நின்று ஆடல் என்னே
கறைக் கொள் மணிகண்டமும் திண்தோள்களும்
கரங்கள் சிரம்தன்னிலும் கக்சுமாகப்
பொறிக் கொள் அரவம் புனைந்தீர் பலவும்
பொழிலார் திருப்பத்தூர்ப் புனிதனீரே. 8

மழைக் கண் மடவாளை ஓர்பாகம் வைத்தீர்
வளர்புன்சடைக் கங்கையை வைத்து உகந்தீர்
முழைக் கொள் அரவோடு என்பு அணிகலனா
முழுநீறு மெய் பூசுதல் என்னைகொலோ
கழைக் கொள் கரும்பும் கதலிக்கனியும்
கமுகின் பழுக்காயும் கவர்ந்துகொண்டு இட்டு
அழைக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 9

கடிக்கும் அரவால் மலையால் அமரர்
கடலைக் கடைய எழு காளகூடம்
ஒடிக்கும் உலகங்களை என்று அதனை
உமக்கே அமுதாக உண்டீர் உமிழீர்
இடிக்கும் மழை வீழ்த்து இழித்திட்டு அருவி
இருபாலும் ஒடி இரைக்கும் திரைக்கை
அடிக்கும் புனல் சேர் அரிசில் தென்கரை
அழகார் திருப்புத்தூர் அழகனீரே. 10

Koviloor Digital Library

கார் ஊர் மழை பெய்து பொழி அருவிக்
கழையோடு அகில் உந்திட்டு இருகரையும்
போர் ஊர் புனல் சேர் அரிசில் தென்கரைப்
பொழிலார் திருப்புத்தூர்ப் புனிதர் தம்மை
ஆரூரன் அருந்தமிழ் ஐந்தினொடு ஐந்து
அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்
சீர் ஊர்தரு தேவர்கணங்களொடும்
இணங்கிச் சிவலோகம்அது எய்துவரே. 11

பதிக வரலாறு : (மலைக்கும்)

திருநறையூர்ச் சித்தீச்சரத்தைப் பணிந்து ஏத்திய நம்பியாரூரர் விழுப்படம் பொருந்திய பல பெரிய தொண்டர்கள் தம்மை விருப்பினோடும் எதிர்கொள்ளத் திருப்புத்தூரையடைந்து வணங்கிப் பாட எடுத்த இத்திருப்பதிகத்தில் ஆறாந்திருப்பாட்டில் அத்திருப்பதியில் ஆதிசைவக்குலத்தில் தோன்றி இறைவனைப் பேரன்போடு இடையறாது வழிபட்டு வற்கடமுற்ற காலத்தும் பலநாள் பட்டினி கிடந்து வருந்தி 'எங்கோ மான்றனை விடுவேனல்லே என் இராப்பகலும், கொங்கார் பன்மலர் கொண்டு குளிர்புனல் கொண்டு அர்சிப்பாராய்' ஒரு நாள் திருமுழுக் காட்டும் பொழுது பசிப்பிணியான் வருந்தி நிலை தளர்ந்து நீர்க்ககுடத்தைத் தாங்க மாட்டாமல் இறைவன் முடிமீது வீழ்ந்து அயர்ந்த புகழ்த் துணை நாயனாருக்கு இறைவன் தினமொரு படிக்காசு அருளிய திறத்தை வைத்துச் சிறப்பித்துப் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

38. திருக்கலயநல்லூர்

இறைவன் - அமிர்தளகலா நாதர் இறைவி - அமிர்தவல்லி

பண் : தக்கராகம்

குரும்பை முலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு
குறிப்பினொடும் சென்று அவள்தன் குணத்தினை நன்கு அறிந்து
விரும்பும்வரம் கொடுத்து அவளை வேட்டு அருளிச் செய்த
விண்ணவர் கோன் கண்நுதலோன் மேவிய ஊர் வினவில்
அரும்பு அருகே சுரும்பு அருவ அறுபதம் பண் பாட
அணி மயில்கள் நடம் ஆடும் அணி பொழில் சூழ் அயலின்
கரும்பு அருகே கருங்குவளை கண்வளரும் கழனிக்
கமலங்கள் முகம் மலரும் கலய நல்லூர் காணே. 1

செரு மேவு சலந்தரனைப் பிளந்த சுடர் ஆழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக்கு அருளி
இருள் மேவும் அந்தகன் மேல் திரிசூலம் பாய்ச்சி
இந்திரனைத் தோள் முரித்த இறையவன் ஊர் வினவில்
பெரு மேதை மறை ஒலியும் பேரி முழவு ஒலியும்
பிள்ளை இனம்துள்ளி விளையாட்டு ஒலியும் பெருகக்
கருமேதி புனல் மண்டக் கயல் மண்டக் கமலம்
களி வண்டின் கணம் இரியும் கலயநல்லூர்காணே. 2

இண்டைமலர் கொண்டு மணல் இலிங்கம் அது இயற்றி
இனத்து ஆவின் பால் ஆட்ட இடறிய தாதையைத் தாள்
துண்டம் இடு சண்டி அடி அண்டர் தொழுது ஏத்தத்
தொடர்ந்து அவனைப் பணிகொண்ட விடங்கனது ஊர் வினவில்

Koviloor Digital Library

மண்டபமும் கோபுரமும் மாளிகை சூளிகையும்
மறை ஒலியும் விழவு ஒலியும் மறுகு நிறைவு எய்திக்
கண்டவர்கள் மனம் கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்து ஆடும் கலயநல்லூர்காணே. 3

மலை மடந்தை விளையாடி வளை ஆடு கரத்தான்
மகிழ்ந்து அவள் கண் புதைத்தலுமே வல் இருளாய் எல்லா
உலகு உடன்தான் மூட இருள் ஓடும் வகை நெற்றி
ஒற்றைக்கண் படைத்து உகந்த உத்தமன் ஊர் வினவில்
அலை அடைந்த புனல் பெருகி யானை மருப்பு இடறி
அகிலொடு சந்து உந்தி வரும் அரிசிலின் தென்கரைமேல்
கலை அடைந்து கலி கடிய அந்தணர் ஓமப் புகையால்
கணமுகில் போன்றணி கிளரும் கலயநல்லூர்காணே.4

நிற்பானும் கமலத்தில் இருப்பானும் முதலா
நிறைந்து அமரர் குறைந்து இரப்ப நினைந்தருளி அவர்க்காய்
வெற்பார் வில் அரவு நாண் எரி அம்பால் விரவார்
புரம் மூன்றும் எரிவித்த விகிர்தன் ஊர் வினவில்
சொற்பால பொருட்பால சுருதி ஒரு நான்கும்
தோத்திரமும் பல சொல்லித் துதித்து இறைதன் திறத்தே.
கற்பாரும் கேட்பாருமாய் எங்கும் நன்கு ஆர்
கலை பயில் அந்தணர் வாழும் கலயநல்லூர்காணே. 5

பெற்றிமை ஒன்று அறியாத தக்கனது வேள்விப்
பெருந் தேவர் சிரம் தோள் பல் கரங்கள் பீடு அழியச்
செற்று மதிக்கலை சிதையத் திருவிரலால் தேய்வித்து
அருள் பெருகு சிவபெருமான் சேர்தரும் ஊர் வினவில்

Koviloor Digital Library

தெற்று கொடிமுல்லையொடு மல்லிகை செண்பகமும்
திரை பொருது வருபுனல் சேர் அரிசிலின் தென்கரைமேல்
கற்றினம் நல் கரும்பின் முளை கறிகற்கக் கறவை
கமழ் கழுநீர் கவர் கழனிக் கலயநல்லூர்காணே. 6

இலங்கையர்கோன் சிரம்பத்தோடு இருபதுதிண்தோளும்
இற்று அலற ஒற்றைவிரல் வெற்பு அதன் மேல் ஊன்றி
நிலம் கிளர் நீர் நெருப்பொடு காற்று ஆகாசம் ஆகி
நிற்பனவும் நடப்பனவாம் நின்மலன் ஊர் வினவில்
பலங்கள்பல திரை உந்திப் பரு மணி பொன் கொழித்துப்
பாதிரி சந்து அகிலினொடு கேதகையும் பருகிக்
கலங்கு புனல் அலம்பி வரும் அரிசிலின் தென்கரைமேல்
கயல் உகளும் வயல் புடை சூழ் கலயநல்லூர்காணே. 7

மால் அயனும் காண்பு அரிய மால் எரியாய் நிமிர்ந்தோன்
வன்னி மதி சென்னிமிசை வைத்தவன் மொய்த்து எழுந்த
வேலைவிடம் உண்ட மணிகண்டன் விடை ஊரும்
விமலன் உமையவளோடு மேவிய ஊர் வினவில்
சோலை மலி குயில் கூவக் கோல மயில் ஆலச்
சுரும்பொடு வண்டு இசை முரலப் பசுங்கிளி சொல் துதிக்கக்
காலையிலும் மாலையிலும் கடவுள் அடி பணிந்து
கசிந்த மனத்தவர் பயிலும் கலயநல்லூர்காணே. 8

பொரும் பலம் அது உடை அசுரன்தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினை முன் படைத்து உகந்த புனிதன்
கரும்புவிலின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்

Koviloor Digital Library

இரும் புனல் வெண்திரை பெருகி ஏலம் இலவங்கம்
இருகரையும் பொருது அலைக்கும் அரிசிலின் தென்கரைமேல்
கரும் புனை வெண்முத்து அரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின் காட்டும் கடிபொழில் சூழ் கலயநல்லூர்காணே. 9

தண் கமலப் பொய்கை புடை சூழ்ந்து அழகார் தலத்தில்
தடம் கொள் பெருங்கோயில் தனில் தக்க வகையாலே
வண்கமலத்து அயன் முன் நாள் வழிபாடு செய்ய
மகிழ்ந்து அருளி இருந்த பரன் மருவிய ஊர் வினவில்
வெண்கவரி கரும்பீலி வேங்கையொடு கோங்கின்
விரைமலரும் விரவு புனல் அரிசிலின் தென்கரைமேல்
கண் கமுகின் பூம்பாளை மது வாசம் கலந்த
கமழ் தென்றல் புகுந்து உலவு கலயநல்லூர்காணே. 10

தண்புனலும் வெண்மதியும் தாங்கிய செஞ்சடையன்
தாமரையோன்தலை கலனாக் காமர முன் பாடி
உண் பலி கொண்டு உழல் பரமன் உறையும் ஊர் நிறை நீர்
ஒழுகு புனல் அரிசிலின் தென்கலயநல்லூர் அதனை
நண்பு உடைய நன் சடையன் இசைஞானி சிறுவன்
நாவலர்கோன் ஆரூரன் நாவின் நயந்து உரை செய்
பண் பயிலும் பத்தும் இவை பத்தி செய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவம் இலர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

39. திருவாஞ்சியம்

இறைவன் - வாஞ்சியநாதர் இறைவி - வாழ வந்த நாயகி

பண் : பியந்தைக்காந்தாரம்

பொருவனார் புரிநூலர் புணர்முலை உமையவளோடு
மருவனார் மருவார்பால் வருவதும் இல்லை நம் அடிகள்
திருவனார் பணிந்து ஏத்தும் திகழ் திரு வாஞ்சியத்து உறையும்
ஒருவனார் அடியாரை ஊழ்வினை நலிய ஒட்டாரே. 1

தொறுவில் ஆன்இளஏறு துண்ணென இடி குரல் வெருவிச்
செறுவில் வாளைகள் ஓடச் செங்கயல் பங்கயத்து ஒதுங்கக்
கறுவு இலா மனத்தார்கள் காண்தகு வாஞ்சியத்து அடிகள்
மறு இலாத வெண்நீறு பூசுதல் மன்னும் ஒன்று உடைத்தே. 2

தூர்த்தர் மூஎயில் எய்து சுடு நுனைப் பகழி அது ஒன்றால்
பார்த்தனார் திரள் தோள்மேல் பல் நுனைப்பகழிகள் பாய்ச்சித்
தீர்த்தமாம் மலர்ப்பொய்கைத் திகழ் திரு வாஞ்சியத்து அடிகள்
சாத்து மா மணிக் கச்சு அங்கு ஒரு தலை பலதலை உடைத்தே. 3

சள்ளை வெள்ளை அங்குருதான் அதுவாம் எனக் கருதி
வள்ளைவெண்மலர் அஞ்சி மறுகி ஓர் வாளையின் வாயில்
துள்ளு தெள்ளு நீர்ப் பொய்கைத் துறை மல்கு வாஞ்சியத்து அடிகள்
வெள்ளைநுண்பொடிப் பூசும் விகிர்தம் ஒன்று ஒழிகிலர் தாமே. 4

மை கொள் கண்டர் எண்தோளர் மலைமகள் உடன்உறை வாழ்க்கைக்
கொய்த கூவிளமாலை குலவிய சடைமுடிக் குழகர்
கைதை நெய்தல் அம் கழனி கமழ் புகழ் வாஞ்சியத்து அடிகள்
பைதல்வெண்பிறையோடு பாம்பு உடன்வைப்பது பரிசே. 5

Koviloor Digital Library

கரந்தை கூவிளமாலை கடிமலர்க் கொன்றையும் சூடிப்
பரந்த பாரிடம் சூழ வருவர் நம் பரமர் தம் பரிசால்
திருந்து மாடங்கள் நீடு திகழ் திரு வாஞ்சியத்து உறையும்
மருந்தனார் அடியாரை வல்வினை நலிய ஒட்டாரே. 6

அருவி பாய்தரு கழனி அலர்தரு குவளை அம்கண்ணார்
குருவியாய் கிளி சேர்ப்பக் குருகுஇனம் இரிதரு கிடங்கில்
பரு வரால் குதிகொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத்து உறையும்
இருவரால் அறிய ஒண்ணா இறைவனது அறைகழல் சரணே. 7

களங்களார் தரு கழனி அளி தரக் களிதரு வண்டு
உளங்களார் கலிப்பாடல் உம்பரில் ஒலித்திடும் காட்சி
குளங்கள் ஆல்நிழல்கீழ் நல் குயில் பயில் வாஞ்சியத்து அடிகள்
விளங்கு தாமரைப்பாதம் நினைப்பவர் வினை நலிவு இலரே. 8

வாழைஇன்கனி தானும் மது விம்மு வருக்கை இன்சுளையும்
கூழைவானரம் தம்மில் கூறுஇது சிறிது எனக் குழறித்
தாழை வாழைஅம்தண்டால் செருச் செய்து தருக்கு வாஞ்சியத்துள்
ஏழைபாகனை அல்லால் இறை எனக் கருதுதல் இலமே. 9

செந்நெல் அங்கு அலங் கழனித் திகழ் திரு வாஞ்சியத்து உறையும்
இன் அலங்கல் அம் சடை எம் இறைவனது அறைகழல் பரவும்
பொன் அலங்கல் நன் மாடப் பொழில் அணி நாவல் ஆரூரன்
பன் அலங்கல்நன்மாலை பாடுமின் பத்தர் உளீரே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

40. திரு நன்னிலத்துப் பெருங்கோயில்

இறைவன் - பிரகேசுரர் இறைவி - பிரகேசுவரி

பண் : பஞ்சமம்

தண் இயல் வெம்மையினான் தலையில் கடைதோறும் பலி
பண் இயல் மென்மொழியார் இடங் கொண்டு உழல் பண்டரங்கன்
புண்ணிய நான்மறையோர் முறையால் அடி போற்று இசைப்ப
நண்ணிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 1

வலம் கிளர் மா தவம் செய் மலைமங்கை ஓர்பங்கினனாய்ச்
சலம் கிளர் கங்கை தங்கச் சடை ஒன்று இடையே தரித்தான்
பலம் கிளர் பைம்பொழில் தண்பனி வெண்மதியைத் தடவ
நலம் கிளர் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 2

கச்சியன் இன் கருப்பூர் விருப்பன் கருதிக் கசிவார்
உச்சியன் பிச்சை உண்ணி உலகங்கள் எல்லாம் உடையான்
நொச்சி அம் பச்சிலையான் நுரைதீர் புனலால் தொழுவார்
நச்சிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 3

பாடிய நான்மறையான் படு பல்பிணக்காடு அரங்கா
ஆடிய மா நடத்தான் அடி போற்றி என்று அன்பினராய்ச்
சூடிய செங்கையினார் பலர் தோத்திரம் வாய்த்த சொல்லி
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 4

பிலம் தரு வாயினொடு பெரிதும் வலி மிக்கு உடைய
சலந்தரன் ஆகம் இருபிளவு ஆக்கிய சக்கரம் முன்
நிலம் தரு மாமகள்கோன் நெடுமாற்கு அருள்செய்த பிரான்
நலம் தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 5

Koviloor Digital Library

வெண்பொடி மேனியினான் கருநீலமணிமிடற்றான்
பெண் படி செஞ்சடையான் பிரமன்சிரம் பீடு அழித்தான்
பண்பு உடை நான்மறையோர் பயின்று ஏத்திப் பல்கால் வணங்கும்
நண்பு உடை நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 6

தொடை மலி கொன்றை துன்றும் சடையன் சுடர் வெண்மழுவாள்
படை மலி கையன் மெய்யில் பகட்டுஈர் உரிப்போர்வையினான்
மடை மலி வண்கமலம்மலர்மேன் மடஅன்னம் மன்னி
நடை மலி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 7

குளிர்தரு திங்கள் கங்கை குரவோடு அரக் கூவிளமும்
மிளிர்தரு புன்சடைமேல் உடையான் விடையான் விரைசேர்
தளிர்தரு கோங்கு வேங்கை தட மாதவி சண்பகமும்
நளிர்தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 8

கமர் பயில் வெஞ்சுரத்துக் கடுங் கேழல் பின் கானவனாய்
அமர் பயில்வு எய்தி அருச்சுனனுக்கு அருள்செய்த பிரான்
தமர் பயில் தண் விழவில் தகு சைவர் தவத்தின் மிக்க
நமர் பயில் நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 9

கருவரை போல் அரக்கன் கயிலைம் மலைக்கீழ்க் கதற
ஒருவிரலால் அடர்த்து இன்அருள் செய்த உமாபதிதான்
திரைபொரு பொன்னி நன்நீர்த் துறைவன் திகழ் செம்பியர்கோன்
நரபதி நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே 10

கோடு உயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்கணான் செய் கோயில்
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனைச்
சேடு இயல் சிங்கிதந்தை சடையன் திரு ஆரூரன்
பாடிய பத்தும் வல்லார் புகுவார் பரலோகத்துளே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

41. திருப்பனையூர்

இறைவன் - சௌந்தர நாதர் இறைவி - பெரிய நாயகி

பண் : சீகாமரம்

மாடமாளிகை கோபுரத்தொடு
மண்டபம் வளரும் வளர் பொழில்
பாடல் வண்டு அறையும் பழனத் திருப்பனையூர்த்
தோடு பெய்து ஒரு காதினில் குழை
தூங்கத் தொண்டர்கள் துள்ளிப்பாட நின்று
ஆடுமாறு வல்லார் அவரே அழகியரே. 1

நாறு செங்கழுநீர் மலர்
நல்ல மல்லிகை சண்பகத்தோடு
சேறு செய் கழனிப் பழனத் திருப்பனையூர்
நீறு பூசி நெய்ஆடித் தம்மை
நினைப்பவர்தம் மனத்தர் ஆகி நின்று
ஆறு சூட வல்லார் அவரே அழகியரே. 2

செங்கண் மேதிகள் சேடு எறிந்து
தடம் படிதலின் சேல் இனத்தொடு
பைங்கண் வாளைகள் பாய் பழனத் திருப்பனையூர்த்
திங்கள் சூடிய செல்வனார்
அடியார் தம் மேல் வினை தீர்ப்பராய் விடில்
அங்கு இருந்து உறைவார் அவரே அழகியரே. 3

Koviloor Digital Library

வாளை பாய மலங்கு இளங்கயல்
வரிவரால் உகளும் கழனியுள்
பாளை ஒண் கமுகம் புடை சூழ் திருப்பனையூர்த்
தோளும் ஆகமும் தோன்ற நட்டம்
இட்டு ஆடுவார் அடித் தொண்டர் தங்களை
ஆளுமாறு வல்லார் அவரே அழகியரே. 4

கொங்கையார் பலரும் குடைந்து
ஆட நீர்க் குவளை மலர் தரப்
பங்கயம் மலரும் பழனத் திருப்பனையூர்
மங்கை பாகமும் மால் ஓர்பாகமும்
தாம் உடையவர் மான் மழுவினொடு
அங்கைத் தீ உகப்பார் அவரே அழகியரே. 5

காவிரி புடை சூழ் சோணாட்டவர்
தாம் பரவிய கருணை அம்கடல்
பா விரி புலவர் பயிலும் திருப்பனையூர்
மா விரி மடநோக்கி அஞ்ச
மதகரி உரி போர்த்து உகந்தவர்
ஆவில் ஐந்து உகப்பார் அவரே அழகியரே. 6

மரங்கள்மேல் மயில் ஆல மண்டபம்
மாட மாளிகை கோபுரத்தின் மேல்
திரங்கல் வன்முகவன் புகப் பாய் திருப்பனையூர்த்
துரங்கன் வாய் பிளந்தானும் தூ மலர்த்
தோன்றலும் அறியாமை தோன்றி நின்று
அரங்கில் ஆட வல்லார் அவரே அழகியரே. 7

Koviloor Digital Library

மண்ணிலா முழவம் அதிர்தர
மாட மாளிகை கோபுரத்தின் மேல்
பண்ணி யாழ் முரலும் பழனத் திருப்பனையூர்
வெண்நிலாச் சடை மேவிய
விண்ணவரொடு மண்ணவர் தொழ
அண்ணல் ஆகி நின்றார் அவரே அழகியரே. 8

குரக்கு இனம் குதிகொள்ளத் தேன் உகக்
குண்டு தன்னயற் கெண்டை பாய்தரப்
பரக்கும் தண்கழனிப் பழனத் திருப்பனையூர்
இரக்கம் இல்லவர் ஐந்தொடு ஐந்தலை
தோள் இருபது தாள் நெரிதர
அரக்கனை அடர்த்தார் அவரே அழகியரே. 9

வஞ்சிநுண் இடை மங்கை பங்கினர்
மாதவர் வளரும் வளர் பொழில்
பஞ்சின் மெல் அடியார் பயிலும் திருப்பனையூர்
வஞ்சியும் வளர் நாவலூரரன்
வனப்பகை அவள் அப்பன் வன்தொண்டன்
செஞ்சொல் கேட்டு உகப்பார் அவரே அழகியரே. 10

பதிக வரலாறு : (மாடமாளிகை)

திருப்புகலூரினின்றும் எழுந்தருளிய சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பனையூர்ப் புறத்தை அடைந்தபொழுது சிவபெருமான் எதிரேவந்து திருக்கூத்தொடுங் காட்சி கொடுத்தருள, நாயனார் விருப்போடு விழுந்திறைஞ்சி, 'மாடமாளிகை கோபுரத்தோடு', என்னுமித் திருப்பதிகத்தையெடுத்து அதிற்றிருப்பாட்டிறுதிதோறும் 'ஆடுமாறுவல்லா ரவரேயழகியரே', என்று பாடி வழிபட்டுத் தாம் திருப்புகலூரில் பெற்ற பொற்குவையோடு திருவாரூரை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

42. திருப்புகலூர்

இறைவன் - அக்னிபுரீசுவரர் இறைவி - கருந்தாழ் குழலி அம்மை

பண் : கொல்லி

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்கினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 1

மிடுக்குஇலாதானை வீமனே விறல் விசயனே வில்லுக்கு இவன் என்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பார் இலை
பொடிக் கொள் மேனி எம் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 2

காணியேல் பெரிது உடையனே கற்று நல்லனே சுற்றம் நல் கிளை
பேணியே விருந்து ஓம்புமே என்று பேசினும் கொடுப்பார் இலை
பூணி பூண்டு உழப் புள் சிலம்பும் தண் புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணியாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 3

நரைகள் போந்து மெய் தளர்ந்து மூத்து உடல் நடுங்கி நிற்கும் இக்கிழவனை
வரைகள் போல் திரள்தோளனே என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புரை வெள்ஏறு உடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அரையனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 4

வஞ்ச நெஞ்சனை மா சழக்கனைப் பாவியை வழக்கு இலியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவே என்று பாடினும் கொடுப்பார் இலை
பொன் செய் செஞ்சடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோய் அறுத்து உஞ்சுபோவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 5

Koviloor Digital Library

நலம் இலாதானை நல்லனே என்று நரைத்த மாந்தனை இளையனே
குலம்இலாதானைக் குலவனே என்று கூறினும் கொடுப்பார் இலை
புலம் எலாம் வெறி கமழும் பூம் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அலமராது அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 6

நோயனைத் தடந்தோளனே என்று நொய்ய மாந்தனை விழுமிய
தாய் அன்றோ புலவோர்க்கு எலாம் என்று சாற்றினும் கொடுப்பார் இலை
போய் உழன்று கண் குழியாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆயம் இன்றிப் போய் அண்டம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 7

எள் விழுந்த இடம் பார்க்கும்ஆகிலும் ஈக்கும் ஈகிலன் ஆகிலும்
வள்ளலே எங்கள் மைந்தனே என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புள்எலாம் சென்று சேரும் பூம் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அள்ளல் பட்டு அழுந்தாது போவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 8

கற்றிலாதானைக் கற்று நல்லனே காமதேவனை ஒக்குமே
முற்றிலாதானை முற்றனே என்று மொழியினும் கொடுப்பார் இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறாப் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்தனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 9

தையலாருக்கு ஓர் காமனே சால நல அழகு உடை ஐயனே
கை உலாவிய வேலனே என்று கழறினும் கொடுப்பார் இலை
பொய்கை வாவியின் மேதி பாய் புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
ஐயனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 10

செறுவினில் செழுங் கமலம் ஓங்கு தென்புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன் வனப்பகைஅப்பன் சடையன்தன்
சிறுவன் வன் தொண்டன் ஊரன் பாடிய பாடல் பத்துஇவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

43. திருநாகைக்காரோணம்

இறைவன் - காயாரோகணேசுவரர் இறைவி - நீலாயதாட்சி

பண் : கொல்லிக்கொளவாணம்

பத்துஊர் புக்கு இரந்து உண்டு பலபதிகம் பாடிப்
பாவையாரைக் கிறி பேசிப் படிறுஆடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பு அணிந்து சே ஏறித் திரிவீர்
செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கு ஒரு நாள் இரங்கீர்
முத்து ஆரம் இலங்கி மிளிர் மணிவயிரக்கோவை
அவை பூணத் தந்துஅருளி மெய்க்கு இனிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்து அருளவேண்டும்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 1

வேம்பினொடு தீங்கரும்பு விரவி எனைத் தீற்றி
விருத்தி நான் உமை வேண்டத் துருத்தி புக்கு அங்கு இருந்தீர்
பாம்பினொடு படர்சடைகள்அவை காட்டி வெருட்டிப்
பகட்ட நான் ஒட்டுவனோ பலகாலும் உழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண் கிடங்கில் திகழுந்
திரு ஆரூர் புக்கு இருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்து அருளவேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 2

பூண்பது ஓர் இள ஆமை பொருவிடை ஒன்று ஏறிப்
பொல்லாத வேடங் கொண்டு எல்லாருங் காணப்
பாண் பேசிப் படுதலையிற் பலி கொள்கை தவிரீர்
பாம்பினொடு படர்சடைமேல் மதி வைத்த பண்பீர்

Koviloor Digital Library

வீண் பேசி மடவார் கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பு அரையன்மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பு இனிய மணி மாடம் நிறைந்த நெடுவீதிக்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 3

விட்டது ஓர் சடை தாழ வீணை விடங்காக
வீதி விடை ஏறுவீர் வீண் அடிமை உகந்தீர்
துட்டர்ஆயின பேய்கள் சூழ நடம் ஆடிச்
சுந்தரராய்த் தூ மதியஞ் சூடுவது சுவண்டே
வட்டவார்குழல் மடவார்தம்மை மயல் செய்தல்
மா தவமோ மாதிமையோ வாட்டம்எலாம் தீரக்
கட்டி எமக்கு ஈவதுதான் எப்போது சொல்லீர்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 4

மிண்டாடித் திரிதந்து வெறுப்பனவே செய்து
வினைக்கேடுபல பேசி வேண்டியவா திரிவீர்
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக்கு ஏற்றுஞ்
சுந்தரனே கந்தம் முதல் ஆடை ஆபரணம்
பண்டாரத்தே எனக்குப் பணித்து அருளவேண்டும்
பண்டுதான் பிரமாணம் ஒன்று உண்டே நும்மைக்
கண்டார்க்குங் காண்பு அரிதாய்க் கனல் ஆகி நிமிர்ந்தீர்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 5

இலவஇதழ்வாய் உமையோடு எருது ஏறிப் பூதம்
இசை பாட இடு பிச்சைக்கு எச்சு உச்சம்போது
பலஅகம் புக்கு உழிதர்வீர் பட்டோடு சாந்தம்
பணித்து அருளாது இருக்கின்ற பரிசு என்ன படிறோ

Koviloor Digital Library

உலவு திரைக் கடல் நஞ்சை அன்று அமரர் வேண்ட
உண்டு அருளிச்செய்தது உமக்கு இருக்க ஒண்ணாது இடவே
கலவமயில் இயலவர்கள் நடமாடுஞ் செல்வக்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 6

தூசு உடைய அகல் அல்குல் தூ மொழியாள் ஊடல்
தொலையாத காலத்து ஓர் சொற்பாடாய் வந்து
தேசு உடைய இலங்கையர்கோன் வரை எடுக்க அடர்த்துத்
திப்பிய கீதம் பாட தேரொடு வாள் கொடுத்தீர்
நேச உடை அடியவர்கள் வருந்தாமை அருந்த
நிறை மறையோர் உறை வீழிமிழலைதனில் நித்தல்
காசு அருளிச்செய்தீர் இன்று எனக்கு அருளவேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 7

மாற்றம் மேல் ஒன்று உரையீர் வாளா நீர் இருந்தீர்
வாழ்விப்பன் என ஆண்டீர் வழி அடியேன் உமக்கு
ஆற்றவேல் திரு உடையீர் நல்கூர்ந்தீர் அல்லீர்
அணி ஆரூர் புகப் பெய்த அரு நிதியம்அதனில்
தோற்றம் மிகு முக்கூற்றில் ஒரு கூறு வேண்டுந்
தாரீரேல் ஒரு பொழுதும் அடி எடுக்கல் ஒட்டேன்
காற்று அனைய கடும் பரிமா ஏறுவது வேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 8

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலைஅரையன்பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்
எம்பெருமான் இது தகவோ இயம்பி அருள்செய்யீர்

Koviloor Digital Library

திண்ணென என் உடல் விருத்தி தாரீரே ஆகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்று உரைக்க வேண்டா
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 9

மறி ஏறு கரதலத்தீர் மாதிமையேல் உடையீர்
மா நிதியம் தருவன் என்று வல்லீராய் ஆண்டீர்
கிறி பேசிக் கீழ்வேளூர் புக்கு இருந்தீர் அடிகேள்
கிறி உம்மால் படுவேனோ திருஆணை உண்டேல்
பொறி விரவு நற் புகர் கொள் பொற் சுரிகை மேல் ஓர்
பொற்பூவும் பட்டிகையும் புரிந்துஅருளவேண்டும்
கறிவிரவு நெய்சோறு முப்போதும் வேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே. 10

பண் மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை உடையேன்
உண் மயத்த உமக்கு அடியேன் குறை தீர்க்கவேண்டும்
ஒளிமுத்தம் பூண் ஆரம் ஒண் பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீர் என்று
அண்மயத்தால் அணி நாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள்இவை வல்லார் அமருலகு ஆள்பவரே. 11

பதிக வரலாறு : (பத்தூர்புக்)

தில்லை பெருமான் அறிவிக்க அறிந்து சேரமான் பெருமான் நாயனார். திருவாரூருக்கு எழுந்தருளும்போது நம்பியாரூரர் திருநாகைக் காரோணஞ் சென்று வழிபட்டுப் பாடிப் பொன்னும், மணியும்

Koviloor Digital Library

அவற்றாலான நகைகளும், ஆடைகளும், சந்தானமும், வெற்றி வாய்ந்த குதிரையும் பசிய பொன்னுறையோடு கூடிய உடைவாள் முதலிய பலவும் பெற்றுத் திரும்பி வந்திருந்தவர். அவரை எதிர்கொண்டு பரவையார் திருமாளிகைக்கு அழைத்துச் சென்று அளவளாவியிருந்தார்.

திருச்சிற்றம்பலம்

44. திருவாரூர்

இறைவன் - புற்றிடங்கொண்டார் இறைவி - அல்லியம் பூங்கோதை

பண் : இந்தளம்

இறைகளோடு இசைந்த இன்பம் இன்பத்தோடு இசைந்த வாழ்வு
பறை கிழித்தனைய போர்வை பற்றியான் நோக்கினேற்குத்
திறை கொணர்ந்து ஈண்டித் தேவர் செம்பொனும் மணியும் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 1

ஊன்மிசை உதிரக்குப்பை ஒரு பொருள் இலாத மாயம்
மான் மறித்தனைய நோக்கின் மடந்தைமார் மதிக்கும் இந்த
மானுடப்பிறவி வாழ்வு வாழ்வது ஓர் வாழ்வு வேண்டேன்
ஆன்நல்வெள் ஏற்ற ஆரூர் அப்பனே அஞ்சினேனே 2

அறுபதும்பத்தும் எட்டும் ஆறினோடு அஞ்சும் நான்கும்
துறு பறித்தனைய நோக்கிச் சொல்லிற்று ஒன்றுஆகச் சொல்வார்
நறுமலர்ப்பூவும் நீரும் நாள்தொறும் வணங்குவார்க்கு
அறிவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 3

சொல்லிடில் எல்லை இல்லை சுவை இலாப் பேதைவாழ்வு
நல்லது ஓர் கூரை புக்கு நலம் மிக அறிந்தேன் அல்லேன்
மல்லிகை மாடம் நீடு மருங்கொடு நெருங்கி எங்கும்
அல்லி வண்டு இயங்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 4

Koviloor Digital Library

நரம்பினோடு எலும்பு கட்டி நசையினோடு இசைவு ஒன்று இல்லாக்
குரம்பைவாய்க் குடிஇருந்து குலத்தினால் வாழமாட்டேன்
விரும்பிய கமழும் புன்னை மாதவித்தொகுதி என்றும்
அரும்பு வாய் மலரும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 5

மணம் என மகிழ்வர் முன்னே மக்கள் தாய் தந்தை சுற்றம்
பிணம் எனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்
பணைஇடைச் சோலைதோறும் பைம்பொழில் விளாகத்து எங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 6

தாழ்வு எனும் தன்மை விட்டுத் தனத்தையே மனத்தில் வைத்து
வாழ்வதே கருதித் தொண்டர் மறுமைக்கு ஒன்று ஈயகில்லார்
ஆழ் குழிப்பட்டபோது அலக்கணில் ஒருவர்க்கு ஆவர்
யாழ் முயன்று இருக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 7

உதிரநீர் இறைச்சிக்குப்பை எடுத்தது மலக்குகைம் மேல்
வருவது ஓர் மாயக் கூரை வாழ்வது ஓர் வாழ்வு வேண்டேன்
கரிய மால் அயனும் தேடிக் கழல் இணை காணமாட்டா
அரியனாய் நின்ற ஆரூர் அப்பனே அஞ்சினேனே 8

பொய்தன்மைத்தாய மாயப்போர்வையை மெய் என்று எண்ணும்
வித்தகத்தாய வாழ்வு வேண்டி நான் விரும்பகில்லேன்
முத்தினைத் தொழுது நாளும் முடிகளால் வணங்குவார்க்கு
அத் தன்மைத்து ஆகும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே 9

தஞ்சு ஒல்லார் அருள் பயக்கும் தமியனேன் தடமுலைக்கண்
அஞ் சொலார் பயிலும் ஆரூர் அப்பனை ஊரன் அஞ்சிச்
செஞ்சொலால் நயந்த பாடல் சிந்தியா ஏத்த வல்லார்
நஞ்சு உலாம் கண்டத்து எங்கள் நாதனை நணுகுவாரே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

45. திருவாரூர்

இறைவன் - புற்றிடங்கொண்டார் இறைவி - அல்லியம் பூங்கோதை

பண் : கொல்லி

குருகு பாயக் கொழுங் கரும்புகள் நெரிந்த சாறு
அருகு பாயும் வயல் அந்தண் ஆரூரைப்
பருகுமாறும் பணிந்து ஏத்துமாறும் நினைந்து
உருகுமாறும் இவை உணர்த்த வல்லீர்களே. 1

பறக்கும் எங் கிள்ளைகாள் பாடும் எம் பூவைகாள்
அறக்கண் என்னத் தகும் அடிகள் ஆரூரரை
மறக்ககில்லாமையும் வளைகள் நில்லாமையும்
உறக்கம் இல்லாமையும் உணர்த்த வல்லீர்களே. 2

சூழும் ஓடிச் சுழன்று உழலும் வெண்நாரைகாள்
ஆளும் அம் பொற்கழல் அடிகள் ஆரூரர்க்கு
வாழுமாறும் வளை கழலுமாறும் எனக்கு
ஊழுமாறும் இவை உணர்த்த வல்லீர்களே. 3

சக்கிரவாகத்து இளம் பேடைகாள் சேவல்காள்
அக்கிரமங்கள் செயும் அடிகள் ஆரூரர்க்கு
வக்கிரம் இல்லாமையும் வளைகள் நில்லாமையும்
உக்கிரம் இல்லாமையும் உணர்த்த வல்லீர்களே. 4

இலை கொள் சோலைத்தலை இருக்கும் வெண்நாரைகாள்
அலைகொள் சூலப்படை அடிகள் ஆரூரர்க்குக்
கலைகள் சோர்கின்றதும் கன வளை கழன்றதும்
முலைகள் பீர் கொண்டதும் மொழிய வல்லீர்களே 5

Koviloor Digital Library

வண்டுகாள் கொண்டல்காள் வார்மணற் குருகுகாள்
அண்டவாணர் தொழும் அடிகள் ஆரூரரைக்
கண்டவாறும் காமத்தீக் கனன்று எரிந்து மெய்
உண்டவாறும் இவை உணர்த்த வல்லீர்களே. 6

தேன் நலம் கொண்ட தேன் வண்டுகாள் கொண்டல்காள்
ஆன்நலம் கொண்ட எம் அடிகள் ஆரூரர்க்குப்
பால்நலம் கொண்ட எம் பணைமுலை பயந்து பொன்
ஊன் நலம் கொண்டதும் உணர்த்த வல்லீர்களே. 7

சுற்றுமுற்றுஞ் சுழன்று உழலும் வெண்நாரைகாள்
அற்றம் முற்றப் பகர்ந்து அடிகள் ஆரூரர்க்கு
பற்று மற்று இன்மையும் பாடு மற்று இன்மையும்
உற்று மற்று இன்மையும் உணர்த்த வல்லீர்களே. 8

குரவம் நாறக் குயில் வண்டுஇனம் பாட நின்று
அரவம் ஆடும் பொழில் அந்தண் ஆரூரரைப்
பரவி நாடும்மதும் பாடி நாடும்மதும்
உருகி நாடும்மதும் உணர்த்த வல்லீர்களே. 9

கூடும் அன்னப்பெடைகாள் குயில் வண்டுகாள்
ஆடும் அம் பொற்கழல் அடிகள் ஆரூரரைப்
பாடுமாறும் பணிந்து ஏத்துமாறுங் கூடி
ஊடுமாறும் இவை உணர்த்த வல்லீர்களே. 10

நித்தமாக நினைந்து உள்ளம் ஏத்தித் தொழும்
அத்தன் அம் பொற்கழல் அடிகள் ஆரூரரைச்
சித்தம்வைத்த புகழ்ச் சிங்கடிஅப்பன் மெய்ப்
பத்தன் ஊரன் சொன்ன பாடுமின் பத்தரே. 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

46. திருத்தொண்டத்தொகை

இறைவன் - புற்றிடங்கொண்டார் வன்மீகநாதர், வீதிவிடங்கர்
இறைவி - அல்லியம் பூங்கோதை
பண் : கொல்லிக்கௌவாணம்

தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்
திரு நீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரி பொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லைஅந்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 1

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்
கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பற்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலை மலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாள் தாயன் அடியார்க்கும் அடியேன்
அலை மலிந்த புனல் மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 2

Koviloor Digital Library

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டு எழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச் சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 3

திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்
பெரு நம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக்குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலி புனல் சூழ் சாத்த மங்கை நீலநக்கற்கு அடியேன்
அரு நம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 4

வம்பு அறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடிஅலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசிமாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 5

Koviloor Digital Library

வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டற்கு அடியேன்
கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவாற்கும் அடியேன்
கடல் காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேல் கூற்றன் களந்தைக் கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 6

பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய் அடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரி திரை சூழ் கடல் நாகை அதிபத்தற்கு அடியேன்
கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 7

கறைக்கண்டன் கழல்அடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல் நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 8

Koviloor Digital Library

கடல் சூழ்ந்த உலகுஎலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடை சூழ்ந்த புலி அதள்மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திரு ஆரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 10


மன்னிய சீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணார்க்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரன் அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திரு நாவலூர்க் கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. 11

Koviloor Digital Library

பதிக வரலாறு : (தில்லைவாழ்)

பரவையாரை மணந்த பாவலர் பெருமான் ஒருநாள் பல முனிவரோடும் திருக்கோயிலை அடைந்து, தேவாசிரியத் திருக்காவணத்து எண்ணிலராய்க் கூடியிருந்த அடியவரைக் கண்டு, இவர்க்கு யான் அடியானாக்கும் நாள் எந்நாள் என்று எண்ணி உள்ளே செல்ல, இறைவர் அவர்க்கு எதிரே தமது திருவுருவைக் காட்டி எழுந்தருளலும் அவர் திருவடிகளைப் பணிந்து பூண்டு ஏத்தி நின்றார். நின்ற அவர்க்கு இறைவர் அவ்வடியார் வழித்தொண்டை உணரநல்கி அவர் பெருமையையும் விளக்கியருளி இவரை நீ யடைந்து பாடுவாயாக என்று பணித்தருளினார். நம்பியாரூரரும் ஏதந்தீர் நெறியைப் பெற்றேனென்று எதிர் வணங்கி இன்னவாறு இன்னபண்பு என்று எவ்வாறு ஏத்துகேன்? அதற்கு யான் யார்? பாடும் பரிசைத் தேவரீர் எனக்கு அருள் செய்ய வேண்டுமென்று வேண்ட உமைபாகர் உலகம் அல்லல் தீர்ந்து உய்ய மறையளித்த திருவாக்கால் தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கு அடியேன் என்று எல்லையில் வண்புகழாரை இசைப்பா மொழியென அடியெடுத்துக் கொடுத்தருளினார். ஆரூரர் அடியவரைத் தொலைவிலேயே பல முடிற தொழுதடைந்து அருகு சென்று அழியா வீரத்தாராய அவ்வடியார்க்கெல்லாம் தனித்னி வேறடியேனென்று ஆர்வத்தால் திருத்தொண்டத்தொகை என்னும் இதனை அருளிச் செய்து அவர் எதிர் பணிந்து திருக்கூட்டத்தில் நடுவணைந்தார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

47. திருஒற்றியூர்

பண் : பழம்பஞ்சுரம்

பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்
பொத்தின நோய்அதுஇதனைப் பொருள் அறிந்தேன் போய்த் தொழுவேன்
முத்தினை மாமணிதன்னை வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 1

ஐவணமாம் பகழி உடை அடல் மதனன் பொடிஆகச்
செவ்வணமாம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி
மை அணவும் கண்டத்து வளர்சடை எம் ஆரமுதை
எவ் வணம் நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 2

சங்கு அலக்கும் தடங்கடல்வாய் விடம் சுட வந்தமரர் தொழ
அங்கு அலக்கண் தீர்த்து விடம் உண்டு உகந்த அம்மானை
இங்கு அலக்கும் உடற் பிறந்த அறிவிலியேன் செறிவு இன்றி
எங்கு உலக்கப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 3

இங்ஙனம் வந்து இடர்ப் பிறவிப் பிறந்து அயர்வேன் அயராமே
அங்ஙனம் வந்து எனை ஆண்ட அருமருந்து என் ஆரமுதை
வெங்கனல் மா மேனியனை மான் மருவும் கையானை
எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 4

செப்பரிய அயனொடு மால் சிந்தித்தும் தெரிவு அரிய
அப் பெரிய திருவினையே அறியாதே அருவினையேன்
ஒப்பு அரிய குணத்தானை இணைஇலியை அணைவு இன்றி
எப் பரிசு பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே 5

Koviloor Digital Library

வன் நாகம் நாண் வரை வில் அங்கி கணை அரி பகழி
தன் ஆகம் உற வாங்கிப் புரம் எரித்த தன்மையானை
முன்னாக நினையாத மூர்க்கனேன் ஆக்கை சுமந்து
என்னாகப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே. 6

வன் சயமாய் அடியேன்மேல் வரும் கூற்றின் உரம் கிழிய
முன் சயமார் பாதத்தான் முனிந்து உகந்த மூர்த்திதனை
மின் செயும் வார்சடையானை விடையானை அடைவின்றி
என் செய நான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே. 7

முன் நெறி வானவர் கூடித் தொழுது ஏத்தும் முழுமுதலை
அந் நெறியை அமரர் தொழும் நாயகனை அடியார்கள்
செந்நெறியைத் தேவர்குலக்கொழுந்தை மறந்து இங்ஙனம் நான்
என் அறிவான் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே. 8

கற்று உளவான் கனியாய கண்ணுதலைக் கருத்து ஆர
உற்று உளனாம் ஒருவனை முன் இருவர் நினைந்து இனிது ஏத்தப்
பெற்றுளனாம் பெருமையனைப் பெரிது அடியேன் கைஅகன்றிட்டு
எற்று உளனாய்ப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே. 9

ஏழ்இசையாய் இசைப்பயனாய் இன்அமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடன்ஆகி
மாழைஒண்கண் பரவையை தந்து ஆண்டானை மதி இல்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே. 10

வங்கம் மலி கடல் நஞ்சை வானவர்கள் தாம் உய்ய
நுங்கி அமுது அவர்க்கு அருளி நொய்யேனைப் பொருட்படுத்துச்
சங்கிலியோடு எனைப் புணர்த்த தத்துவனைச் சழக்கனேன்
எங்கு உலக்கப் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே. 11


Koviloor Digital Library

பேரூரும் மதகரியின் உரியானைப் பெரியவர்தம்
சீரூரும் திருவாரூர்ச் சிவன் அடியே திறம் விரும்பி
ஆரூரன் அடித்தொண்டன் அடியன் சொல் அகலிடத்தில்
ஊர்ஊரன் இவை வல்லார் உலகவர்க்கு மேலாரே. 12

பதிக வரலாறு : (பத்திமையும்)

சுந்தரமூர்த்தி நாயனார் திருவொற்றியூரிற் சங்கிலியாரை மணந்து தங்கியிருக்கும் நாள்களில் தமிழ் மலையிற் பிறந்து சந்தனமண மளவித் தண்ணிய சாரலில் வளர்ந்த கொழுவிய தென்றல் அணையத் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் கொண்டருளுகின்ற வேனில் வ[illegible]னை (வசந்தோற்சவம்) மிகவும் நினைந்தருளினார். நினைந்தவர் வீதிவிடங்கப் பெருமான் கொண்டருளும் ஒண்ணுதலார் புடைபரந்த திருவோலக்கத்திடைப் பண்ணிறைந்த மொழியினை உடைய பரவையாருடைய ஆடலையும் பாடலையும் நேரே தமக்கு முன்னே கண்ணாரக் கண்டவராய்ப் பூங்கோயில் அமர்ந்த தியாகேசப் பெருமானைத் தாம் முன்பு பணிந்து, தோழராகிய தன்மையை இங்கு நான் மறந்து விட்டேனே என்று ஏசறவான் மிக அழிந்து இத்திருப்பதிகம் பாடி இரங்கினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

48. திருக்கொடுங்கோளூர்

பண் : தக்கேசி

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழைஎலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா
எம்மானை எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயல் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலுமாமே. 1

கட்டமும் பிணியும் களைவானைக்
காலற் சீறிய கால் உடையானை
விட்ட வேட்கைவெந்நோய் களைவானை
விரவினால் விடுதற்குஅரியானைப்
பட்ட வார்த்தை பட நின்ற வார்த்தை
வாராமே தவிரப் பணிப்பானை
அட்டமூர்த்தியை மட்டு அவிழ் சோலை
ஆரூரானை மறக்கலுமாமே. 2

கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானைக்
கலைக்கு எலாம் பொருளாய் உடன்கூடிப்
பார்க்கின்ற உயிர்க்குப் பரிந்தானைப்
பகலும் கங்குலுமாகி நின்றானை

Koviloor Digital Library

ஓர்க்கின்ற செவியைச் சுவைதன்னை
உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின்ற கடலை மலைதன்னை
ஆரூரானை மறக்கலுமாமே. 3

செத்தபோதினில் முன் நின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தை உண்டே மனம் உண்டே
மதி உண்டே விதியின் பயன் உண்டே
முத்தன் எங்கள் பிரான் என்று வானோர்
தொழ நின்ற திமில்ஏறு உடையானை
அத்தன் எந்தைபிரான் எம்பிரானை
ஆரூரானை மறக்கலுமாமே. 4

செறிவு உண்டேல் மனத்தால் தெளிவு உண்டேல்
தேற்றத்தால் வரும் சிக்கனவு உண்டேல்
மறிவு உண்டேல் மறுமைப்பிறப்பு உண்டேல்
வாழ்நாள்மேல் செல்லும் வஞ்சனை உண்டேல்
பொறிவண்டு யாழ்செய்யும் பொன்மலர்க்கொன்றை
பொன் போலுஞ் சடைமேல் புனைந்தானை
அறிவு உண்டே உடலத்து உயிர் உண்டே
ஆரூரானை மறக்கலுமாமே. 5

பொள்ளல் இவ் உடலைப் பொருள் என்று
பொருளும் சுற்றமும் போகமும் ஆகி
மெள்ள நின்றவர் செய்வனஎல்லாம்
வாராமே தவிர்க்கும் விதியானை

Koviloor Digital Library

வள்ளல் எம்தமக்கே துணை என்று
நாள்நாளும் அமரர் தொழுது ஏத்தும்
அள்ளல்அம் கழனிப் பழனத்து அணி
ஆரூரானை மறக்கலுமாமே. 6

கரி யானைஉரி கொண்ட கையானைக்
கண்ணின்மேல் ஒரு கண் உடையானை
வரியானை வருத்தம் களைவானை
மறையானைக் குறைமாமதி சூடற்கு
உரியானை உலகத்து உயிர்க்கு எல்லாம்
ஒளியானை உகந்து உள்கி நண்ணாதார்க்கு
அரியானை அடியேற்கு எளியானை
ஆரூரானை மறக்கலுமாமே. 7

வாளா நின்று தொழும் அடியார்கள்
வான் ஆளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாள்நாளும் மலர் இட்டு வணங்கார்
நம்மை ஆள்கின்ற தன்மையை ஓரார்
கேளா நான் கிடந்தே உழைக்கின்றேன்
கிளைக்கு எலாம் துணையாம் எனக் கருதி
ஆளாவான் பலர் முன்பு அழைக்கின்றேன்
ஆரூரானை மறக்கலுமாமே. 8

விடக்கையே பெருக்கிப் பலநாளும்
வேட்கையால் பட்ட வேதனைதன்னைக்
கடக்கிலேன் நெறி காணவும் மாட்டேன்
கண் குழிந்து இரப்பார் கையில் ஒன்றும்

Koviloor Digital Library

இடகிலேன் பரவைத் திரைக் கங்கைச்
சடையானை உமையாளை ஓர்பாகத்து
அடக்கினானை அந் தாமரைப் பொய்கை
ஆரூரானை மறக்கலுமாமே. 9

ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட
உச்சிப் போதனை நச்சு அறிவு ஆர்த்த
பட்டியைப் பகலை இருள் தன்னைப்
பாவிப்பார் மனத்து ஊறும் அத்தேனைக்
கட்டியைக் கரும்பின் தெளி தன்னைக்
காதலால் கடல் சூர் தடிந்திட்ட
செட்டி அப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூரானை மறக்கலுமாமே. 10

ஓர் ஊர் என்று உலகங்களுக்கு எல்லாம்
உரைக்கலாம் பொருளாய் உடன்கூடிக்
கார் ஊரும் கமழ்கொன்றைநன்மாலை
முடியன் காரிகை காரணமாக
ஆரூரைம் மறத்தற்கு அரியானை
அம்மான்தன் திருப்பேர் கொண்ட தொண்டன்
ஆரூரன் அடிநாய் உரை வல்லார்
அமரலோகத்து இருப்பவர்தாமே. 11

பதிக வரலாறு : (பொன்னு)

நாவலர் பெருமான் திருக்கொடுங்கோளூரிலே சேரர்பிரானோடு அளவளாவியிருக்கு நாள்களில் ஒருநாள் திருவாரூர் நகராளும் தேவர்பிரான் கழல் மிக நினைந்த உள்ளத்தினராய் 'ஆவியை

Koviloor Digital Library

ஆரூரானை மறக்கலுமாமே' என்று இத்திருப்பதிகம் பாடிப் பிரிந்திருந்தமைபற்றி வெருவுற்றுத் திருவாரூரை நினைந்து திருக்கூட்டத்துடன் புறப்பட்டுச் சென்றார்.

திருச்சிற்றம்பலம்

49. திருவாரூர்

பண் : காந்தாரம்

கரையும் கடலும் மலையும் காலையும் மாலையும் எல்லாம்
உரையில் விரவி வருவான் ஒருவன் உருத்திரலோகன்
வரையின்மடமகள் கேள்வன் வானவர்தானவர்க்கு எல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.1

தனியன் என்று எள்கி அறியேன் தன்னைப் பெரிதும் உகப்பன்
முனிபவர்தம்மை முனிவன் முக்ம்பலபேசி மொழியேன்
கனிகள்பல உடைச் சோலைக் காய்க்குலை ஈன்ற கமுகின்
இனியன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.2

சொல்லில் குலா அன்றிச் சொல்லேன் தொடர்ந்தவர்க்கும் துணை அல்லேன்
கல்லில் வலிய மனத்தேன் கற்ற பெரும் புலவாணர்
அல்லல் பெரிதும் அறுப்பான் அருமறை ஆறுஅங்கம் ஓதும்
எல்லை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 3

நெறியும் அறிவும் செறிவும் நீதியும் நான் மிகப் பொல்லேன்
மிறையும் தறியும் உகப்பன் வேண்டிற்றுச் செய்து திரிவேன்
பிறையும் அரவும் புனலும் பிறங்கிய செஞ்சடை வைத்த
இறைவன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 4

Koviloor Digital Library

நீதியில் ஒன்றும் வழுவேன் நிர்க்கண்டகம் செய்து வாழ்வேன்
வேதியர்தம்மை வெகுளேன் வெகுண்டவர்க்கும் துணை ஆகேன்
சோதியில் சோதி எம்மானை சுண்ணவெண்நீறு அணிந்திட்ட
ஆதி இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 5

அருத்தம் பெரிதும் உகப்பன் அலவலையேன் அலந்தார்கள்
ஒருத்தர்க்கு உதவியேன் அல்லேன் உற்றவர்க்குந் துணை அல்லேன்
பொருத்தமேல் ஒன்றும் இலாதேன் புற்று எடுத்திட்டு இடம்கொண்ட
அருத்தன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 6

சந்தம்பல அறுக்கில்லேன் சார்ந்தவர்தம் அடிச் சாரேன்
முந்திப் பொரு விடை ஏறி மூஉலகும் திரிவானே
கந்தம் கமழ் கொன்றைமாலைக்கண்ணியன் விண்ணவர் ஏத்தும்
எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 7

நெண்டிக்கொண்டேயும் கலாய்ப்பேன் நிச்சயமே இது திண்ணம்
மிண்டர்க்கு மிண்டுஅலால் பேசேன் மெய்ப்பொருள் அன்றி உணரேன்
பண்டு அங்கு இலங்கையர்கோனைப் பருவரைக்கீழ் அடர்த்திட்ட
அண்டன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.8

நமர் பிறர் என்பது அறியேன் நான் கண்டதே கண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பேன் தக்கவாறு ஒன்றும் இலாதேன்
குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 9

ஆசைபல அறுக்கில்லேன் ஆரையும் அன்றி உரைப்பேன்
பேசில் சழக்குஅலால் பேசேன் பிழைப்பு உடையேன் மனம்தன்னால்
ஓசை பெரிதும் உகப்பேன் ஒலிகடல்நஞ்சு அமுது உண்ட
ஈசன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர். 10

Koviloor Digital Library

எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தைசெயும் திறம் வல்லான் திரு மருவும் திரள்தோளான்
மந்த முழவம் இயம்பும் வளவயல் நாவல் ஆரூரன்
சந்தம் இசையொடும் வல்லார்தாம் புகழ் எய்துவர் தாமே. 11

பதிக வரலாறு : (கரையுங்கடலு)

திருக்கோயிலினின்றும் புறப்பட்டுத் திருக்கழுமலம் திருக்கோலக்கா திருப்புன்கூர் திருமயிலாடுதுறை திருப்புகலூர் முதலான திருப்பதிகளை வணங்கிக்கொண்டு ஆளுடைய நம்பிகள் திருவாரூரை அடைந்தபோது வீதிவிடங்கப் பெருமான் திருவாரூர் வாழ்வாருக்கு ஆராத காதலின் ஆரூரன் நாம் அழைக்க வாராநின்றான். அவனை மகிழ்ந்தெதிர் கொள்வீரென்று பணித்தருளலும், அவர்கள் யாவரும் இறைவர் திருவருள் இதுவானால் நம்பிரானார் அவ்வன்றொண்டரே யென்று மேலுலகம் கீழிழிந்த தென்னுமாறு நகரையணிசெய்வித்துப் பலவகையான மங்கலங்களோடு நகர்ப்புறத்தே வந்து அவரை எதிர்கொண்டார்கள். எதிர்கோண்டு ஒன்றுகூடி அளவளாவி ஒருவரையொருவர் வணங்கித் தெருவிலே செல்லுங்கால் வன்றொண்டர் அத்தொண்டரை நோக்கி 'எந்தையிருப்பதும் ஆரூர் அவர் எம்மையுமாள்வரோ கேளீர்' என்று வைத்து இப்பதிகம் பாடித் திருக்கோயிலையடைந்து இறைவனை வணங்கினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

50. காஞ்சி

இறைவன் - இறைவி -

பண் : புறநீர்மை

அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி
முந்தி எழும் பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு ஆரூர் புக்கு
எந்தைபிரானாரை என்றுகொல் எய்துவதே. 1

நின்ற வினைக் கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலர் இட்டுச் சூழும் வலஞ்செய்து
தென்றன் மணங் கமழும் தென்திருஆரூர் புக்கு
என்தன் மனம் குளிர என்றுகொல் எய்துவதே. 2

முன்னை முதற் பிறவி மூதறியாமையினால்
பின்னை நினைந்தனவும் பேதுறவும் ஒழியச்
செந்நெல் வயற் கழனித் தென்திருஆரூர் புக்கு
என் உயிர்க்கு இன்னமுதை என்றுகொல் எய்துவதே. 3

நல்ல நினைப்பு ஒழிய நாள்களில் ஆருயிரைக்
கொல்ல நினைப்பனவும் குற்றமும் அற்று ஒழியச்
செல்வ வயற் கழனித் தென்திருஆரூர் புக்கு
எல்லை மிதித்து அடியேன் என்றுகொல் எய்துவதே. 4

கடு வரி மாக் கடலுள் காய்ந்தவன் தாதையை முன்
சுடுபொடி மெய்க்கு அணிந்த சோதியை வன்தலை வாய்
அடு புலி ஆடையனை ஆதியை ஆரூர் புக்கு
இடு பலி கொள்ளியை நான் என்றுகொல் எய்துவதே. 5

Koviloor Digital Library

சூழ் ஒளி நீர் நிலம் தீத் தாழ் வளி ஆகாசம்
வாழ் உயர் வெங்கதிரோன் வண்தமிழ் வல்லவர்கள்
ஏழ்இசை ஏழ்நரம்பின் ஓசையை ஆரூர் புக்கு
ஏழ்உலகு ஆளியை நான் என்றுகொல் எய்துவதே. 6

கொம்பு அன நுண்இடையாள் கூறனை நீறு அணிந்த
வம்பனை எவ்உயிர்க்கும் வைப்பினை ஒப்பு அமரர்
செம்பொனை நல்மணியைத் தென்திருஆரூர் புக்கு
என்பொனை என் மணியை என்றுகொல் எய்துவதே. 7

ஆறு அணி நீள் முடிமேல் ஆடுஅரவஞ் சூடிப்
பாறு அணி வெண்தலையில் பிச்சை கொள் நச்சு அரவன்
சேறு அணி தண்கழனித் தென்திருஆரூர் புக்கு
ஏறு அணி எம் இறையை என்றுகொல் எய்துவதே. 8

மண்ணினை உண்டு உமிழ்ந்த மாயனும் மா மலர்மேல்
அண்ணலும் நண்ணரிய ஆதியை மாதினொடும்
திண்ணிய மா மதில் சூழ் தென்திருஆரூர் புக்கு
எண்ணிய கண் குளிர என்றுகொல் எய்துவதே. 9

மின்னெடுஞ் செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்னெடுங் காதன்மையால் நாவலர்கோன் ஊரன்
பன்னெடுஞ்சொன் மலர்கொண்டு இட்டனபத்தும் வல்லார்
பொன் உடை விண்ணுலகம் நண்ணுவர் புண்ணியரே. 10

பதிக வரலாறு : (அந்தியு நண்பகலூ)

திருக்கச்சித் திருவேகபத்திற் பணிந்து புறப்பட்டு அந்நகரத்தைக் கடப்பாராய நம்பியாரூரர் திருவாரூரை நினைந்து, அதனைச் சுட்டி T

Koviloor Digital Library

'அந்தியும் நண்பகலும் என்றெடுத்து எந்தைபிரான் திருவாரூர் என்று கொல்எய்துவதென்று சந்தவிசையால் பாடி அடியாரோடு வழிக் கொள்வராயினர்'.

திருச்சிற்றம்பலம்

51. திருவாரூர்

பண் : செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப் போல் உள்ளே கனன்று முகத்தால் மிக வாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங்கு இருப்பீர் திரு ஆரூரீர் வாழ்ந்துபோதீரே 1

விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்தது இல்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக்கு அடிகேள் என் கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்துபோதீரே 2

அன்றில் முட்டாது அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலிஅவை போல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தம் கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்துபோதீரே 3

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத்துறை ஆள்வீர்
இருக்கை திரு ஆரூரே உடையீர் மனமே என வேண்டா
அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்துபோதீரே 4

Koviloor Digital Library

செந் தண் பவளந் திகழுஞ் சோலை இதுவோ திரு ஆரூர்
எந்தம் அடிகேள் இதுவே ஆமாறு உமக்கு ஆட்பட்டோர்க்கு
சந்தம் பலவும் பாடும் அடியார் தங் கண் காணாது
வந்து எம்பெருமான் முறையோ என்றால் வாழ்ந்துபோதீரே 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திரு ஆரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன் போல் மாலைப் புரிபுன்சடையீரே
தனத்தால் இன்றித் தாந்தாம் மெலிந்து தங் கண் காணாது
மனத்தால் வாடி அடியார் இருந்தால் வாழ்ந்துபோதீரே 6

ஆயம் பேடை அடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
ஏ எம்பெருமான் இதுவே ஆமாறு உமக்கு ஆட்பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனம் காட்டிக்
காயங் காட்டிக் கண்ணி: கொண்டால் வாழ்ந்துபோதீரே 7

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்து சொல் ஆகி
இழியாக் குலத்தில் பிறந்தோம் உம்மை இகழாது ஏத்துவோம்
பழிதான் ஆவது அறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணாது அலமந்து இருந்தால் வாழ்ந்துபோதீரே 8

பேயோடேனும் பிரிவு ஒன்று இன்னாது என்பர் பிறர்எல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திரு ஆரூரீர் வாழ்ந்துபோதீரே 9

செருந்தி செம்பொன்மலருஞ் சோலை இதுவோ திரு ஆரூர்
பொருந்தித் திரு மூலட்டானமே இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை இகழாது ஏத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கு ஒன்று உரைத்தால் வாழ்ந்துபோதீரே 10

Kovilen Digital Library

காரூர் கண்டத்து எண்தோள் முக்கண் கலைகள்பலவாகி
ஆரூர்த் திரு மூலட்டானத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என் கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகம் கொண்டீர் வாழ்ந்துபோதீரே 11

பதிக வரலாறு : (மீளா அடிமை)

திருக்கச்சியேகம்பத்தில் இடக்கண் கொடுத்தருளப் பெற்றுத் திருவாரூரை யடைந்த நம்பியாரூரர் வன்மீக நாதரைக் காண்டற்கு அவ்வொரு கண் போதாமையால் மிக வருந்தி மற்றொரு கண்ணையும் அளித்தருளல் வேண்டுமென்று வேண்டுங் குறிப்பினராய், அப்பெருமானோடு ஊடி 'மீளாவடிமை' என்னும் இத்திருப்பதிகத்தைப் பாடுதலும் இறைவன் திருவுளமிரங்கி அவர்க்கவரது வலக்கண்ணையுங் கொடுத்தருளினார். நாயனார் தம் இரண்டு கண்களாலும் இறைவனைக் காணப்பெற்றுப் பேரின்பத்திற் படிந்து நின்றார்.

திருச்சிற்றம்பலம்

52. திருவாரூர்ப் பரவையுண்மண்டளி

இறைவன் - மண்டலேசுரர் இறைவி - பஞ்சின் மெல்லடியாள்

பண் : பஞ்சமம்

தூவாயா தொண்டு செய்வார் படு துக்கங்கள்
காவாயா கண்டுகொண்டார்ஐவர் காக்கிலும்
நாவாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்கு
ஆவா என் பரவையுண்மண்டளி அம்மானே 1

Koviloor Digital Library

பொன்னானே புலவர்க்கு நின் புகழ் போற்றலாம்
தன்னானே தன்னைப் புகழ்ந்திடும் தற்சோதி
மின்னானே செக்கர்வானத்து இள ஞாயிறு
அன்னானே பரவையுண்மண்டளி அம்மானே 2

நா மாறாது உன்னையே நல்லன சொல்லுவார்
போமாறு என் புண்ணியா புண்ணியம் ஆனானே
பேய் மாறாப் பிணம் இடுகாடு உகந்து ஆடுவாய்க்கு
ஆமாறு என் பரவையுண்மண்டளி அம்மானே 3

நோக்குவேன் உன்னையே நல்லன நோக்காமைக்
காக்கின்றார் கண்டுகொண்டார்ஐவர் காக்கிலும்
வாக்கு என்னும் மாலைகொண்டு உன்னை என் மனத்து
ஆர்க்கின்றேன் பரவையுண்மண்டளி அம்மானே 4

பஞ்சு ஏரும் மெல்அடியாளை ஓர்பாகமாய்
நஞ்சு ஏரும் நன் மணிகண்டம் உடையானே
நெஞ்சு ஏர நின்னையே உள்கி நினைவாரை
அஞ்சேல் என் பரவையுண்மண்டளி அம்மானே 5

அம்மானே ஆகம சீலர்க்கு அருள் நல்கும்
பெம்மானே பேரருளாளன் பிடவூரன்
தம்மானே தண்தமிழ்நூல் புலவாணர்க்கு ஓர்
அம்மானே பரவையுண்மண்டளி அம்மானே 6

விண்டானே மேலையார்மேலையார் மேலாய
எண்தானே எழுத்தொடு சொல்பொருள்எல்லாம் முன்
கண்டானே கண்தனைக் கொண்டிட்டுக் காட்டாயே
அண்டானே பரவையுண்மண்டளி அம்மானே 7

Koviloor Digital Library


காற்றானே கார்முகில் போல்வது ஓர் கண்டத்து எம்
கூற்றானே கோல்வளையாளை ஓர்பாகமாய்
நீற்றானே நீள்சடைமேல் நிறை உள்ளது ஓர்
ஆற்றானே பரவையுண்மண்டளி அம்மானே 8

செடியேன் நான் செய்வினை நல்லன செய்யாத
கடியேன் நான் கண்டதே கண்டதே காமுறும்
கொடியேன் நான் கூறுமாறு உன் பணி கூறாத
அடியேன் நான் பரவையுண்மண்டளி அம்மானே 9

கரந்தையும் வன்னியும் மத்தமுங் கூவிளம்
பரந்த சீர்ப் பரவையுண்மண்டளி அம்மானை
நிரம்பிய ஊரன் உரைத்தன பத்து இவை
விரும்புவார் மேலையார்மேலையார் மேலாரே. 10

பதிக வரலாறு : திருவேகம்பத்தில் ஒற்றைக் கண் பெற்று வரும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரை அடைந்து முதலில் பரவையுண் மண்டளியைத் தரிசித்து இப்பதிகத்தைப் பாடினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

53. திருநாட்டியத்தான்குடி

இறைவன் - இரத்தினகிரிநாதர் இறைவி - மலர் மங்கை நாயகி

பண் : தக்கராகம்

பூண் நாண் ஆவது ஓர் அரவம் கண்டு அஞ்சேன்
புறங்காட்டு ஆடல் கண்டு இகழேன்
பேணா ஆகிலும் பெருமையை உணர்வேன்
பிறவேன் ஆகிலும் மறவேன்
காணா ஆகிலும் காண்பன் என் மனத்தால்
கருதா ஆகிலும் கருதி
நானேல் உன் அடி பாடுதல் ஒழியேன்
நாட்டியத்தான்குடி நம்பீ. 1

கச்சு ஏர் பாம்பு ஒன்று கட்டி நின்று இடுகாட்டு
எல்லியில் ஆடலைக் கவர்வன்
துச்சேன் என் மனம் புகுந்திருக்கின்றமை
சொல்லாய் திப்பிய மூர்த்தீ
வைச்சே இடர்களைக் களைந்திட வல்ல
மணியே மாணிக்கவண்ணா
நச்சேன் ஒருவரை நான் உனை அல்லால்
நாட்டியத்தான்குடி நம்பீ 2

அஞ்சாதே உனக்கு ஆட்செய வல்லேன்
யாதினுக்கு ஆசைப்படுகேன்
பஞ்சு ஏர் மெல் அடி மாமலை மங்கை
பங்கா எம் பரமேட்டீ.

Koviloor Digital Library

மஞ்சு ஏர் வெண்மதி செஞ்சடை வைத்த
மணியே மாணிக்கவண்ணா
நஞ்சு ஏர் கண்டா வெண்தலை ஏந்தீ
நாட்டியத்தான்குடி நம்பீ 3

கல்லேன் அல்லேன் நின் புகழ் அடிமை
கல்லாதே பல கற்றேன்
நில்லேன் அல்லேன் நின்வழி நின்றார்
தம்முடை நீதியை நினைய
வல்லேன் அல்லேன் பொன் அடி பரவ
மாட்டேன் மறுமையை நினைய
நல்லேன் அல்லேன் நான் உனக்கு அல்லால்
நாட்டியத்தான்குடி நம்பீ. 4

மட்டு ஆர் பூங்குழல் மலைமகள் கணவனைக்
கருதாதார் தமைக் கருதேன்
ஒட்டா ஆகிலும் ஒட்டுவன் அடியேன்
உன் அடி அடைந்தவர்க்கு அடிமைப்
பட்டேன் ஆகிலும் பாடுதல் ஒழியேன்
பாடியும் நாடியும் அறிய
நட்டேன் ஆதலால் நான் மறக்கில்லேன்
நாட்டியத்தான்குடி நம்பீ. 5

படப் பால் தன்மையில் நான் பட்டது எல்லாம்
படுத்தாய் என்று அல்லல் பறையேன்
குடப் பாச்சில் உறை கோக் குளிர்வானே
கோனே கூற்று உதைத்தானே

Koviloor Digital Library

மடப்பால் தயிரொடு நெய் மகிழ்ந்து ஆடும்
மறை ஓதி மங்கை பங்கா
நடப்பா ஆகிலும் நடப்பன் உன் அடிக்கே
நாட்டியத்தான்குடி நம்பீ. 6

ஐவாய் அரவினை மதி உடன் வைத்த
அழகா அமரர்கள் தலைவா
எய்வான் வைத்தது ஓர் இலக்கினை அணைதர
நினைந்தேன் உள்ளம் உள்ளளவும்
உய்வான் எண்ணி வந்து உன் அடி அடைந்தேன்
உகவா ஆகிலும் உகப்பன்
நைவான் அன்று உமக்கு ஆட்பட்டது அடியேன்
நாட்டியத்தான்குடி நம்பீ. 7

கலியேன் மானுட வாழ்க்கை ஒன்று ஆகக்
கருதிடின் கண்கள் நீர் மல்கும்
பலி தேர்ந்து உண்பது ஓர் பண்பு கண்டு இகழேன்
பசுவே ஏறினும் பழியேன்
வலியே ஆகிலும் வணங்குதல் ஒழியேன்
மாட்டேன் மறுமையை நினைய
நலியேன் ஒருவரை நான் உனை அல்லால்
நாட்டியத்தான்குடி நம்பீ. 8

குண்டாடிச் சமண் சாக்கியப் பேய்கள்
கொண்டார் ஆகிலும்கொள்ளக்
கண்டாலும் கருதேன் எருது ஏறும்
கண்ணா நின் அலது அறியேன்

Koviloor Digital Library

தொண்டாடித் தொழுவார் தொழக் கண்டு
தொழுதேன் என் வினை போக
நண்டு ஆடும் வயல் தண்டலை வேலி
நாட்டியத்தான்குடி நம்பீ. 9

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல் புகழ் நாட்டியத்தான்குடி
நம்பியை நாளும் மறவாச்
சேடார் பூங்குழல் சிங்கடி அப்பன்
திரு ஆரூரன் உரைத்த
பாடீர் ஆகிலும் பாடுமின் தொண்டீர்
பாட நும் பாவம் பற்று அறுமே. 10

பதிக வரலாறு : (பூணாணதொ)

வன்றொண்டப்பெருமான் திருவாரூரிலே எழுந்தருளி இருக்கும் போது கோட்புலி நாயனார் அவரையடைந்து தம் பதிக்கு எழுந்தருள வேண்டுமென்று குறையிரந்து இசைவுகொண்டு தமது பதிக்கு ஏகினார். நம்பியாரூரரும் திருவாரூரினின்றும் புறப்பட்டுப் பல பதிகளை வணங்கி வழிபட்டுத் திருநாட்டியத்தான்குடியை அடையக் கோட்புலியார் தமது நகரத்தை ஏலும்வகையால் அலங்கரித்து எதிர்கொண்டு இறைஞ்சித் தமது மாளிகையில் எழுந்தருளச்செய்து பொன் விசிலிருத்தித் திருவடியினை விளக்கியருச்சித்து அடைக்காய் முதலியவற்றைப் பல்பாசனத்து ஏந்தியும், திருப்பள்ளித் தாமங்கள் மிக எடுத்தும் திருவாபாணவருக்கும் பல தாங்கியும் பலவிதத்துப் பரிவட்டங்கள் ஊழி விரைத்தும் எதிரிறைஞ்சிப் பூசித்துத் தமது மனையில் திருவமுது செய்வித்துப் பேருவிருப்பாற்றாம் பெற்றேடுத்த தேனார் கோதைச்

Koviloor Digital Library

சிங்கடியாரையும் மானார் நோக்கின் வனப்பகையாரையும் கொணர்ந்து நாயனாரைப் பணிவித்துப் பணிந்து அடியேன் பெற்ற மக்களிவரை அடிமையாகக் கொண்டருளிக் கருணையளிக்க வேண்டுமென வேண்டினார். சுவாமிகள் இவர் எனக்குத் தூய மக்களெனக் கருதி மகண்மைகொண்டு அவரைக் குறங்கின்வைத் துட்கசிவால் அளைந்து உச்சிமீது கண்ணீர்விழ மோந்து அவர் வேண்டுவன கொடுத்துத் திருக்கோயிலுக்கு எழுந்தருளி இறைவனை வணங்கிப் 'பூணாணாவதோரரவங் கண்டஞ்சேன்' என்னும் திருப்பதிகம் எடுத்து அதனது திருகடைக்காப்பில் கோட்புலி நாயனாரைக் 'கூடாமன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி' என்று சிறப்பித்துத் தம்மையும் அவர் மக்களை மகண்மை கொண்டபடியின் சிங்கடியப்பன் என்று வைத்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

54. திருவலிவலம்

இறைவன் - மனத்துணைநாதர் இறைவி - மாழையங்கண்ணி

பண் : தக்கேசி

ஊன்அங்கத்து உயிர்ப்பாய் உலகுஎல்லாம்
ஓங்காரத்து உருவாகி நின்றானை
வானம் கைத்தவர்க்கும் அளப்பரிய
வள்ளலை அடியார்கள்தம் உள்ளத்
தேன் அங்கைத்து அமுதாகி உள் ஊறும்
தேசனைத் திளைத்தற்கு இனியானை
மான் அங் கைத்தலத்து வல்லானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 1

Koviloor Digital Library

பல்அடியார் பணிக்குப் பரிவானைப்
பாடி ஆடும் பத்தர்க்கு அன்பு உடையானைச்
செல் அடியே நெருங்கித் திறம்பாது
சேர்ந்தவர்க்கே சித்திமுத்தி செய்வானை
நல் அடியார் மனத்து எய்ப்பினில் வைப்பை
நான் உறு குறை அறிந்து அருள்புரிவானை
வல் அடியார் மனத்து இச்சை உளானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 2

ஆழியனாய் அகன்றே உயர்ந்தானை
ஆதிஅந்தம் பணிவார்க்கு அணியானைக்
கூழையர் ஆகிப் பொய்யே குடி ஓம்பிக்
குழைந்து மெய்அடியார்குழுப் பெய்யும்
வாழியர்க்கே வழுவா நெறி காட்டி
மறுபிறப்பு என்னை மாசு அறுத்தானை
மாழை ஒண்கண்உமையை மகிழ்ந்தானை
வலிவலம் தனில் வந்து கண்டேனே. 3

நாத்தான் தன் திறமே திறம்பாது
நண்ணி அண்ணித்து அமுதம் பொதிந்து ஊறும்
ஆத்தானைஅடியேன்தனக்கு என்றும்
அளவு இறந்த பல் தேவர்கள் போற்றும்
சோத்தானை சுடர்மூன்றிலும் ஒன்றித்
துருவி மால் பிரமன் அறியாத
மாத்தானை மாத்து எனக்கு வைத்தானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 4

Koviloor Digital Library

நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கு
அரையனும் பாடிய நல் தமிழ்மாலை
சொல்லியவே சொல்லி ஏத்து உகப்பானைத்
தொண்டனேன் அறியாமை அறிந்து
கல்இயல் மனத்தைக் கசிவித்துக்
கழல்அடி காட்டி என் களைகளை அறுக்கும்
வல் இயல் வானவர் வணங்கநின்றானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 5

பாடுமாப் பாடிப் பணியுமாறு அறியேன்
பனுவுமா பனுவிப் பரவுமாறு அறியேன்
தேடுமா தேடித் திருத்துமாறு அறியேன்
செல்லுமா செல்லச் செலுத்துமாறு அறியேன்
கூடுமாறு எங்ஙனமோ என்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்து எனை ஆண்டு
வாடி நீ வாளா வருந்தல் என்பானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 6

பந்தித்தவ் வல்வினைப்பற்று அற பிறவிப்
படுகடல் பரப்புத் தவிர்ப்பானைச்
சந்தித்த திறலால் பணி பூட்டித்
தவத்தை ஈட்டிய தன் அடியார்க்குச்
சிந்தித்தற்கு எளிதாய்த் திருப்பாதம்
சிவலோகம் திறந்து ஏற்ற வல்லானை
வந்திப்பார்தம் மனத்தின் உள்ளானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 7

Koviloor Digital Library

எவ் எவர் தேவர் இருடிகள் மன்னர்
எண்இறந்தார்கள் மற்று எங்கும் நின்று ஏத்த
அவ் அவர் வேண்டியதே அருள்செய்து
அடைந்தவர்க்கே இடம்ஆகி நின்றானை
இவ்விவ கருணை எம் கற்பகக்கடலை
எம்பெருமான் அருளாய் என்ற பின்னை
வவ்வி என் ஆவி மனம் கலந்தானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 8

திரியும் முப்புரம் செற்றதும் குற்றத்
திறல் அரக்கனைச் செறுத்ததும் மற்றைப்
பெரிய நஞ்சு அமுதுஉண்டதும் முற்றும்
பின்னையாய் முன்னமே முளைத்தானை
அரிய நான்மறை அந்தணர் ஓவாது
அடி பணிந்து அறிதற்கு அரியானை
வரையின் பாவை மணாளன் எம்மானை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 9

ஏன்ற அந்தணன் தலையினை அறுத்து
நிறைக்க மால் உதிரத்தினை ஏற்று
தோன்று தோள்மிசைக் களேபரம் தன்னைச்
சுமந்த மா விரதத்த கங்காளன்
சான்று காட்டுதற்கு அரியவன் எளியவன்
தன்னைத் தன் நிலாம் மனத்தார்க்கு
மான்று சென்று அணையாதவன் தன்னை
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 10

Koviloor Digital Library

கலி வலம் கெட ஆரழல் ஓம்பும்
கற்ற நான்மறை முற்று அனல் ஓம்பும்
வலிவலம்தனில் வந்து கண்டு அடியேன்
மன்னும் நாவல் ஆரூரன் வன்தொண்டன்
ஒலி கொள் இன்இசைச் செந்தமிழ்பத்தும்
உள்ளத்தால் உகந்து ஏத்த வல்லார் போய்
மெலிவு இல் வான்உலகத்தவர் ஏத்த
விரும்பி விண்ணுலகு எய்துவர் தாமே. 11

பதிக வரலாறு : **(ஊனக்கைத்து)**

நம்பியாரூரர் திருநாட்டியத்தான் குடியிலிருந்து திருவலிவலத்தை யடைந்து இறைவனை வணங்கிப் பாடுகின்றவர். தாமெடுத்த 'ஊனங்கைத்துயிர்ப்பாய்' என்னுந் திருப்பதிகத்தில், ஐந்தாந் திருப்பாட்டில் 'நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப் பானை' என்று நன்று மகிழுஞ் , சம்பந்தர் நாவுக்கரசர் பாட்டுவந்த செய்கையைச் சிறப்பித்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

55. திருக்கோளிலி

இறைவன் - பிரமபுரீசுவரர் இறைவி - வண்டமர் பூங்குழலாள்
பண் : நட்டராகம்

நீள நினைந்து அடியேன் உனை நித்தலும் கை தொழுவேன்
வாள் அன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆள் இலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே 1

Koviloor Digital Library

வண்டு அமரும் குழவாள் உமைநங்கை ஓர் பங்கு உடையாய்
விண்டவர்தம் புரம் மூன்று எரிசெய்த எம் வேதியனே
தெண்திரை நீர் வயல்சூழ் திருக்கோளிலி எம்பெருமான்
அண்டம் அது ஆயவனே அவை அட்டித்தரப் பணியே. 2

பாதி ஓர் பெண்ணை வைத்தாய் படரும் சடைக் கங்கை வைத்தாய்
மாதர் நல்லார் வருத்தம் அது நீயும் அறிதி அன்றே
கோது இல் பொழில் புடை சூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆதியே அற்புதனே அவை அட்டித்தரப் பணியே. 3

சொல்லுவது என் உனை நான் தொண்டைவாய் உமைநங்கையை நீ
புல்கி இடத்தில் வைத்தாக்கு ஒரு பூசல் செய்தார் உளரோ
கொல்லை வளம் புறவில் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
அல்லல் களைந்து அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே. 4

முல்லைமுறுவல் உமை ஒரு பங்கு உடை முக்கணனே
பல் அயர் வெண் தலையில் பலி கொண்டு உழல் பாசுபதா
கொல்லை வளம் புறவில் திருக் கோளிலி எம்பெருமான்
அல்லல் களைந்து அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே. 5

குரவு அமரும் குழலாள் உமைநங்கை ஓர் பங்கு உடையாய்
பரவை பசி வருத்தம் அது நீயும் அறிதி அன்றே
குரவு அமரும் பொழில் சூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
அரவம் அசைத்தவனே அவை அட்டித்தரப் பணியே 6.

எம்பெருமான் உனையே நினைந்து ஏத்துவன் எப்பொழுதும்
வம்பு அமரும் குழலாள் ஒருபாகம் அமர்ந்தவனே
செம்பொனின் மாளிகை சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அன்பு அதுவாய் அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே. 7

Koviloor Digital Library

அரக்கன் முடிகரங்கள் அடர்த்திட்ட எம் ஆதிப்பிரான்
பரக்கும் அரவு அல்குலாள் பரவை அவள் வாடுகின்றாள்
குரக்கு இனங்கள் குதிகொள் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
இரக்கம் அதாய் அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே. 8

பண்டைய மால் பிரமன் பறந்தும் இடந்தும் அயர்ந்தும்
கண்டிலராய் அவர்கள் கழல் காண்பு அரிதாய பிரான்
தெண்திரை நீர் வயல் சூழ் திருக் கோளிலி எம்பெருமான்
அண்டம் அது ஆயவனே அவை அட்டித்தரப் பணியே. 9

கொல்லை வளம் புறவில் திருக் கோளிலி மேயவனை
நல்லவர் தாம் பரவும் திரு நாவல் ஊரன் அவன்
நெல் இட ஆட்கள் வேண்டி நினைந்து ஏத்திய பத்தும் வல்லார்
அல்லல் களைந்து உலகில் அண்டர் வான்உலகு ஆள்பவரே. 10

பதிக வரலாறு : (நீளநினைந்தடி)

வேளாண் தலைவராகிய குடையூர்க் கிழவர் சுந்தரமூர்த்தி நாயனாரிடத்துப் பேரன்புடையராய்ச் செந்நெல்லும், பொன்னன் செழும் பருப்புந் தீங்கரும்பினின் நல்ல அமுது முதலான எண்ணில்லாத பல பொருள்களையும் பல நாளாக அனுப்பி வருபவர் மழை வளஞ் சுருங்கிப் படித்தரம் எடுக்கப் போதாமல் வருந்தி ஒருநாள் என்று குறைவாகின்றதே யென்று துயிலும்போது சிவபெருமான் கனவினிடத்து நெல்ந்தோமென்று அருளி நிதிக்கோனை ஏவ, அவன் அந்நாடு முழுவதும் நெல்மலைகளை நிறைத்து வைத்தான். குண்டையூர்க் கிழவர் அதனைக் கண்டு வியந்து திருவருளைப் பாராட்டி இதனை எடுத்தல் நம்மால் ஆகாது, நம்பியாரூர் இடத்துத் தெரிவிப்பேன் என்று சென்று தெரிவிக்க, நாவலர் பெருமான் அவரோடு சென்று விண்ணினை அளக்கு நெல்லின் வெற்பினை நோக்கி இறைவனைத் துதித்து வணங்கி அதிசயித்து இதனையெடுக்க ஆளுஞ் சிவபெருமானே தரிலன்றி

Koviloor Digital Library

ஆகாது என்று அருகிலுள்ள திருக்கோளிலியிற் சென்று திருக்கோயிலை அடைந்து இறைவனை 'நீள நினைந்தடியே' என்றெடுத்து 'வாளன கண்மடவாளல்வாடி வருந்தாமே' எனும் பதிகம் பாடியருளலும், எம்பெருமான் ஆகாயத்தில் அசரீரியாகப் பகற்பொழுது கழிந்ததன் பின் நம் பூதங்கள் இவற்றைப் பரவைமனையளவன்றித் திருவாரூர் அடையவும் புகப்பெய்து தரும் என்று அருளினார். நாவலூர் நாவலனார் திருவருளைப் பணிந்து போற்றித் திருவாரூருக்கு எழுந்தருளிப் பரவையாரிடத்து யாவுங் கூறியி இருந்தார். அன்றிரவு சிவபூதங்கள் திருவாரூர் அடங்கவும் எங்கும் இளியங்க விடமின்றி நிறைந்து வைத்தன. பரவையார் கண்டு அதிசயித்து அவரவர் எல்லையிலுள்ள நெல்மலைகளை அவரவர் அடையுமாறு பறையறைவித்து அடையச்செய்து மனமகிழ்ந்திருந்தார்.

திருச்சிற்றம்பலம்

56. திருமறைக்காடு

இறைவன் - மறைக்காட்டு மணாளர் இறைவி - யாழைப்பழித்த மொழியம்மை

பண் : காந்தாரம்

யாழைப்பழித்தன்ன மொழிமங்கை ஒரு பங்கன்
பேழைச் சடைமுடிமேற் பிறை வைத்தான் இடம் பேணில்
தாழைப் பொழில்ஊடே சென்று பூழைத்தலை நுழைந்து
வாழைக்கனி கூழைக்குரங்கு உண்ணும் மறைக்காடே. 1

சிகரத்து இடை இளவெண்பிறை வைத்தான் இடந் தெரியில்
முகரத்துஇடை முத்தின் ஒளி பவளத்திரள் ஓதத்
தகரத்துஇடை தாழைத்திரள் ஞாழல் திரள் நீழல்
மகரத்தொடு சுறவங் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 2

Koviloor Digital Library

அங்கங்களும் மறைநான்கு உடன் விரித்தான் இடம் அறிந்தோம்
தெங்கங்களும் நெடும்பெண்ணையும் பழம் வீழ் மணற் படப்பைச்
சங்கங்களும் இலங்கு இப்பியும் வலம்புரிகளும் இடறி
வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும் மறைக்காடே. 3

நரை விரவிய மயிர்தன்னொடு பஞ்சவ் வடி மார்பன்
உரை விரவிய உத்தமன் இடம் உணரல் உறு மனமே
குரை விரவிய குலை சேகரக் கொண்டல் தலை விண்ட
வரை புரைவன திரை பொருது இழிந்து எற்றும் மறைக்காடே. 4

சங்கைப் பட நினையாது எழு நெஞ்சே தொழுது ஏத்தக்
கங்கைச் சடைமுடி உடையவர்க்கு இடமாவது பரவை
அங்கைக் கடல் அரு மா மணி உந்திக் கரைக்கு ஏற்ற
வங்கத்தொடு சுறவங் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 5

அடல் விடையினன் மழுவாளினன் நல்ஆர் அணி கொன்றைப்
படருஞ் சடைமுடி உடையவர்க்கு இடமாவது பரவைக்
கடல்இடைஇடை கழி அருகினிற் கடி நாறு தண் கைதை
மடல்இடைஇடை வெண்குருகு எழு மணிநீர் மறைக்காடே. 6

முளைவளர்இளமதி உடையவன் முன் செய்த வல்வினைகள்
களை களைந்து எனை ஆளல் உறு கண்டன் இடஞ் செந்நெல்
வளை விளைவயற் கயல் பாய்தரு குண வார் மணற் கடல்வாய்
வளை வளையொடு சலஞ்சலங் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 7

நலம் பெரியன சுரும்பு ஆர்ந்தன நம்கோன் இடம் அறிந்தோம்
கலம் பெரியன சாருங் கடற் கரை பொருது இழி கங்கைச்
சலம் புரி சடைமுடி உடையவர்க்கு இடமாவது பரவை
வலம்புரியொடு சலஞ்சலங் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 8

Koviloor Digital Library

குண்டாடியுஞ் சமண் ஆடியுங் குற்றுஉடுக்கையர் தாமும்
கண்டார் கண்ட காரணம் அவை கருதாது கைதொழுமின்
எண்தோளினன் முக்கண்ணினன் ஏழ்இசையினன் அறுகால்
வண்டாடு தண்பொழில் சூழ்ந்து எழு மணிநீர் மறைக்காடே. 9

பாரூர்பல புடை சூழ் வளவயல் நாவலர்வேந்தன்
வாரூர் வனமுலையாள்உமை பங்கன் மறைக்காட்டை
ஆரூரன் தமிழ்மாலைகள் பாடும் அடித்தொண்டர்
நீரூர்தரு நிலனோடு உயர் புகழ் ஆகுவர் தாமே. 10

திருச்சிற்றம்பலம்

57. திருக்கோடிக்குழகர்

இறைவன் - அமிர்தகடேசர் இறைவி - மையார் தடங்கண்ணியம்மை

பண் : கொல்லி

கடிதாய்க் கடற்காற்று வந்து எற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ
கொடியேன் கண்கள் கண்டன கோடிக் குழகீர்
அடிகேள் உமக்கார் துணையா இருந்தீரே 1

முன்தான் கடல்நஞ்சம் உண்டஅதனாலோ
பின்தான் பரவைக்கு உபகாரஞ் செய்தாயோ
குன்றாப் பொழில் சூழ்தரு கோடிக் குழகா
என்தான் தனியே இருந்தாய் எம்பிரானே 2

Koviloor Digital Library

மத்தம் மலி சூழ் மறைக்காடுஅதன் தென்பால்
பத்தர்பலர் பாட இருந்த பரமா
கொத்தார் பொழில் சூழ்தரு கோடிக் குழகா
எத்தால் தனியே இருந்தாய் எம்பிரானே 3

காடேல் மிக வாலிது காரிகை அஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழறல்
வேடித்தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்
கோடிக் குழகா இடங் கோயில் கொண்டாயே 4

மையார் தடங்கண்ணி பங்கா கங்கையாளும்
மெய் ஆகத்து இருந்தனள் வேறு இடம் இல்லை
கையார் வளைக் காடுகளோடும் உடனாய்க்
கொய்யார் பொழிற் கோடியே கோயில் கொண்டாயே 5

அரவு ஏர் அல்குலாளை ஓர்பாகம் அமர்ந்து
மரவங் கமழ் மா மறைக்காடுஅதன் தென்பால்
குரவம் பொழில் சூழ்தரு கோடிக் குழகா
இரவே துணையாய் இருந்தாய் எம்பிரானே 6

பறையுங் குழலும் ஒலிபாடல் இயம்ப
அறையுங் கழல் ஆர்க்க நின்று ஆடும் அமுதே
குறையாப் பொழில் சூழ்தரு கோடிக் குழகா
இறைவா தனியே இருந்தாய் எம்பிரானே 7

ஒற்றியூர் என்ற ஊனத்தினால்அதுதானோ
அற்றப் பட ஆரூர் அது என்று அகன்றாயோ
முற்றா மதி சூடிய கோடிக் குழகா
எற்றால் தனியே இருந்தாய் எம்பிரானே 8

Koviloor Digital Library

நெடியானொடு நான்முகனும் அறிவு ஒண்ணாப்
படியான் பலி கொள்ளும் இடங்குடி இல்லை
கொடியார் பலர்வேடர்கள் வாழுங் கரைமேல்
அடிகேள் அன்புஅதாய் இடங் கோயில் கொண்டாயே 9

பாரூர் மலி சூழ் மறைக்காடுஅதன் தென்பால்
ஏரார் பொழில் சூழ்தரு கோடிக் குழகை
ஆரூரன் உரைத்தன பத்து இவை வல்லார்
சீரூர் சிவலோகத்து இருப்பவர்தாமே 10

திருச்சிற்றம்பலம்

58. திருஇராமேச்சரம்

இறைவன் - திருகேதீசுவரர் இறைவி - கௌரியம்மை
பண் : நட்டபாடை

நந்தார் படை ஞானன் பசுஏறிந் நனை கவிழ் வாய்
மத்தம்மதயானை உரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பு அணிவான் திருக் கேதீச்சரத்தானே. 1

சுடுவார் பொடி நீறுந் நல துண்டப்பிறை கீளும்
கடமார் களியானை உரி அணிந்த கறைக்கண்டன்
பட ஏர் இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமா உறைகின்றான் திருக் கேதீச்சரத்தானே. 2

Koviloor Digital Library

அங்கம் மொழி அன்னார்அவர் அமரர் தொழுது ஏத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கஞ் செய்த பிறை சூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண் அரவு அசைத்தான் திருக் கேதீச்சரத்தானே. 3

கரிய கறைக்கண்டன் நல கண்மேல் ஒரு கண்ணான்
வரிய சிறை வண்டு யாழ்செயும் மாதோட்ட நன்நகருள்
பரிய திரை எறியா வரு பாலாவியின் கரைமேல்
தெரியும் மறை வல்லான் திருக் கேதீச்சரத்தானே. 4

அங்கத்து உறு நோய்கள் அடியார்மேல் ஒழித்துஅருளி
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கு அம்பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரத்தானே. 5

வெய்ய வினையாய அடியார்மேல் ஒழித்தருளி
வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பை ஏர் இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடைமுடியான் திருக் கேதீச்சரத்தானே. 6

ஊனத்து உறு நோய்கள் அடியார்மேல் ஒழித்து அருளி
வானத்து உறு மலியும் கடல் மாதோட்ட நன்நகரில்
பால் நத்து உறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்துஎயிறு அணிந்தான் திருக் கேதுச்சரத்தானே. 7

அட்டன் அழகாக அரைதன்மேல் அரவு ஆர்த்து
மட்டு உண்டு வண்டு ஆலும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பட்டவ்வரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன் நமை ஆள்வான் திருக் கேதீச்சரத்தானே. 8

Koviloor Digital Library

மூவர் என இருவர் என முக்கண் உடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்
தேவன் எனை ஆள்வான் திருக் கேதீச்சரத்தானே. 9

கறையார் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன்நகருள்
சிறையார் பொழில் வண்டு யாழ்செயும் கேதீச்சரத்தானை
மறையார் புகழ் ஊரன் அடித்தொண்டன் உரைசெய்த
குறையாத் தமிழ்பத்துஞ் சொலக் கூடா கொடுவினையே. 10

திருச்சிற்றம்பலம்

59. திருப்பரங்குன்றம்

இறைவன் - பரங்கிரி நாதர் இறைவி - ஆவுடைநாயகி

பண் : இந்தளம்

கோத்திட்டையுங் கோவலுங் கோயில்கொண்டீர்
உமைக் கொண்டு உழல்கின்றது ஓர் கொல்லைச் சில்லைச்
சேத் திட்டுக் குத்தித் தெருவே திரியுஞ்
சிலபூதமும் நீரும் திசைதிசையன
சோத்திட்டு விண்ணோர்பலருந் தொழ நும்
அரைக் கோவணத்தோடு ஒரு தோல் புடை சூழ்ந்து
ஆர்த்திட்டதும் பாம்பு கைக் கொண்டதும் பாம்பு
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 1

Koviloor Digital Library

முண்டடந் தரித்தீர் முதுகாடு உறைவீர்
முழுநீறு மெய் பூசுதிர் மூக்கப் பாம்பைக்
கண்டத்திலுந் தோளிலுங் கட்டி வைத்தீர்
கடலைக் கடைந்திட்டது ஓர் நஞ்சை உண்டீர்
பிண்டஞ் சுமந்து உம்மொடுங் கூடமாட்டோம்
பெரியாரொடு நட்பு இனிது என்று இருத்தும்
அண்டம் கடந்து அப் புறத்தும் இருந்தீர்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 2

மூடுஆய முயலகன் மூக்கப் பாம்பு
முடை நாறிய வெண்தலை மொய்த்த பல்பேய்
பாடாவரு பூதங்கள் பாய் புலித்தோல்
பரிசு ஒன்று அறியாதன பாரிடங்கள்
தோடார் மலர்க்கொன்றையும் துன் எருக்குந்
துணை மா மணி நாகம் அரைக்கு அசைத்து ஒன்று
ஆடாதனவே செய்தீர் எம்பெருமான்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 3

மஞ்சுண்ட மாலைமதி சூடு சென்னி
மலையான்மடந்தை மணவாள நம்பி
பஞ்சுண்ட அல்குல் பணைமென்முலையாளொடு
நீரும் ஒன்றாய் இருத்தல் ஒழியீர்
நஞ்சு உண்டு தேவர்க்கு அமுதம் கொடுத்த
நலம் ஒன்று அறியோம் உங் கை நாகம்அதற்கு
அஞ்சு உண்டு படம் அது போக விடீர்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 4

Koviloor Digital Library

பொல்லாப் புறங்காட்டுஅகத்து ஆட்டு ஒழியீர்
புலால் வாயன பேயொடு பூச்சு ஒழியீர்
எல்லாம் அறிவீர் இதுவே அறியீர்
என்று இரங்குவேன் எல்லியும் நண்பகலும்
கல்லால்நிழல்கீழ் ஒரு நாள் கண்டதும்
கடம்பூர்க் கரக்கோயிலின் முன் கண்டதும்
அல்லால் விரகு ஒன்று இலம் எம்பெருமான்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 5

தென்னாத்தெனாத்தெத்தெனா என்று பாடிச்
சில்பூதமும் நீரும் திசைதிசையன
பன் நான்மறை பாடுதிர் பாசூர் உளீர்
படம்பக்கம் கொட்டும் திரு ஒற்றியூரீர்
பண்ணார் மொழியாளை ஓர் பங்கு உடையீர்
படுகாட்டு அகத்து என்றும் ஓர் பற்று ஒழியீர்
அண்ணாமலையேன் என்றீர் ஆரூர் உளீர்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 6

சிங்கத்துஉரி மூடுதிர் தேவர்கணந்
தொழ நிற்றீர் பெற்றம் உகந்து ஏறிடுதீர்
பங்கம்பல பேசிடப் பாடும் தொண்டர்
தமைப் பற்றிக்கொண்டு ஆண்டுவிடவும் கில்லீர்
கங்கைச் சடையீர் உம் கருத்து அறியோம்
கண்ணுமூன்று உடையீர் கண்ணேயாய் இருந்தால்
அங்கத்து உறு நோய் களைந்து ஆளகில்லீர்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 7

Koviloor Digital Library

பிணி வண்ணத்த வல்வினை தீர்த்துஅருளீர்
பெருங்காட்டு அகத்திற் பெரும் பேயும் நீரும்
துணிவண்ணத்தின் மேலும் ஓர் தோல் உடுத்துச்
சுற்றும் நாகத்தராய்ச் சுண்ணநீறு பூசி
மணிவண்ணத்தின் மேலும் ஓர் வண்ணத்தராய்
மற்றும் மற்றும் பலபலவண்ணத்தராய்
அணி வண்ணத்தராய் நிற்றீர் எம்பெருமான்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 8

கோள் ஆளிய குஞ்சரம் கோள் இழைத்தீர்
மலையின் தலை அல்லது கோயில்கொள்ளீர்
வேள் ஆளிய காமனை வெந்து அழிய
விழித்தீர் அது அன்றியும் வேய் புரையும்
தோளாள் உமை நங்கை ஓர்பங்கு உடையீர்
உடு கூறையும் சோறும் தந்து ஆளகில்லீர்
ஆள் ஆளியவே கிற்றீர் எம்பெருமான்
அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 9

பாரோடு விண்ணும் பகலுமாகிப்
பனி மால்வரை ஆகிப் பரவையாகி
நீரோடு தீயும் நெடுங் காற்றுமாகி
நெடு வெள்ளிடையாகி நிலனுமாகித்
தேர் ஓட வரை எடுத்த அரக்கன்
சிரம்பத்து இறுத்தீர் உம் செய்கை எல்லாம்
ஆரோடும் கூடா அடிகேள் இது என்
அடியோம் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே 10

Koviloor Digital Library

அடிகேள் உமக்கு ஆட்செய அஞ்சுதும் என்று
அமரர்பெருமானை ஆரூரன் அஞ்சி
முடியால் உலகு ஆண்ட மூவேந்தர்முன்னே
மொழிந்த ஆறும்ஓர்நான்கும் ஓர் ஒன்றினையும்
படியா இவை கற்று வல்ல அவ் அடியார்
பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே
குடிஆகி வானோர்க்கும் ஓர் கோவும் ஆகிக்
குலவேந்தராய் விண்முழுது ஆள்பவரே 11

பதிக வரலாறு : (கோத்திட்)

நம்பியாரூரர் மதுரையிலே மருங்குள்ள சிவபெருமான் திருக்கோயில்களை வணங்கி யெழுந்தருளியிருக்கும்போது தமிழ்நாட்டு வேந்தராகிய சேர சோழ பாண்டியருடன் திருப்பரங்குன்றத்தை அடைந்து திருக்கோயிலிற் சென்று இறைவன் திருவடிக்குத் தொண்டுசெய்யும் அருமை நினைந்து தஞ்சுதும் என்று பாடுவாராய்க் ‘கோத்திட்டையுங் கோவலுங் கோயில் கொண்டீர்’ என்றெடுத்துத் துதித்து இறுதித் திருப்பாட்டில் ‘முடியால்உலகாண்ட மூவேந்தர் முன்னே மொழிந்து’ என்று வைத்து இத்திருப்பதிகம் பாடியருளினார். மூவேந்தரும் இறைவர் திருப்பணியருமையைக் கேட்டிறைஞ்சி நாயனாரை வணங்கித் துதித்தார்கள்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

60. திருப்புனவாயில்

இறைவன் - பழம்பதி நாதர் இறைவி - கருணை நாயகி

பண் : பழம்பஞ்சரம்

சித்த நீ நினை என்னொடு சூள் அறு வைகலும்
மத்தயானையின் ஈர்உரி போர்த்த மணாளன் ஊர்
பத்தர்தாம்பலர் பாடி நின்று ஆடும் பழம் பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறாப் புனவாயிலே 1

கருதி நீ மனம் என்னொடு சூள் அறு வைகலும்
எருது மேற்கொளும் எம்பெருமாற்கு இடமாவது
மருதவானவர் வைகும் இடம் மற வேடுவர்
பொருது சாத்தொடு பூசல் அறாப் புனவாயிலே 2

தொக்காய மனம் என்னொடு சூள் அறு வைகலும்
நக்கான் நமை ஆளுடையான் நவிலும் இடம்
அக்கோடு அரவு ஆர்த்த பிரான் அடிக்கு அன்பராய்ப்
புக்கார்அவர் போற்று ஒழியாப் புனவாயிலே 3

வற்கென்று இருத்திகண்டாய் மனம் என்னொடு சூள் அறு
பொற்குன்றம் சேர்ந்தது ஓர் காக்கை பொன்னாம் அதுவே புகல்
கல்குன்றும் தூறும் கடு வெளியும் கடல் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடும் எம்பெருமான் புனவாயிலே. 4

நில்லாய் மனம் என்னொடு சூள் அறு வைகலும்
நல்லான் நமை ஆளுடையான் நவிலும் இடம்
வில்வாய்க் கணை வேட்டுவர் ஆட்ட வெருண்டு போய்ப்
புல்வாய்க்கணம் புக்கு ஒளிக்கும் புனவாயிலே 5

Koviloor Digital Library

மறவல் நீ மனம் என்னொடு சூள் அறு வைகலும்
உறவும் ஊழியும்ஆய பெம்மாற்கு இடமாவது
பிறவு கள்ளியின் நீள் கவட்டு ஏறித் தன் பேடையைப்
புறவம் கூப்பிடப் பொன் புனம் சூழ் புனவாயிலே 6

ஏசு அற்று நீ நினை என்னொடு சூள் அறு வைகலும்
பாசு அற்றவர் பாடி நின்று ஆடும் பழம் பதி
தேசத்து அடியவர் வந்து இருபோதும் வணங்கிடப்
பூசல் துடி பூசல் அறாப் புனவாயிலே 7

கொள்ளிவாயின கூர்எயிற்று ஏனம் கிழிக்கவே
தெள்ளி மா மணி தீவிழிக்கும் இடம் செந் தறை
கள்ளி வற்றிப் புல் தீந்து வெங் கானம் கழிக்கவே
புள்ளி மான்இனம் புக்கு ஒளிக்கும் புனவாயிலே 8

எற்றே நினை என்னொடு சூள் அறு வைகலும்
மற்று ஏதும் வேண்டா வல்வினை ஆயின மாய்ந்து அறக்
கல் தூறு கார்க் காட்டுஇடை மேய்ந்த கார்க்கோழி போய்ப்
புற்று ஏறிக்கூ கூஎன அழைக்கும் புனவாயிலே 9

பொடிஆடு மேனியன் பொன் புனம் சூழ் புனவாயிலை
அடியார்அடியன் நாவல் ஊரன் உரைத்தன
மடியாது கற்று இவை ஏத்த வல்லார் வினை மாய்ந்து போய்க்
குடியாகிப் பாடி நின்று ஆட வல்லார்க்கு இல்லை குற்றமே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

61. திருக்கானப்பேர்

இறைவன் - காளையீசுரர் இறைவி - சொர்ணவல்லி

பண் : புறநீர்மை

தொண்டர் அடித் தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகி வரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும் வானவர்கள்
பூசல் இடக் கடல்நஞ்சு உண்ட கருத்து அமரும்
கொண்டல் எனத் திகழும் கண்டமும் எண்தோளும்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும் கண்குளிரக்
கண்டு தொழப் பெறுவது என்று கொலோ அடியேன்
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே 1

கூதலிடுஞ் இடும் சடையும் கோள் அரவும் விரவும்
கொக்குஇறகும் குளிர் மா மத்தமும் ஒத்து உன தாள்
ஓதல் உணர்ந்து அடியார் உன் பெருமைக்கு நினைந்து
உன் உருகா விரசும் ஓசையைப் பாடலும் நீ
ஆதல் உணர்ந்து அவரோடு அன்பு பெருத்து அடியேன்
அங்கையில் மா மலர் கொண்டு என்கணது அல்லல் கெடக்
காதலுறத் தொழுவது என்றுகொலோ அடியேன்
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே 2

நான் உடை மாடு எனவே நன்மை தரும் பரனை
நற் பதம் என்று உணர்வார் சொற்பதமார் சிவனைத்
தேன்இடை இன்னமுதை மற்றுஅதனில் தெளிவைத்
தேவர்கள் நாயகனைப் பூ உயர் சென்னியனை

Koviloor Digital Library

வான்இடை மா மதியை மாசறு சோதியனை
மாருதமும் அனலும் மண்தலமுமாய
கான்இடை மா நடன் என்று எய்துவது என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 3

செற்றவர் முப்புரம் அன்று அட்ட சிலைத் தொழிலார்
சேவகம் முன் நினைவார் பாவகமும் நெறியும்
குற்றமில் தன் அடியார் கூறும் இசைப் பரிசும்
கோசிகமும் அரையில் கோவணமும் அதளும்
மல் திகழ் திண்புயமும் மார்பு இடை நீறு துதை
மாமலைமங்கை உமை சேர் சுவடும் புகழக்
கற்றனவும் பரவிக் கைதொழல் என்று கொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 4

கொல்லை விடைக் குழகும் கோல நறுஞ்சடையில்
கொத்து அலரும் இதழித்தொத்தும் அதன் அருகே
முல்லை படைத்த நகை மெல்லியலாள் ஒரு பால்
மோகம் மிகுத்து இலகும் கூறு செய் எப்பரிசும்
தில்லைநகர்ப் பொது உற்று ஆடிய சீர் நடமும்
திண்மழுவும் கைமிசைக் கூர் எரியும் அடியார்
கல்லவடப் பரிசும் காணுவது என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 5

பண்ணு தலைப் பயனார் பாடலும் நீடுதலும்
பங்கயமாது அனையார் பத்தியும் முத்தி அளித்து
எண்ணு தலைப்பெருமான் என்று எழுவார்அவர்தம்
ஏசறவும் இறையாம் எந்தையையும் விரவி

Koviloor Digital Library

நண்ணுதலைப் படுமாறு எங்ஙனம் என்று அயலே
நையுறும் என்னை மதித்து உய்யும் வணம் அருளும்
கண்ணுதலைக் கனியைக் காண்பது என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 6

மாவை உரித்து அதள் கொண்டு அங்கம் அணிந்தவனை
வஞ்சர் மனத்து இறையும் நெஞ்சு அணுகாதவனை
மூவர்உருத் தனதாம் மூலமுதல்கருவை
மூசிடு மால்விடையின் பாகனை ஆகம் உறப்
பாவகம் இன்றி மெய்யே பற்றுமவர்க்கு அமுதைப்
பால் நறுநெய் தயிர் ஐந்துஆடு பரம்பரனைக்
காவல் எனக்கு இறை என்று எய்துவது என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 7

தொண்டர்தமக்கு எளிய சோதியை வேதியனைத்
தூய மறைப்பொருளாம் நீதியை வார்கடல்நஞ்சு
உண்டு அதனுக்கு இறவாது என்றும் இருந்தவனை
ஊழி படைத்தவனொடு ஒள் அரியும் உணரா
அண்டனை அண்டர்தமக்கு ஆகமநூல் மொழியும்
ஆதியை மேதகு சீர் ஓதியை வானவர்தம்
கண்டனை அன்பொடு சென்று எய்துவது என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 8

நாதனை நாதம் மிகுத்த ஓசைஅதுஆனவனை
ஞானவிளக்குஒளியாம் ஊன்உயிரைப் பயிரை
மாதனை மேதகு தன் பத்தர் மனத்து இறையும்
பற்று விடாதவனைக் குற்றமில் கொள்கையனைத்

Koviloor Digital Library

தூதனை என்தனை ஆள் தோழனை நாயகனைத்
தாழ் மகரக்குழையும் தோடும் அணிந்த திருக்
காதனை நாய் அடியேன் எய்துவது என்றுகொலோ
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 9

கன்னலை இன்னமுதைக் கார்வயல் சூழ் கானப்
பேர் உறை காளையை ஒண் சீர் உறை தண்தமிழால்
உன்னி மனத்து அயரா உள் உருகிப் பரவும்
ஒண் பொழில் நாவலர்கோன் ஆகிய ஆரூரன்
புன்னும் இசைக்கிளவி பத்து இவை பாட வல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசையும் புகழ
மன்னி இருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே. 10

பதிக வரலாறு : (தொண்ட)

திருவிராமேச்சரத்தை வழிபட்டு ஈழநாட்டுத் திருக்கேதீச்சரத்தைச் சொன்மலர் மாலைகள் சாத்தித் தொலைவிலேயே தொழுதமர்ந்த நம்பியாரூரரும் சேரர் பெருமானும் திருச்சுழியலை அடைந்து, கருச் சுழியில் வீழாமற் காக்குங் கடவுளை நம்பியாரூரர் திருப்பதிகம் பாடிப் போற்ற, இருவரும் அங்குறைந்தார்கள். பணிந்துறையும் ஆரூரருக்கு அவ்வூரில் அன்றிரவிற் கனவினிடத்துக் காளையாம் திருவடிவத்தோடு செங்கையிற் பொற்செண்டும் திருமுடியிற் சுழியமும் உடையராய், இறைவன் எங்குமிலாத் திருக்கோலத்தை என்புருகும்படி காட்டி 'யாமிருப்பது கானப்பேர்' என்று சொல்லி மறைந்தருளினாராக, 'ஞானப்' பேராளராகிய நம்பியாரூரர் தாங் கண்டதைச் சேரர் பெருமானுக்கு மொழிந்தருளிச் சுழியற் புனிதன் கழல் வணங்கிப் புறப்பட்டுத் திருக்கானப் பேற்றை அடைவார், இப்பதிகத்தை யெடுத்து ஈற்றில் 'காளையார் தமைத் தொழப் பெறுவதெனா' றென்று வைத்துப் பாடிச் சென்று வணங்கி வழிபட்டார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

62. திருப்பூவணம்

இறைவன் - பூவணநாதர் இறைவி - மின்னம்மை

பண் : இந்தளம்

திருவுடையார் திருமால் அயனாலும்
உருவுடையார் உமையாளை ஓர்பாகம்
பரிவுடையார் அடைவார் வினை தீர்க்கும்
புரிவுடையார் உறை பூவணம் ஈதோ ! 1

எண்ணி இருந்து கிடந்தும் நடந்தும்
அண்ணல் எனா நினைவார் வினை தீர்ப்பார்
பண் இசையார் மொழியார் பலர் பாடப்
புண்ணியனார் உறை பூவணம் ஈதோ ! 2

தெள்ளிய பேய்பல பூதம் அவற்றோடு
நள்இருள் நட்டம்அதுஆடல் நவின்றோர்
புள்ளுவர் ஆகும் அவர்க்கு அவர் தாமும்
புள்ளுவனார் உறை பூவணம் ஈதோ ! 3

நிலன் உடை மான்மறி கையது தெய்வக்
கனல் உடை மா மழு ஏந்தி ஓர் கையில்
அனல் உடையார் அழகார்தரு சென்னிப்
புனல் உடையார் உறை பூவணம் ஈதோ ! 4

நடை உடை நல் எருது ஏறுவர் நல்லார்
கடை கடை தோறு இடுமின் பலி என்பார்
துடிஇடை நன் மடவாளொடு மார்பில்
பொடி அணிவார் உறை பூவணம் ஈதோ ! 5

Koviloor Digital Library

மின் அனையாள் திருமேனி விளங்க ஓர்
தன் அமர் பாகமதாகிய சங்கரன்
முன் நினையார் புரம்மூன்று எரியூட்டிய
பொன் அனையான் உறை பூவணம் ஈதோ ! 6

மிக்கு இறை ஏயவன் துன்மதியாலிட
நக்கு இறையே விரலால் இற ஊன்றி
நெக்கு இறைஞ்சி நினைவார் தனி நெஞ்சம்
புக்கு உறைவான் உறை பூவணம் ஈதோ ! 7

.... 8,9

சீரின் மிகப் பொலியுந் திருப்பூவணம்
ஆர இருப்புஇடமா உறைவான்தனை
ஊரன் உரைத்த சொன் மாலைகள் பத்துஇவை
பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே ! 10

பதிக வரலாறு : (திருவுடை)

திருவாலவாயிலே இறைவரை வழிபட்டு மூவேந்தர்களோடும் எழுந்தருளியிருந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பூவணத்தை வணங்க விரும்பியவர்களோடும் புறப்பட்டுச் சென்றதனை நெருங்கியபோது அருகே சூழ்ந்துவருதிருத்தொண்டர்கள் அதனைச் சுட்டிக்காட்டத் 'தேடு மறைக்கரியாரைத் திருவுடையாரென்றெடுத்துப் பாடிசையிற் பூவண மீதோ என்று பகர்ந்தணைந்து வணங்கி வழிபட்டார்',

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

63. திருச்சுழியல்

இறைவன் - திருமேனி நாதர் இறைவி - துணைமாலைநாயகி

பண் : நட்டபாடை

ஊனாய் உயிர் புகலாய் அகலிடமாய் முகில்பொழியும்
வானாய் வரு மதியாய் விதி வருவானிடம் பொழிலின்
தேன் ஆதரித்து இசை வண்டுஇனம் மிழற்றும் திருச் சுழியல்
நானாவிதம் நினைவார் தமை நலியார் நமன்தமரே 1

தண்டு ஏர் மழுப்படையான் மழவிடையான் எழு கடல்நஞ்சு
உண்டே புரம் எரியச் சிலை வளைத்தான் இமையவர்க்காத்
திண் தேர்மிசை நின்றான் அவன் உறையும் திருச் சுழியல்
தொண்டே செய வல்லார்அவர் நல்லார் துயர் இலரே 2

கவ்வைக் கடல் கதறிக் கொணர் முத்தங் கரைக்கு ஏற்றக்
கொவ்வைத் துவர்வாயார் குடைந்து ஆடும் திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடு செய்து எழுவார் அடி தொழுவார்
அவ்வத் திசைக்கு அரசு ஆகுவர் அலராள் பிரியாளே 3

மலையான்மகள்மடமாது இடமாகத்தவண் மற்றுக்
கொலை யானையின் உரி போர்த்த எம்பெருமான் திருச் சுழியல்
அலையார் சடை உடையான் அடி தொழுவார் பழுது உள்ளம்
நிலையார் திகழ் புகழால் நெடுவானத்து உயர்வாரே 4

உற்றான் நமக்கு உயரும் மதிச் சடையான் புலன்ஐந்தும்
செற்றார் திருமேனிப் பெருமான் ஊர் திருச் சுழியல்
பெற்றான் இனிது உறையத் திறம்பாமைத் திருநாமம்
கற்றார்அவர் கதியுட் செல்வர் ஏத்தம்மது கடனே 5

Koviloor Digital Library

மலந் தாங்கிய பாசப் பிறப்பு அறுப்பீர் துறைக் கங்கைச்
சலந் தாங்கிய முடியான் அமர்ந்த இடமாம் திருச் சுழியல்
நிலந் தாங்கிய மலரால் கொழும் புகையால் நினைந்து ஏத்தும்
தலந் தாங்கிய புகழான் மிகு தவமாம் சதுர் ஆமே. 6


சைவத்த செவ்உருவன் திருநீற்றன் உரும்ஏற்றன்
கை வைத்த ஒரு சிலையால் அரண்மூன்றும் எரிசெய்தான்
தெய்வத்தவர் தொழுது ஏத்திய குழகன் திருச் சுழியல்
மெய் வைத்து அடி நினைவார் வினை தீர்தல் எளிதன்றே. 7

பூ ஏந்திய பீடத்தவன்தானும் அடல் அரியும்
கோ ஏந்திய வினயத்தொடு குறுகப் புகல் அறியார்
சே ஏந்திய கொடியான்அவன் உறையுந் திருச் சுழியல்
மா ஏந்திய கரத்தான் எம சிரத்தான் தனது அடியே. 8

கொண்டாடுதல் புரியா வரு தக்கன் பெரு வேள்வி
செண்டுஆடுதல் புரிந்தான் திருச் சுழியல் பெருமானைக்
குண்டாடிய சமண்ஆதர்கள் குடைச் சாக்கியர் அறியா
மிண்டாடியஅது செய்தது ஆனால் வரு விதியே. 9

நீர் ஊர்தரு நிமலன் திருமலையார்க்கு அயல் அருகே
தேர் ஊர்தரும் அரக்கன் சிரம் நெரித்தான் திருச் சுழியல்
பேர் ஊர் என உறைவான் அடிப்பெயர் நாவலர்கோமான்
ஆரூரன் தமிழ்மாலைபத்து அறிவார் துயர் இலரே. 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

64. திருஅஞ்சைக்களம்

இறைவன் - அஞ்சைக்களத்து அப்பர் இறைவி - உமை அம்மை

பண் : இந்தளம்

தலைக்குத் தலைமாலை அணிந்தது என்னே
சடைமேல் கங்கைவெள்ளம் தரித்தது என்னே
அலைக்கும் புலித்தோல் கொண்டு அசைத்தது என்னே
அதன்மேல் கதநாகம் கச்சு ஆர்த்தது என்னே
மலைக்கு நிகர் ஒப்பன வன் திரைகள்
வலித்து எற்றி முழங்கி வலம்புரி கொண்டு
அலைக்கும் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 1

பிடித்து ஆட்டி ஓர் நாகத்தைப் பூண்டது என்னே
பிறங்கும் சடைமேல் பிறை சூடிற்று என்னே
பொடித்தான் கொண்டு மெய்ம் முற்றும் பூசிற்று என்னே
புகர் ஏறு உகந்து ஏறல் புரிந்தது என்னே
மடித்து ஒட்டந்து வன் திரை எற்றியிட
வளர் சங்கம் அங்காந்து முத்தம் சொரிய
அடித்தார் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 2

சிந்தித்து எழுவார்க்கு நெல்லிக்கனியே
சிறியார் பெரியார் மனத்து ஏறல்உற்றால்
முந்தித் தொழுவார் இறவார் பிறவார்
முனிகள்முனியே அமரர்க்கு அமரா

Koviloor Digital Library

சந்தித் தடமால்வரை போல் திரைகள்
தணியாது இடறும் கடல்அங்கரைமேல்
அந்தித்தலைச் செக்கர்வானே ஒத்தியால்
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 3

இழைக்கும் எழுத்துக்கு உயிரே ஒத்தியால்
இலையே ஒத்தியால் உளையே ஒத்தியால்
குழைக்கும் பயிர்க்கு ஓர் புயலே ஒத்தியால்
அடியார்தமக்கு ஓர் குடியே ஒத்தியால்
மழைக்குந் நிகர் ஒப்பன வன் திரைகள்
வலித்து எற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அழைக்கும் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 4

வீடின் பயன் என் பிறப்பின் பயன் என்
விடை ஏறுவது என்மதயானை நிற்கக்
கூடும் மலைமங்கைஒருத்தி உடன்
சடைமேல் கங்கையானை நீ சூடிற்று என்னே
பாடும் புலவர்க்கு அருளும் பொருள் என்
நிதியம் பல செய்த கலச் செலவின்
ஆடும் கடல் அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 5

இரவத்து இடுகாட்டு எரிஆடிற்று என்னே
இறந்தார் தலையில் பலி கோடல் என்னே
பரவித் தொழுவார் பெறு பண்டம் என்னே
பரமா பரமேட்டி பணித்து அருளாய்

Koviloor Digital Library

உரவத்தொடு சங்கமொடு இப்பி முத்தம்
கொணர்ந்து எற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அரவக் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 6

ஆக்கும் அழிவும் அமைய நீ என்பன் நான்
சொல்லுவார் சொல்பொருள்அவை நீ என்பன் நான்
நாக்கும் செவியும் கண்ணும் நீ என்பன் நான்
நலனே இனி நான் உனை நன்கு உணர்ந்தேன்
நோக்கும் நிதியம்பல எத்தனையும்
கலத்தில் புகப் பெய்துகொண்டு ஏற நுந்தி
ஆர்க்கும் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 7

வெறுத்தேன் மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்கும் குழைக் காது உடை வேதியனே
இறுத்தாய் இலங்கைக்கு இறைஆயவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்று விழக்
கறுத்தாய் கடல்நஞ்சு அமுதுஉண்டு கண்டம்
கடுகப் பிரமன் தலைஐந்திலும் ஒன்று
அறுத்தாய் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 8

பிடிக்குக் களிறே ஒத்தியால் எம்பிரான்
பிரமற்கும் பிரான் மற்றை மாற்கும் பிரான்
நொடிக்கும் அளவில் புரம்மூன்று எரியச்
சிலை தொட்டவனே உனை நான் மறவேன்

Koviloor Digital Library

வடிக்கின்றன போல் சில வன் திரைகள்
வலித்து எற்றி முழங்கி வலம்புரிகொண்டு
அடிக்கும் கடல்அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே. 9

எம்தம் அடிகள் இமையோர்பெருமான்
எனக்கு என்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந் தண்கடல் அங்கரைமேல் மகோதை
அணியார் பொழில் அஞ்சைக்களத்து அப்பனை
மந்தம் முழவும் குழலும் இயம்பும்
வளர் நாவலர்கோன் நம்பிஊரன் சொன்ன
சந்தம் மிகு தண்தமிழ்மாலைகள் கொண்டு
அடி வீழ வல்லார் தடுமாற்று இலரே. 10

பதிக வரலாறு : (தலைக்குத்)

சுந்தரமூர்த்தி நாயனார் சேரநாட்டை யடைந்து ஆண்டுள்ள சிவபிரான் கோயில்களை வணங்கிச் சேரர் பெருமானோடு அளவளாவியிருக்கும் நாள்களில் ஒருநாள் சேரர் பெருமான் திருமுழுக்காடுந் (திருமஞ்சனத்) தொழிலிலிருக்கும் போது தாம் நந் தலைவரைப் பிரிந்த பிரிவை வருந்திச் சேரும் நாள் குறுகிய தன்மையாற் றிருவஞ்சைக்களத்தை யடைந்து வலம்வந்து இறைவரிணையடிகளைப் போற்றி உலகில் விழுந்தெழுந் தலைப்புறு மனைவாழ்க்கை சரியுமாறு 'தலைக்குத் தலைமாலை' யென்னுமிப் பதிகத்தை யெடுத்து அதில் இவ்வுலகினிற் பாச மடுத்த வாழ்க்கையை யறுத்திடவேண்டுமென்னும் கருத்தை எட்டாந் திருப்பாட்டினிலமைத்துப் பாடியருளினார். இதனைச் செவிமடுத்தருளிய சிவபெருமான் தமது திருமுன்னுள்ள நான்முகன் திருமால் முதலிய பெரிய தேவரை நம்மூரனையும்பர் வெள்ளானையி னேற்றிக்கொண்டிங்கு வாருமென்றாணையிட்டருளலும் அவர்கள் அவ்வாறு வந்து திருவஞ்சைக்களத்துத் திருக்கோயிற்றிருவாயிலிற் காத்திருந்து வெளிவந்த நாயனாருக்கு இறைவனாணையைச் செப்பி வணங்கி யதினேற்றிக் கயிலைக்கழைத்துச் சென்றனர்.

Koviloor Digital Library

65. திருப்புக்கொளியூர் அவினாசி

இறைவன் - அவிநாசி அப்பர் இறைவி - கருணாம்பிகை

பண் : குறிஞ்சி

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்று உன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்
புற்று ஆடு அரவா புக்கொளியூர் அவினாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதியே பரமேட்டியே 1

வழி போவார்தம்மோடும் வந்து உடன்கூடிய மாணி நீ
ஒழிவது அழகோ சொல்லாய் அருள் ஓங்கு சடையானே
பொழில் ஆரும் சோலைப் புக்கொளியூரில் குளத்துஇடை
இழியாக் குளித்த மாணி என்னைக் கிறி செய்ததே 2

எங்கேனும் போகினும் எம்பெருமானை நினைந்தக்கால்
கொங்கே புகினும் கூறை கொண்டு ஆறலைப்பார் இலை
பொங்கு ஆடுஅரவா புக்கொளியூர் அவின்ாசியே
எம் கோனே உனை வேண்டிக்கொள்வேன் பிறவாமையே 3

உரைப்பார் உரை உகந்து உள்க வல்லார்தங்கள் உச்சியாய்
அரைக்கு ஆடுஅரவா ஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக் காடு சோலைப் புக்கொளியூர் அவினாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே 4

அரங்கு ஆவது எல்லாமாய் இடுகாடு அது அன்றியும்
சரம் கோலை வாங்கி வரிசிலை நாணியில் சந்தித்துப்
புரம் கோட எய்தாய் புக்கொளியூர் அவினாசியே
குரங்கு ஆடு சோலைக் கோயில் கொண்ட குழைக் காதனே 5

Koviloor Digital Library

நாத்தானும் உனைப் பாடல் அன்றி நவிலாது எனாச்
சோத்து என்று தேவர் தொழ நின்ற சுந்தரச் சோதியாய்
பூத் தாழ்சடையாய் புக்கொளியூர் அவிநாசியே
கூத்தா உனக்கு நான் ஆட்பட்ட குற்றமும் குற்றமே 6

மந்தி கடுவனுக்கு உண் பழம் நாடி மலைப்புறம்
சந்திகள்தோறும் சலம்புட்பம் இட்டு வழிபடப்
புந்தி உறைவாய் புக்கொளியூர் அவிநாசியே
நந்தி உனை வேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே 7

பேணாது ஒழிந்தேன் உன்னை அல்லால் பிற தேவரைக்
காணாது ஒழிந்தேன் காட்டுதியேல் இன்னம் காண்பன் நான்
பூண் நாண் அரவா புக்கொளியூர் அவிநாசியே
காணாத கண்கள் காட்ட வல்ல கறைக்கண்டனே 8

நள்ளாறு தெள்ளாறு அரத்துறைவாய் எங்கள் நம்பனே
வெள்ளாடை வேண்டாய் வேங்கையின்தோலை விரும்பினாய்
புள் ஏறு சோலைப் புக்கொளியூரில் குளத்துஇடை
உள் ஆடப் புக்க மாணி என்னைக் கிறி செய்ததே 9

நீர் ஏற ஏறு நிமிர்புன்சடை நின்மல மூர்த்தியைப்
போர் ஏறுஅது ஏறியைப் புக்கொளியூர் அவிநாசியைக்
கார் ஏறு கண்டனைத் தொண்டன் ஆரூரன் கருதிய
சீர் ஏறு பாடல்கள் செப்ப வல்லார்க்கு இல்லை துன்பமே 10

பதிக வரலாறு : (எற்றான் மறக்கே)

நம்பியாரூரர் சேரமான்பெருமாள் நாயனாரை நினைத்துத் திருவாரூனின்றும் புறப்பட்டு அவர்பாற் செல்கின்றவர். கொங்கு நாட்டையடைந்து திருப்புக்கொளியூர் வழியாகச் செல்வாராயினர்.

Koviloor Digital Library

அப்போது அவ்வூர் மறையவர் தெருவொன்றில் ஒரு வீட்டில் அழுகையொலியும், அதற்கெதிரான மற்றொரு வீட்டில் மங்கலஒலியும் எழுதலை நாயனார் கண்டு வியந்து அருகிருந்தாரை என்னென்று வினாவினர். அவர், ஐந்தாண்டு நிரம்பிய இவ்விரண்டு வீட்டுப் பிள்ளைகளும் ஒருகால் அருகுள்ள குளத்துக்குச் சென்று நீராடினாராக., அவருள் ஒருவனை முதலை விழுங்கிற்று. மற்றவன் வீடு சேர்ந்தான். வீடு சேர்ந்தவனுக்கு இன்று பூணூற்றிருமணம். ஆதலால், அவ்வீட்டில் மங்கல ஒலியும் அதுகண்டு எதிர் வீட்டில் முதலை விழுங்கிய தன்மகனையெண்ணி ஆற்றராய்ப் பெற்றோர் செய்யும் அழுகையொலியும் ஒரே காலத்தில் எழுகின்றன என்றார்கள். நாயனார் கேட்டு மிக இரங்கினர். இதற்குள் நாயனார் வரவு கேட்ட அவ்வழுகையொலிப் பெற்றோர் அவர் வரவுக்கு மகிழ்ந்து எதிர் வந்து வணங்கினர். நம்பியாரூரர் பின்னும் இரக்கம் மிக்கவராய்த் திருவருளால் இவர்கள் குழந்தையை முதலைவாயினின்றும் மீட்டுத் தந்து அவிநாசிப் பெருமானை வணங்குவேனென்று உறுதி செய்துகொண்டு, குளத்தையணுகி எற்றான் மறக்கேனென்னுமித் திருப்பதிகமெடுத்துக் கரைக்கான் முதலையைப் பிள்ளைதரச் சொல்லு காலனையே என்று கூறுதலும், அம்முதலை சென்ற ஆண்டுகளும் நிரம்பிய அம்மனைக் கரையிற் கொணர்ந்து உமிழ்ந்தது. உடனே பெற்றோர் முதலிய எல்லோரும் உளங்காணா வியப்பும் மகிழ்ச்சியும் மிக்கவராய், ஆரூரரையும் அவிநாசியப்பனையும் வணங்கி ஏத்தினர். அப்பால் நாயனார் அக்குழந்தைக்கும் எதிர்வீட்டுக் குழந்தையோடொப்ப அப்போதே பூணூற் திருமணஞ் செய்வித்து அவ்வீட்டில் மங்கல ஒலியை ஒப்ப எழுவித்து அவிநாசியப்பரை உளங்கரைந்து தொழுது உடனே மலைநாட்டுக்குப் புறப்பட்டருளினார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

66. திருமுருகன்பூண்டி

இறைவன் - முருகாவுடையார் இறைவி - ஆவுடைநாயகி
பண் : பழம்பஞ்சுரம்

கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகு மொட்டு எனக் குத்திக் கூறை கொண்டு
ஆறலைக்கும் இடம்
முடுகு நாறிய வடுகர் வாழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இடுகு நுண்இடை மங்கைதன்னொடும்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 1

வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும் மோதியும்
கூறை கொள்ளும் இடம்
முல்லைத்தாது மணம் கமழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
எல்லைக் காப்பது ஒன்று இல்லைஆகில் நீர்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 2

Koviloor Digital Library

பசுக்களே கொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்று அறியார்
உசிர்க்கொலைபல நேர்ந்து நாள்தொறும்
கூறை கொள்ளும் இடம்
முசுக்கள் போல் பலவேடர் வாழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இசுக்கு அழியப் பயிக்கம் கொண்டு நீர்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 3

பீறல் கூறை உடுத்து ஓர் பத்திரம்
கட்டி வெட்டினராய்ச்
சூறைப் பங்கியராகி நாள்தொறும்
கூறை கொள்ளும் இடம்
மோறை வேடுவர் கூடி வாழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
ஏறு கால் இற்றது இல்லையாய்விடில்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 4

தயங்கு தோலை உடுத்துச் சங்கர
சாமவேதம் ஓதி
மயங்கி ஊர் இடு பிச்சை கொண்டு உணும்
மார்க்கம் ஒன்று அறியீர்
முயங்கு பூண் முலை மங்கையாளொடு
முருகன்பூண்டி மா நகர்வாய்
இயங்கவும் மிடுக்கு உடையராய்விடில்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 5

Koviloor Digital Library

விட்டு இசைப்பன கொக்கரை கொடு
கொட்டி தத்தளகம்
கொட்டிப் பாடுமித் துந்துமியொடு
குடமுழா நீர் மகிழ்வீர்
மொட்டு அலர்ந்து மணம் கமழ் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இட்ட பிச்சை கொண்டு உண்பதுஆகில் நீர்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 6

வேதம் ஓதி வெண்நீறு பூசி வெண்
கோவணம் தற்று அயலே
ஓதம் மேவிய ஒற்றியூரையும்
உத்திரம் நீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும்
முருகன்பூண்டி மா நகர்வாய்
ஏது காரணம் ஏது காவல் கொண்டு
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 7

படஅரவு நுண் ஏர் இடைப் பணைத்
தோள் வரிநெடுங்கண்
மடவர்ல் உமைநங்கைதன்னை ஓர்
பாகம் வைத்து உகந்தீர்
முடவர் அல்லீர் இடர் இலீர் முருகன்
பூண்டி மா நகர்வாய்
இடவம் எறியும் போவதுஆகில் நீர்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 8

Koviloor Digital Library

சாந்தமாக வெண்நீறு பூசி வெண்
பல் தலை கலனா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணிதன்னை ஓர்
பாகம் வைத்து உகந்தீர்
மோந்தையோடு முழக்கு அறா முருகன்
பூண்டி மா நகர்வாய்
ஏந்து பூண் முலை மங்கைதன்னொடும்
எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே. 9

முந்தி வானவர்தாம் தொழும் முருகன்
பூண்டி மா நகர்வாய்ப்
பந்து அணைவிரல் பாவை தன்னை ஓர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையில் சிவதொண்டன்ஊரன்
உரைத்தனபத்தும் கொண்டு
எம்தம் அடிகளை ஏத்துவார் இடர்
ஒன்றும் தாம் இலரே. 10


பதிக வரலாறு : (கொடுகுவெஞ்சிலை)

மலை நாட்டிலே திருவஞ்சைக்களத்திலே சேரர் பெருமானோடு அளவளாவியிருந்த வன்றொண்டப் பெருமான் திருவாரூரை மிகவும் நினைந்த சிந்தையராய்த் திருத்தொண்டரோடு வழிக்கொள்ளும்போது சேரர்பிரான் முன்வந்து பிரிவற்றாமையான் மிகவருந்த நாயனார் அவரை அன்றினார் முனைமுருக்கி அரசாண்டுகொண்டிருக்கும்படி சொல்லியருளலும், அது கேட்டு வானவரம்பனார் தம்முடைய மந்திரிகளை அழைத்து நமது நகரில் இற்றைக்கு முன் புகுந்த பல வகையான நற்பெரும் பண்டாரமெல்லாம் பற்பல ஆள்களின் மேல்

Koviloor Digital Library

ஏற்றிவரும்படி பணித்தார். அவரும் பலவகை திரவியங்கள் உயர்ந்த பொன்மணிகள், மணியிழைகள், ஆடைகள் பலவகையான விரைப்பண்டங்கள் மற்றும் பிறவற்றையும் பொதியாள்களின் மேல் ஏற்றி எங்கும் நிறையக் கொண்டுவர, அவரைச் சேரர் பெருமான் பரிசனங்களுக்கு முன்னே செல்ல ஏவி நம்பியாரூரைப் பணிந்து திரும்பினார். ஆரூரரும் மலைநாடு கடந்து கற்சுரங்கள் காட்டாறுகள் பெருங்காடுகள் பல கடந்து, திருமுருகன்பூண்டிக்கருகு செல்லும் பொழுது இறைவர் அவர்க்குத் தாமே பொன்கொடுப்பதல்லாமல் வேறொருவர் கொடுப்பக் கொள்வது கூடாதென்றோ மற்றென்னோ யாமறியோம்; வென்றிமிக்க பூதங்களை வேடர் வடிவாய்ச் சென்று பொதியாள்களை மறித்துப் பறிக்கும்படி அருளலும் அவைகளும் அவ்வாறே சென்று சினந்தெழுந்து வில்வாங்கி நாணிலே அம்புகளைத் தொடுத்து அச்சுறுத்திப் பறித்து ஆரூரர்பாற் செல்லாது நீங்கின. நம்பியாரூரரும் திருமுருகன் பூண்டியை அடைந்து கோயிலைச் சேர்ந்து வலம் வந்து பணிந்து திருமுன்பு போய்க் கைகூப்பி வணங்கி எழுந்து 'வெருவுற வேடுவர் பறிக்கும் வெஞ்சரத்தில் எத்துக்கிங்கு அருகிருந்தீர்' என்று வைத்துக் 'கொடுகு வெஞ்சிலை' என்னும் இப்பதிகம் பாடியருளினார். பாடிப் பரவியபின் இறைவர் பறித்த அப்பொன்னையெல்லாம் கோபுரவாயிலின் மருங்கு குவித்திடலும் நாயனார் பணிந்து அவற்றை அப்படியே கொண்டு இறைவனை வணங்கித் திருவாரூருக்கு எழுந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

67. திருவெஞ்சமாக்கூடல்

இறைவன் - விகிர்தேசுவரர் இறைவி - விகிர்தேசுவரி

பண் : கொல்லிக்கௌவாணம்

எறிக்கும் கதிர் வேய் உதிர் முத்தம்மோடு
ஏலம் இலவங்கம் தக்கோலம் இஞ்சி
செறிக்கும் புனலுள் பெய்துகொண்டு மண்டித்
திளைத்து எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்
முறிக்கும் தழை மா முடப்புன்னை ஞாழல்
குருக்கத்திகள்மேல் குயில் கூவல் அறா
வெறிக்கும் கலைமா வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 1

குளங்கள்பலவும் குழியும் நிறையக்
குட மா மணி சந்தனமும் அகிலும்
துளங்கும் புனலுள் பெய்துகொண்டு மண்டித்
திளைத்து எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்
வளம் கொள் மதில் மாளிகை கோபுரமும்
மணி மண்டபமும் இவை மஞ்சுதன்னுள்
விளங்கும் மதி தோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 2

வரை மான் அனையார் மயில்சாயல் நல்லார்
வடிவேல்கண் நல்லார் பலர் வந்து இறைஞ்சத்
திரையார் புனலுள் பெய்துகொண்டு மண்டித்
திளைத்து எற்று சிற்றாறு அதன் கீழ்க்கரைமேல்

Koviloor Digital Library

நிரையார் கமுகும் நெடுந் தாள் தெங்கும்
குறுந் தாள் பலவும் விரவிக் குளிரும்
விரையார் பொழில் சூழ் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 3

பண் நேர் மொழியாளை ஓர்பங்கு உடையாய்
படு காட்டுஅகத்து என்றும் ஓர் பற்று ஒழியாய்
தண்ணார் அகிலும் நல சாமரையும்
அலைத்து எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்
மண்ணார் முழவும் குழலும் இயம்ப
மடவார் நடமாடு மணி அரங்கில்
விண்ணார் மதி தோய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 4

துளை வெண்குழையும் சுருள் வெண்தோடும்
தூங்கும் காதில் துளங்கும் படியாய்
களையே கமழும் மலர்க்கொன்றையினாய்
கலந்தார்க்கு அருள்செய்திடும் கற்பகமே
பிளைவெண்பிறையாய் பிறங்கும் சடையாய்
பிறவாதவனே பெறுதற்கு அரியாய்
வெளைமால்விடையாய் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 5

தொழுவார்க்கு எளியாய் துயர் தீர நின்றாய்
சுரும்பார் மலர்க்கொன்றை துன்றும் சடையாய்
உழுவார்க்கு அரியவ் விடை ஏறி ஒன்னார்
புரம் தீ எழ ஓடுவித்தாய் அழகார்

Koviloor Digital Library

முழவார் ஒலிபாடலொடு ஆடல் அறா
முதுகாடு அரங்கா நடம் ஆட வல்லாய்
விழவார் மறுகின் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 6

கடமா களியானை உரித்தவனே
கரிகாடு இடமா அனல் வீசி நின்று
நடமாட வல்லாய் நரைஏறு உகந்தாய்
நல்லாய் நறுங்கொன்றை நயந்தவனே
படமாயிரமாம் பருத் துத்திப் பைங்கண்
பகுவாய் எயிற்றோடு அழலே உமிழும்
விட வார்அரவா வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 7

காடும் மலையும் நாடும் இடறிக்
கதிர் மா மணி சந்தனமும் அகிலும்
சேடன் உறையும் இடம்தான் விரும்பித்
திளைத்து எற்று சிற்றாறு அதன் கீழ்க்கரைமேல்
பாடல் முழவும் குழலும் இயம்பக்
பணைத்தோளியர் பாடலொடு ஆடல் அறா
வேடர் விரும்பும் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 8

கொங்கார் மலர்க்கொன்றை அந்தாரவனே
கொடுகொட்டி ஓர் வீணை உடையவனே
பொங்கு ஆடு அரவும் புனலும் சடைமேல்
பொதியும் புனிதா புனம் சூழ்ந்து அழகார்

Koviloor Digital Library

துங்கார் புனலுள் பெய்துகொண்டு மண்டித்
திளைத்து எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்
வெங்கார் வயல் சூழ் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா அடியேனையும் வேண்டுதியே. 9

வஞ்சிநுண் இடையார் மயில்சாயல் அன்னார்
வடிவேல்கண் நல்லார் பலர் வந்து இறைஞ்சும்
வெஞ்சமாக்கூடல் விகிர்தா அடியேனையும்
வேண்டுதியே என்று தான் விரும்பி
வஞ்சியாது அளிக்கும் வயல் நாவலர்கோன்
வனப்பகைஅப்பன் வன்தொண்டன் சொன்ன
செஞ்சொல் தமிழ்மாலைகள் பத்தும் வல்லார்
சிவலோகத்து இருப்பது திண்ணம் அன்றே. 10

திருச்சிற்றம்பலம்

68. திருப்பாண்டிக்கொடுமுடி

இறைவன் - கொடுமுடிநாதர் இறைவி - பண்மொழி நாயகி
பண் : பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே.1

Koviloor Digital Library

இட்டன்நும் அடி ஏத்துவார் இகழ்ந்திட்ட நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாள் இவை என்றலால் கருதேன் கிளர் புனல் காவிரி
வட்டவாசிகை கொண்டு அடி தொழுது ஏத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 2

ஓவு நாள் உணர்வு அழியும் நாள் உயிர் போகும் நாள் உயர் பாடைமேல்
காவு நாள் இவை என்றலால் கருதேன் கிளர் புனல்காவிரிப்
பாவு தண்புனல் வந்து இழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 3

எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை தம்பிரான் என் பொன் மாமணி
கல்லை உந்தி வளம் பொழிந்து இழி காவிரி அதன்வாய்க் கரை
நல்லவர் தொழுது ஏத்தும் சீர் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
வல்லவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 4

அஞ்சினார்க்கு அரண் ஆதி என்று அடியேனும் நான் மிக அஞ்சினேன்
அஞ்சல் என்று அடித்தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்கு அழிகின்றது என்
பஞ்சின் மெல்அடிப் பாவைமார் குடைந்து ஆடு பாண்டிக்கொடுமுடி
நஞ்சு அணி கண்ட நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 5

ஏடு வான் இளந்திங்கள் சூடினை என் பின் கொல் புலித் தோலின் மேல்
ஆடு பாம்புஅது அரைக்கு அசைத்த அழகனே அந் தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்து இழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடிச்
சேடனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 6

விரும்பி நின் மலர்ப்பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்து எழில் பெற நின்ற காவிரிக் கோட்டுஇடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார் குடைந்துஆடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 7

Koviloor Digital Library

செம்பொன் நேர் சடையாய் திரிபுரம் தீ எழச் சிலை கோலினாய்
வம்பு உலாம் குழலாளைப் பாகம் அமர்ந்து காவிரிக்கோட்டிடைக்
கொம்பின்மேல் குயில் கூவ மா மயில் ஆடு பாண்டிக்கொடுமுடி
நம்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 8

சாரணன் தந்தை எம்பிரான் எந்தைதம்பிரான் எம் பொன் மாமணீ என்று
பேர்எண் ஆயிரகோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழும் கறையூரில் பாண்டிக்கொடுமுடிக்
காரணா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே. 9

கோணிய பிறை சூடியைக் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப்பித்தனைப் பிறப்பில்லியைப்
பாண் உலா வரிவண்டு அறை கொன்றைத்தாரனைப் படப்பாம்பு அரை
நாணனைத் தொண்டன்ஊரன் சொல் இவை சொல்லுவார்க்கு இல்லை துன்பமே. 10

பதிக வரலாறு : (மற்றுப்பற்றெனக்)

திருவீங்காய் முதலிய திருப்பதிகளை வணங்கிக் கொங்கு நாட்டையடைந்த வன்றொண்டப் பெருமான், கறையூர்க் கொடுமுடிக்கோயிலைக் குறுகிப் புனிதர் பொன்மேனியை வணங்கி இவர் தம்மை மறக்க ஒண்ணாதென்னும் குறிப்பால் அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம அஞ்செழுத்தறிய எப்பொழுதும் எண்ணிய நாவே இன்சுவை பெருக இடையறா இயம்பும் என்னும் உணர்வினை உடையார். இந் நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பிணிப்புற்ற பேரன்பிற் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

69. திருநெல்வாயில் அரத்துறை

இறைவன் - உச்சிநாதேசுவரர் இறைவி - உச்சியார்

பண் : இந்தளம்

கல்வாய் அகிலுங் கதிர் மா மணியுங்
கலந்து உந்தி வரும் நிலவின் கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடு உறையும்
நிலவெண்மதி சூடிய நின்மலனே
நல் வாய் இல் செய்தார் நடந்தார் உடுத்தார்
நரைத்தார் இறந்தார் என்று நானிலத்தில்
சொல்லாய்க் கழிகின்றது அறிந்து அடியேன்
தொடர்ந்தேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே 1

கறி மா மிளகும் மிகு வன் மரமும்
மிக உந்தி வரும் நிலவின் கரைமேல்
நெறி வார்குழலார் அவர் காண நடஞ்செய்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே
வறிதே நிலையாத இம் மண்ணுலகின்
நரனாக வகுத்தனை நான் நிலையேன்
பொறிவாயில் இவ் ஐந்தினையும் அவியப்
பொருது உன் அடியே புகுஞ் சூழல் சொல்லே 2

புற்று ஆடு அரவம் அரை ஆர்த்து உகந்தாய்
புனிதா பொரு வெள்விடை ஊர்தியினாய்
எற்றே ஒரு கண் இலன் நின்னை அல்லால்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே

Koviloor Digital Library

மற்றேல் ஒரு பற்று இலன் எம்பெருமான்
வண்டார் குழலாள் மங்கைபங்கினனே
அற்றார் பிறவிக்கடல் நீந்தி ஏறி
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே 3

கோ ஒடுயர் கோங்கு அலர் வேங்கை அலர்
மிக குந்தி வரும் நிவவின் கரை மேல்
நீஇடு உயர் சோலை நெல்வாயில் அரத்
துறை நின்மலனே நினைவார் மனத்தாய்
ஓஒடு புனல் கரையாம் இளமை
உறங்கிவ் விழித்தால் ஒக்கும் இப்பிறவி
வாஅடி இருந்து வருந்தல் செய்யாது
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே. 4

உலவும் முகிலில் தலை கற்பொழிய
உயர் வேயொடு இழி நிவவின் கரை மேல்
நிலவும் மயிலார் அவர்தாம் பயிலும்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே
புலன் ஐந்தும் மயங்கி அகங் குழையப்
பொரு வேல் ஓர் நமன் தமர் தாம் நலிய
அலமந்து மயங்கி அயர்வதன் முன்
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே. 5

ஏலம் இலவங்கம் எழிற்கனகம்
மிக உந்தி வரும் நிவவின் கரைமேல்
நீலம்மலர்ப் பொய்கையில் அன்ன மலி
நெல்வாயில் அரத்துறையாய் ஒரு நெல்

Koviloor Digital Library

வால் ஊன்ற வருந்தும் உடம்பு இதனை
மகிழாது அழகா அலந்தேன் இனியான்
ஆலந் நிழலில் அமர்ந்தாய் அமரா
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே 6

சிகரம் முகத்தில் திரளார் அகிலும்
மிக உந்தி வரும் நிவவின் கரைமேல்
நிகர் இல் மயிலார் அவர்தாம் பயிலும்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே
மகரக்குழையாய் மணக்கோலம் அதே
பிணக்கோலம் அதாம் பிறவி இதுதான்
அகரம் முதலின் எழுத்து ஆகி நின்றாய்
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே. 7

திண் தேர் நெடுவீதி இலங்கையர்கோன்
திரள் தோள் இருபஃதும் நெரித்து அருளி
ஞெண்டு ஆடு நெடு வயல் சூழ் புறவின்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே
பண்டே மிக நான் செய்த பாக்கியத்தால்
பரஞ்சோதி நின் நாமம் பயிலப்பெற்றேன்
அண்டா அமரர்க்கு அமரர் பெருமான்
அடியேன் உள்ளப்போவது ஓர் சூழல் சொல்லே 8

மாணா உருவாகி ஓர் மண் அளந்தான்
மலர்மேலவன் நேடியும் காண்பு அரியாய்
நீள்நீள் முடி வானவர் வந்து இறைஞ்சும்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே

Koviloor Digital Library

வாணார் நுதலார் வலைப்பட்டு அடியேன்
பலவின் கனி ஈஅது போல்வதன் முன்
ஆணொடு பெண்ணாம் உருவாகி நின்றாய்
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே. 9

நீர் ஊரும் நெடு வயல் சூழ் புறவின்
நெல்வாயில் அரத்துறை நின்மலனைத்
தேர் ஊர் நெடு வீதி நன் மாட மலி
தென் நாவலர்கோன் அடித்தொண்டன் அணி
ஆரூரன் உரைத்தன நற் தமிழின்
மிகு மாலை ஓர் பத்து இவை கற்று வல்லார்
கார் ஊர் களி வண்டு அறை யானை மன்னர்
அவர் ஆகி ஓர் விண்முழுது ஆள்பவரே. 10

திருச்சிற்றம்பலம்

70. திருக்கூடலையாற்றூர்

இறைவன் - நெறி காட்டு நாயகர் இறைவி - புரிகுழல் நாயகி

பண் : புறநீர்மை

வடிவு உடை மழு ஏந்தி மதகரி உரி போர்த்துப்
பொடி அணி திருமேனிப் புரிகுழல் உமையோடும்
கொடி அணி நெடுமாடக் கூடலையாற்றூரில்
அடிகள் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 1

Koviloor Digital Library

வையகம்முழுது உண்ட மாலொடு நான்முகனும்
பைஅரவு அகலல் குல் பாவையொடும் உடனே
கொய் அணி மலர்ச் சோலைக் கூடலையாற்றூரில்
ஐயன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 2

ஊர்தொறும் வெண்தலை கொண்டு உண் பலி இடும் என்று
வார் தரு மென்முலையாள் மங்கையொடும் உடனே
கூர்நுனை மழு ஏந்திக் கூடலையாற்றூரில்
ஆர்வன் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே. 3

சந்து அணவும் புனலும் தாங்கிய தாழ்சடையன்
பந்து அணவும் விரலாள் பாவையொடும் உடனே
கொந்து அணவும் பொழில் சூழ் கூடலையாற்றூரில்
அந்தணன் வழி போந்த அதிசயம் அறியேனே. 4

வேதியர் விண்ணவரும் மண்ணவரும் தொழ நல்
சோதிஅதுஉருவாகிச் சுரிசூழல்உமையோடும்
கோதிய வண்டு அறையும் கூடலையாற்றூரில்
ஆதி இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 5

வித்தக வீணையொடும் வெண்புரிநூல் பூண்டு
முத்து அன வெண்முறுவல் மங்கையொடும் உடனே
கொத்து அலரும் பொழில் சூழ் கூடலையாற்றூரில்
அத்தன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 6

மழை நுழை மதியமொடு வாள்அரவம் சடைமேல்
இழை நுழை துகில் அல்குல் ஏந்திழையாளோடும்
குழை அணி திகழ் சோலைக் கூடலையாற்றூரில்
அழகன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 7

Koviloor Digital Library

மறை முதல் வானவரும் மால் அயன் இந்திரனும்
பிறைநுதல் மங்கையொடும் பேய்க்கணமும் சூழக்
குறள்படைஅதனோடும் கூடலையாற்றூரில்
அறவன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 8

வேலையின் நஞ்சு உண்டு விடைஅது தான் ஏறிப்
பால் அன மென்மொழியாள் பாவையொடும் உடனே
கோலம்அது உருவாகிக் கூடலையாற்றூரில்
ஆலன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே. 9

கூடலையாற்றூரில் கொடிஇடையவளோடும்
ஆடல் உகந்தானை அதிசயம் இது என்று
நாடிய இன்தமிழலால் நாவலஊரன் சொல்
பாடல்கள்பத்தும் வல்லார்தம் வினை பற்றுஅறுமே 10

பதிக வரலாறு : (வடிவுடை)

திருவின்னம்பர், திருப்புறம்பயம் என்னுந் திருப்பதிகளை வணங்கிய நம்பியாரூரர் திருக்கூட்டத்தினருடன் மற்றும் திருப்பதிகளை வணங்கச் செல்லும் போது திருக்கூடலை யாற்றூரை அடைந்தவர். அங்குச் செல்லாது திருமுதுகுன்றத்தை நோக்கிச் செல்வாராயினார். அப்படிச் செல்லும் வழியில் உமைமணவாளர் பூணூலணிந்த மறையவராய் முன் வந்து நிற்ப, நாயனார் அவரைப் பார்த்துத் திருமுதுகுன்றத்துக்கு வழி யாதென்று கேட்டபோது இறைவர் இவ்வழி கூடலையாற்றூரை உடையதாய்த் திருமுதுகுன்றத்துக்குச் செல்வதெனச் சொல்லியுடன் சென்றார். சிறிது தொலைவு சென்று அவரைக் காணாத வன்றொண்டர் வியந்து இப்பதிகமெடுத்துப் பாடிக் கூடலையாற்றூரை அடைந்து வழிபட்டுத் திருமுதுகுன்றஞ் சென்றார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

71. திருத்தினை நகர்

இறைவன் - சிவக்கொழுந்தீசர் இறைவி - இளங்கொம்பன்னாள்

பண் : தக்கேசி

நீறு தாங்கிய திருநுதலானை
நெற்றிக்கண்ணனை நிரை வளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையினானைக்
குற்றம்இல்லியைக் கற்றைஅம்சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை அமரர்க்கு
அரிய சோதியை வரிவரால் உகளும்
சேறு தாங்கிய திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே. 1

பிணி கொள் ஆக்கை பிறப்புஇறப்பு என்னும்
இதனை நீக்கி ஈசன் திருவடிஇணைக்கு ஆள்
துணிய வேண்டிடில் சொல்லுவன் கேள் நீ
அஞ்சல் நெஞ்சமே வஞ்சர் வாழ் மதில்மூன்று
அணி கொள் வெஞ்சிலையால் உகச் சீறும்
ஐயன் வையகம் பரவி நின்று ஏத்தும்
திணியும் வார் பொழில் திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே. 2

வடி கொள் கண்ணினை மடந்தையர்தம்பால்
மயல்அது உற்று வஞ்சனைக்கு இடமாகி
முடியுமா கருதேல் எருது ஏறும்
மூர்த்தியை முதலாய பிரானை

Koviloor Digital Library

அடிகள் என்று அடியார் தொழுது ஏத்தும்
அப்பன் ஒப்பு இலா முலை உமை கோனைச்
செடி கொள் கான் மலி திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே. 3

பாவமே புரிந்து அகலிடம் தன்னில்
பல பகர்ந்து அலமந்து உயிர் வாழ்க்கைக்கு
ஆவ என்று உழந்து அயர்ந்து வீழாதே
அண்ணல்தன் திறம் அறிவினால் கருதி
மாவின் ஈர்உரிஉடை புனைந்தானை
மணியை மைந்தனை வானவர்க்கு அமுதைத்
தேவதேவனைத் திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே. 4

ஒன்று அலா உயிர் வாழ்க்கையை நினைந்திட்டு
உடல் தளர்ந்து அரு மா நிதி இயற்றி
என்றும் வாழலாம் எமக்கு எனப் பேசும்
இதுவும் பொய் எனவே நினை உளமே
குன்று உலாவிய புயம் உடையானைக்
கூத்தனைக் குலாவிக் குவலயத்தோர்
சென்று எலாம் பயில் திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே. 5

வேந்தராய் உலகு ஆண்டு அறம் புரிந்து
வீற்றிருந்த இவ் உடல்இது தன்னைத்
தேய்ந்து இறந்து வெந்துயர் உழந்திடும் இப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே

Koviloor Digital Library

பாந்தள் அம் கையில் ஆட்டு உகந்தானைப்
    பரமனைக் கடல் சூர் தடிந்திட்ட
சேந்தர் தாதையைத் திருத் தினைநகருள்
    சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே 6

தன்னில் ஆசு அறு சித்தமும் இன்றித்
    தவம் முயன்று அவம்ஆயின பேசிப்
பின்னலார் சடை கட்டி என்பு அணிந்தால்
    பெரிதும் நீந்துவது அரிது அது நிற்க
முன் எலாம் முழுமுதல் என்று வானோர்
    மூர்த்திஆகிய முதல்வன் அதன்னைச்
செந்நெல் ஆர் வயல் திருத் தினைநகருள்
    சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே 7

பரிந்த சுற்றமும் மற்று வன் துணையும்
    பலரும் கண்டு அழுது எழ உயிர் உடலைப்
பிரிந்து போம் இது நிச்சயம் அறிந்தால்
    பேதை வாழ்வு எனும் பிணக்கினைத் தவிர்ந்து
கருந்தடங்கண்ணி பங்கனை உயிரைக்
    காலகாலனைக் கடவுளை விரும்பிச்
செருந்தி பொன்மலர் திருத் தினைநகருள்
    சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே 8

நமை எலாம் பலர் இகழ்ந்து உரைப்பதன் முன்
    நன்மை ஒன்று இலாத் தேரார் புன் சமணாம்
சமயம் ஆகிய தவத்தினார் அவத்தத்
    தன்மை விட்டொழி நன்மையை வேண்டில்
உமை ஓர்கூறனை ஏறு உகந்தானை

Koviloor Digital Library

உம்பர்ஆதியை எம்பெருமானைச்
சிமயம்ஆர் பொழில் திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைச் சென்று அடை மனனே 9

நீடு பொக்கையின் பிறவியைப் பழித்து
நீங்கல் ஆம் என்று மனத்தினைத் தெருட்டிச்
சேடு உலாம் பொழில் திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினைத் திருவடி இணைதான்
நாடுஎலாம் புகழ் நாவலூர் ஆளி
நம்பி வன்தொண்டன் ஊரன் உரைத்த
பாடலாம் தமிழ் பத்துஇவை வல்லார்
முத்தி ஆவது பரகதிப் பயனே. 10

திருச்சிற்றம்பலம்

72. திருவதிகை வீரட்டானம்

இறைவன் - வீரட்டானேசுவரர் இறைவி - திரிபுரசுந்தரி.
திரிபுராந்தகேசுவரர் பண் : கொல்லிக்கௌவாணம்

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேல் கொள் பிறையானை விடை மேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறை கொண்ட கண்டத்து
அம்மான் தன் அடிக் கொண்டு என் முடிமேல் வைத்திடும் என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 1

Koviloor Digital Library

முன்னே எம்பெருமானை மறந்து என்கொல் மறவா
தொழிந்து என்கொல் மறவாத சிந்தையால் வாழ்வேன்
பொன்னே நல்மணியே வெண்முத்தே செம் பவளக்
குன்றமே ஈசன் என்று உன்னியே புகழ்வேன்
அன்னே என் அத்தா என்று அமரரால் அமரப்
படுவானை அதிகை மா நகருள் வாழ்பவனை
என்னே என் எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானைஇறைபோதும் இகழ்வன் போல் யானே. 2

விரும்பினேற்கு எனது உள்ளம் விடகிலா விதியே
விண்ணவர்தம் பெருமானே மண்ணவர் நின்று ஏத்தும்
கரும்பே என் கட்டி என்று உள்ளத்தால் உள்கிக்
காதல் சேர் மாதராள் கங்கையாள் நங்கை
வரும் புனலும் சடைக்கு அணிந்து வளராத பிறையும்
வரிஅரவும் உடன்துயில வைத்து அருளும் எந்தை
இரும் புனல் வந்து எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 3

நாற்றானத்து ஒருவனை நானாய பரனை
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
தலையானைக் கடுங் கலுழிக் கங்கைநீர்வெள்ள
ஆற்றானைப் பிறையானை அம்மானை எம்மான்
தம்மானை யாவர்க்கும் அறிவு அரிய செங்கண்
ஏற்றானை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 4

Koviloor Digital Library

சேந்தர்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவும்
உடையானை அதிகை மா நகருள் வாழ்பவனைக்
கூந்தல் தாழ் புனல்மங்கை குயில் அன்ன மொழியாள்
சடைஇடையிற் கயல்இனங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்த நீர் வர உந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை இடம் கொள்வான் மலை ஆரம் வாரி
ஏந்து நீர் எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 5

மைம் மான மணிநீலகண்டத்து எம்பெருமான்
வல் ஏனக்கொம்பு அணிந்த மா தவனை வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்மதியும் பாம்பும்
தடுமாறும் சடையானைத் தாழ்வரைக்கை வென்ற
வெம் மான மதகரியின் உரியானை வேத
விதியானை வெண்நீறு சண்ணித்த மேனி
எம்மானை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 6

வெய்தாய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு
மிக இரங்கி அருள்புரிந்து வீடுபேறு ஆக்கம்
பெய்தானைப் பிஞ்ஞகனை மைஞ் ஞவிலும் கண்டத்து
எண்தோள் எம்பெருமானைப் பெண்பாகம் ஒருபால்
செய்தானைச் செக்கர் வான் ஒளியானைத் தீ வாய்
அரவு ஆடு சடையானைத் திரிபுரங்கள் வேவ
எய்தானை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 7

Koviloor Digital Library

பொன்னானை மயில் ஊர்தி முருகவேள் தாதை
பொடிஆடு திருமேனி நெடுமால்தன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபால்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமான்
உரியானை அதிகை மா நகருள் வாழ்பவனை
என்னானை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 8

திருந்தாத வாள் அவுணர் புரம் மூன்றும் வேவச்
சிலை வளைவித்து ஒரு கணையால் தொழில் பூண்டசிவனைக்
கருந் தாள மதக்களிற்றின் உரியானைப் பெரிய
கண்மூன்றும் உடையானைக் கருதாத அரக்கன்
பெருந்தோள்கள் நால் ஐந்தும் ஈர்ஐந்து முடியும்
உடையானைப் பேய்உருவம் ஊன்றும் உற மலைமேல்
இருந்தானை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே 9

என்பினையே கலனாக அணிந்தானை எங்கள்
எருது ஏறும் பெருமானை இசைஞானிசிறுவன்
வன்பனைய வளர்பொழில் சூழ்வயல் நாவலூர்க்கோன்
வன்தொண்டன் ஆரூரன் மதியாது சொன்ன
அன்பனை யாவர்க்கும் அறிவு அரிய அத்தர்
பெருமானை அதிகை மா நகருள் வாழ்பவனை
என் பொன்னை எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே.10

Koviloor Digital Library

பதிக வரலாறு : சிதம்பரத்தை நோக்கி சென்ற நம்பியாரூரர் இடையே பல தலங்களைத் தரிசித்துத் திருவதிகைக்கு அருகே வருகையில் அப்பர் சுவாமிகள் தொண்டு புரிந்த பதியென்று அதனை மிதிக்க அஞ்சி அதற்குள் புகுதாமல் அதன் புறத்தே இருந்த சித்தவடமடம் புகுந்து இளைப்பாறித் துயின்றார். அப்போது திருவதிகை வீரட்டானமுடைய பெருமாள் முதிய அந்தணர் வேடங்கொண்டு அந்த மடத்தில் புகுந்து சுந்தரர் தலைமீது கால்படும்படி படுத்துக்கொண்டிருந்தார். ஆளுடைய நம்பிகள், "என் தலைமேல் கால் வைத்தீரே" என்று கேட்க "மூப்பு மிகுதியால் ஒன்றும் தெரியவில்லை" என்றார். நம்பிகள் வேறு திசையில் தலை வைத்துத் துயில. அங்கும் திருமுடிமேல் அவர் திருத்தாள் நீட்டப் "பல தடவையும் என் தலைமேல் கால் வைத்த நீர் யார்?" என்று கேட்கச் சிவபெருமான், "அறிந்திலையோ?" எனச் சொல்லி மறைந்தருளினார். சுந்தரர் "சிவபெருமான் திருவருளையறியாமல் என் செய்தேன் !" என இரங்கி இத்திருப்பதிகத்தைப் பாடியருளினார்

திருச்சிற்றம்பலம்

73. திருநாவலூர்

இறைவன் - நாவலேசுவரர் இறைவி - சுந்தராம்பிகை

பண் : நட்டராகம்

கோவலன் நான்முகன் வானவர்கோனும் குற்றேவல் செய்ய
மேவலர் முப்புரம் தீ எழுவித்தவர் ஓர் அம்பினால்
ஏவலனார் வெண்ணெய் நல்லூரில்வைத்து எனை ஆளுங்கொண்ட
நாவலனார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 1

தன்மையினால் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள் சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன் என்பது ஓர் வாழ்வு தந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத் தந்து என்னைப் போகம் புணர்த்த
நன்மையினார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 2

Koviloor Digital Library

வேகம்கொண்டு ஓடிய வெள்விடை ஏறி ஓர் மெல்லியலை
ஆகம் கொண்டார் வெண்ணெய் நல்லூரில் வைத்து எனை ஆளுங்கொண்டார்
போகம் கொண்டார் கடற்கோடியின் மோடியைப் பூண்பதாக
நாகம் கொண்டார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 3

அஞ்சும் கொண்டு ஆடுவர் ஆவினில் சேவினை ஆட்சி கொண்டார்
தஞ்சம் கொண்டார் அடிச்சண்டியைத் தாம் என வைத்து உகந்தார்
நெஞ்சம் கொண்டார் வெண்ணெய்நல்லூரில் வைத்து எனை ஆளுங்கொண்டு
நஞ்சம் கொண்டார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 4

உம்பரார்கோனைத் திண்தோள் முரித்தார் உரித்தார் களிற்றைச்
செம்பொனார் தீவண்ணர் தூ வண்ண நீற்றர் ஓர் ஆவணத்தால்
எம்பிரானார் வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்ட
நம்பிரானார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 5

கோட்டம் கொண்டார் குடமூக்கிலும் கோவலும் கோத்திட்டையும்
வேட்டம் கொண்டார் வெண்ணெய்நல்லூரில் வைத்து எனை ஆளுங்கொண்டார்
ஆட்டம் கொண்டார் தில்லைச் சிற்றம்பலத்தே அருக்கனை முன்
நாட்டம் கொண்டார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 6

தாய்அவளாய்த் தந்தைஆகிச் சாதல் பிறத்தல் இன்றிப்
போய் அகலாமைத் தன் பொன்அடிக்கு என்னைப் பொருந்த வைத்த
வேயவனார் வெண்ணெய்நல்லூரில் வைத்து எனை ஆளுங்கொண்ட
நாயகனார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 7

வாயாடி மாமறை ஓதி ஓர் வேதியனாகி வந்து
தீஆடியார் சினக் கேழலின் பின் சென்று ஓர் வேடுவனாய்
வேய்ஆடியார் வெண்ணெய்நல்லூரில் வைத்து எனை ஆளுங்கொண்ட
நாயாடியார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 8

Koviloor Digital Library

படமாடு பாம்பு அணையானுக்கும் பாவைநல்லாள் தனக்கும்
வடமாடு மால்விடைஏற்றுக்கும் பாகனாய் வந்து ஒரு நாள்
இடமாடியார் வெண்ணெய்நல்லூரில் வைத்து எனை ஆளுங்கொண்ட
நடமாடியார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 9

மிடுக்கு உண்டு என்று ஓடி ஓர் வெற்பு எடுத்தான் வலியை நெரித்தார்
அடக்கம் கொண்டு ஆவணம் காட்டி நல் வெண்ணையூர் ஆளுங்கொண்டார்
தடுக்க ஒண்ணாதது ஓர் வேழத்தினை உரித்திட்டு உமையை
நடுக்கம் கண்டார்க்கு இடம் ஆவது நம் திரு நாவலூரே. 10

நாதனுக்கு ஊர் நமக்கு ஊர் நரசிங்கமுனைஅரையன்
ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர் அணி நாவலூர் என்று
ஓத நல் தக்க வன்தொண்டன் ஆரூரன் உரைத்த தமிழ்
காதலித்தும் கற்றும் கேட்பவர்தம் வினைகட்டு அறுமே. 11

திருச்சிற்றம்பலம்

74. திருமுதுகுன்றம்

பண் : நட்டராகம்

பொன் செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கு அசைத்தீர்
முன் செய்த மூஎயிலும் எரித்தீர் முதுகுன்று அமர்ந்தீர்
மின் செய்த நுண் இடையாள் பரவைஇவள்தன் முகப்பே
என் செய்தவாறு அடிகேள் அடியேன் இட்டளம் கெடவே 1

உம்பரும் வானவரும் உடனேநிற்கவே எனக்குச்
செம்பொனைத் தந்து அருளித் திகழும் முதுகுன்று அமர்ந்தீர்
வம்பு அமரும் குழலாள் பரவைஇவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர் அடியேன் இட்டளம் கெடவே 2

Koviloor Digital Library

பத்தா பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்து ஆரும் தடங்கண் பரவை இவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே. 3

மங்கை ஓர்கூறு அமர்ந்தீர் மறைநான்கும் விரித்து உகந்தீர்
திங்கள் சடைக்கு அணிந்தீர் திகழும் முதுகுன்று அமர்ந்தீர்
கொங்கை நல்லாள்பரவை குணம் கொண்டு இருந்தாள் முகப்பே
அங்கணனே அருளாய் அடியேன் இட்டளம் கெடவே 4

மை ஆரும் மிடற்றாய் மருவார் புரம்மூன்று எரித்த
செய்யார் மேனியனே திகழும் முதுகுன்று அமர்ந்தாய்
பை ஆரும் அரவு ஏர் அல்குலாள்இவள் வாடுகின்றாள்
ஐயா தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே 5

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்து இறைஞ்ச முதுகுன்றம் அமர்ந்தவனே
படி ஆரும் இயலாள் பரவைஇவள்தன் முகப்பே
அடிகேள் தந்தருளீர் அடியேன் இட்டளம் கெடவே 6

கொந்து அணவும் பொழில் சூழ் குளிர் மா மதில் மாளிகைமேல்
வந்து அணவும் மதி சேர் சடை மா முதுகுன்று உடையாய்
பந்து அணவும் விரலாள் பரவைஇவள்தன் முகப்பே
அந்தணனே அருளாய் அடியேன் இட்டளம் கெடவே 7

பரசு ஆரும் கரவா பதினெண்கணமும் சூழ
முரசார் வந்து அதிர முதுகுன்றம் அமர்ந்தவனே
விரை சேரும் குழலாள் பரவைஇவள்தன் முகப்பே
அரசே தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே 8

Koviloor Digital Library

ஏத்தாது இருந்து அறியேன் இமையோர் தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கு எல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்து ஆரும் குழலாள் பரவைஇவள் தன் முகப்பே
கூத்தா தந்து அருளாய் கொடியேன் இட்டளம் கெடவே 9

பிறை ஆரும் சடை எம்பெருமான் அருளாய் என்று
முறையால் வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர்தம்மை
மறையார்தம் குரிசில் வயல் நாவல் ஆரூரன் சொன்ன
இறையார் பாடல் வல்லார்க்கு எளிதாம் சிவலோகம்அதே 10

பதிக வரலாறு : திருமுதுகுன்றில் இறைவர் திருவருளால் பெற்ற பொன்னை அத்தலத்தில் திருமணி முத்தாற்றில் இட்டு, அப்பால் திருவாரூருக்கு வந்து பரவையாருடன் சென்று திருக்குளத்தில் தேடும்போது அப்பொன் முதலில் கிடைக்கவில்லை. முன்னே முதுகுன்றில் வேண்டிக்கொண்டபடி கிடைக்கவில்லையே என்ற வருத்தத்தோடு இந்தப் பதிகத்தைத் தொடங்கி எட்டுப்பாடல் பாடியருளவும் பொன் கிடைக்கவில்லை. அப்பால் மிக வருந்தி, "ஏத்தா திருந்தறியேன்" என்ற திருப்பாடலை அருளவும் சிவபெருமான் திருவருளால் பொன் திரள் கிடைத்தது.

திருச்சிற்றம்பலம்

75. திருமுதுகுன்றம்

பண் : கொல்லிக்கௌவாணம்

நஞ்சி இடை இன்று நாளை என்று உம்மை நச்சுவார்
துஞ்சியிட்டால் பின்னைச் செய்வது என் அடிகேள் சொலீர்
பஞ்சி இடப் புட்டில் கீறுமோ பணியீர் அருள்
முஞ்சி இடைச் சங்கம் ஆர்க்கும் சீர் முதுகுன்றரே. 1

Koviloor Digital Library

ஏரிக் கனகக்கமலமலர் அன்ன சேவடி
ஊர்இத்தனையும் திரிந்தக்கால் அவை நோங்கொலோ
வாரிக்கண் சென்று வளைக்கப்பட்டு வருந்திப் போய்
மூரிக் களிறு முழக்கு அறா முதுகுன்றரே. 2

தொண்டர்கள் பாட விண்ணோர்கள் ஏத்த உழிதர்வீர்
பண்டு அகம்தோறும் பலிக்கச் செல்வதும் பான்மையே
கண்டகர் வாளிகள் வில்லிகள் புறங்காக்கும் சீர்
மொண்ட கை வேள்வி முழக்கு அறா முதுகுன்றரே. 3

இளைப்பு அறியீர் இம்மை ஏத்துவார்க்கு அம்மை செய்வது என்
விளைப்பு அறியாத வெங் காலனை உயிர் வீட்டினீர்
அளைப் பிரியா அரவு அல்குலாளொடு கங்கை சேர்
முளைப்பிறைச் சென்னிச் சடைமுடி முதுகுன்றரே. 4

ஆடி அசைந்து அடியாரும் நீரும் அகம்தொறும்
பாடிப் படைத்த பொருள்எலாம் உமையாளுக்கோ
மாடம் மதில் அணி கோபுரம் மணி மண்டபம்
மூடி முகில் தவழ் சோலை சூழ் முதுகுன்றரே. 5

இழை வளர் நுண்இடை மங்கையோடு இடுகாட்டு இடைக்
குழை வளர் காதுகள் மோத நின்று குனிப்பதே
மழை வளரும் நெடுங்கோட்டுஇடை மதயானைகள்
முழை வளர் ஆளி முழக்கு அறா முதுகுன்றரே. 6

சென்றில்இடைச் செடி நாய் குரைக்கச் சேடிச்சிகள்
மன்றில்இடைப் பலி தேரப் போவது வாழ்க்கையே
குன்றில்இடைக் களிறு ஆளி கொள்ளக் குறத்திகள்
முன்றில்இடைப் பிடி கன்று இடும் முதுகுன்றரே. 7

Koviloor Digital Library


அந்தி திரிந்து அடியாரும் நீரும் அகம்தொறும்
சந்திகள் தோறும் பலிக்குச் செல்வது தக்கதே
மந்தி கடுவனுக்கு உண் பழம் நாடி மலைப்புறம்
முந்தி அடி தொழ நின்ற சீர் முதுகுன்றரே. 8

செட்டு நின் காதலி ஊர்கள்தோறும் அறம்செய
அட்டுமின் சில்பலிக்கு என்று அகம்கடை நிற்பதே
பட்டி வெள்ஏறு உகந்து ஏறுவீர் பரிசு என்கொலோ
முட்டி அடி தொழ நின்ற சீர் முதுகுன்றரே. 9

எத்திசையும் திரிந்து ஏற்றக்கால் பிறர் என் சொலார்
பத்தியினால் இடுவார் இடைப் பலி கொள்மினோ
எத்திசையும் திரை ஏற மோதிக் கரைகள் மேல்
முத்தி முத்தாறு வலம்செயும் முதுகுன்றரே. 10

முத்தி முத்தாறு வலம்செயும் முதுகுன்றரைப்
பித்தன் ஒப்பான் அடித்தொண்டன் ஊரன் பிதற்று இவை
தத்துவஞானிகள் ஆயினார் தடுமாற்றுஇலார்
எத்தவத்தோர்களும் ஏத்துவார்க்கு இடர் இல்லையே. 11

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

76. திருமுதுகுன்றம்

இறைவன் - பழமலை நாதர் இறைவி - பெரிய நாயகி

பண் : தக்கேசி

மெய்யை முற்றப் பொடிப்பூசி ஓர் நம்பி
வேதம் நான்கும் விரித்து ஓதி ஓர் நம்பி
கையில் ஓர் வெண் மழுஏந்தி ஓர் நம்பி
கண்ணும் மூன்று உடையான் ஒரு நம்பி
செய்யநம்பி சிறு செஞ்சடை நம்பி
திரிபுரம் தீ எழச் செற்றது ஓர் வில்லால்
எய்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே 1

திங்கள் நம்பி முடிமேல் அடியார்பால்
சிறந்த நம்பி பிறந்த உயிர்க்கு எல்லாம்
அங் கண் நம்பி அருள் மால் விசும்பு ஆளும்
அமரர்நம்பி குமரன் முதல் தேவர்
தங்கள் நம்பி தவத்துக்கு ஒரு நம்பி
தாதை என்று உன் சரண் பணிந்து ஏத்தும்
எங்கள் நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே 2

வருந்த அன்றும் மதயானை உரித்த
வழக்கு நம்பி முழக்கும் கடல் நஞ்சம்
அருந்து நம்பி அமரர்க்கு அமுது ஈந்த
அருளின் நம்பி பொருளால் அரு நட்டம்

Koviloor Digital Library

புரிந்த நம்பி புரிநூல் உடை நம்பி
பொழுதும் விண்ணும் முழுதும் பலஆகி
இருந்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே 3

ஊறு நம்பி அமுதா உயிர்க்கு எல்லாம்
உரிய நம்பி தெரியம் மறை அங்கம்
கூறு நம்பி முனிவர்க்கு அருங்கூற்றைக்
குமைத்த நம்பி குமையாப் புலன் ஐந்தும்
சீறு நம்பி திரு வெள்ளடை நம்பி
செங்கண் வெள்ளைச் செழுங் கோட்டு எருது என்றும்
ஏறு நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே 4

குற்ற நம்பி குறுகார் எயில் மூன்றைக்
குலைத்த நம்பி சிலையா வரை கையில்
பற்று நம்பி பரமானந்தவெள்ளம்
பணிக்கும் நம்பி எனப் பாடுதல்அல்லால்
மற்று நம்பி உனக்கு என் செய வல்லேன்
மதியிலியேன் படு வெந்துயர்எல்லாம்
எற்று நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 5

அரித்த நம்பி அடி கைதொழுவார் நோய்
ஆண்ட நம்பி முன்னை ஈண்டு உலகங்கள்
தெரித்த நம்பி ஒரு சே உடை நம்பி
சில்பலிக்கு என்று அகம்தோறும் மெய் வேடம்

Koviloor Digital Library

தரித்த நம்பி சமயங்களின் நம்பி
தக்கன்தன் வேள்வி புக்கு அன்று இமையோரை
இரித்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 6

பின்னை நம்பும் புயத்தான் நெடுமாலும்
பிரமனும் என்று இவர் நாடியும் காணா
உன்னை நம்பி ஒருவர்க்கு எய்தலாமே
உலகு நம்பி உரைசெய்யுமது அல்லால்
முன்னை நம்பி பின்னும் வார்சடை நம்பி
முழுதுஇவை இத்தனையும் தொகுத்து ஆண்டது
என்னை நம்பி எம்பிரான் ஆய நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 7

சொல்லை நம்பி பொருளாய் நின்ற நம்பி
தோற்றம் ஈறு முதல் ஆகிய நம்பி
வல்லை நம்பி அடியார்க்கு அருள்செய்ய
வருந்தி நம்பி உனக்கு ஆட்செயகில்லார்
அல்லல் நம்பி படுகின்றது என் நாடி
அணங்கு ஒருபாகம் வைத்து எண்கணம் போற்ற
இல்லம் நம்பி இடு பிச்சை கொள் நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 8

காண்டு நம்பி கழல்சேவடி என்றும்
கலந்து உனைக் காதலித்து ஆட்செய்கிற்பாரை
ஆண்டு நம்பி அவர் முன்கதி சேர
அருளும் நம்பி குரு மாப் பிறை பாம்பைத்

Koviloor Digital Library

தீண்டு நம்பி சென்னியில் கன்னி தங்கத்
திருத்து நம்பி பொய்ச் சமண் பொருளாகி
ஈண்டு நம்பி இமையோர் தொழு நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 9

கரக்கும் நம்பி கசியாதவர்தம்மைக்
கசிந்தவர்க்கு இம்மையோடு அம்மையில் இன்பம்
பெருக்கும் நம்பி பெருகக் கருத்தா
.... 10

திருச்சிற்றம்பலம்

77. திருஇடையாறு

இறைவன் - இடையாற்று நாதர் இறைவி - சிற்றிடை நாயகி
பண் : கொல்லி

முந்தை ஊர் முதுகுன்றம் குரங்கணின்முட்டம்
சிந்தை ஊர் நன்று சென்று அடைவான் திரு ஆரூர்
பந்தை ஊர் பழையாறு பழனம் பைஞ்ஞீலி
எந்தை ஊர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 1

சுற்றும் ஊர் சுழியல் திருச் சோபுரம் தொண்டர்
ஒற்றும் ஊர் ஒற்றியூர் திரு ஊறல் ஒழியாப்
பெற்றம் ஏறி பெண் பாதி இடம் பெண்ணைத் தெண்நீர்
எற்றும் ஊர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 2

Koviloor Digital Library

கடங்களூர் திருக் காரிக்கரை கயிலாயம்
விடங்களூர் திரு வெண்ணி அண்ணாமலை வெய்ய
படங்கள் ஊர்கின்ற பாம்பு அரையான் பரஞ்சோதி
இடம் கொள் ஊர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 3

கச்சையூர் காவம் கழுக்குன்றம் காரோணம்
பிச்சை ஊர் திரிவான் கடவூர் வடபேறூர்
கச்சி ஊர் கச்சி சிக்கல் நெய்த்தானம் மிழலை
இச்சை ஊர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 4

நிறையனூர் நின்றியூர் கொடுங்குன்றம் அமர்ந்த
பிறையனூர் பெருமூர் பெரும்பற்றப்புலியூர்
மறையனூர் மறைக்காடு வலஞ்சுழி வாய்த்த
இறையனூர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 5

திங்களூர் திருஆதிரையான் பட்டினம்ஊர்
நங்களூர் நறையூர் நனி நால்இசை நாலூர்
தங்களூர் தமிழான் என்று பாவிக்க வல்ல
எங்களூர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 6

கருக்க நஞ்சு அமுதுஉண்ட கல்லாலன் கொல் ஏற்றன்
தருக்கு அருக்கனைச் செற்று உகந்தான் தன் முடிமேல்
எருக்க நாண்மலர் இண்டையும் மத்தமும் சூடி
இருக்கும் ஊர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 7

தேசனூர் வினை தேய நின்றான் திரு ஆக்கூர்
பாசனூர் பரமேட்டி பவித்திர பாவ
நாசன் ஊர் நனிபள்ளி நள்ளாற்றை அமர்ந்த
ஈசனூர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 8

Koviloor Digital Library

பேறனூர் பிறைச் சென்னியினான் பெருவேளூர்
தேறனூர் திருமாமகள்கோன் திருமால் ஓர்
கூறன் ஊர் குரங்காடுதுறை திருக் கோவல்
ஏறனூர் எய்தம்மான் இடையாறு இடைமருதே. 9

ஊறு வாயினன் நாடிய வன்தொண்டன் ஊரன்
தேறுவார் சிந்தை தேறும் இடம் செங்கண்வெள்ஏறு
ஏறுவார் எய்தம்மான் இடையாறு இடைமருதைக்
கூறுவார் வினை எவ்விட மெய் குளிர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

78. திருவெண்ணெய்நல்லூர்

இறைவன் - தடுத்தாட்கொண்டநாதர் இறைவி - வேற்கண்மங்கை

பண் : இந்தளம்

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 1

நாயேன் பலநாளும் நினைப்பு இன்றி மனத்து உன்னைப்
பேயாய்த் திரிந்து எய்த்தேன் பெறல் ஆகா அருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
ஆயா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே 2

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னைப்
பொன்னே மணிதானே வயிரம்மே பொருது உந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அன்னே உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 3

Koviloor Digital Library

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றம்ஊர்தீ
கொடியேன் பலபொய்யே உரைப்பேனைக் குறிக்கொள் நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அடிகேள் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 4

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம் அது பணியாய்
ஆதன் பொருள் ஆனேன் அறிவு இல்லேன் அருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆதீ உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 5

தண்ணார் மதிசூடீ தழல் போலும் திருமேனீ
எண்ணார் புரம்மூன்றும் எரியுண்ண நகைசெய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அண்ணா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 6

ஊனாய் உயிர்ஆனாய் உடல் ஆனாய் உலகு ஆனாய்
வானாய் நிலன் ஆனாய் கடல் ஆனாய் மலை ஆனாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆனாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே 7

ஏற்றார் புரம் மூன்றும் எரியுண்ணச் சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர் வான்நீர்
ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆற்றாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 8

மழுவாள் வலன் ஏந்தீ மறைஓதீ மங்கைபங்கா
தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அழகா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. 9

Koviloor Digital Library

கார் ஊர் புனல் எய்திக் கரை கல்லித் திரைக்கையால்
பார் ஊர் புகழ் எய்தித் திகழ் பன் மா மணி உந்திச்
சீர் ஊர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆரூரன் எம்பெருமாற்கு ஆள்அல்லேன் எனல் ஆமே. 10

திருச்சிற்றம்பலம்

79. திருத்துறையூர்

இறைவன் - துறையூர் நாதர் இறைவி - பூங்கோதை நாயகி

பண் : தக்கராகம்

மலையார் அருவித்திரள் மா மணி உந்திக்
குலை ஆரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
கலையார் அல்குல் கன்னியர் ஆடும் துறையூர்த்
தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே. 1

மத்தம் மதயானையின் வெண்மருப்பு உந்தி
முத்தம் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
பத்தர் பயின்று ஏத்திப் பரவும் துறையூர்
அத்தா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 2

கந்தம் கமழ் கார் அகில் சந்தனம் உந்திச்
செந்தண் புனல் வந்து இழி பெண்ணை வடபால்
மந்திபல மா நடம் ஆடும் துறையூர்
எந்தாய் உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 3

அரும்பு ஆர்ந்தன மல்லிகை சண்பகம் சாடிச்
சுரும்பு ஆரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
கரும்பார் மொழிக் கன்னியர் ஆடும் துறையூர்
விரும்பா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 4

Koviloor Digital Library

பாடு ஆர்ந்தன மாவும் பலாக்களும் சாடி
நாடு ஆர வந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
மாடு ஆர்ந்தன மாளிகை சூழும் துறையூர்
வேடா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 5

மட்டார் மலர்க்கொன்றையும் வன்னியும் சாடி
மொட்டு ஆரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
கொட்டு ஆட்டொடு பாட்டுஒலி ஓவாத் துறையூர்ச்
சிட்டா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 6

மாதார் மயில்பீலியும் வெண்நுரை உந்தித்
தாது ஆரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
போது ஆர்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர்
நாதா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 7

கொய்யா மலர்க் கோங்கொடு வேங்கையும் சாடிச்
செய் ஆரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
மையார் தடங்கண்ணியர் ஆடும் துறையூர்
ஐயா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 8

விண்ணார்ந்தன மேகங்கள் நின்று பொழிய
மண் ஆரக் கொணர்ந்து எற்றி ஓர் பெண்ணை வடபால்
பண்ணார் மொழிப் பாவையர் ஆடும் துறையூர்
அண்ணா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 9

மா வாய்ப் பிளந்தானும் மலர்மிசையானும்
ஆவா அவர் தேடித் திரிந்து அலமந்தார்
பூவார்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர்த்
தேவா உனை வேண்டிக்கொள்வேன் தவநெறியே. 10

Koviloor Digital Library

செய்யார் கமலம் மலர் நாவலூர் மன்னன்
கையால் தொழுது ஏத்தப்படும் துறையூர்மேல்
பொய்யாத் தமிழ் ஊரன் உரைத்தன வல்லார்
மெய்யே பெறுவார்கள் தவநெறிதானே. 11

திருச்சிற்றம்பலம்

80. திரு ஆமாத்தூர்

இறைவன் - அழகிய நாதர் இறைவி - முத்தாம்பிகை

பண் : கொல்லிக்கௌவாணம்

காண்டனன்காண்டனன் காரிகையாள்தன் கருத்தனாய்
ஆண்டனன்ஆண்டனன் ஆமாத்தூர் எம் அடிகட்கு ஆட்
பூண்டனன்பூண்டனன் பொய் அன்று சொல்லுவன் கேண்மின்கள்
மீண்டனன் மீண்டனன் வேதவித்து அல்லாதவர்கட்கே. 1

பாடுவன்பாடுவன் பார்ப்பதிதன் அடி பற்றி நான்
தேடுவன்தேடுவன் திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன்ஆடுவன் ஆமாத்தூர் எம் அடிகளைக்
கூடுவன்கூடுவன் குற்றம்அது அற்று என் குறிப்பொடே. 2

காய்ந்தவன்காய்ந்தவன் கண் அழலால் அன்று காமனைப்
பாய்ந்தவன்பாய்ந்தவன் பாதத்தினால் அன்று கூற்றத்தை
ஆய்ந்தவன்ஆய்ந்தவன் ஆமாத்தூர் எம் அடிகளார்
ஏய்ந்தவன்ஏய்ந்தவன் எம்பிராட்டியைப் பாகமே. 3

Koviloor Digital Library

ஓர்ந்தனன்ஓர்ந்தனன் உள்ளத்துள்ளே நின்ற ஒண் பொருள்
சேர்ந்தனன்சேர்ந்தனன் சென்று திரு ஒற்றியூர் புக்குச்
சார்ந்தனன்சார்ந்தனன் சங்கிலி மென்தோள் தடமுலை
ஆர்ந்தனன்ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அருள்அதே. 4

வென்றவன்வென்றவன் வேள்வியில் விண்ணவர்தங்களைச்
சென்றவன்சென்றவன் சிலபலிக்கு என்று தெரு இடை
நின்றவன்நின்றவன் நீதி நிறைந்தவர் தங்கள்பால்
அன்று அவன் அன்று அவன் செய் அருள் ஆமாத்தூர் ஐயனே. 5

காண்டவன்காண்டவன் காண்டற்கு அரிய கடவுளாய்
நீண்டவன்நீண்டவன் நாரணன் நான்முகன் நேடவே
ஆண்டவன்ஆண்டவன் ஆமாத்தூரையும் எனையும் ஆள்
பூண்டவன்பூண்டவன் மார்பில் புரிநூல் புரளவே. 6

எண்ணவன்எண்ணவன் ஏழ்உலகத்து உயிர்தங்கட்குக்
கண் அவன் கண் அவன் காண்டும் என்பார் அவர்தங்கட்குப்
பெண் அவன் பெண் அவன் மேனி ஓர்பாகமாம் பிஞ்ஞகன்
அண்ணவன் அண்ணவன் ஆமாத்தூர் எம் அடிகளே. 7

பொன்னவன்பொன்னவன் பொன்னைத் தந்து என்னைப் போக விடா
மின்னவன் மின்னவன் வேதத்தின் உள்பொருளாகிய
அன்னவன்அன்னவன் ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என் மனத்து இன்புற்று இருப்பனே. 8

தேடுவன்தேடுவன் செம்மலர்ப்பாதங்கள் நாள்தொறும்
நாடுவன்நாடுவன் நாபிக்கு மேலே ஓர் நால்விரல்
மாடுவன்மாடுவன் வன் கை பிடித்து மகிழ்ந்து உளே
ஆடுவன்ஆடுவன் ஆமாத்தூர் எம் அடிகளே. 9

Koviloor Digital Library

உற்றனன் உற்றவர்தம்மை ஒழிந்து உள்ளத்து உள்பொருள்
பற்றினன் பற்றினன் பங்கயச்சேவடிக்கே செல்ல
அற்றனன்அற்றனன் ஆமாத்தூர்மேயான் அடியார்கட்கு ஆள்
பெற்றனன்பெற்றனன் பெயர்த்தும்பெயர்த்தும் பிறவாமைக்கே. 10

ஐயனை அத்தனை ஆளுடை ஆமாத்தூர் அண்ணலை
மெய்யனை மெய்யர்க்கு மெய்ப்பொருளான விமலனை
மையனை மை அணி கண்டனை வன்தொண்டன் ஊரன் சொல்
பொய் ஒன்றும் இன்றிப் புலம்புவார் பொற்கழல் சேர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

81. திருக்கச்சி ஏகம்பம்

இறைவன் - தழுவக் குழைந்த நாதர் இறைவி - ஏலவார் குழலி

பண் : தக்கேசி

ஆலந்தான் உகந்து அமுதுசெய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏல வார்குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 1

Koviloor Digital Library

உற்றவர்க்கு உதவும் பெருமானை
 ஊர்வது ஒன்று உடையான் உம்பர்கோனைப்
பற்றினார்க்கு என்றும் பற்றவன்தன்னைப்
 பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றம் இல் புகழாள் உமைநங்கை
 ஆதரித்து வழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக் கம்பன்எம்மானைக்
 காணக் கண் அடியேன் பெற்றவாறே 2

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
 செங்கண் மால்விடைமேல் திகழ்வானைக்
கரியின் ஈர்உரி போர்த்து உகந்தானைக்
 காமனைக் கனலா விழித்தானை
வரி கொள் வெள்வளையாள் உமைநங்கை
 மருவி ஏத்தி வழிபடப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரானைக்
 காணக் கண் அடியேன் பெற்றவாறே 3

குண்டலந் திகழ் காது உடையானைக்
 கூற்று உதைத்த கொடுந்தொழிலானை
வண்டு அலம்பும் மலர்க்கொன்றையினானை
 வாள்அரா மதி சேர் சடையானைக்
கெண்டைஅந்தடங்கண் உமைநங்கை
 கெழுமி ஏத்தி வழிபடப்பெற்ற
கண்ட நஞ்சு உடைக் கம்பன்எம்மானைக்
 காணக் கண் அடியேன் பெற்றவாறே 4

Koviloor Digital Library

வெல்லும் வெண்மழு ஒன்று உடையானை
வேலைநஞ்சு உண்ட வித்தகன்தன்னை
அல்லல் தீர்த்து அருள்செய்ய வல்லானை
அருமறைஅவை அங்கம் வல்லானை
எல்லைஇல் புகழாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 5

திங்கள் தங்கிய சடை உடையானைத்
தேவதேவனைச் செழுங் கடல் வளரும்
சங்கவெண்குழைக் காது உடையானைச்
சாமவேதம் பெரிது உகப்பானை
மங்கைநங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப்பெற்ற
கங்கையாளனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 6

விண்ணவர் தொழுது ஏத்த நின்றானை
வேதந்தான் விரித்து ஓத வல்லானை
நண்ணரினார்க்கு என்றும் நல்லவன்தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கண்ணுமூன்று உடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 7

Koviloor Digital Library

சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில் திகழுஞ் சிவன்தன்னைப்
பந்தித்த வினைப்பற்று அறுப்பானைப்
பாலொடு ஆன்அஞ்சும் ஆட்டு உகந்தானை
அந்தம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப்பெற்ற
கந்தவார்சடைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 8

வரங்கள் பெற்று உழல் வாள் அரக்கர்தம்
வாலிய புரம்மூன்று எரித்தானை
நிரம்பிய தக்கன்தன் பெருவேள்வி
நிரந்தரஞ் செய்த நிர்க்கண்டகனைப்
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழிபடப்பெற்ற
கரங்கள் எட்டு உடைக் கம்பன்எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 9

எள்கல் இன்றி இமையவர்கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்து உள்கி உகந்து உமைநங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே 10

Koviloor Digital Library

பெற்றம் ஏறு உகந்து ஏற வல்லானைப்
பெரிய எம்பெருமான் என்று எப்போதும்
கற்றவர் பரவப்படுவானைக்
காணக் கண் அடியேன் பெற்றது என்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திரு நாவல் ஆரூரன்
நல் தமிழ் இவை ஈர் ஐந்தும் வல்லார்
நன்நெறி உலகு எய்துவர்தாமே 11

பதிக வரலாறு : (ஆலந்தானுகந்)

திருவாலங்காட்டை வணங்கிப் போய்த் திருவூறலமர்ந் திறைஞ்சி, காஞ்சிமாநகரணைந்த சுந்தரமூர்த்தி நாயனார் திருக்காமக் கோட்டத்தில் எண்ணிலா உயிர்க் கெல்லாம் இக்வாத அருளினாலான திருவறம் புரக்கும் அம்மையைப் பணிந்து போற்றித் தொல்லுலகம் முழுதும் அளித்தழித்தாக்கு முதல்வர் திருவேகம்பம் அடைந்து அடியவர் எதிர்கொளச் சென்று புக்குப் பணிபவர், 'இழுதையேன் என் மொழிவேன்' என்று இறைஞ்சி 'விண்ணாள்வார் அமுதுண்ண மிக்கபெரு விடமுண்ட கண்ணாளா, கச்சியேகம்பனே, கடையானேன் எண்ணாத பிழை பொறுத்து இன்றுயான் காணக் கண்ணளித்தருளாய், எழிற்பவள வண்ணனே' என்று வணங்கினார். வணங்கிக் காமக் கோட்டியம்மையார் கைம்மலர்களாற் பனிமலர்கள் தொண்டருச்சித்த சேவடிகளை மிக நினைந்து பேரன்போடு பரவிப் போற்றிய ஆரூரருக்கு மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த இடக்கண் கொடுத்தார். பெருந்தேவர் இருவரானும் மூலமறிதற்கு அரியான் கண்ணளித்து முலைச்சுவட்டுக் கோலங்காட்டுதலும் நம்பியாரூரர் குறுகி விழுந்தெழுந்து களித்து 'ஆலந்தானுகந்தவன்' என்று இப்பதிகம் பாடினார்.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

82 திருக்கச்சிமேற்றளி

இறைவன் - திருமேற்றளி நாதர் இறைவி - திருமேற்றளி நாயகி

பண் : நட்டராகம்

நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போய் அறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தாய் எந்தைபிரான் திரு மேற்றளி உறையும்
எந்தாய் உன்னை அல்லால் இனி ஏத்தமாட்டேனே. 1

ஆள் தான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பது எல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகை சூழ் திரு மேற்றளி உறையும்
மாட்டே உன்னை அல்லால் மகிழ்ந்து ஏத்தமாட்டேனே. 2

மோறாந்து ஓர்ஒருகால் நினையாது இருந்தாலும்
வேறா வந்து என் உள்ளம் புக வல்ல மெய்ப்பொருளே
சேறார் தண்கழனித் திருமேற்றளி உறையும்
ஏறே உன்னை அல்லால் இனி ஏத்தமாட்டேனே. 3

உற்றார் சுற்றம் எனும் அதுவிட்டு நுன் அடைந்தேன்
எற்றால் என் குறைவு என் இடரைத் துறந்தொழிந்தேன்
செற்றாய் மும்மதிலும் திரு மேற்றளி உறையும்
பற்றே நுன்னை அல்லால் பணிந்து ஏத்தமாட்டேனே. 4

எம்மான் எம்அனை என்றவர் இட்டு இறந்தொழிந்தார்
மெய்ம் மால்ஆயின தீர்த்து அருள்செய்யும் மெய்ப்பொருளே
கைம்மாஈர்உரியாய் கனம் மேற்றளி உறையும்
பெம்மான் உன்னை அல்லால் பெரிது ஏத்தமாட்டேனே. 5

Koviloor Digital Library

நானேல் உன் அடியே நினைந்தேன் நினைதலுமே
ஊன் நேர் இவ் உடலம் புகுந்தாய் என் ஒண்சுடரே
தேனே இன்னமுதே திரு மேற்றளி உறையும்
கோனே உன்னை அல்லால் குளிர்ந்து ஏத்தமாட்டேனே. 6

கையார் வெஞ்சிலை நாண்அதன்மேல் சரம் கோத்தே
எய்தாய் மும்மதிலும் எரியுண்ண எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திரு மேற்றளி உறையும்
ஐயா உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 7

விரையார் கொன்றையினாய் விமலா இனி உன்னை அல்லால்
உரையேன் நா அதனால் உடலில் உயிர் உள்ளளவும்
திரை ஆர் தண்கழனித் திரு மேற்றளி உறையும்
அரையா உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 8

நிலையா நின் அடியே நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின் நினையப் பணித்தாய் சலம்ஒழிந்தேன்
சிலையார் மா மதில் சூழ் திரு மேற்றளி உறையும்
மலையே உன்னை அல்லால் மகிழ்ந்து ஏத்தமாட்டேனே. 9

பாரூர் பல்லவன் ஊர் மதில் காஞ்சி மா நகர்வாய்ச்
சீர் ஊரும் புறவில் திரு மேற்றளிச் சிவனை
ஆரூரன் அடியான் அடித்தொண்டன் ஆரூரன் சொன்ன
சீர் ஊர் பாடல் வல்லார் சிவலோகம் சேர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

83. திருஓணகாந்தன் தளி

இறைவன் - ஓணேசுவரர், காந்தேசுவரர் இறைவி - காமாட்சியம்மை
பண் : இந்தளம்

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு
நித்தல் பூசை செய்யல்உற்றார்
கையில் ஒன்றும் காணம் இல்லைக்
கழல்அடி தொழுது உய்யின்அல்லால்
ஐவர் கொண்டு இங்கு ஆட்ட ஆடி
ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு
உய்யுமாறு ஒன்று அருளிச்செய்யீர்
ஓணகாந்தன்தளி உளீரே 1

திங்கள் தங்கு சடையின்மேல் ஓர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கையாளேல் வாய் திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன்குமரன் பிள்ளை
தேவியார் கோற்றுஅட்டியாளார்
உங்களுக்கு ஆட்செய்யமாட்டோம்
ஓணகாந்தன்தளி உளீரே 2

பெற்றபோழ்தும் பெறாதபோழ்தும்
பேணி உம் கழல் ஏத்துவார்கள்
மற்று ஓர் பற்றுஇலர் என்று இரங்ளகி
மதிஉடையவர் செய்கை செய்யீர்

Koviloor Digital Library

அற்றபோழ்தும் அலந்தபோழ்தும்
ஆவற்காலத்து அடிகேள் உம்மை
ஒற்றிவைத்து இங்கு உண்ணல் ஆமோ
ஓணகாந்தன்தளி உளீரே. 3

வல்லதுஎல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய் திறந்து ஒன்று
இல்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்பது என் நீர்
பல்லை உக்க படுதலையில்
பகல்எலாம் போய்ப் பலி திரிந்து இங்கு
ஒல்லை வாழ்க்கை ஒழியமாட்டீர்
ஓணகாந்தன்தளி உளீரே 4

கூடிக்கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணி குறைபடாமே
ஆடிப் பாடி அழுது நெக்கு அங்கு
அன்புஉடையவர்க்கு இன்பம் ஓரீர்
தேடித்தேடித் திரிந்து எய்த்தாலும்
சித்தம் என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப் போகீர் பற்றும் தாரீர்
ஓணகாந்தன்தளி உளீரே 5

வார் இருங்குழல் வான்நெடுங்கண்
மலைமகள் மது விம்மு கொன்றைத்
தார் இருந் தடமார்பு நீங்காத்
தையலாள் உலகு உய்ய வைத்த

Koviloor Digital Library

கார் இரும் பொழில் கச்சி மூதூர்க்
காமக்கோட்டம் உண்டாக நீர் போய்
ஊர் இடும் பிச்சை கொள்வது என்னே
ஓணகாந்தன்தளி உளீரே 6

பொய்ம்மையாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆளமாட்டீர்
மேலைநாள் ஒன்று இடவும் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதும் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மை அன்றே எம்பெருமான்
ஓணகாந்தன்தளி உளீரே 7

வலையம் வைத்த கூற்றம் ஈவான்
வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலை அமைத்த சிந்தையாலே
திருவடி தொழுது உய்யின் அல்லால்
கலை அமைத்த காமச் செற்றக்
குரோத லோப மதவர் ஊடு ஐ
உலை அமைத்து இங்கு ஒன்றமாட்டேன்
ஓணகாந்தன்தளி உளீரே 8

வாரம் ஆகித் திருவடிக்குப்
பணிசெய் தொண்டர் பெறுவது என்னே
ஆரம் பாம்பு வாழ்வது ஆரூர்
ஒற்றியூரேல் உம்மது அன்று

Koviloor Digital Library


தாரமாகக் கங்கையாளைச்
சடையில்வைத்த அடிகேள் உம்தம்
ஊரும் காடு உடையும் தோலே
ஓணகாந்தன்தளி உளீரே. 9

ஓ வணம் மேல் எருது ஒன்று ஏறும்
ஓணகாந்தன்தளி உளார்தம்
ஆவணம் செய்து ஆளும் கொண்டு
அரை துகில்லொடு பட்டு வீக்கிக்
கோவணம் மேற்கொண்ட வேடம்
கோவைஆக ஆரூரன் சொன்ன
பா வணத் தமிழ்பத்தும் வல்லார்க்குப்
பறையும் தாஞ் செய்த பாவம் தானே 10

பதிக வரலாறு : (நெய்யும் பாலுந்)

திருக்கச்சூ ராலக்கோயிலைச் சென்று வழிபட்ட வன்றொண்டரப் பெருமான் காஞ்சீபுரத்தை அடைந்து திருவேகாம்பரம், திருக்காமக் கோட்டம், திருமேற்றளி முதலிய திருப்பதிகளை அடைந்து பாடி வழிபட்டுத் திருவோணகாந்தன்தளியைச் சேர்ந்து இறைவனை உரிமையுடன் பேணியமைந்த தோழமையாற் பெருகும் மடிமைத்திறம் பேசிக் காணமோடு பொன் வேண்டி இப்பதிகத்தை எடுத்தேத்தி எண்ணில் நிதி வென்று இனிது இருந்து அருளினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

84. திருக்கச்சி அனேகதங்காவதம்

இறைவன் - அநேக தங்காவதேசுவரர் இறைவி - காமாட்சியம்மை

பண் : இந்தளம்

தேன்நெய் புரிந்து உழல் செஞ்சடை
எம்பெருமானது இடம் திகழ் ஐங்கணை அக்
கோனை எரித்து எரிஆடி இடம்
குலவானது இடம் குறையா மறையா
மானை இடத்தது ஓர் கையன் இடம் மதம்
மாறுபடப் பொழியும் மலை போல்
ஆனை உரித்த பிரானது இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 1

கூறு நடைக் குழிகட் பகுவாயன
பேய் உகந்து ஆட நின்று ஓரி இட
வேறுபடக் குடகத்திலை அம்பலவாணன்
நின்று ஆடல் விரும்பும் இடம்
ஏறுவிடைக் கொடி எம்பெருமான்
இமையோர்பெருமான் உமையாள்கணவன்
ஆறு சடைக்கு உடை அப்பன் இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 2

கொடிகள் இடைக்குயில் கூவும் இடம் மயில்
ஆலும் இடம் மழுவாள் உடைய
கடி கொள் புனல் சடை கொண்ட நுதல்
கறைக்கண்டன் இடம் பிறைத்துண்டம் முடிச்

Koviloor Digital Library

செடி கொள் வினைப்பகை தீரும் இடம் திரு
ஆகும் இடம் திருமார்பு அகலத்து
அடிகள் இடம் அழல்வண்ணன் இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 3

கொங்கு நுழைத்தன வண்டு அறை கொன்றையும்
கங்கையும் திங்களும் சூடு சடை
மங்குல் நுழை மலை மங்கையை நங்கையைப்
பங்கினில் தங்க உவந்து அருள்செய்
சங்குகுழைச் செவி கொண்டு அருவித்திரள்
பாய வியாத் தழல் போலுடைத் தம்
அங் கை மழுத் திகழ் கையன் இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 4

பைத்த படத்தலை ஆடுஅரவம்
பயில்கின்ற இடம் பயிலப் புகுவார்
சித்தம் ஒரு நெறி வைத்த இடம்
திகழ்கின்ற இடம் திருவான் அடிக்கே
வைத்த மனத்தவர் பத்தர் மனம்கொள
வைத்த இடம் மழுவாள் உடைய
அத்தன் இடம் அழல்வண்ணன் இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 5

தண்டம் உடைத் தருமன்தமர் என்தமரைச்
செயும் வன் துயர் தீர்க்கும் இடம்
பிண்டம் உடைப் பிறவித்தலை நின்று
13 நினைப்பவர் ஆக்கையை நீக்கும் இடம்

Koviloor Digital Library

கண்டம் உடைக் கருநஞ்சை நுகர்ந்த
பிரானது இடம் கடல்ஏழு கடந்த
அண்டம் உடைப் பெருமானது இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 6

கட்டு மயக்கம் அறுத்தவர் கைதொழுது
ஏத்தும் இடம் கதிரோன் ஒளியால்
விட்ட இடம் விடைஊர்தி இடம்
குயில் பேடை தன் சேவலொடு ஆடும் இடம்
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர் ஒரு
மாதவியோடு மணம் புணரும்
அட்டபுயங்கப்பிரானது இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 7

புல்லி இடம் தொழுது உய்தும் எனாதவர்தம்
புரம்மூன்றும் பொடிப்படுத்த
வில்லி இடம் விரவாது உயிர்உண்ணும்
வெங்காலனைக் கால்கொடு வீந்து அவியக்
கொல்லி இடம் குளிர் மாதவி மவ்வல்
குரா வகுளம் குருக்கத்தி புன்னை
அல்லிஇடைப் பெடைவண்டு உறங்கும் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 8

சங்கையவர் புணர்தற்கு அரியான் தளவு
ஏல் நகையாள் விரா மிகு சீர்
மங்கைஅவள் மகிழச் சுடுகாட்டுஇடை
நட்டம் நின்று ஆடிய சங்கரன் எம்

Koviloor Digital Library

மங்கைஅவன் நல் அனல் ஏந்துபவன் கனல்
சேர் ஒளி அன்னது ஓர் பேரகலத்து
அங்கையவன் உறைகின்ற இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 9

வீடு பெறப் பலஊழிகள் நின்று
நினைக்கும் இடம் வினை தீரும் இடம்
பீடு பெறப் பெரியோர் திடங் கொண்டு
மேவினர் தங்களைக் காக்கும் இடம்
பாடும் இடத்து அடியான் புகழ் ஊரன்
உரைத்த இம் மாலைகள் பத்தும் வல்லார்
கூடும் இடம் சிவலோகன் இடம் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 10

திருச்சிற்றம்பலம்

85. திருவன்பார்த்தான் பனங்காட்டூர்

இறைவன் - கிருபா நாதேசுவரர், பனங்காட்டுநாதர்

இறைவி - அமிர்தவல்லி, கிருபா நாயகி

பண் : சீகாமரம்

விடையின் மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில் அன்புஉடையானை யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையில் கங்கை தரித்தானைச் சாராதார் சார்பு என்னே 1

Koviloor Digital Library

அறையும் பைங்கழல் ஆர்ப்ப அரவு ஆட அனல் ஏந்திப்
பிறையும் கங்கையும் சூடிப் பெயர்ந்து ஆடும் பெருமானார்
பறையும் சங்கு ஒலி ஓவாப் படிறன் தன் பங்காட்டூர்
உறையும் எங்கள் பிரானை உணராதார் உணர்வு என்னே 2

தண்ணார் மா மதி சூடித் தழல் போலும் திருமேனிக்கு
எண்ணார் நாண்மலர் கொண்டு அங்கு இசைந்து ஏத்தும் அடியார்கள்
பண்ணார் பாடல் அறாத படிறன் தன் பனங்காட்டூர்
பெண் ஆணாய பிரானைப் பேசாதார் பேச்சு என்னே 3

நெற்றிக்கண் உடையானை நீறு ஏறும் திருமேனிக்
குற்றம் இல் குணத்தானைக் கோணாதார் மனத்தானைப்
பற்றிப் பாம்பு அரை ஆர்த்த படிறன் தன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்று ஏறும் பிரானைப் பேசாதார் பேச்சு என்னே 4

உரம் என்னும் பொருளானை உருகில் உள் உறைவானைச்
சிரம் என்னும் கலனானைச் செங்கண்மால் விடையானை
வரம் முன்னம் அருள்செய்வான் வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமன் எங்கள் பிரானைப் பரவாதார் பரவு என்னே 5

எயிலார் பொக்கம் எரித்த எண்தோள் முக்கண் இறைவன்
வெயிலாய்க் காற்று என வீசி மின்னாய்த் தீ என நின்றான்
மயிலார் சோலைகள் சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பயில்வானுக்கு அடிமைக்கண் பயிலாதார் பயில்வு என்னே 6

மெய்யன் வெண்பொடி பூசும் விகிர்தன் வேதமுதல்வன்
கையில் மான் மழு ஏந்திக் காலன் காலம் அறுத்தான்
பை கொள் பாம்பு அரை ஆர்த்த படிறன் தன் பனங்காட்டூர்
ஐயன் எங்கள் பிரானை அறியாதார் அறிவு என்னே 7

Koviloor Digital Library

வஞ்சம் அற்ற மனத்தாரை மறவாத பிறப்புஇலியைப்
பஞ்சிச் சீறடியாளைப் பாகம் வைத்து உகந்தானை
மஞ்சு உற்ற மணி மாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்து எங்கள் பிரானை நினையாதார் நினைவு என்னே 8

மழையானும் திகழ்கின்ற மலரோன் என்று இருவர்தாம்
உழையா நின்றவர் உள்க உயர்வானத்து உயர்வானைப்
பழையானைப் பனங்காட்டூர் பதியாகத் திகழ்கின்ற
குழை காதற்கு அடிமைக்கண் குழையாதார் குழைவு என்னே 9

பார் ஊரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீர் ஊரும் திரு ஆரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் அடியன் சொல் அடிநாய் சொல்
ஊரூரன் உரைசெய்வார் உயர்வானத்து உயர்வாரே 10

திருச்சிற்றம்பலம்

86. திருஆலங்காடு

இறைவன் - தேவர் சிங்கப்பெருமான் இறைவி - வண்டார்குழலி

பண் : பழம்பஞ்சரம்

முத்தா முத்தி தர வல்ல முகிழ்மென்முலையாள்உமை பங்கா
சித்தா சித்தித் திறம் காட்டும் சிவனே தேவர்சிங்கமே
பத்தா பத்தர்பலர் போற்றும் பரமா பழையனூர் மேய
அத்தா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 1

Koviloor Digital Library

பொய்யே செய்து புறம்புறமே திரிவேன்தன்னைப் போகாமே
மெய்யே வந்து இங்கு எனை ஆண்ட மெய்யா மெய்யர் மெய்ப்பொருளே
பைஆடு அரவம் அரைக்கு அசைத்த பரமா பழையனூர் மேய
ஐயா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 2

தூண்டா விளக்கின் நற்சோதீ தொழுவார்தங்கள் துயர் தீர்ப்பாய்
பூண்டாய் எலும்பைப் புரம்மூன்றும் பொடியாச் செற்ற புண்ணியனே
பாண்டு ஆழ் வினைகள்அவை தீர்க்கும் பரமா பழையனூர் மேய
ஆண்டா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 3

மறி நேர் ஒண்கண் மடநல்லார் வலையில் பட்டு மதி மயங்கி
அறிவே அழிந்தேன் ஐயா நான் மையார் கண்டம் உடையானே
பறியா வினைகள்அவை தீர்க்கும் பரமா பழையனூர் மேய
அறிவே ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 4

வேலங்காடு தடங்கண்ணார் வலையுள் பட்டு உன் நெறி மறந்து
மால் அங்கு ஆடி மறந்தொழிந்தேன் மணியே முத்தே மரகதமே
பால் அங்கு ஆடீ நெய்ஆடீ படர்புன்சடையாய் பழையனூர்
ஆலங்காடா உன்னுடைய அடியார்க்கு அடியேன் ஆவேனே 5

எண்ணார்தங்கள் எயில் எய்த எந்தாய் எந்தைபெருமானே
கண்ணாய் உலகங் காக்கின்ற கருத்தா திருத்தல் ஆகாதாய்
பண்ணார் இசைகள்அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அண்ணா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 6

வண்டார் குழலிஉமை நங்கை பங்கா கங்கைமணவாளா
விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய் வேதநெறியானே
பண்டு ஆழ் வினைகள்பல தீர்க்கும் பரமா பழையனூர் மேய
அண்டா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 7

Koviloor Digital Library

பேழ்வாய் அரவின் அணையானும் பெரிய மலர்மேல் உறைவானும்
தாழாது உன்தன் சரண் பணியத் தழலாய் நின்ற தத்துவனே
பாழாம் வினைகள்அவை தீர்க்கும் பரமா பழையனூர் தன்னை
ஆள்வாய் ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 8


எம்மான் எந்தை மூத்தப்பன் ஏழ்ஏழ்படிகால் எமை ஆண்ட
பெம்மான் ஈமப் புறங்காட்டில் பேயோடு ஆடல் புரிவானே
பல் மா மலர்கள்அவை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங்காடா உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே 9

பத்தர்சித்தர் பலர் ஏத்தும் பரமன் பழையனூர் மேய
அத்தன் ஆலங்காடன்தன் அடிமைத்திறமே அன்பாகிச்
சித்தர் சித்தம்வைத்த புகழ்ச் சிறுவன்ஊரன் ஒண்தமிழ்கள்
பத்தும் பாடி ஆடுவார் பரமன்அடியே பணிவாரே 10

பதிக வரலாறு : (முத்தாமுத்தி)

திருவெண்பாக்கத்தினின்றுந் திருவாலங்காட்டை அடையும் தம்பிரான் தோழர் பழையனூருக்கு அருகே வந்து, திருவாலங்காடு காரைக் காலம்மையார் தலையாலே நடந்து திருப்பணி செய்ததாம் ஆகலின் வெளியே நின்று கோயிலை நோக்கி இத்திருப்பதிகம் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

87. திருவெண்பாக்கம்

இறைவன் - ஊன்றீசுவரர் இறைவி - மின்னலொளியம்மை

பண் : சீகாமரம்

பிழை உளன பொறுத்திடுவர் என்று அடியேன் பிழைத்தக்கால்
பழி அதனைப் பாராதே படலம் என் கண் மறைப்பித்தாய்
குழை விரவு வடி காதா கோயில் உளாயே என்ன
உழை உடையான் உள் இருந்து உளோம் போகீர் என்றானே. 1

இடை அறியேன் தலை அறியேன் எம்பெருமான் சரணம் என்பேன்
நடை உடையன் நம் அடியான் என்று அவற்றைப் பாராதே
விடை உடையான் விடநாகன் வெண்நீற்றன் புலியின்தோல்
உடை உடையான் எனை உடையான் உளோம் போகீர் என்றானே. 2

செய் வினை ஒன்று அறியாதேன் திருவடியே சரண் என்று
பொய் அடியேன் பிழைத்திடினும் பொறுத்திட நீ வேண்டாவோ
பைஅரவா இங்கு இருந்தாயோ என்னப் பரிந்து என்னை
உய்ய அருள்செய்ய வல்லான் உளோம் போகீர் என்றானே. 3

கம்பமருங் கரி உரியன் கறைமிடற்றன் காபாலி
செம்பவள்த்திருஉருவன் சேயிழையோடு உடனாகி
நம்பி இங்கே இருந்தாயே என்று நான் கேட்டலுமே
உம்பர்தனித்துணை எனக்கு உளோம் போகீர் என்றானே. 4

பொன்இலங்கு நறுங்கொன்றை புரிசடைமேல் பொலிந்து இலங்க
மின்இலங்கு நுண்இடையாள் பாகமா எருது ஏறித்
துன்னி இருபால் அடியார் தொழுது ஏத்த அடியேனும்
உன்னமதாய்க் கேட்டலுமே உளோம் போகீர் என்றானே. 5

9

Koviloor Digital Library

கண்நுதலால் காமனையுங் காய்ந்த திறற் கங்கை மலர்
தெண்நிலவு செஞ்சடைமேல் தீமலர்ந்த கொன்றையினான்
கண்மணியை மறைப்பித்தாய் இங்கு இருந்தாயோ என்ன
ஒண்நுதலி பெருமான் தான் உளோம் போகீர் என்றானே. 6

பார் நிலவு மறையோரும் பத்தர்களும் பணி செய்யத்
தார் நிலவு நறுங்கொன்றைச் சடையனார் தாங்கரிய
கார் நிலவு மணிமிடற்றீர் ஈங்கு இருந்தீரே என்ன
ஊர்அரவம் அரைக்கு அசைத்தான் உளோம் போகீர் என்றானே. 7

வார் இடம் கொள் வனமுலையாள்தன்னோடு மயானத்துப்
பாரிடங்கள்பல சூழப் பயின்று ஆடும் பரமேட்டி
கார் இடம்கொள் கண்டத்தன் கருதும் இடந் திரு ஒற்றியூர்
இடங்கொண்டு இருந்த பிரான் உளோம் போகீர் என்றானே. 8

பொன் நவிலும் கொன்றையினாய் போய் மகிழ்க்கீழ் இரு என்று
சொன்ன எனைக் காணாமே சூளுறவு மகிழ்க்கீழே
என்ன வல்ல பெருமானே இங்கு இருந்தாயோ என்ன
ஒன்னலரைக் கண்டாற் போல் உளோம் போகீர் என்றானே. 9

மான் திகழுஞ் சங்கிலியைத் தந்து வரு பயன்கள் எல்லாம்
தோன்ற அருள்செய்து அளித்தாய் என்று உரைக்க உலகமெலாம்
ஈன்றவனே வெண்கோயில் இங்கு இருந்தாயோ என்ன
ஊன்றுவது ஓர் கோல் அருளி உளோம் போகீர் என்றானே. 10

ஏராரும் பொழில் நிலவு வெண்பாக்கம் இடங்கொண்ட
காராரும் மிடற்றானைக் காதலித்திட்டு அன்பினொடும்
சீராருந் திரு ஆரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த
ஆரூரன் தமிழ் வல்லார்க்கு அடையா வல்வினைதானே. 11

Koviloor Digital Library

பதிக வரலாறு : (பிழையுளன)

திருவாரூரை அடைய விரும்பித் திருவொற்றியூரினின்றும் புறப்பட்டுக் கண்கள் மறையப்பெற்றுத் திருமுல்லைவாயிலை அடைந்து பாடிய நம்பியாரூரர், திருவெண்பாக்கத்துத் தொண்டர்கள் எதிர்கொள்ள அதனை யடைந்து திருக்கோயிலிற் சென்று வலம் வந்து திருமுன்னின்று தலையின்மேல் கை குவித்து வணங்கிப் 'பிழையுளன பொறுத்திடவர்', என்றெடுத்துக் கோயிலுளீரே என்றபோது ஊன்று கோலொன்றருளி 'உளோம் போகீர்' என்றருளியதை மற்றொரு பாட்டின் வைத்துப் பாடி என்னுடைய பிரானருளித்தனைகொலாமென்று தொண்டருடன் வழிக் கொள்வாராயினர்.

திருச்சிற்றம்பலம்

88. திருக்காளத்தி

இறைவன் - காளத்தி நாதர், குடுமித்தேவர்

இறைவி - ஞானப்பூங்கோதை

பண் : நட்டராகம்

சென்டு ஆடும் விடையாய் சிவனே என் செழுஞ்சுடரே
வண்டு ஆரும் குழலாள் உமை பாகம் மகிழ்ந்தவனே
கண்டார் காதலிக்கும் கணநாதன் எம் காளத்தியாய்
அண்டா உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 1

இமையோர் நாயகனே இறைவா என் இடர்த்துணையே
கமையார் கருணையினாய் கரு மா முகில் போல் மிடற்றாய்
உமை யோர்கூறு உடையாய் உருவே திருக் காளத்தியுள்
அமைவே உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 2

Koviloor Digital Library

படையார் வெண்மழுவா பகலோன் பல் உகுத்தவனே
விடையார் வேதியனே விளங்கும் குழைக் காது உடையாய்
கடையார் மாளிகை சூழ் கணநாதன் எம் காளத்தியாய்
உடையாய் உன்னை அல்லால் உகந்து ஏத்தமாட்டேனே. 3

மறி சேர் கையினனே மதமாஉரி போர்த்தவனே
குறியே என்னுடைய குருவே உன் குற்றேவல் செய்வேன்
நெறியே நின்று அடியார் நினைக்கும் திருக் காளத்தியுள்
அறிவே உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 4

செஞ்சேல் அன்ன கண்ணார் திறத்தே கிடந்து உற்று அலறி
நஞ்சேன் நான்அடியேன் நலம் ஒன்று அறியாமையினால்
துஞ்சேன் நான் ஒரு கால் தொழுதேன் திருக் காளத்தியாய்
அஞ்சாது உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 5

பொய்யவன் நாய்அடியேன் புகவே நெறி ஒன்று அறியேன்
செய்யவன் ஆகி வந்து இங்கு இடர்ஆனவை தீர்த்தவனே
மெய்யவனே திருவே விளங்கும் திருக் காளத்தி என்
ஐய நுன்தன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 6

கடியேன் காதன்மையால் கழல்போது அறியாத என் உள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம் குழகா
முடியால் வானவர்கள் முயங்கும் திருக் காளத்தியாய்
அடியேன் உன்னை அல்லால் அறியேன் மற்று ஒருவரையே. 7

நீறார் மேனியனே நிமலா நினை அன்றி மற்றுக்
கூறேன் நாஅதனால் கொழுந்தே என் குணக்கடலே
பாறார் வெண்தலையில் பலி கொண்டு உழல் காளத்தியாய்
ஏறே உன்னை அல்லால் இனி ஏத்தமாட்டேனே. 8

Koviloor Digital Library

தளிர் போல் மெல்அடியாள்தனை ஆகத்து அமர்ந்துஅருளி
எளிவாய் வந்து என் உள்ளம் புகுத வல்ல எம்பெருமான்
களியார் வண்டு அறையும் திருக் காளத்தியுள் இருந்த
ஒளியே உன்னை அல்லால் இனி ஒன்றும் உணரேனே. 9

கார் ஊரும் பொழில் சூழ் கணநாதன் எம் காளத்தியுள்
ஆரா இன்னமுதை அணி நாவல் ஆரூரன் சொன்ன
சீர் ஊர் செந்தமிழ்கள் செப்புவார் வினைஆயின போய்ப்
பேரா விண்ணுலகம் பெறுவார் பிழைப்பு ஒன்று இலரே. 10

திருச்சிற்றம்பலம்

89. திருஒற்றியூர்

இறைவன் - படம் பக்க நாதர், தியாகேசர் ஆதி புரீசுவரர், புற்றிடங் கொண்டார், எழுத்தறியும் பெருமான்

இறைவி - வடிவுடையம்மை

பண் : தக்கேசி

அழுக்கு மெய்கொடு உன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான் படற்பால தொன்றுஆனால்
பிழுக்கை வாரியும் பால் கொள்வர் அடிகேள்
பிழைப்பன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர்அல்லால்
மற்று நான் அறியேன் மறு மாற்றம்
ஒழுக்க என் கணுக்கு ஒரு மருந்து உரையாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே. 1

Koviloor Digital Library

கட்டனேன் பிறந்தேன் உனக்கு ஆளாய்க்
காதல் சங்கிலி காரணமாக
எட்டினால் திகழும் திருமூர்த்தீ
என் செய்வான் அடியேன் எடுத்து உரைக்கேன்
பெட்டன் ஆகிலும் திருவடிப் பிழையேன்
பிழைப்பன் ஆகிலும் திருவடிக்கு அடிமை
ஒட்டினேன் எனை நீ செய்வதுஎல்லாம்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே. 2

கங்கை தங்கிய சடை உடைக் கரும்பே
கட்டியே பலர்க்கும் களைகண்ணே
அங்கை நெல்லியின்பழத்துஇடை அமுதே
அத்தா என் இடர் ஆர்க்கு எடுத்து உரைக்கேன்
சங்கும் இப்பியும் சலஞ்சலம் முரல
வயிரம் முத்தொடு பொன் மணி வரன்றி
ஒங்கும் மா கடல் ஓதம் வந்து உலவும்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 3

ஈன்று கொண்டது ஓர் சுற்றம்ஒன்று அன்றால்
யாவர்ஆகில் என் அன்பு உடையார்கள்
தோன்ற நின்று அருள்செய்து அளித்திட்டால்
சொல்லுவாரை அல்லாதன சொல்லாய்
மூன்றுகண் உடையாய் அடியேன் கண்
கொள்வதே கணக்குவ் வழக்கு ஆகில்
ஊன்றுகோல் எனக்கு ஆவது ஒன்று அருளாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 4

Koviloor Digital Library

வழித்தலைப் படுவான் முயல்கின்றேன்
உன்னைப் போல் என்னைப் பாவிக்கமாட்டேன்
சுழித்தலைப் பட்ட நீர் அது போலச்
சுழல்கின்றேன் சுழல்கின்றது என் உள்ளம்
கழித்தலைப் பட்ட நாய்அது போல
ஒருவன் கோல் பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து நீ அருள்ஆயின செய்யாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 5

மானைநோக்கியர் கண்வலைப் பட்டு
வருந்தி யான் உற்ற வல்வினைக்கு அஞ்சித்
தேனை ஆடிய கொன்றையினாய் உன்
சீலமுங் குணமுஞ் சிந்தியாதே
நானும் இத்தனை வேண்டுவது அடியேன்
உயிரொடுந் நரகத்து அழுந்தாமை
ஊனம்உள்ளன தீர்த்து அருள்செய்யாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 6

மற்றுத் தேவரை நினைந்து உனை மறவேன்
நெஞ்சினாரொடு வாழவு மாட்டேன்
பெற்றிருந்து பெறாதொழிகின்ற
பேதையேன் பிழைத்திட்டதை அறியேன்
முற்றும் நீ எனை முனிந்திட அடியேன்
கட்வது என் உனை நான் மறவேனேல்
உற்ற நோய் உறு பிணி தவிர்த்து அருளாய்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 7

Koviloor Digital Library

கூடினாய் மலைமங்கையை நினையாய்
கங்கை ஆயிரமுகம் உடையாளைச்
சூடினாய் என்று சொல்லிய புக்கால்
தொழும்பனேனுக்குஞ் சொல்லலும் ஆமே
வாடி நீ இருந்து என் செய்தி மனமே
வருந்தி யான் உற்ற வல்வினைக்கு அஞ்சி
ஊடினால் இனி ஆவது ஒன்று உ்ண்டே
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 8

மகத்திற் புக்கது ஓர் சனி எனக்கு ஆனாய்
மைந்தனே மணியே மணவாளா
அகத்திற் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால்
அழையல் போ குருடா எனத் தரியேன்
முகத்தில் கண் இழந்து எங்ஙனம் வாழ்கேன்
முக்கணா முறையோ மறைஓதீ
உகைக்குந் தண்கடல் ஓதம் வந்து உலவும்
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே 9

ஓதம் வந்து உலவும் கரைதன்மேல்
ஒற்றியூர் உறைசெல்வனை நாளும்
ஞாலந்தான் பரவப்படுகின்ற
நால்மறை அங்கம் ஓதிய நாவன்
சீலம்தான் பெரிதும் மிக வல்ல
சிறுவன் வன்தொண்டன் ஊரன் உரைத்த
பாடல் பத்துஇவை வல்லவர்தாம் போய்ப்
பரகதி திண்ணம் நண்ணுவர்தாமே 10

Koviloor Digital Library

பதிக வரலாறு : (அழுக்கு)

திருவாரூர் வேனிற் திருநாளை நினைந்து 'பத்திமையு மடிமையையும்' என்னுந் திருப்பதிகம் பாடி மிக இரங்கிய திருநாவலூரார் பின்னொரு நாள் திருவாரூரை மிக நினைந்து படம்பக்கநாதருடைய திருக்கோயிலுள்ளே சென்று பணிந்து திருவொற்றியூரை நீங்க அடியிட்ட அளவில் சங்கிலியாருக்கு அவர் செய்து கொடுத்த ஆணையால் மேலடியெடுத்து வைக்க வழிதோன்றாது கண்கள் மறைந்து மூர்ச்சித்துப் பிறகு செய்வதிது என்றறியாது நெட்டுயிர்த்துச் சூளுறவு மறுத்ததனால் நேர்ந்ததிதுவென நினைந்து இத்துயர் நீங்க இறைவனைப் பாடுவேனென்று எண்ணி இழுக்கு நீக்கிடவும் எய்தும் வெந்துயர்க் கையறவினுக்கும் பழிக்கும் வெள்கியும் நல்ல பண்ணிசை பொருந்திய இத்திருப்பதிகம் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

௯0. திருஒற்றியூர்

பண் : குறிஞ்சி

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஒட்டும் திரைவாய் ஒற்றியூரே. 1

பந்தும் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார் செந்தீவண்ணர்
எம்தம் அடிகள் இறைவர்க்கு இடம்போல்
உந்தும் திரைவாய் ஒற்றியூரே. 2

Koviloor Digital Library

பவளக்கனிவாய்ப் பாவை பங்கன்
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதி சேர் சடையாற்கு இடம்போல்
உகளும் திரைவாய் ஒற்றியூரே. 3

எனது எழிலும் நிறையும் கவர்வான்
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப்படுவான் ஒற்றியூரே. 4

பணம் கொள் அரவம் பற்றி பரமன்
கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடை மென்மடவார் இட்ட
உணங்கல் கவர்வான் ஒற்றியூரே. 5

படையார் மழுவன் பால்வெண்நீற்றன்
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவார் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றியூரே. 6

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரைஏறு
ஒன்றை உடையான் ஒற்றியூரே. 7

கலவமயில் போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப்படியான்
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவுந் திரைவாய் ஒற்றியூரே. 8

Koviloor Digital Library

பற்றி வரையை எடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றும் திரைவாய் ஒற்றியூரே. 9

ஒற்றி ஊரும் அரவும் பிறையும்
பற்றி ஊரும் பவளச்சடையான்
ஒற்றியூர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே. 10

திருச்சிற்றம்பலம்

91. வடதிருமுல்லைவாயில்

இறைவன் - மாசிலாமணி ஈசர் இறைவி - கொடியிடை நாயகி

பண் : தக்கேசி

திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்கு உன்
சீர் உடைக் கழல்கள் என்று எண்ணி
ஒருவரை மதியாது உறாமைகள் செய்தும்
ஊடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகு அமர் சோலை சூழ் திருமுல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 1

Koviloor Digital Library

கூடிய இலயம் சதி பிழையாமைக்
கொடி இடைஉமை அவள்காண
ஆடிய அழகா அரு மறைப்பொருளே
அங்கணா எங்கு உற்றாய் என்று
தேடிய வானோர் சேர் திரு முல்லை
வாயிலாய் திருப் புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 2

விண் பணிந்து ஏத்தும் வேதியா மாதர்
வெருவிட வேழம் அன்று உரித்தாய்
செண்பகச்சோலை சூழ் திருமுல்லை
வாயிலாய் தேவர்தம் அரசே
தண்பொழில் ஒற்றி மா நகர் உடையாய்
சங்கிலிக்கா என் கண் கொண்ட
பண்ப நின் அடியேன் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 3

பொன் நலங் கழனிப் புது விரை மருவிப்
பொறிவரிவண்டு இசை பாட
அந் நலங் கமலத்தவிசின்மேல் உறங்கும்
அலவன் வந்து உலவிட அள்ளற்
செந்நெல்அங்கழனி சூழ் திரு முல்லை
வாயிலாய் திருப்புகழ் விருப்பால்
பன்னலந் தமிழால் பாடுவேற்கு அருளாய்
பாசுபதா பரஞ்சுடரே. 4

Koviloor Digital Library

சந்தனவேருங் கார்அகில்குறடுந்
தண் மயில்பீலியுங் கரியின்
தந்தமுந் தரளக்குவைகளும் பவளக்
கொடிகளுஞ் சுமந்து கொண்டு உந்தி
வந்து இழி பாலி வடகரை முல்லை
வாயிலாய் மாசிலா மணியே
பந்தனை கெடுத்து என் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 5

மற்று நான் பெற்றதார் பெற வல்லார்
வள்ளலே கள்ளமே பேசிக்
குற்றமே செயினுங் குணம் எனக் கொள்ளுங்
கொள்கையான் மிகைபல செய்தேன்
செற்று மீது ஓடுந் திரிபுரம் எரித்த
திரு முல்லைவாயிலாய் அடியேன்
பற்று இலேன் உற்ற படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 6

மணி கெழு செவ்வாய் வெண்நகைக் கரிய
வார்குழல் மா மயில்சாயல்
அணி கெழு கொங்கை அங் கயற்கண்ணார்
அரு நடம்ஆடல் அறாத
திணி பொழில் தழுவு திரு முல்லைவாயில்
செல்வனே எல்லியும் பகலும்
பணிஅது செய்வேன் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 7

Koviloor Digital Library

நம்பனே அன்று வெண்ணெய்நல்லூரில்
நாயினேன்தன்னை ஆட்கொண்ட
சம்புவே உம்பரார் தொழுது ஏத்துந்
தடங்கடல்நஞ்சு உண்ட கண்டா
செம்பொன் மாளிகை சூழ் திருமுல்லைவாயில்
தேடி யான் திரிதர்வேன்உண்ட
பைம்பொனே அடியேன் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 8

மட்டு உலாம் மலர்கொண்டு அடிஇணை வணங்கும்
மாணிதன்மேல் மதியாதே
கட்டுவான் வந்த காலனை மாளக்
காலினால் ஆருயிர் செகுத்த
சிட்டனே செல்வத் திரு முல்லைவாயில்
செல்வனே செழுமறை பகர்ந்த
பட்டனே அடியேன் படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 9

சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ் கொடிமுல்லையாற் கட்டிட்டு
எல்லை இல் இன்பம் அவன் பெற வெளிப்பட்டு
அருளிய இறைவனே என்றும்
நல்லவர் பரவுந் திரு முல்லைவாயில்
நாதனே நரைவிடை ஏறீ
பல்கலைப்பொருளே படு துயர் களையாய்
பாசுபதா பரஞ்சுடரே. 10


Koviloor Digital Library

விரை தரு மலர்மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்ட எம்மானைத்
திரை திரு புனல் சூழ் திரு முல்லைவாயிற்
செல்வனை நாவல் ஆரூரன்
உரைதரு மாலை ஓர்அஞ்சினோடு அஞ்சும்
உள் குளிர்ந்து ஏத்த வல்லார்கள்
நரை திரைமூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர் விண்ணவர்க்கு அரசே. 11

பதிக வரலாறு : (திருவுமெய்ப்ப்)

திருவொற்றியூரைக் கடந்து கண்கள் மறையப்பெற்ற வன்தொண்டர் திருமுல்லைவாயிலை அடைந்து இறைவனை வணங்கி இத்திருப்பதிகம் எடுத்து அதில் சங்கிலிக்காகத் தம் கண்களை மறைத்ததையும், தொண்டைமானுக்கருளிய திறத்தையும் வைத்துத் தமது வெந்துயர் களையுமாறு பரவிக் குறித்த காதலோடு நெறிக்கொண்டு திருவெண்பாக்கத்தை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

92. திருக்கச்சூர் ஆலக்கோயில்

இறைவன் - விருந்திட்ட நாதர் இறைவி - உமையம்மை

பண் : கொல்லிக்கௌவாணம்

முதுவாய் ஓரி கதற முதுகாட்டு
எரி கொண்டு ஆடல் முயல்வானே
மது வார் கொன்றைப்புதுவீ சூடும்
மலையான்மகள்தன் மணவாளா
கதுவாய்த்தலையில் பலி நீ கொள்ளக்
கண்டால் அடியார் கவலாரே
அதுவே ஆமாறு இதுவோ கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 1

கச்சு ஏர் அரவு ஒன்று அரையில் அசைத்துக்
கழலுஞ் சிலம்புங் கலிக்கப் பலிக்கு என்று
உச்சம்போதா ஊர்ஊர் திரியக்
கண்டால் அடியார் உருகாரே
இச்சை அறியோம் எங்கள் பெருமான்
ஏழ்ஏழ்பிறப்பும் எனை ஆள்வாய்
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால்
ஆலக்கோயில் அம்மானே. 2

சாலக் கோயில் உள நின் கோயில்
அவை என் தலைமேல் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன் வினையும் துரந்தேன்
வானோர் அறியா நெறியானே

Koviloor Digital Library

கோலக் கோயில் குறையாக் கோயில்
குளிர் பூங் கச்சூர் வடபாலை
ஆலக்கோயில் கல்லால்நிழல்கீழ்
அறங்கள் உரைத்த அம்மானே. 3

விடையும் கொடியும் சடையும் உடையாய்
மின் நேர் உருவத்து ஒளியானே
கடையும் புடை சூழ் மணி மண்டபமும்
கன்னிமாடம் கலந்து எங்கும்
புடையும் பொழிலும் புனலும் தழுவிப்
பூமேல் திருமாமகள் புல்கி
அடையும் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 4

மேலைவிதியே விதியின் பயனே
விரவார் புரம்மூன்று எரிசெய்தாய்
காலை எழுந்து தொழுவார்தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே
மறவேன் அடியேன் வயல் சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 5

பிறவாய் இறவாய் பேணாய் மூவாய்
பெற்றம் ஏறிப் பேய் சூழ்தல்
துறவாய் மறவாய் சுடுகாடு என்றும்
இடமாக்கொண்டு நடமாடி

Koviloor Digital Library

ஒறுவாய்த்தலையில் பலி நீ கொள்ளக்
கண்டால் அடியார் உருகாரே
அறவே ஒழியாய் கச்சூர் வடபால்
ஆலக்கோயில் அம்மானே. 6

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால்
அதுவும் பொருளாஃக் கொள்வானே
மெய்யே எங்கள் பெருமான் உன்னை
நினைவார் அவரை நினைகண்டாய்
மை யார் தடங்கண் மடந்தை பங்கா
கங்கார் மதியஞ் சடை வைத்த
ஐயா செய்யாய் வெளியாய் கச்சூர்
ஆலக்கோயில் அம்மானே. 7

ஊனைப் பெருக்கி உன்னை நினையாது
ஒழிந்தேன் செடியேன் உணர்வுஇல்லேன்
கானக் கொன்றை கமழ மலரும்
கடிநாறு உடையாய் கச்சூராய்
மானைப் புரையும் மடமென்நோக்கி
மடவாள் அஞ்ச மறைத்திட்ட
ஆனைத்தோலாய் ஞானக்கண்ணாய்
ஆலக்கோயில் அம்மானே. 8

காதல்செய்து களித்துப் பிதற்றிக்
கடமாமலர் இட்டு உனை ஏத்தி
ஆதல் செய்யும் அடியார் இருக்க
ஐயம் கொள்வது அழகிதே

Koviloor Digital Library

ஒதக் கண்டேன் உன்னை மறவேன்
 உமையாள்கணவா எனை ஆள்வாய்
ஆதற் கழனிப் பழனக் கச்சூர்
 ஆலக்கோயில் அம்மானே. 9

அன்னம் மன்னும் வயல் சூழ் கச்சூர்
 ஆலக்கோயில் அம்மானை
உன்ன முன்னு மனத்து ஆரூரன்
 ஆரூரன் பேர் முடி வைத்த
மன்னு புலவன் வயல் நாவலர்கோன்
 செஞ்சொல் நாவன் வன்தொண்டன்
பன்னு தமிழ்நூல்மாலை வல்லார்
 அவர் என் தலைமேல் பயில்வாரே. 10

பதிக வரலாறு : (முதுவாயோரி)

திருக்கழுக்குன்றத்தை வழிபட்ட வன்றொண்டார் திருக்கச்சூரை அடைந்து மெய்யன்புருகக் கும்பிட்டுப் புறத்தணைந்த போது அமுது செய்யும் பொழுதாகி அமுது செய்தளிப்பார் வாராமையால் மிக்க பசி வருத்தத்தால் திருவாயிலின்மதிற்புறத்திருந்தார். மலைமேன் மருந்தான் இறைவர் வன்றொண்டர் பசி தீர்க்கும்பொருட்டுப் பிரமன் தலையோடல்லாத வெற்றோட்டினைக் கையிலேந்திக் கொண்டு அங்கு வாழும் மறையவராய் வெளிப்பட்டு வந்து நாயனாரைப் பார்த்துப் 'பசியினான் மிக வருந்தி யிளைத்துற்றீர். உம்முடைய பசி வேட்கைதீர இப்போது உமக்குச் சோறிரந்து கொணர்கின்றேன். அப்புறம் செல்லாது சிறிது பொழுது அமரும்' எனச் செப்பித் திருக்கச்சூர் மனைதோறுஞ் சென்றிரந்து ஆட்கொண்டவர் முன் கொடு வந்து இன் அடிசிலுங் கறியும் அரந்தைதரும் பசிதீர அருந்தும்படி பணித்துக் கொடுத்ததை

Koviloor Digital Library

நாயனார் நேர் தொழுது வாங்கித் தமது மருங்கணைந்த வன்தொண்டரோடு உண்டு உவந்திருக்கும்போது இறைவர் மறைந்தருளினார். அதனை உணர்ந்து மறையவர் இறைவரெனத் தெளிந்து எளியேன் பொருட்டாக இப்பெரும் பகற்கண் பேரோசைச் சிலம்பணி சேவடி வருந்த எழுந்தருளினாரேயென வருந்தி உருகிக் கண்ணீர் பொழியப் புளகம் போர்த்த உடம்பொடு இப்பதிகத்தால் இறைவரைப் பணிந்து பாடி மகிழ்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

93. திருக்கழுக்குன்றம்

இறைவன் - வேதபுரீசுவரர், பக்தவச்சலர்
இறைவி - பெண்ணின் நல்லாள்
பண் : நட்டபாடை

கொன்று செய்த கொடுமையால் பல சொல்லவே
நின்ற பாவவினைகள்தாம் பல நீங்கவே
சென்றுசென்று தொழுமின் தேவர்பிரானிடம்
கன்றினோடு பிடி சூழ் தண் கழுக்குன்றமே 1

இறங்கிச் சென்று தொழுமின் இன்னிசை பாடியே
பிறங்கு கொன்றைச் சடையன் எங்கள் பிரானிடம்
நிறங்கள் செய்த மணிகள் நித்திலம் கொண்டு இழி
கறங்கு வெள்ளைஅருவித் தண் கழுக்குன்றமே 2

நீள நின்று தொழுமின் நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழிந்திடத்
தோளும்எட்டும் உடைய மா மணிச்சோதியான்
காளகண்டன் உறையும் தண் கழுக்குன்றமே 3

Koviloor Digital Library

வெளிறு தீரத் தொழுமின் வெண்பொடி ஆடியை
முளிறு இலங்கு மழுவாளன் முந்தி உறைவிடம்
பிளிறு தீரப் பெருங்கைப் பெய் மதம்மூன்று உடைக்
களிறினோடு பிடி சூழ் தண் கழுக்குன்றமே 4

புலைகள் தீரத் தொழுமின் புன்சடைப் புண்ணியன்
இலை கொள் சூலப்படையன் எந்தைபிரானிடம்
முலைகள் உண்டு தழுவிக் குட்டியொடு முசுக்
கலைகள் பாயும் புறவில் தண் கழுக்குன்றமே 5

மடம் உடைய அடியார்தம் மனத்தே உற
விடம் உடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படம் உடைய அரவன்தான் பயிலும்மிடம்
கடம் உடைய புறவின் தண் கழுக்குன்றமே 6

ஊனம் இல்லா அடியார்தம் மனத்தே உற
ஞானமூர்த்தி நட்டம் ஆடி நவிலுமிடம்
தேனும் வண்டும் மது உண்டு இன்இசை பாடவே
கானமஞ்ஞை உறையும் தண் கழுக்குன்றமே 7

அந்தம் இல்லா அடியார்தம் மனத்தே உற
வந்து நாளும் வணங்கி மாலொடு நான்முகன்
சிந்தைசெய்த மலர்கள் நித்தலுஞ் சேரவே
சந்தம் நாறும் புறவின் தண் கழுக்குன்றமே 8

பிழைகள் தீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழை கொள் காதன் குழகன் தான் உறையும் இடம்
மழைகள் சாலக் கலித்து நீடு உயர் வேயவை
கழை கொள் முத்தம் சொரியும் தண் கழுக்குன்றமே 9

Koviloor Digital Library

பல்லின் வெள்ளைத்தலையன் தான் பயிலும் இடம்
கல்லின் வெள்ளைஅருவித் தண் கழுக்குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே 10

திருச்சிற்றம்பலம்

94. திருச் சீபர்பதம்

இறைவன் - பருப்பத நாதர் இறைவி - பருப்பத நாயகி

பண் : நட்டபாடை

மானும் மரைஇனமும் மயில்இனமும் கலந்து எங்கும்
தாமே மிக மேய்ந்து தடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூ மா மரம் உரிஞ்சிப் பொழில்ஊடே சென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல் துயில் சீபர்ப்பத மலையே. 1

மலைச் சாரலும் பொழில் சாரலும் புறமே வரும் இனங்கள்
மலைப்பால் கொணர்ந்து இடித்து ஊட்டிட மலங்கித்தம களிற்றை
அழைத்து ஒடியும் பிளிறியவை அலமந்து வந்து எய்த்துத்
திகைத்து ஓடித் தம் பிடி தேடிடும் சீபர்ப்பத மலையே. 2

மன்னிப் புனங் காவல் மடமொழியாள் புனம் காக்கக்
கன்னிக்கிளி வந்து கவைக் கோலிக் கதிர் கொய்ய
என்னைக் கிளி மதியாது என எடுத்துக் கவண் ஒலிப்பத்
தென் நல் கிளி திரிந்து ஏறிய சீபர்ப்பத மலையே. 3

மை ஆர் தடங்கண்ணாள் மடமொழியாள் புனம் காக்கச்
செவ்வே திரிந்து ஆயோ எனப் போகாவிட விளிந்து
கை பாவிய கவணான் மணி எறிய இரிந்து ஓடிச்
செவ்வாயன கிளி பாடிடும் சீபர்ப்பத மலையே. 4

Koviloor Digital Library

ஆனைக்குலம் இரிந்து ஓடித் தன் பிடி சூழலில் திரிய
தானப் பிடி செவி தாழ்த்திட அதற்கு மிக இரங்கி
மானக் குற அடல் வேடர்கள் இலையால் கலை கோலித்
தேனைப் பிழிந்து இனிது ஊட்டிடும் சீபர்ப்பத மலையே. 5

மாற்றுக் களிறு அடைந்தாய் என்று மதவேழம் கை எடுத்து
மூற்றித் தழல் உமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகம் சுழியத்
தூற்றத் தரிக்கில்லேன் என்று சொல்லி அயல் அறியத்
தேற்றிச் சென்று பிடி சூள் அறும் சீபர்ப்பத மலையே. 6

அப்போது வந்து உண்டீர்களுக்கு அழையாது முன்னிருந்தேன்
எப்போதும் வந்து உண்டால் எமை எமர்கள் சுளியாரோ
இப்போது உமக்கு இதுவே தொழில் என்று ஓடி அக் கிளியைச்
செப்பு ஏந்து இளமுலையாள் எறி சீபர்ப்பத மலையே. 7

திரியும் புரம் நீறு ஆக்கிய செல்வன்தன கழலை
அரிய திருமாலோடு அயன்தானும் அவர் அறியார்
கரியின் இனமோடும் பிடி தேன் உண்டு அவை களித்துத்
திரிதந்தவை திகழ்வால் பொலி சீபர்ப்பத மலையே. 8

ஏனத்திரள் கிளைக்க எரி போல மணி சிதற
ஏனல் அவை மலைச்சாரல் இற்று இரியும் கரடியும்
மானும் மரைஇனமும் மயில் மற்றும் பலஎல்லாம்
தேன் உண் பொழில் சோலை மிகு சீபர்ப்பத மலையே. 9

நல்லார்அவர்பலர் வாழ்தரு வயல் நாவல் ஊரன்
செல்லல் உற அரிய சிவன் சீ பர்ப்பதமலையே
அல்லல்அவை தீரச் சொன தமிழ்மாலைகள் வல்லார்
ஒல்லை செல உயர்வானகம் ஆண்டு அங்கு இருப்பாரே. 10

Koviloor Digital Library

95. திருக் கேதாரம்

இறைவன் - கேதார நாதர் இறைவி - கேதார கௌரிஅம்மை

பண் : நட்டபாடை

வாழ்வுஆவது மாயம் இது மண்ஆவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசி நோய் செய்த பறிதான்
தாழாது அறம் செய்ம்மின் தடங்கண்ணான் மலரோனும்
கீழ் மேல் உற நின்றான் திருக் கேதாரம் எனீரே. 1

பறியே சுமந்து உழல்வீர் பறி நரி கீறுவது அறியீர்
குறி கூவிய கூற்றம் கொளும் நாளால் அறம் உளவே
அறிவானிலும் அறிவான் நல் நறுநீரோடு சோறு
கிறி பேசி நின்று இடுவார் தொழு கேதாரம் எனீரே. 2

கொம்பைப் பிடித்து ஒருக் காலர்கள் இருக்கால் மலர் தூவி
நம்பன் நமை ஆள்வான் என்று நடுநாளையும் பகலும்
கம்பக் களிற்றுஇனமாய் நின்று சுனைநீர்களைத் தூவிச்
செம்பொற்பொடி சிந்தும் திருக் கோதாரம் எனீரே. 3

உழக்கே உண்டு படைத்து ஈட்டி வைத்து இழப்பார்களும் சிலர்கள்
வழக்கே எனில் பிழைக்கேம் என்பர் மதி மாந்திய மாந்தர்
சழக்கே பறி நிறைப்பாரொடு தவம்ஆவது செயன்மின்
கிழக்கே சலம் இடுவார் தொழு கேதாரம் எனீரே. 4

வாள் ஓடிய தடங்கண்ணியர் வலையில் அழுந்தாதே
நாள் ஓடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
ஆளாய் உய்ம்மின் அடிகட்கு இடம்அதுவே எனில் இதுவே
கீளோடு அரவு அசைத்தான் இடம் கேதாரம் எனீரே. 5

Koviloor Digital Library

தளி சாலைகள் தவம்ஆவது தம்மைப் பெறில்அன்றே
குளியீர் உளம் குருக்கேத்திரம் கோதாவிரி குமரி
தெளியீர் உளம் சீ பர்ப்பதம் தெற்கு வடக்கு ஆகக்
கிளி வாழைஒண்கனி கீறி உண் கேதாரம் எனீரே. 6

பண்ணின் தமிழ்இசைபாடலின் பழ வேய் முழவு அதிரக்
கண்ணின் ஒளி கனகச்சுனை வயிரம் அவை சொரிய
மண் நின்றன மதவேழங்கள் மணி வாரிக்கொண்டு எறியக்
கிண்ணென்று இசை முரலும் திருக் கேதாரம் எனீரே. 7

முளைக்கைப் பிடி முகமன் சொலி முது வேய்களை இறுத்துத்
துளைக்கைக்களிற்று இனமாய் நின்று சுனை நீர்களைத் தூவி
வளைக்கைப் பொழி மழை கூர்தர மயில் மான்பிணை நிலத்தைக்
கிளைக்க மணி சிந்தும் திருக் கேதாரம் எனீரே. 8

பொதியே சுமந்து உழல்வீர் பொதி அவம்ஆவதும் அறியீர்
மதி மாந்திய வழியே சென்று குழி வீழ்வதும் வினையால்
கதி சூழ் கடல் இலங்கைக்கு இறை மலங்க அவ்வரை அடர்த்துக்
கெதி பேறுசெய்து இருந்தான் இடம் கேதாரம் எனீரே. 9

நாவின் மிசைஅரையனொடு தமிழ் ஞானசம்பந்தன்
யாவர் சிவன் அடியார்களுக்கு அடியான் அடித்தொண்டன்
தேவன் திருக் கேதாரத்தை ஊரன் உரைசெய்த
பாவின் தமிழ் வல்லார் பரலோகத்து இருப்பாரே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

96. திருநொடித்தான்மலை

இறைவன் - திருக்கயிலாய நாதர் இறைவி - பார்வதிஅம்மை

பண் : பஞ்சமம்

தான்எனை முன் படைத்தான் அது அறிந்து தன் பொன்அடிக்கே
நான் என பாடல் அந்தோ நாயினேனைப் பொருட்படுத்து
வான் எனை வந்து எதிர்கொள்ள மத்தயானை அருள்புரிந்து
ஊன் உயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை உத்தமனே 1

ஆனை உரித்த பகை அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர் வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலம் செய்து எனை ஏற வைக்க
ஆனை அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே 2

மந்திரம் ஒன்று அறியேன் மனைவாழ்க்கை மகிழ்ந்து அடியேன்
சுந்தரவேடங்களால் துரிசே செயும் தொண்டன் எனை
அந்தர மால்விசும்பில் அழகு ஆனை அருள்புரிந்த
துந் தரமோ நெஞ்சமே நொடித்தான்மலை உத்தமனே 3

வாழ்வை உகந்த நெஞ்சே மடவார்தங்கள் வல்வினைப் பட்டு
ஆழ முகந்த என்னை அது மாற்றி அமரர்எல்லாம்
சூழ அருள் புரிந்து தொண்டனேன் பரம்அல்லது ஒரு
வேழம் அருள்புரிந்தான் நொடித்தான்மலை உத்தமனே 4

மண்ணுலகில் பிறந்து நும்மை வாழ்த்தும் வழிஅடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப வெள்ளையானையின் மேல்
என் உடல் காட்டுவித்தான் நொடித்தான்மலை உத்தமனே 5

Koviloor Digital Library

அஞ்சினை ஒன்றி நின்று அலர்கொண்டு அடி சேர்வறியா
வஞ்சனை என் மனமே வைகி வானநன் நாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன் பரம் அல்லது ஒரு
வெஞ்சின ஆனை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே 6

நிலை கெட விண் அதிர நிலம் எங்கும் அதிர்ந்து அசைய
மலைஇடை யானை ஏறி வழியே வருவேன் எதிரே
அலைகடலால் அரையன் அலர் கொண்டு முன் வந்து இறைஞ்ச
உலை அணையாத வண்ணம் நொடித்தான்மலை உத்தமனே 7

அர ஒலி ஆகமங்கள் அறிவார் அறி தோத்திரங்கள்
விரவிய வேதஒலி விண்எலாம் வந்து எதிர்ந்து இசைப்ப
வரம் மலி வாணன் வந்து வழிதந்து எனக்கு ஏறுவது ஓர்
சிரம் மலி யானை தந்தான் நொடித்தான்மலை உத்தமனே 8

இந்திரன் மால் பிரமன் எழிலார் மிகு தேவர் எல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மா முனிவர் இவன் ஆர் என எம்பெருமான்
நம்தமர் ஊரன் என்றான் நொடித்தான்மலை உத்தமனே 9

ஊழிதொறுஊழி முற்றும் உயர் பொன் நொடித்தான்மலையைச்
சூழ் இசை இன்கரும்பின் சுவை நாவலஊரன் சொன்ன
ஏழ் இசை இன்தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்
ஆழி கடல் அரையா அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

97. திருநாட்டுத் தொகை

பண் : இந்தளம்

வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்
கூழைஏறு உகந்தான் இடம்கொண்டதும் கோவலூர்
தாழையூர் தகட்டூர் தக்களூர் தருமபுரம்
வாழை காய்க்கும் வளர் மருகல்நாட்டு மருகலே. 1

அண்டத்து அண்டத்தின் அப்புறத்து ஆடும அமுதன் ஊர்
தண்டந்தோட்டம் தண்டங்குறை தண்டலை ஆலங்காடு
கண்டல் முண்டல்கள் சூழ் கழிப்பாலை கடற்கரை
கொண்டல்நாட்டுக் கொண்டல் குறுக்கைநாட்டுக் குறுக்கையே 2

மூலனூர் முதலாய முக்கண்ணன் முதல்வன் ஊர்
நாலனூர் நரைஏறு உகந்து ஏறிய நம்பன் ஊர்
கோல நீற்றன் குற்றாலம் குரங்கணில்முட்டமும்
வேலனூர் வெற்றியூர் வெண்ணிக்கூற்றத்து வெண்ணியே. 3

தேங்கூரும் திருச் சிற்றம்பலமும் சிராப்பள்ளி
பாங்கு ஊர் எங்கள் பிரான் உறையும் கடம்பந்துறை
பூங்கூரும் பரமன் பரஞ்சோதி பயிலும் ஊர்
நாங்கூர்நாட்டு நாங்கூர் நறையூர் நாட்டு நறையூரே. 4

குழலை வென்ற மொழி மடவாளை ஓர்கூறனாம்
மழலை ஏற்று மணாளன் இடம் தடமால்வரைக்
கிழவன் கீழைவழி பழையாறு கிழையமும்
மிழலைநாட்டு மிழலை வெண்ணிந்நாட்டு மிழலையே. 5

Koviloor Digital Library

தென்னூர் கைம்மைத் திருச் சுழியல் திருக் கானப்பேர்
பன் ஊர் புக்கு உறையும் பரமர்க்கு இடம் பாய் நலம்
என் ஊர் எங்கள் பிரான் உறையும் திருத் தேவனூர்
பொன்னூர்நாட்டுப் பொன்னூர் புரிசைநாட்டுப் புரிசையே. 6

ஈழநாட்டு மாதோட்டம் தென்நாட்டு இராமேச்சுரம்
சோழநாட்டுத் துருத்தி நெய்த்தானம் திருமலை
ஆழியூரன நாட்டுக்கு எல்லாம் அணி ஆகிய
கீழையில் அரனார்க்கு இடம் கிள்ளிகுடிஅதே. 7

நாளும் நன்னிலம் தென்பனையூர் வடகஞ்சனூர்
நீளநீள்சடையான் நெல்லிக்காவு நெடுங்களம்
காளகண்டன் உறையும் கடைமுடி கண்டியூர்
வேளாநாட்டு வேளூர் விளத்தூர் நாட்டு விளத்தூரே. 8

தழலு மேனியன் தையல் ஓர்பாகம் அமர்ந்தவன்
தொழலும் தொல்வினை தீர்க்கின்ற சோதி சோற்றுத்துறை
கழலும் கோவை உடையவன் காதலிக்கும் இடம்
பழனம் பாம்பணி பாம்புரம் தஞ்சை தஞ்சாக்கையே. 9

மை கொள் கண்டன் எண்தோளன் முக்கண்ணன் வலஞ்சுழி
பை கொள் வாள் அரவு ஆட்டித் திரியும் பரமன் ஊர்
செய்யில் வாளைகள் பாய்ந்து உகளும் திருப் புன்கூர் நன்று
ஐயன் மேய பொழில் அணி ஆவடுதுறைஅதே. 10

பேணி நாடதனில் திரியும் பெருமான் தனை
ஆணையா அடியார்கள் தொழப்படும் ஆதியை
நாணி ஊரன் வனப்பகை அப்பன் வன்தொண்டன் சொல்
பாணியால் இவை ஏத்துவார் சேர் பரலோகமே 11

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

98. திருவாரூர்

பண் : கொல்லி

பாறு தாங்கிய காடரோ படுதலையரோ மலைப்பாவை ஓர்
கூறு தாங்கிய குழகரோ குழைக் காதரோ குறுங் கோட்டு இள
ஏறு தாங்கிய கொடியரோ சுடுபொடியரோ இலங்கும் பிறை
ஆறு தாங்கிய சடையரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 1

இட்டிது ஆக வந்து உரைமினோ நுமக்கு இசையுமா நினைந்து ஏத்துவீர்
கட்டி வாழ்வது நாகமோ சடைமேலும் நாறு கரந்தையோ
பட்டி ஏறு உகந்து ஏறரோ படுவெண்தலைப் பலி கொண்டு வந்து
அட்டி ஆளவும் கிற்பரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 2

ஒன்றினீர்கள் வந்து உரைமினோ நுமக்கு இசையுமா நினைந்து ஏத்துவீர்
குன்றி போல்வது ஓர் உருவரோ குறிப்பு ஆகி நீறு கொண்டு அணிவரோ
இன்றியே இலர் ஆவரோ அன்றி உடையராய் இலர் ஆவரோ
அன்றியே மிக அறவரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 3

தேனை ஆடு முக்கண்ணரோ மிகச் செய்யரோ வெள்ளைநீற்றரோ
பால்நெய்ஆடலும் பயில்வரோ தமைப் பற்றினார்கட்கு நல்லரோ
மானை மேவிய கண்ணினாள் மலைமங்கைநங்கையை அஞ்ச ஓர்
ஆனைஈர்உரி போர்ப்பரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 4

கோணல்மாமதி சூடரோ கொடு கொட்டி கால் ஓர் கழலரோ
வீணைதான் அவர் கருவியோ விடை ஏறு வேதமுதல்வரோ
நாண்அதுஆக ஓர் நாகம் கொண்டு அரைக்கு ஆர்ப்பரோ நலமார்தர
ஆணையாக நம் அடிகளோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 5

Koviloor Digital Library

வந்து சொல்லுமின் மூடனேனுக்கு வல்லவா நினைந்து ஏத்துவீர்
வந்த சாயினை அறிவரோ தம்மை வாழ்த்தினார்கட்கு நல்லரோ
புந்தியால் உரை கொள்வரோ அன்றிப் பொய்யின் மெய் உரைத்து ஆள்வரோ
அன்றியே மிக அறிவரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 6

மெய் என் சொல்லுமின் நமரங்காள் உமக்கு இசையுமா நினைந்து ஏத்துவீர்
கையில் சூலம்அது உடையரோ கரிகாடரோ கறைக்கண்டரோ
வெய்ய பாம்பு அரை ஆர்ப்பரோ விடை ஏறரோ கடைதோறும் சென்று
ஐயம் கொள்ளும் அவ் அடிகளோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 7

நீடு வாழ் பதி உடையரோ அயன் நெடிய மாலுக்கும் நெடியரோ
பாடுவாரையும் உடையரோ தமைப் பற்றினார்கட்கு நல்லரோ
காடுதான் அரங்கு ஆகவே கைகள்எட்டினோடு இலயம் பட
ஆடுவார் எனப்படுவரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 8

நமணநந்தியும் கருமவீரனும் தருமசேனனும் என்று இவர்
குமணன் மாமலைக்குன்று போல் நின்று தங்கள் கூறை ஒன்று இன்றியே
ஞமண ஞாஞண ஞாணம் ஞோணம் என்று ஓதி யாரையும் நாண்இலா
அமணரால் பழிப்பு உடையரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 9

படி செய் நீர்மையின் பத்தர்காள் பணிந்து ஏத்தினேன் பணியீர் அருள்
வடியிலான் திருநாவலூரன் வனப்பகைஅப்பன் வன்தொண்டன்
செடியன் ஆகிலும் தீயன்ஆகிலும் தம்மையே மனம் சிந்திக்கும்
அடியன் ஊரனை ஆள்வரோ நமக்கு அடிகள் ஆகிய அடிகளே 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

99. திருஅஞ்சைக்களம்

இறைவன் - அஞ்சைக்களத்து அப்பர் இறைவி - உமையம்மை

பண் : கொல்லி கௌவாணம்

முடிப்பது கங்கையுந் திங்களுஞ் செற்றது மூஎயில்
நொடிப்பதுமாத்திரை நீறு எழக் கணை நூறினார்
கடிப்பதும் ஏறும் என்று அஞ்சுவன் திருக்கைகளால்
பிடிப்பது பாம்பு அன்றி இல்லையோ எம்பிரானுக்கே. 1

தூறு அன்றி ஆடுஅரங்கு இல்லையோ சுடலைப்பொடி
நீறு அன்றிச் சாந்தம் மற்று இல்லையோ இமவான்மகள்
கூறு அன்றிக் கூறுவது இல்லையோ கொல்லைச் சில்லை வெள்
ஏறு அன்றி ஏறுவது இல்லையோ எம்பிரானுக்கே. 2

தட்டுஎனுந் தட்டுஎனுந் தொண்டர்காள் தடுமாற்றத்தை
ஒட்டுஎனும் ஒட்டுஎனும் மா நிலத்து உயிர் கோறலைச்
சிட்டன் திரிபுரஞ் சுட்ட தேவர்கள்தேவனை
வெட்டெனப் பேசன்மின் தொண்டர்காள் எம்பிரானையே. 3

நரி தலை கவ்வ நின்று ஓரி கூப்பிட நள்இருள்
எரி தலைப் பேய் புடை சூழ ஆர் இருள் காட்டிடைச்
சிரிதலைமாலை சடைக்கு அணிந்த எஞ் செல்வனைப்
பிரிதலைப் பேசன்மின் தொண்டர்காள் எம்பிரானையே. 4

வேயன தோளி மலைமகளை விரும்பிய
மாயம் இல் மாமலைநாடன் ஆகிய மாண்பனை
ஆயன சொல்லி நின்றார்கள் அல்லல் அறுக்கினும்
பேயனே பித்தனே என்பரால் எம்பிரானையே. 5

Koviloor Digital Library

இறைவன் என்று எம்பெருமானை வானவர் ஏத்தப் போய்த்
துறை ஒன்றித் தூ மலர் இட்டு அடிஇணை போற்றுவார்
மறை அன்றிப் பாடுவது இல்லையோ மல்கு வான்இளம்
பிறை அன்றிச் சூடுவது இல்லையோ எம்பிரானுக்கே. 6

தாரும் தண்கொன்றையுங் கூவிளந் தனி மத்தமும்
ஆரும் அளவு அறியாத ஆதியும் அந்தமும்
ஊரும் ஒன்று இல்லை உலகுஎலாம் உகப்பார் தொழப்
பேரும் ஓர் ஆயிரம் என்பரால் எம்பிரானுக்கே. 7

அரியொடு பூமிசையானும் ஆதியும் அறிகிலார்
வரிதரு பாம்பொடு வன்னி திங்களும் மத்தமும்
புரிதரு புன்சடை வைத்த எம் புனிதற்கு இனி
எரி அன்றி அங்கைக்கு ஒன்று இல்லையோ எம்பிரானுக்கே. 8

கரிய மனச் சமண் காடி ஆடு கழுக்களால்
எரிய வசவுணும் தன்மையோ இமவான்மகள்
பெரிய மனம் தடுமாற வேண்டிப் பெம்மான் மதக்
கரியின் உரி அல்லது; இல்லையோ எம்பிரானுக்கே. 9

காய்சின மால்விடை மாணிக்கத்து எங் கறைக்கண்டத்து
ஈசனை ஊரன் எட்டோடுஇரண்டு விரும்பிய
ஆயின சீர்ப் பகைஞானி அப்பன் அடித்தொண்டன்தான்
ஏசின பேசுமின் தொண்டர்காள் எம்பிரானையே. 10

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

100. திருவாரூர்

பண் : பழம்பஞ்சுரம்

காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப்பேரூராய்
கோட்டூர்க் கொழுந்தே அழுந்தூர் அரசே கொழு நல் கொ எறே
பாட்டூர் பலரும் பரவப்படுவாய் பனங்காட்டூரானே
மாட்டூர் அறவா மறவாது உன்னைப் பாடப் பணியாயே 1

கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய் குழகா குற்றாலா
மங்குல் திரிவாய் வானோர்தலைவா வாய்மூர் மணவாளா
சங்கக்குழை யார் செவியா அழகா அவியா அனல் ஏந்திக்
கங்குல் புறங்காட்டுஆடீ அடியார் கவலை களையாயே 2

நிறைக் காட்டானே நெஞ்சத்தானே நின்றியூரானே
மிறைக்காட்டானே புனல் சேர் சடையாய் அனல் சேர் கையானே
மறைக்காட்டானே திரு மாந்துறையாய் மாகோணத்தானே
இறைக் காட்டானே எங்கட்கு உன்னை எம்மான்தம்மானே 3

ஆரூர் அத்தா ஐயாற்று அமுதே அளப்பூர் அம்மானே
காரூர் பொழில்கள் புடைசூழ் புறவில் கருகாவூரானே
பேரூர் உறைவாய் பட்டிப் பெருமான் பிறவா நெறியானே
பாரூர் பலரும் பரவப்படுவாய் பாசூர் அம்மானே 4

மருகல் உறைவாய் மாகாளத்தாய் மதியம் சடையானே
அருகல் பிணி நின் அடியார்மேல அகல அருளாயே
கருகல்குரலாய் வெண்ணிக் கரும்பே கானூர்க் கட்டியே
பருகப் பணியாய் அடியார்க்கு உன்னைப் பவளப்படியானே 5

Koviloor Digital Library

தாம் கூர் பிணி நின் அடியார்மேல அகல அருளாயே
வேங்கூர் உறைவாய் விளமர் நகராய் விடையாய் கொடியானே
நாங்கூர் உறைவாய் தேங்கூர் நகராய் நல்லூர் நம்பானே
பாங்கூர் பலி தேர் பரனே பரமா பழனப்பதியானே 6

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந் தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக்காவில் அரனே பரனே அண்ணாமலையானே
ஊனைக் காவல் கைவிட்டு உன்னை உகப்பார் உணர்வாரே 7

துருத்திச் சுடரே நெய்த்தானத்தாய் சொல்லாய் கல்லாலா
பருத்திநியமத்து உறைவாய் வெயிலாய்ப் பலவாய்க் காற்றானாய்
திருத்தித்திருத்தி வந்து என் சிந்தை இடம்கொள் கயிலாயா
அருத்தித்து உன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே8

புலியூர்ச் சிற்றம்பலத்தாய் புகலூர்ப் போதா மூதூரா
பொலி சேர் புரம்மூன்று எரியச் செற்ற புரிபுன்சடையானே
வலி சேர் அரக்கன் தடக்கைஐஞ்ஞான்கு அடர்த்த மதிசூடீ
கலி சேர் புறவில் கடவூர் ஆளீ காண அருளாயே 9

கைம்மாஉரிவை அம்மான் காக்கும் பலஊர் கருத்து உன்னி
மைம் மாந் தடங்கண் மதுரம் அன்ன மொழியாள் மடச்சிங்கடி
தம்மான் ஊரன் சடையன்சிறுவன் அடியன் தமிழ்மாலை
செம்மாந்து இருந்து திருவாய் திறப்பார் சிவலோகத்தாரே 10

திருச்சிற்றம்பலம்



Koviloor Digital Library

101. திருநாகைக்காரோணம்

பண் : காந்தாரம்

பொன்னாம் இதழி விரைமத்தம் பொங்கு கங்கைப் புரிசடைமேல்
முன்னா அரவம் மதியமும் சென்னி வைத்தல் மூர்க்கு அன்னே
துன்னா மயூரம் சோலைதொறும் ஆட தூரத் துணைவண்டு
தென்னா என்னும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 1

வரைக்கைவேழம் உரித்தும் அரன் நடமாட்டு ஆனால் மனைதோறும்
இரக்கை ஒழியீர் பழி அறியில் ஏற்றை விற்று நெல் கொள்வீர்
முரைக் கை பவளக்கால் காட்ட மூரிச் சங்கத்தொடு முத்தம்
திரைக்கை காட்டும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 2

புல்லும் பெறுமே விடை புணரச் சடைமேல் ஒரு பெண் புக வைத்தீர்
இல்லம்தோறும் பலி என்றால் இரக்க இடுவார் இடுவாரே
முல்லை முறுவல் கொடி எடுப்ப கொன்றைமுகம் மோதிரம் காட்ட
செல்லும் புறவின் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 3

மாண்டார் எலும்பும் கலும்பும் எலாம் மாலைஆக மகிழ்ந்துஅருளி
பூண் தார் பொறி ஆடுஅரவு ஆமை புரம்மூன்று எரித்தீர் பொருள்ஆக
தூண்டா விளக்கு மணி மாட வீதிதோறும் சுடர் உய்க்க
சேண் தார் புரிசைத் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 4

ஒருவர்க்கு ஒருவர் அரிதுஆகில் உடைவெண்தலை கொண்டு ஊர்ஊரன்
இருவர்க்கு ஒருவர் இரந்து உண்டால் எளிதே சொல்லீர் எத்தனையும்
பரு வன் கனகம் கற்பூரம் பகர்ந்த முகந்து பப்பரவர்
தெருவில் சிந்தும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 5

Koviloor Digital Library

தோடை உடுத்த காது உடையீர் தோலை உடுத்துச் சோம்பாதே
ஆடை உடுத்துக் கண்டக்கால் அழகிது அன்றே அரிது அன்று
ஓடை உடுத்த குமுதமே உள்ளங்கை மறிப்ப புறம்கை அனம்
சேடை உடுத்தும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 6

கடு நஞ்சு உண்டு இரக்கவே கண்டம் கறுத்தது இக் காலம்
விடும் நஞ்சு உண்டு நாகத்தை வீட்டில் ஆட்டை வேண்டா நீர்
கொடு மஞ்சுகள் தோய் நெடுமாடம் குலவு மணி மாளிகைக்குழாம்
இடு மிஞ்சு இதை சூழ் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 7

பள்ளம் பாறும் நறும்புனலைச் சூடி பெண் ஓர்பாகமா
வெள்ளைநீறே பூசுவீர் மேயும் விடையும் பாயுமே
தொள்ளை ஆம் நல் கரத்து ஆனை சுமந்து வங்கம் சுங்கம் இடத்
தொள்ளும் வேலைத் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 8

மத்தம் கவரும் மலர்க்கொன்றைமாலைமேல் மால் ஆனாளை
உய்த்து அங்கு அவரும் உரைசெய்தால் உமக்கே அன்றே பழி உரையீர்
முத்தம் கவரும் நகை இளையார் மூரித் தானை முடிமன்னர்
சித்தம் கவரும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 9

மறை அன்று ஆலின் கீழ் நால்வர்க்கு அளித்தீர் களித்தார் மதில்மூன்றும்
இறையில் எரித்தீர் ஏழ்உலகும் உடையார் இரந்து ஊண் இனிதேதான்
திறைகொண்டு அமரர் சிறந்து இறைஞ்சித் திருக் கோபுரத்து நெருக்க மலர்ச்
சிறைவண்டு அறையும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே 10

தேரார் வீதித் தென்நாகைத் திருக் காரோணத்து இறையானைச்
சீரார் மாடத் திரு நாவலூர்க் கோன் சிறந்த வன்தொண்டன்
ஆரா அன்போடு உரைசெய்த அஞ்சொடுஅஞ்சும் அறிவார்கள்
வாரார் முலையாள் உமை கணவன் மதிக்க இருப்பார் வான்அகத்தே 11

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் முற்றிற்று

Koviloor Digital Library

உ
திருச்சிற்றம்பலம்

பாட்டு முதற் குறிப்பு அகராதி

Koviloor Digital Library

9

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

அச்சிட்டோர் :
ஸ்ரீகைலாஸ் பிரிண்டர்ஸ்,
32/55, பங்காரு நாயக்கன்
தெரு, மவுண்ட்ரோடு,
சென்னை – 600 002.
போன்–2841 9506 /
செல்–98842 65299

Koviloor Digital Library

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்னை கொள்சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

கல்லா பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாய்ப் பிழையும் நின்ஐந் தெழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தள்வாய் கச்சியேகம்பனே

ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்கடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியார் எல்லாம்

வாழ்க ! அந்தணர் வானவர் ஆனினம்;
வீழ்க ! தண்புனல்; வேந்தனும் ஓங்குக !
ஆழ்க ! தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க ! வையகமும் துயர்தீர்கவே !

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளால் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.

அச்சிட்டோர் : ஸ்ரீகைலாஸ் பிரிண்டர்ஸ், 32/55, பங்காரு நாயக்கன் தெரு,
மவுண்ட்ரோடு, சென்னை – 600 002. போன்–2841 9506 / செல்–98842 65299

Koviloor Digital Library

Koviloor Digital Library



காவாய் கனகத் திரளே போற்றி!

கயிலை மலையானே போற்றி போற்றி